முத்துலட்சுமி ராகவன்

ஏழு ஸ்வரங்கள்...

நான்காம் ஸ்வரம்...

மனம் கண்ட வைரம்

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

ஏழு ஸ்வரங்கள்... பாகம் – 4

உரிமை : **ஆசிரியருக்கு**

பொருள்	:	நாவல்
மொழி	:	தமிழ்
முதல் பதிப்பு	:	ஜூலை 2015
வெளியீடு	:	**லட்சுமி பாலாஜி பதிப்பகம்** 68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு, சி.ஐ.டி. நகர், தி.நகர், சென்னை - 600 035 செல் : 95669 42486
நூலின் அளவு	:	1x8 கிரவுன்
தாள்	:	11.6 kg புக் பிரிண்ட்
அச்சு எழுத்து	:	11 புள்ளி
மொத்தப்பக்கங்கள்	:	400

விலை : ₹ 200/-

லேசர் டைப் செட் : விஜி கிராஃபிக்ஸ், மதுரை.

அச்சிட்டோர் : **பாரதி அச்சகம்,** சென்னை–5.

முத்துலட்சுமி ராகவன்
எழுதிய

ஏழு
ஸ்வரத்தில்...

நான்காம் ஸ்வரம்

'மனம் கண்ட வைரம்...'

உடன் பயணிப்பது...

ஏழாவது ஸ்வரத்தின்

நிழல் ஆட்ட யுத்தம்...'

ஆசிரியர் கடிதம்...

ஸ்வரம் நான்கு...

என் பிரியத்துக்குரிய வாசக... வாசகிகளே...!

இந்த நான்காவது ஸ்வரம் மனம் கண்ட வைரமாக ஒளிர்விட்டு உங்கள் முன்னால் வருகிறது.. எதற்காக இந்தத் தலைப்பு என்பதை கதை சொல்லும்.

இந்த ஸ்வரத்தை இசைக்க ஆரம்பித்தபோது லேசான தயக்கம் எனக்குள் வந்தது.. எனது ஏழு ஸ்வரங்களின் கதைத் தளம் காஞ்சியாகும்.. காஞ்சியில் நடக்கும் ஏழு காலகட்ட கதைகளின் கோர்வைதான் ஏழுஸ்வரங்கள்..

இந்த ஸ்வரங்கள் ஒன்றொடொன்று பின்னிப் பிணைந்தவை. அதை ஏழாவது ஸ்வரமான 'நிழல் ஆட்ட யுத்தம்..' உங்களுக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது.. மர்மமில்லா இம் மர்மத்தை ஏழாவது ஸ்வரத்தில்தான் நான் வெளிப் படுத்துவதாக உள்ளேன்..

காஞ்சியில் நடக்கும் ஏழு காலகட்ட கதைகள் என்று எடுத்துக் கொண்டபோது.. நடப்புக்கால காஞ்சி.. சுதந்திர இந்தியாவின் புனித கோவில் நகரமாக விளங்குகிறது..

இதே காஞ்சி மாநகரம் முந்தய ஆறுகால கட்டங்களில் பல்வேறு ஆட்சியாளர்களின் கைகளில் இருந்திருக்கிறது.. மாறுகின்ற ஆட்சியாளர்களைப் பற்றி நான் ஆராய்ந்தபோது.. அரசர் குலத்தின் மண்ணாசையையும்.. பரமபதம் போல ஒரு கால கட்டத்தில் ஓங்கியிருக்கும் சாம்ராஜ்யம் அடுத்த கால கட்டத்தில் அதன்கீழ் சிற்றரசாக இருந்த அரசின் கீழ் சிற்றரசாக மாறிய விந்தையையும் படித்து வியந்தேன்..

நமது பண்டைய கால சரித்திரங்களைப் படித்தாலே போதும்.. கீதையின் சாராம்சத்தை நாம் தெளிவாக உணர்ந்து விடலாம்.

காஞ்சியின் ஆட்சியாளர்களைப் பற்றி நான் ஆராய்ந்த போது.. பல்லவர்களுக்கு அடுத்து சோழர்களும் அவர்களுக்கு அடுத்து பாண்டியர்களும் காஞ்சியை ஆண்டிருக்கிறார்கள்.. பாண்டியர்க்கு அடுத்ததாக சேரர்களின் கைகளுக்கு ஆட்சி மாறியிருக்கிறது..

சேரர்களின் ஆட்சியைப் பற்றிக் கூறும் போது.. தென்னிந்தியாவில் நடந்த மாலிக்காபூரின் படையெடுப்பைப் பற்றியும்.. அதன் விளைவாக இந்து மதத்தினரின் கோவில்கள் இழுத்து மூடப்பட்டு ஆலய வழிபாடு தடை செய்யப் பட்டதையும் பற்றி நான் கூற வேண்டியிருக்கிறது..

எதன் பொருட்டு சேரரின் ஆட்சி காஞ்சியில் ஏற்பட்டது என்பதை விவரிக்க.. இந்த வரலாற்று உண்மையைக் கூறுவது அத்தியாவசியமானதாக அமைந்து விட்டது.. கதையைப் படிக்கும்போது உங்களுக்கே அது புரியும்.

நான் அனைத்து மதத்தையும் நேசிப்பவர்.. இதை எனது 'போர்க்களத்தில் ஓர் பூவிதயம்..' என்ற இரண்டுபாக நாவல் நிரூபணம் செய்யும்.

இந்திய விடுதலைக்கு பாடுபட்டது இந்துக்களும் முஸ்லீம்களும்தான் என்பதை நான் M.A. பட்டம் பெற்ற வரலாற்றுப் பாடம் எனக்கு எடுத்துரைத்திருக்கிறது.

இந்த உண்மையை 'போர்க்களத்தில் ஓர் பூவிதயம்' நாவலில் உரத்துக் கூறியுள்ளேன்..

இந்த ஸ்வரத்தில் நான் எழுதுவதும் வரலாற்று உண்மைதான்.. தமிழகத்தில் நடந்த தாயாதி சண்டையிலே

வீரபாண்டியனும், சுந்தரபாண்டியனும்.. அலாவுதீன் கில்ஜிக்கு வெற்றிலைபாக்கு வைத்து சமரசம் செய்து வைக்க அழைத்து விட்டார்கள்.. சமரசம் செய்ய வந்த கில்ஜியின் படைத்தலைவனான மாலிக்காபூர்.. மதுரா நகருக்கு மன்னனாக மாறி சுல்தான்களின் ஆட்சிக்கு அடி கோலிட்டு விட்டான்.. மாறிய ஆட்சி காலத்தில் இந்து சமயத்தவரின் கோவில்கள் இழுத்து மூடப்பட்டன.. இந்து சமயத்தைப் பாதுகாக்க சேரநாட்டிலிருந்து ஓர் மன்னன் கிளம்பி வந்தான்..

அவனே இக்கதையின் நாயகன் ஆவான்..

அக்பரின் ஆட்சிக் காலம் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு மிகச்சிறந்த உதாரணமாக இருந்தது.. இந்து சமயத்தைச் சார்ந்த ரஜபுத்திர ஜோதாபாயை திருமணம் செய்து கொண்ட அக்பர்.. தனது இந்து மனைவி வழிபட தனது அரண்மனைக்குள் கண்ணனின் கோவிலைக் கட்டி கொடுத்தார்.. அவரும் இஸ்லாமிய அரசர்தான்.. மாலிக்காபூரும் இஸ்லாமிய சுல்தான்தான்.. ம்ஹீம்.. என்னத்தைச் சொல்ல..?

மற்றவை பின்னுரையில்..

– நட்புடன் –

முத்துலட்சுமி ராகவன்

அனுப்ப : muthulakshmiraghavan24@gmail.com
படிக்க : www.muthulakshmiraghavan.com
www.muthumaalai.com

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

ஏழு ஸ்வரங்கள்...

நான்காம் ஸ்வரம்

'மனம் கண்ட வைரம்...'

1

வைரம் போன்ற மனம் கொண்டாய்..
வஞ்சியெந்தன் இதயம் வென்றாய்..

ஆயிரம் கோவில்களின் நகரமான காஞ்சி கவலை கொண்டிருந்தது.. ஆன்மிகம் பொங்கும் அதன் திருத்தலங்களின் தொன்மையும், பெருமையும் பாதுகாக்கப் பட வேண்டுமென்ற தவிப்பைக் கொண்டிருந்தது.. பழம்பெருமை வாய்ந்த இந்து மதத்தின் தர்மங்களும், வழிபாடல்களும் நிலைநிற்க வேண்டுமென்ற துடிப்பைக் கொண்டிருந்தது.. இந்து மதத்தின் ஏழு புனித நகரங்களில் ஒன்றான காஞ்சி மாநகரம்.. தன்னுள் உறைந்திருக்கும் கோவில் திருத்தலங்களை காக்க எவர் வருவார் என்று காத்துக் கொண்டிருந்தது.

பஞ்ச பூதங்களில் நிலமாக நம்பெருமான் ஈஸ்வரன்.. ஏகாம்பரேஸ்வராக காட்சியளிக்கும் காஞ்சியின் மகத்துவத்தை காவல் செய்ய வரப்போகும் வீரன் எவன் என்று வழிமேல் விழிவைத்து காஞ்சிமாநகரம் காத்துக் கொண்டிருந்தது..

மதச் சண்டைகளால் சூறையாடப்படும் இந்து தர்மத்தையும்.. கோவில்களையும் பேணிப் பாதுகாக்கும் பண்பட்ட வீரன் என்று வருவான் என்று காஞ்சிநகரம் காத்துக் கொண்டிருந்தது..

பல்லவரின் தலைநகரமாக பூத்துக் குழுங்கிய நகரம். சோழர்களின் உறைவிடமாக மாறி.. பாண்டியர்களின் வெற்றியைக் கொண்டாடி.. அடுத்து புயல் வேகத்தில் வரப்போகும் வீரன் ஒருவனுக்காக காத்துக் கொண்டிருந்தது..

தாயாதி சண்டையில் உட்புகுந்து.. தமிழகத்தை தவிடுபொடியாக்கிக் கொண்டிருந்த வன்முறையாளர் களிடமிருந்து.. இந்து தர்மத்தைக் காப்பதற்காக புயல் வேகத்தில் புறப்பட்டு.. சீறிப் பாய்ந்து வரும் சிங்கத்திற்காக காஞ்சிமாநகரம் காத்துக் கொண்டிருந்தது..

அதன் காத்திருப்பை அறியாமல்.. ஏகாம்பரேஸ்வரரின் ஆலயம் சென்று இறைவனை தரிசித்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தாள் வசுந்தரா தேவி..

ராஜபாட்டையில் விரைந்து கொண்டிருந்த ரதத்தின் உள்ளே அமர்ந்திருந்தவள்.. இருக்கையை மூடியிருந்த பட்டுத் துணியை விலக்கி சாலையோர மரங்களைப் பார்த்தாள்..

பசுமையான மரங்களுக்கு இடையில் தெரிந்த வானத்தின் நீலநிறம் அவள் மனதுக்கு அமைதியை அளிக்க மறுத்தது..

சமீப காலமாக நகரத்துக்குள் உண்டாகியிருந்த மாற்றங்கள் அவளுக்குள் அச்சகத்தை உண்டு பண்ணி

யிருந்தன.. அவளால் முந்தைய நாள்களைப் போல இலகுவாக வெளியில் சென்றுவர இயலவில்லை..

அன்றைய காலைப் பொழுதில் அவள் காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரரை தரிசிக்க புறப்பட்டபோது அவளுடைய தந்தை கைலாசநாதர் வதனம் சுளித்தார்..

"எங்கே புறப்பட ஆயத்தமாகிறாய் மகளே..?"

"ஏகாம்பரேஸ்வரரின் ஆலயத்திற்கு தந்தையே.."

"நாடும், நகரமும் முன்போல இல்லை மகளே..! பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது.. இதுபோன்ற தருணங்களில் நம்மை நாம்தான் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.. வெளியில் செல்வது உகந்ததில்லை வசுந்தரா.."

"ஆலயம் சென்று இறைவனை தரிசிக்கக்கூட இடையூறு நேர்ந்து விடுமா தந்தையே..?"

"இப்போதுள்ள கொடும் சூழலில் எதுவும் நிகழலாம்.."

"இதுபோன்ற அச்சங்களுக்கு இடம் கொடுத்து இல்லத்திலேயே வழிபாடு செய்தால் இறைவன் குடியிருக்கும் ஆலயங்களுக்கு எவர் செல்வது தந்தையே..?"

மகளின் கேள்வியில் பதிலளிக்க முடியாமல் திகைத்துப் போனார் கைலாச நாதர்.. அவள் கேட்பதில் உள்ள நியாயம் அவரது இதயத்தை அசைத்தது..

'நியாயம்தானே..? இறைவனின் ஆலயம்... வழிபட மக்கள் வராமல் தனித்து நிற்பதா..?'

"சென்றுவா மகளே.." அவர் அனுமதி அளித்து விட்டார்..

வசுந்தராதேவியின் வதனம் மலர்ந்தது.. அவள் முகமெங்கும் பூரிப்பாக.. பூக்குடலையை கரத்தில் ஏந்தி புறப்பட்டு விட்டாள்..

"எவ்விதம் செல்வாய் அம்மா..?" கைலாசநாதரின் குரல் அவளை தடுத்து நிறுத்தியது..

"இது என்ன கேள்வி தந்தையே..? இதுவரை நான் எவ்விதம் ரதத்தில் சென்று வந்தேனோ.. அவ்விதமே இன்றைய தினத்திலும் ரதத்திலேயே சென்று வருவேன்.."

"உன் தாயார் அங்கயற்கண்ணியும் உடன் வருகிறாள் அல்லவா..?"

கைலாசநாதர் விடாப்படியாக விசாரணையை மேற்கொண்டார்.. முதல் வியூகத்தை முறியடித்து விட்ட வசுந்தரா தேவிக்கு.. அடுத்த வியூகத்தை முறியடிப்பது ஒன்றும் அத்துணை இலகுவாக தென்படவில்லை.. ஏனெனில்.. அவளுடைய தாயார் அங்கயற்கண்ணி ஆலயம் வர இயலாது என்று கூறியிருந்தாள்.. அவளுக்கு மாட வீதியில் வசிக்கும் உறவினர் இல்லத்தின் விழாவில் கலந்து கொள்வதற்காக செல்ல வேண்டியிருந்தது..

"இல்லை தந்தையே.." சன்னமான குரலில் முணுமுணுத்தாள் வசுந்தரா தேவி..

"ஏன் அம்மா..?"

"மாட வீதியில் நடைபெறும் உறவினர் இல்ல விழாவிற்கு அம்மா செல்ல வேண்டுமாம்.."

"அவ்வாறா..?"

கைலாச நாதர் சிந்தித்தார்.. பூப்பெய்திய மகளை உறவினர் இல்லங்களின் விழாக்களுக்கு அவர்களின் இல்லத்தில் அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை.. அதனால்தான் அங்கயற்கண்ணி மட்டும் அந்த விழாவிற்கு சென்றுவர உத்தேசித்திருந்தாள்.. அதை குறை கூறவும் கைலாசநாதரால் இயலாது.

அவரது சிந்தையில் ஏதோ உதிக்க.. விழிகள் பிரகாசிக்க மகளை நோக்கினார்.. அவரது விழிகளின் ஒளிர்வில் வசுந்தரா சுதாரித்தாள்..

'ஆஹா..! தந்தையாரின் வதனத்தில் ஆயிரம் கோடி சூரியன்கள் ஒன்று சேர்ந்து பிரகாசிக்கின்றனரே.. அடுத்த தடை கல்லாக எதைத் தூக்கி என் தலையில் போடப் போகிறாரோ..'

"வசுந்தரா.." என்ற கைலாசநாதரின் அழைப்புக்கு..

"தந்தையே..?" என்று வினயமாக பதில் அளித்தாள்..

"அங்கயற்கண்ணி ரதத்தில் சென்று விடுவாளே அம்மா.. நீ ஆலயம் செல்ல ரதம் இருக்காதே.."

'ஓ..! தந்தை தூக்கும் தடை கல் இதுதானா..?'

அவரது அடுத்த தடைகல்லை அறிந்து விட்ட வசுந்தராதேவி படுபவ்யமாக முகத்தை வைத்துக் கொண்டு..

"இருக்குமே தந்தையே.." என்றாள்..

"எவ்வாறு அம்மா..? இருப்பதோ ஒரு ரதம்.."

"ஆனால் தந்தையே.. அம்மா கலந்து கொள்ளச் செல்லும் இல்லத்தின் விழா முடிவு பெற வெகு நாழிகை ஆகுமாம்.. அதனால் அவ்வில்லத்தின் வாயிலில் இறங்கியவுடன் ரதத்தை அனுப்பி வைத்து விடுவதாக கூறியுள்ளார்கள்.. நான் ஆலயம் சென்று திரும்பி வந்ததும் நம் இல்லத்தில் இறங்கிக் கொண்டு அம்மாவிற்காக ரதத்தை அனுப்பி வைக்க வேண்டும்.. அவ்வளவேதான்.."

'என்ன ஒரு தெள்ளத் தெளிவான திட்டம்..!'

கைலாசநாதரின் தலை வறண்டது.. இதுபோன்ற அதிபுத்தி கூர்மையுடன் கூடிய திட்டங்களை அவருடைய மனையாட்டியும் மகளும் ஒன்று சேர்ந்து வகுத்து அவரைக் கலங்கடிக்கிறார்களே என்று இருந்தது அவருக்கு..

'சிறிதளவாவது துளை இருக்கும் திட்டங்களை இவர்கள் வகுக்கக் கூடாதா..?' அவருக்கு ஆயாசமாக இருந்தது..

'இவ்வாறா ஒரு மனிதர் உள்ளே நுழைந்து விட வழி விடாத திட்டங்களை வகுத்து வைப்பது..? சிறிதளவாவது இல்லத் தலைவரின் மீது கருணை கொள்ள வேண்டாமா..? ஏதடா.. பூப்பெய்திய பெண்ணை பாதுகாக்க வேண்டிய கடும்பொறுப்பில் இவன் உள்ளானே... நாமும் அப்பொறுப்பில் இணை சேர்வோம் என்று இவள் எண்ணிப் பார்க்கிறாளா..?' மனையாட்டியாக வந்து வாய்த்திருக்கும் அங்கயற்கண்ணியின் மீது ஆறாத சினம் கொண்டார் அவர்..

"அவ்வளவே தானா..?" ஆற்றாமையுடன் மகளைக் கேட்டார்..

"ஆம் தந்தையே..!" என்றாள் அவள்..

"தனித்துச் செல்வது உசிதமானதல்ல வசுந்தரா.."

"நான் தனித்துச் செல்லவில்லையே தந்தையே.. ரதத்தைச் செழுத்தும் வீரபாகு உடன் வருகிறாரே.."

மூன்றாவது தடைகல்லையும் தகர்த்தெறிந்தாள் வசுந்தராதேவி.. கைலாசநாதரால் ஆட்சேபிக்க இயலாத தகர்ப்பு அது..

வீரபாகு திறமையாக ரதத்தைச் செழுத்தக் கூடியவன்.. வாள் சுழற்றும் வீரன்.. நடுத்தர வயதினன்.. வசுந்தரா தேவியை மழலைப் பருவம் முதல் கைகளில் ஏந்தி வளர்த்தவன்.. கைலாசநாதரின் பாசத்துக்கு குறையாத பாசத்தை வசுந்தராவின் மீது பொழிபவன்..

"ஆயினும் அம்மா.. வல்லவன் தற்போது இல்லத்தில் இல்லை.."

அடுத்த தடைகல்லை ஏந்த ஆயத்தமானார் கைலாசநாதர்..

"அவன் என்றுதான் இல்லத்தில் இருந்தான் தந்தையே..?"

அந்த தடை கல்லையும் வசுந்தராதேவி ஆட்டம் காண வைத்தாள்.. கைலாசநாதர் பதில் கூற இயலாமல் திருதிருத்தார்..

வல்லவன்..! வசுந்தராதேவியின் தமையன்..! கைலாச நாதருக்கும், அங்கயற்கண்ணிக்கும் பிறந்த மூத்த புதல்வன்..! அந்த இல்லத்தின் தவப்புதல்வன்..! தலைமகன்..!

தனது வணிகத்தில் அவன் தோள் கொடுப்பான் என்று கைலாசநாதர் சொப்பணம் கண்டார்.. அந்த சொப்பனத்தில் வண்டி.. வண்டியாக மணலைக் கொட்டி விட்டு அவன் உல்லாசமாக நகர்வலம் வந்து கொண்டிருந்தான்.. அந்த அருமந்தப் புத்திரனைப் பற்றித்தான் மகளிடம் கூறிக் கொண்டிருந்தார் கைலாசநாதர்..

“அவ்வாறு இல்லையம்மா.. இல்லத்திற்கு வெளியே சென்றுவர நேரிடும் போது.. ஒரு நங்கைக்கு தமையனின் துணை அத்தியாவசியமானதல்லவா..? அதற்காக கூறினேன் குழந்தாய்..”

அவளை பச்சிளம் குழந்தையாக்கி இல்லத்தில் தூளிகட்டித் துயில் கொள்ள வைத்து விடும் மிகப்பெரும் திட்டத்தில் தந்தை நுழைந்திருப்பதை அறிந்து கொண்ட வசுந்தராதேவி பற்களை நறநறத்தாள்..

‘இதோ.. அழைக்கும் தொலைவில் உள்ள ஆலயத்திற்கு சென்று வர இத்துணை தடைகளா..?’ வெகுண்டாள்..

“தமையனின் துணையோடுதான் நான் இல்லம் விட்டு ஏக வேண்டுமென்றால்.. அந்த நந்நாள் வருகை புரியவே புரியாது தந்தையே.. எங்கும் செல்லாமல் நான் இல்லத்திலேயே முடங்கிக் கிடக்க வேண்டியதுதான்..” வதனத்தை தூக்கி வைத்துக் கொண்டாள் வசுந்தரா..

மகளின் முகச் சிணுக்கத்தில் கைலாசநாதருக்கு குற்றஉணர்வு மேலிட்டது.. மகளை சமாதானம் செய்விக்க முனைந்தார்..

“தமது நன்மைக்காகத்தான் உரைத்தேன் மகளே..”

“எது நன்மை தந்தையே..? புதல்வனை மட்டும் நகர்வலம் வர விடுவது.. புதல்விக்கு ஆலயத்திற்கு சென்று வரக்கூட ஆயிரம் தடைகளைக் கூறுவது.. இதுவா தாங்கள் எனக்குப் புரியும் நன்மை..?”

“சினம் கொள்ள வேண்டாம் குழந்தாய்..”

“நான் குழந்தை அல்ல தந்தையே..”

“அதனால்தானம்மா இந்தத் தந்தை அதீத கவலை கொள்கிறேன்..”

“பெண்ணென்ற எனது பிறப்பு தங்களுக்கு கவலை அளிக்கக் கூடியதா தந்தையே..?”

“அவ்வாறு எவர் உரைத்தது..? நீ எனது இல்லத்தில் மகிழ்வை விதைக்க வருகை புரிந்திருக்கும் இளவரசி ஆவாய்..”

“உரையெல்லாம் சிறப்பாகத்தான் உள்ளது.. இந்த இளவரசியை மட்டும் இல்லத்திலேயே சிறை வைத்திருங்கள்.. தங்களது இளவரசனை அவனியை வலம்வரச் செய்யுங்கள்..”

“யாமா அவனிடம் அவனியை வலம்வரச் சொன்னோம்..? அவன் சொல்பேச்சை செவி மடுக்காத பிள்ளையாக உருமாறிவிட்டான் அம்மா..”

“ஆதலினால் அந்த அவனியை வலம் வரும் வாலிபனை விட்டுவிட்டு.. அடக்க குணம் கொண்ட

பேதை மகளிடம் தங்களின் அடக்குமுறையை பிரயோகம் செய்ய யத்தனிக்கிறீர்களா தந்தையே..?"

வசுந்தரா தேவி வருகை புரியாத கண்ணீரை துடைப்பதைப் போல பாவனை செய்தாள்.. வதனத்தை சோகமாக வைத்துக் கொண்டாள்.. போதாத குறைக்கு நாசியை வேறு உறிஞ்சலானாள்..

இந்த ஒட்டு மொத்த முற்றுகையில் வீழ்ந்து விட்டார் கைலாசநாதர்..

"அடடா..! இதன் பொருட்டா கண் கலங்குவது..? விழிநீர் விடலாகாது மகளே..! நமது கண்ணீரை 'முணுக்' எனும் விவகாரங்களுக்காக எல்லாம் உகுத்து விடக் கூடாது அம்மா.. அது விலை மதிப்பில்லாதது.. இந்த கைலாச நாதரின் செல்வப் புதல்வி கண்ணீர் சிந்துவதா..?"

"சிந்த வைப்பதே தாங்கள்தானே..?"

"தற்போது தமக்கு யாது தேவை..?"

"பொன்னும் பொருளும் வேண்டவில்லையே.. இதோ.. அழைக்கும் தொலைவில் உள்ள ஆலய வழிபாட்டைத்தானே வேண்டினேன்..?"

"சரி அம்மா.. சென்று வா.."

ஒருவழியாக ஒப்புதல் அளித்து விட்டார் கைலாச நாதர்.. மலையைப் புரட்டி விட்ட ஆயாசத்துடன்.. ஆலயத்திற்கு புறப்பட ஆயத்தமானாள் வசுந்தராதேவி..

ரதத்தில் ஏறி அமர்ந்த பின்னரும்.. கைலாசநாதர் ரதத்தை வலம் வந்து.. பட்டுத் துணிகளின் தன்மை

கடினமானதாக உள்ளதா.. அல்லது.. மெலிதாக உள்ளதா என்று பரிசீலனை செய்து பார்த்தார்..

ரதத்தைச் சுற்றி இடைவெளி இல்லாமல் பட்டுத்துணி கொண்டு மூடப் பட்டுள்ளதா என்ற அடுத்த பரிசீலனை ஆரம்பமான போது.. பொறுமை இழந்த வசுந்தரா..

"எப்படியும்.. ஓர் தினத்திற்குள் தங்களது பரிசீலனையை முடித்து விடுவீர்கள் அல்லவா தந்தையே..? அதுவரை நான் ரதத்தை விட்டு இறங்கி.. இல்லத்துக்குள் சென்று.. மூன்று வேளை உணவையும் உண்டு விட்டு.. துயில் கொள்ளச் செல்கிறேன்.. அதற்குள் இன்றையப் பொழுதும் கழிந்து விடும்.. தாயாரை அழைத்து வர ரதத்தை அனுப்ப வேண்டிய பொழுதும் நெருங்கி விடும்.. எவ்வாறோ.. நான் ஆலயத்திற்கு செல்லாமல் இல்லத்தில் இருந்தாக வேண்டும்.. அதுதானே தங்களது குறிக்கோள்..?"

வசுந்தரா பூக்குடலையுடன் ரத்தை விட்டு இறங்குவதைப் போல பாவனை செய்த பின்னர்தான் பட்டுத் துணியை விடுவித்தார் கைலாசநாதர்..

நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த வீரபாகுவிற்கு நகைப்பு வந்தது.. வசுந்தரா அவன் வளர்த்த பெண்குழந்தை.. அவளின் துடுக்குத்தனத்தில் மனம் லயித்தான் அவன்..

"அய்யனே..! தாங்கள் கவலை கொள்ள வேண்டாம்.. நமது வசுந்தராதேவி அம்மாயாரை கவனமாக ஆலயத்திற்கு அழைத்துச் சென்று திரும்பி வருவது எனது பணி.. அதை

நான் சிரமேற்கொண்டு நிறைவேற்றுவேன்.. தேவியைப் பாதுகாப்பேன்.. மன அமைதியுடன் தாங்கள் வணிகத் தலத்திற்கு செல்லுங்கள்..” என்று கைலாசநாதரிடம் உறுதி யளித்தான்..

அதன் பின்னரும் அரைமனதாகத்தான் மகளை அனுப்பி வைத்தார் கைலாசநாதர்.. இல்லம் விட்டு ஏகி.. ராஜபாட்டையால் ரதம் ஓட ஆரம்பித்ததும்..

“அப்பா..” என்று இதழ்களைக் குவித்து காற்றை ஊதினாள் வசுந்தராதேவி..

அவளின் செயல்கண்டு வீரபாகு வியந்தான்..

“என்ன அம்மா இது..?” என்று கேட்டான்..

“இல்லம் விட்டு ஏக இத்துணை சிரமமா..? ஏன் வீரபாகு..”

“கூறுங்கள் அம்மா..”

“ஓர் இல்லத்தில் பிறந்திருக்கும் ஆண் மகவுக்கும்.. பெண் மகவுக்கும் இடையே ஏன் பேதம் காட்டுகிறார்கள்..?”

“புரியவில்லை தாயே..”

“தங்களுக்கா புரியாது..? புரியாததைப் போல வேடம் புனைகிறீர்கள்..”

“ஹா.. ஹா..”

“நகைக்க வேண்டாம்.. நகர்வலம் வரும் தமையனை தந்தையார் ஏதும் உரைக்க மாட்டார்.. ஆலய வழிபாட்டிற்கு செல்வதற்கு கூட எனக்கு ஆயிரம் தடைகள் போடுவார் என்றால் இது பேதம் அல்லவா..?”

"அம்மா.. தங்களின் தமையனார் வல்லவர் ஆண்பிள்ளை சிங்கம்..!"

"ஹு..! வளர்த்து விட்டதிற்காக தாங்கள் எத்தனை புனைவுப் பெயர்களையெல்லாம் அவனுக்கு சூட்ட வேண்டியுள்ளது..? சூட்டும் புனை பெயரை பொருத்தமாக சூட்டலாம் அல்லவா..? அவனா சிங்கம்..? சிங்கம் இம்மொழியினை செவி மடுத்தால் தங்களை உண்ண வருகை புரிந்து விடாதா..?"

"ஹா.. ஹா.."

"இதற்கும் நகைப்பா..? தமையன் சிங்கமெனில் நான் யாராம்..?"

"புள்ளிமான் அம்மா.."

ரதத்தைச் செழுத்திக் கொண்டிருந்த வீரபாகு வாஞ்சையுடன் அவள் புறமாக திரும்பிப் பார்த்தான்.. அவன் விழிகளில் வாத்சல்யம் பொங்கி வழிந்தது.. அவன் கரங்களில் சின்னஞ்சிறு மழலையாக ஏந்திக் கொண்ட மகவு.. வளர்ந்து யௌவனத்துடன் அவனியில் உள்ள ஒட்டு மொத்த வனப்பையும் தன்னகத்தில் கொண்டிருந்ததில் அவனுக்குள் பெருமிதம் கலந்த கவலை வந்தது..

'இத்துணை அதிரூப சுந்தரியாக உள்ள இந்த மங்கைக்கு ஏற்ற வரன் அமைய வேண்டுமே..'

அவளின் அதீத அழகை அவள் அறிவாளா என்ற வினாவும் அவனது நெஞ்சத்தில் எழுந்தது.. வசுந்தராவின் குறுகுறுப்பான விழிகள் இல்லையென்ற பதிலை அளித்தன.

அது மெய்தான்..! தனது எழிலைப் பற்றிய உணர்வு வசுந்தராவுக்கு என்றுமே இருந்ததில்லை.. நிலைக் கண்ணாடியில் பிரதிபலிக்கும் தனது பிம்பத்தை ஓர் நொடிக்கு மேல் அவள் ஊன்றி பார்த்ததில்லை.. காண்பவரின் மனதை வசீகரித்து ஈர்த்து விடும் ஆற்றல் கொண்ட பேரழகி அவள் என்பதை உணராத அறியாமையுடன் அவள் இருந்தாள்..

“புள்ளி மானா..?” கலகலத்து நகைத்தவளை பரிவுடன் பார்த்தான் வீரபாகு..

“ஆம் அம்மா.. தாங்கள் புள்ளி மான்தான்.. சிங்கத்தை விட புள்ளி மானுக்குத்தான் அதிக அளவில் பாதுகாப்பை அளிக்க வேண்டும் அம்மா.. சிங்கம் வேட்டையாடக் கூடியது.. அதை நெருங்க எவரும் அஞ்சுவர்.. புள்ளிமான் அவ்வாறு அல்ல.. அது வேட்டையாடப்படக்கூடியது.. அதனை துரத்த சிறுத்தையும்.. சிங்கமும்.. காத்திருக்கும்.. எனவேதான் புள்ளி மானுக்கு அதிக அளவில் பாதுகாப்பை அளிக்க முனைகிறார்கள் அம்மா..”

“இந்த அவனி எளியோரைத்தான் வேட்டை யாடுமா..?”

வசுந்தராதேவியின் இந்தக் கேள்விக்கு என்ன பதிலை வீரபாகுவால் உரைக்க இயலும்..?

காலம் காலமாக அதுதானே நடந்து கொண்டிருக் கிறது..!

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'

1

நிழலான நினைவுகளில்
நிம்மதியை புதைத்து வைத்தேன்..

கையிலிருந்த கடிதத்தைப் பார்த்தபடி பிரமை பிடித்தவளைப் போல நின்று விட்டாள் யாமினி.. அவளது காதுகளில் இடியின் சப்தமும் கொட்டுகின்ற மழைத் தாரைகளின் சப்தமும் கேட்டபடியே இருந்தது..

"இம்புட்டு மழையும் நீ வாரதுக்காகவே காத்திருந்துச்சு போலடா.. நீ உள்ளே கால் வைக்கிற.. மழை கொட்டுது.."

யதுநந்தனிடம் இயல்பாக பேசிய அனுராதாவின் வார்த்தைகளில் யாமினியின் உடல் நடுங்கியது..

'யாருக்காக இந்த மழை காத்திருந்தது..?'

யதுநந்தனைப் பார்த்தாள்.. அவன் அனுராதாவிடம் சுவராஸ்யமாக எதையோ பேசிக் கொண்டிருந்தான்..

'இவனுக்காகவா இந்த மழை காத்திருந்தது..?'

அவள் ஜன்னலருகே சென்று மழையை வெறித்தாள்.. கன்னங்கரேலென்ற மழையின் கும்மிருட்டு.. அடர்ந்த நீர்த்தாரைகளின் சப்தம்.. இடைவிடாத பேய் மழை..!

'இந்த மழை கொட்டுகிறதை நிப்பாட்டி வைத்திருந்ததா..? ஏன்..?'

அவளது கையில் கனத்த கடிதத்தின் மீது அவளது பார்வை ஓடியது.. காலையில் கை நழுவி.. இரவினில் கைக்குக் கிடைத்த கடிதம்.. சிறு தூசிகூடப் படியாமல் புதுப் பெண்ணின் பொழிவோடு இருந்தது..

'எப்படி..?'

அவளின் உடல் நடுக்கம் அதிகமாகியது.. தோட்டத்தின் ஊஞ்சலைப் பார்த்தாள்.. அடித்துக் கொண்டிருந்த மழையின் வேகத்தில் அங்கும் இங்கும் அது ஆடி அவளை பயமுறுத்தியது..

'அந்த ஊஞ்சலில்தானே கடிதத்தை வைத்தேன்..?'

யாமினியின் இதயம் தடதடத்தது.. பகல்பொழுது முழுவதும் மழைக் காற்று சுழன்றடித்ததை நினைத்துப் பார்த்தாள்..

"தோட்டத்துக் குப்பையெல்லாம் இந்தக் காத்து வாசலில கொண்டு வந்து தள்ளிருச்சு.."

சலித்துக் கொண்ட அனுராதாவின் வார்த்தைகளையும் நினைத்துப் பார்த்தாள்.. அப்பேற்பட்ட ஊதல்காற்று அந்தக் கடிதத்தை எதுவும் செய்யவில்லையா..? மரத்தின் கிளைகள் கூடப் பறந்த சுழிக் காற்றில் கடிதம் பறக்காமல் பத்திரமாக இருந்ததா..?

"அங்கே என்னடி பண்ற..?" அனுராதா அதட்டினாள்.

"வேறென்ன பண்ணுவா..? இருட்டை வெறிச்சு வெறிச்சுப் பார்த்துக்கிட்டு நின்னுக்கிட்டு இருப்பா.. இவளுக்கு இதே பொழைப்பாப்போச்சு.." யதுநந்தன் அலுத்துக் கொண்டான்..

"யாமினி கதவை மூடிட்டு வா.."

"விடுடி.. குழந்தை மழையைப் பார்க்க ஆசைப்படறா.."

"இந்தப் பேய் மழையைப் பாக்க ஆசைப்படறாளா..? அறிவோடதான் பேசறிங்களா..? இதில இவ குழந்தையாம்."

"மழையை ரசிக்கவும் ஒரு மனசு இருக்கணும்.."

"உங்களுக்கும்.. உங்க மகளுக்கும் அந்த மனசு இருக்கில்ல.. அது போதும்.. ரெண்டுக்கு மேலே மறை கழண்ட கேஸ் இருந்தா இந்த வீடு தாங்காது.."

"அனு.."

"கத்தாதீங்க.. ஒரு நேரம் போல ஒரு நேரம் இருக்காது.. அடிச்சுக்கிட்டிருக்கிற பேய் மழைய பகல்ல பாத்தாலே பயமா இருக்கும்.. இந்த லட்சணத்தில இவ கும்மிருட்டில கொட்டற மழைய முட்டக் கண்ணத் தொறந்து வைச்சுக்கிட்டு முழிச்சு முழிச்சு பாத்துக்கிட்டு இருக்கா.. பயந்து கியந்து தொலைச்சிட்டா என்ன பண்றது..? அதச் சொல்ல வந்தா இவரு குழந்த.. கிழந்தன்னு தொட்டில் கட்டி தாலாட்டுப் பாடக் கிளம்பறாரு.. யது இந்தக் கொடுமையை ஏன்னு கேட்க மாட்டியா..?"

"ஏம்பா..?"

யதுநந்தனின் ஓட்டு மொத்த அலுவலக எரிச்சலையும் அந்த ஒற்றை வார்த்தை பிரதிபலித்ததில் பிரதாப் வாயை மூடிக் கொண்டு மௌன குருவானார்.. அனுராதா அடுத்த குறியாக யாமினியை நோக்கித் திரும்பினாள்..

"ஏய்.. யாமினி.. இப்பத் கதவ மூடிட்டு வரயா இல்லயா..?"

யாமினியிடம் அசைவில்லை.. அனுராதா பேசியதை காதில் வாங்கிக் கொள்ளாமல் அவள் செதுக்கி வைத்த சிலையைப் போல ஜன்னலின் வழி தெரிந்த மழையின் இருட்டில் கடந்த காலத்தின் நிழல்களின் சுவடுகள் தென்படுகிறதா என்று துழாவிக் கொண்டிருந்தாள்..

"அவளையென்ன அப்பான்னு நினைச்சீங்களாம்மா.. அவ உங்களுக்கும் பெப்பே.. எனக்கும் பெப்பேன்னு சொல்லிருவா.. இடிச்சபுளிபோல நிக்கிறதில இவள மிஞ்ச யாராலயும் முடியாதும்மா.. கிட்டப் போயி முதுகில நாலு மொத்து மொத்திக் கூப்பிட்டுக்கிட்டு வாங்க.. இல்லேன்னா விடிய விடிய மழையைப் பாத்துக்கிட்டு அங்கேயே நின்னு தொலைப்பா.." எரிச்சல்பட்டான் யது நந்தன்..

என்னதான் அவன் எரிச்சலோடு சொன்னாலும் அதுதான் உண்மையாக இருந்து தொலைத்தது..

2

ஒளிர்விடும் வைரத்திலே..
உன் மனதை ஒளித்து வைத்தாய்..

காஞ்சியின் அழகுக்கு ஈடில்லை என்று வசுந்தராதேவி எண்ணிக்கொண்டாள்.. கடந்து போன மரங்களின் எழிலை ரசித்தவள்.. அடுத்து அந்த ராஜபாட்டையில் ஏகாம்பரேஸ்வரரை தரிசனம் செய்ய எந்த தினத்தில் வருகை தர இயலுமோ என்ற சிந்தனையில் ஆழ்ந்தாள்..

இல்லம் நீங்கிக் கிளம்பிய பொழுதில் வீரபாகு கூறிய செய்திகள் அவள் மனதில் வருகை தந்தன..

"எளியோர் என்று தங்களை உரைக்க வேண்டாம் அம்மா.."

"தாங்கள்தானே உரைத்தீர்கள்.."

"என்னவென்று..?"

"புள்ளிமானைத்தான் வேட்டையாடுவார்கள் சிங்கத்தை அணுகவும் துணிய மாட்டார்கள் என்று.."

"அதன் பொருள் இதுவா..?"

"வேறு எதுவாம்..?"

வதனத்தைத் தூக்கி வைத்துக் கொண்ட வசுந்தராவின் சினத்தைக் கண்டு வீரபாகுவுக்கு நகைப்புத்தான் வந்தது..

'இன்னமும் இந்தப் பெண் குழந்தையாகவே உள்ளாள்..' பரிவுடன் அவனது பார்வை அவளுக்கு சாமரம் வீசியது..

"தாங்கள் இன்னமும் மழலையாகவே உள்ளீர்கள் அம்மா.." மனதை மறைக்காமல் உரைத்து விட்டான்..

"தாமும் தந்தையைப் போல மொழிய ஆரம்பித்தாயிற்றா..? சுத்தம்.. இருவரும் கூறி வைத்துக் கொண்டு பகர்ந்து பார்க்கின்றீர்களோ என்று எனக்கு சம்சயமாக உள்ளது.."

"தேவையற்ற சம்சயம்..! அய்யனிடம் முன்நின்று பேசக்கூட அஞ்சுபவன் நான்.. இந்த நிலையில் அவருடன்

கூறி வைத்துக் கொண்டு மொழிந்து பார்க்கிறேனா..? வேடிக்கைதான் அம்மா..” வீரபாகு மீசைக்கு இடையில் பளிச்சிட்ட பல் வரிசையுடன் நகைத்தான்..

“தங்களை ஒன்று கேட்க வேண்டுமே..”

“கேளுங்களேன்.. தங்களுக்கு சொல்லாத பதிலா..? இதற்காக என்னிடம் அனுமதி கோர வேண்டுமா அம்மா..?”

“தாம் எதற்காக தந்தையின் முன்னிலையில் நின்று பேச அஞ்ச வேண்டும்..?” இமை கொட்டி வினவினாள் வசுந்தராதேவி..

அவளின் இமைகொட்டலில் தோன்றிய வசீகரத்தில் அவளைப் பாதுகாப்பதற்காக கைலாசநாதர் கவலை கொள்வதில் பெருத்த நியாயம் உள்ளது எண்ணிக் கொண்டார் வீரபாகு..

“அது அச்சமல்ல அம்மா..”

“பின்னே..?”

“அய்யனிடம் நான் காட்டும் பணிவு..”

“பணிவுக்கும், அச்சத்துக்கும் வித்தியாசமுண்டா..?”

“பெருத்த வித்தியாசமுண்டு..”

“என்னவோ போங்கள்.. எனக்கேதும் புரியவில்லை..”

காஞ்சியின் வீதிகளில் மக்களின் நடமாட்டம் குறைந்திருப்பதைப் போல தோன்றியதில் அதுபற்றி வீரபாகுவிடம் வினவினாள் வசுந்தரா.. அவன் உடனடியாக பதில் கூறவில்லை.. குதிரைகளின் கடிவாளத்தை இழுத்துப் பிடித்து ரதத்தைச் செழுத்துவதிலே கவனமாக இருந்தான்..

"நான் கேட்டதற்கு தாம் பதில் உரைக்கவில்லை"

வசுந்தரா விடாப்பிடியாக நினைவுபடுத்திய பின்னர்தான் வாய் திறந்தான்.. அவன் முகத்தில் துயரம் படர்ந்திருந்தது..

"என்னவென்று உரைப்பது தாயே..! நடப்பவை எதுவும் நாட்டுக்கும் நமது கலாச்சாரத்திற்கும் உகந்தவையாக இல்லை.."

"இவ்வாறு கூறினால் நான் எவ்வாறு பொருள் கொள்வேன்..? நான் ஒன்று வினவினால் நீங்கள் வேறு ஒன்றை பதிலாக உரைக்கின்றீர்கள்.. மொட்டைக் காத்தான் குட்டையில் விழுந்தான் என உரைத்தால் நான் கூந்தலைப் பிய்த்துக் கொள்ள மாட்டேனா..? என்மீது கோபமிருந்தால் இவ்விதமாக பதிலுரைத்து பழி வாங்குவீர்களா..? பொருள் புரியாமல் நான் சுவரின் மீது சிரத்தைவைத்து 'ணங்..ணங்' என்று மோதிக் கொள்ள வேண்டுமென்பதுதான் தங்களின் விருப்பமா..?"

"அடடா..! அவ்வாறு இல்லையம்மா.. காஞ்சியென்று இல்லை.. தமிழகத்திலே உள்ள அனைத்துக் கோவில் களுக்கும் இடையூறு விளைவிக்கும் காலகட்டம் வந்து தொலைத்துள்ளது அம்மா.. இதை எங்கே சென்று உரைப்பது.. மனிதர்களுக்கு இடையூறு வந்தால் தெய்வத்திடம் சென்று முறையிடலாம்.. அந்த தெய்வம் குடியிருக்கும் கோவில்களுக்கே இடையூறென்றால் எவரிடம் சென்று புகார் சொல்வது அம்மா..?"

"கடவுளே..! ஏதேதோ உரைக்கின்றீர்களே.. எனக்கேதும் புரியவில்லையே.."

"புரியாமல் இருப்பதுவே நன்மை பயக்கும்.."

"எவருக்கு..?"

"நம் அனைவருக்கும்.. ஆலயத்தை நெருங்கி விட்டோம்.. விரைவாக ஏகாம்பரேஸ்வரரை தரிசித்து விட்டு வாருங்கள் அம்மா.."

"ஏன் உரைக்க மாட்டீர்கள்..? இல்லத்திலேயே அடைந்து கிடப்பவள் என்றேனும் ஓர் தினத்தில்தான் வெளியுலகைக் காண்கிறேன்.. அந்தப் பொழுதையும், விரைந்து கடக்க வேண்டுமானால்..? நன்றாக உள்ளது தங்களின் நியாயம்..! தங்களுக்கு எனது தந்தை தேவலாம் போல உள்ளதே.. நான் தாமதமாகத்தான் வருவேன்.. தங்களால் இயன்றதைப் பார்த்துக் கொள்ளுங்கள்.."

காஞ்சி மாநகரத்தின் தலைவராம் ஏகாம்பரேஸ்வரின் ஆலயத்தின் முன்பாக நின்ற ரதத்தில் இருந்து இறங்கி நின்ற வசுந்தராதேவி சட்டமாக கூறினாள்..

மறுத்துப் பேச இயலாமல் வீரபாகு அரைகுறையாக புன்னகைக்க முயன்று தோற்றான்.. சுற்றிலும் நிலவிய பதட்டமான சூழல் அவன் மனதில் கவலையை மூளச் செய்தது.. வருகை புரிந்த அரைகுறை புன்னகையும் உரைந்து போனதில்..

"இதற்கு தாம் நகைக்காமலே இருந்திருக்கலாம்.." என்று சொல்லிவிட்டு பூக்குடலையுடன் ஆலயத்திற்குள் பிரவேசித்தாள் வசுந்தராதேவி..

அமைதி கொஞ்சும் ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தில் வசுந்தராவின் மனம் அமைதி கொண்டது.. இறைவனையும்..

இறைவியையும் வணங்கி விட்டு.. சுற்றுப் பிரகாரத்தை மெதுவாக வலம் வரத் தொடங்கினாள்..

ஆலயத்தின் வாயிலில் காத்திருந்த வீரபாகுவிடம் ஒருவன்..

"என்ன அப்பனே..! இங்கென்ன செய்கிறாய்..?" என்று வினவி வைத்தான்..

ரதத்தின் அருகே நின்றிருந்த வீரபாகு அவனை ஏற இறங்க பார்வையிட்டு விட்டு..

"அந்தத் தகவலை அறிந்து உனக்கு ஆகப் போவதென்ன..?" என்று கேட்டு வைத்தான்..

"என்னப்பா இது..! அறியாமல் இங்கு நின்று கொண்டிருக்கிறாயே என்ற அனுதாபத்தில் வினவி வைத்தால் நீ என்னிடமே எகிறுகிறாயே.. என்னவோ போ.. நல்லதிற்கு என்றுமே காலம் இல்லை என்று பெரியோர்கள் உரைப்பதில் மெய் உள்ளது.. தமக்குப் போய் நான் அறிவுரை உரைக்க எண்ணினேன் பார்.. என்னைக் கூற வேண்டும்.." வாய் கொடுத்தவன் அலுத்துக் கொண்டு விலகிச் செல்ல யத்தனித்தான்..

"நில்லப்பா.. நீயாக வந்தாய்.. ஏதோ உரைத்தாய்.. விலகியும் போகிறாயே.. உரைக்க வந்ததை முழுமையாக உரைத்த பின்னர் விலகிச் செல்.." வீரபாகு அவனது வழியை மறித்தான்..

"தம்மிடம் உரைத்து எனக்கு ஆகப் போவதென்ன..?"

வீரபாகு உரைத்த வார்த்தைகளை அவனிடமே திருப்பி அனுப்பி வைத்தான் அந்த நலம் விரும்பி..!

"எம்மிடமேவா..?" ஒரு வகையான குரலில் வினவியபடி நலம் விரும்பியை பாதாதிகேசம் முதல் பார்வையிட்டான் வீரபாகு..

"சரிதான் போ.. என்னவோ பெண் கொடுக்க முனைகிறவனைப் போல அல்லவா பார்வையிட்டு வைக்கிறாய்..?" என்றான் அவன்..

"தமக்குப் பெண் கொடுப்பதற்குப் பதில் அப்பெண்ணை விந்திய மலைச் சாரலில் இருந்து விந்தித் தள்ளி விடுவேன்.. அதனால் வீண் ஆசைகளைத் தவிர்த்துவிடு.. அதுவே உனக்கு நலம் பயக்கும்.."

வீரபாகு தனது அடர்ந்து உருண்டு திரண்ட புஜங்களை ஆட்டிய வண்ணம் பெரிய மீசையினில் கரம் வைத்து முறுக்கினான்..

அவனது சிவந்த வண்ணம் பூசிய விழிகள் வெளிப்படுத்திய சினத்தில் வாயாட இயலாமல் வாய் மூடி அதரங்களின் மீது ஒற்றை விரலை வைத்து அமைதி காத்தான் நலம் விரும்பி..!

"அஃது..! வாய் உள்ளது என்பதற்காக எதை வேண்டுமானாலும் உரைத்து விடுவாயா..? நாவடக்கம் சாலச் சிறந்தது.. அதை மனதில் கொண்டு உரையாடிப் பழகு.."

"ஆகட்டும் அப்பனே..!"

"இப்போது கூறு.. நீ உரைக்க வந்த செய்தி என்ன..?"

"மாலிக்காபூரின் பார்வை மதுரை மாநகரிலிருந்து காஞ்சியின் புறமும் திரும்பியுள்ளதாம்.. பாதுகாப்பற்ற

சூழலில் ஏகாம்பரேஸ்வரரை தரிசிக்க எவ்வித அச்சமுமின்றி வருகை புரிந்துள்ளாயே என்று வினவினேன்.."

அந்த வழிப்போக்கன் உரைத்த செய்தியில் கலக்கம் கொண்டான் வீரபாகு.. இருப்பினும் தனது மனக் கலக்கத்தை புலப்படுத்திக் கொள்ளாமல்.. விழிகளை உருட்டி நோக்கியபடி..

"அச்சத்தை விரட்டும் ஏகாம்பரேஸ்வரரின் ஆலயத்திற்கு வருகை புரியவும் அஞ்ச வேண்டுமோ..?" என்று அதட்டினான்..

"அருமையான வினாவைத்தான் வினவி வைத்துள்ளாய்.. இது உனக்குத் தெரிகின்றது.. எனக்கும் தெரிகின்றது.. அந்த மாலிக்காபூருக்குத் தெரிய வில்லையே..."

"அவன் நாமத்தை உரைக்காதே.. செவி மடுக்கவே எரிச்சல் பொங்குகிறது.."

"எனக்கும்தான் அவன் நாமத்தை உரைப்பதற்கு திருவாய் கசக்கிறது.. அந்த எழில்மிகு நாமத்தை உரைக்க வேண்டுமென்ற வேண்டுதலா எனக்குள்ளது..?"

"மாற்று மதத்தினரின் செல்வங்களை சூறையாடுவதே தவறு.. அவர்களின் ஆலயங்களையும் சூறையாடலாமா..? அது மனிதச் செயலாகுமா..? ஆண்டவன் என்பவன் அனைவருக்கும் பொதுவானவன்.. பார்க்கும் பார்வைதான் வேறு.. அளிக்கப்படும் நாமங்களும் வெவ்வேறு.. தெய்வம் ஒன்றுதான்.. இந்த எண்ணம்

மனதிலிருந்தால் நம் ஆலயங்களை சிதிலமாக்க முற்படாமல் விலகிச் சென்றிருப்பான்.."

"அதைக்கூறு.. வழிபடும் முறைகள் வேறாக இருந்தாலும்.. தெய்வம் ஒன்றுதானே.. அவர்களின் வழிமுறையில் அவர்கள் ஒரு நாமத்தை இட்டு அழைக்கின்றனர்.. நமது வழிமுறையில் நாம் ஒரு நாமத்தை இட்டு அழைக்கின்றோம்.. அவ்வாறிருக்க.. ஆலயங்களை மூடிடச் செய்வது தவறல்லவா..?"

"சரியாக உரைத்தாய்.. இந்நிலைமை அதிக தினங்கள் நீடிக்காது.. நமது ஆலயங்களைக் காக்கும் கரங்கள் வந்து சேரும் தினம் வெகு தொலைவினில் இல்லை.."

"என்னவோ போ அப்பனே..! நான் ஒரு தேசாந்திரி..! காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரையும், வரதராஜப் பெருமாளையும் சேவிக்கும் பொருட்டு இந்நகருக்கு வந்தேன்.. வரும் வழியில் நான் காண நேர்ந்த நிகழ்வுகளில் அஞ்சியதினால்தான் உன்னையும் எச்சரித்தேன்.."

அந்த வழிப்போக்கனின் நல்லெண்ணத்தில் மனம் நெகிழ்ந்தான் வீரபாகு.. அவன் வரும் மார்க்கத்தில் அஞ்சிடத் தகுந்த நிகழ்வுகளைக் கண்ணுற்றதினால் வீரபாகுவை எச்சரிக்க முனைந்திருக்கிறான் என்பதினையும் புரிந்து கொண்டான்..

"தமக்கு நல்ல மனது.." மனம் விட்டுப் பாராட்டினான்.

"தமது பாராட்டுக்கு வந்தனம் அப்பனே..! ஆயினும் இந்நகரில் அதிக நாழிகை நிற்க வேண்டாம்.. தாம் ரதத்தினில் அழைத்து வந்த இளம் வயது மங்கை

எழில் மிக்கவளாக இருக்கிறாள்.. இங்கே வருகை தந்து கொண்டிருக்கும் மாலிக்காபூரின் படைவீரர்களின் பார்வையினில் அவள் பட்டுவிடக் கூடாது.. கவனமாக இரு.." வழிப்போக்கன் எச்சரித்தான்..

"என்னது..?" வீரபாகு அதிர்ந்தான்..

பரபரப்புடன் வழிப்போக்கனின் புஜங்களைப் பற்றியவன் பதட்டத்துடன் வினவினான்..

"யாது கூறினாய் நண்பா..? இந்நகரை நோக்கி மாலிக்காபூரின் படைவீரர்கள் வருகை புரிகின்றனரா..?"

"ஆம் அப்பனே..! வரும் வழியில் அவர்களின் அட்டகாசத்தை நான் காண நேர்ந்தது.. கானகத்தில் இருந்த ஆலயங்களை அவர்கள் இழுத்து மூடினார்கள்.. தடுக்க முனைந்தவர்களைத் தாக்கிக் காயப்படுத்தினார்கள்.."

"இது அடுக்காது.."

"இதை எவர் அவர்களிடம் உரைப்பது.. கண்ணுற்ற காட்சிகளில் எமது குருதி கொதித்தது.. 'இறைவா..! இது என்ன சோதனை..' என்று ஏகாம்பரேஸ்வரரை வினவ வந்தேன்.. நீ சடுதியில் இவ்விடத்தை விட்டு நீங்கி விடு.."

வழிப்போக்கன் சென்று விட்டான்.. வீரபாகு பெருத்த கவலையுடன் வசுந்தரா தேவியின் வருகைக்காக காத்திருந்தான்.. அவளோ ஆலயத்தில் அவள் வழக்கமாக சந்தித்து உரையாடும் அர்ச்சகர் இல்லத்து மங்கைகளிடம் உரையாடியபடி அன்னப் பட்ஷியைப் போல அசைந்தாடி வந்தாள்..

"அவ்வாறா அம்பிகை..? இன்றிரவு ஏகாம்பரேஸ்வரர் நகர்வலம் வருவாரா..?"

"அவ்விதம்தான் எனது தந்தை உரைத்தார் வசுந்தரா.. மாற்றமேதும் இருக்காது என்றே எண்ணுகிறேன்.."

"இறைவனின் உற்சவத்தில் மாற்றம் வரக்கூடுமோ..?"

"இதுவரை அது போன்ற மாற்றங்கள் நிகழ்ந்ததில்லை.. தற்போதுதான் நிலைமை தலைகீழாக மாறிக் கொண்டுள்ளதே.."

"புரியவில்லை.."

"உனக்குப் புரியாமலிருப்பதே உத்தமம்.. சென்று வா தோழி..!"

"என்னவென்று உரைக்க மாட்டாயா..?"

"நீ என்றேனும் ஓர் தினத்தில் ஆலயம் வந்து திரும்புபவள்.. எங்களைப்போல ஆலயத்தின் அருகினிலே வசிப்பவள் அல்ல.. மடியினில் அனலைக் கட்டிக் கொண்டு நாங்கள் வாழும் சூழலை உன்னால் புரிந்து கொள்ள இயலாது வசுந்தரா.."

"ஆலய தரிசனம் ஆயிரம் நன்மைகளை அளிக்க வல்லது தோழி..! கோபுர தரிசனம் கோடி நன்மைகளை அளிக்குமே.. இவையிரண்டும் தினந்தோறும் கிட்டும் பேறு பெற்றவள் நீ.. உன்னை எண்ணி நான் பொறாமை கொள்கிறேன் அம்பிகை.."

"எமக்கும் அந்தப் பெருமிதம் சிலதினங்களுக்கு முன்புவரை இருந்ததென்னவோ மெய்தான் வசுந்தரா..

ஆனால்.. தற்போதுள்ள சூழலில்.. நமது ஆலயங்களும்.. ஆலய கோபுரங்களும் பாதுகாப்புடன் இருக்க வேண்டுமே என்று என்மனம் பரிதவிக்கிறது.. நம்மைக் காக்கும் இறைவன் உறைந்திருக்கும் கோவில்களை நாம் பாதுகாக்க வேண்டாமா..?"

கவலையுடன் கூறிய அம்பிகையை விசித்திரமாக நோக்கினாள் வசுந்தரா தேவி..! எதன் பொருட்டு அம்பிகை இந்த அளவுக்கு துயர் கொள்கிறாள் என்று அவளுக்கு புரியவே இல்லை..

"என்னவென்று விளங்கக் கூறக்கூடாதா அம்பிகை..?"

"விளக்கித்தான் என்ன பயன்..? பெண்ணாகப் பிறப்பெடுத்து விட்ட நம்மால் என்ன செயலைப் புரிய முடியும்..? வாளேந்தும் கடமை ஆண்களுக்கானதல்லவா..?"

"ஏனாம்..? பெண்ணுக்கு போர்பயிற்சி அளிக்கக் கூடாதென்று எவர் உரைத்ததாம்..?"

"காலம் காலமாக நமது மக்கள் கடைபிடித்து வரும் நியதி இதுதானே.. மாறி வரும் அரசியல் சூழலில் வாளேந்தும் பயிற்சிதனை நாம் மேற்கொண்டிருக்க வேண்டுமோ என்று தோன்றுகிறது வசுந்தரா.."

அம்பிக்கையின் ஆழ்ந்த கவலை குறித்து வசுந்தராவுக்கு நகைப்புத்தான் வருகை புரிந்தது..

"குடுகுடு கிழவியைப் போல உரையாற்றுகிறாய்.." என்று நகைத்தாள் அவள்..

அவளது கேலியில் அம்பிகையும் கவலை மறந்து நகைத்தாள்.. தோழிகள் இருவரும் சூழலை மறந்து

நாழிகை நகர்வதைப் பற்றிய கவலையேதும் இன்றி உரையாடிக் கொண்டிருக்க.. வீரபாகு இருப்புக் கொள்ளாமல் தவித்தான்..

பருவ மங்கைகளின் உரையாடலுக்கு ஊடே புக இயலாமல் அவன் இரு கரங்களையும் பிசைந்த பிசைவை, அவனைக் கடந்து சென்றவர்கள் நின்று அவதானித்து அவனை விசித்திரமாக நோக்கி விட்டு அகன்றனர்..

'இது வேறா..?' வீரபாகு பற்களை நறநறத்தான்..

மழலைத்தனம் கொண்ட மங்கைக்கு பாதுகாவலாய் பணியாற்றுவதைவிட கூறாமல் சன்யாசம் வாங்கிக் கொள்வது உகந்தது என அந்நொடியில் அவனுக்கு தோன்றி வைத்தது..

ஒரு வழியாக தோழிகள் இருவரும் உரையாடலை முடித்துக் கொண்டு பிரிய யத்தனித்தனர்.. அம்பிகை வானத்தை அண்ணாந்து பார்த்து விட்டு..

"சூரியன் இங்கிருந்து அங்கு நகர்ந்துள்ளது.. நாம் வெகு நாழிகை உரையாடிக் கொண்டிருந்தோமோ.." என்று வசுந்தராவிடம் சந்தேகம் கேட்டதில் வீரபாகுவிற்கு பற்றிக் கொண்டு வந்தது..

'அதிலென்ன சந்தேகம்..' என்று கூற யத்தனித்தான்.. அதற்குள் வசுந்தராதேவி இடையில் புகுந்து..

"இல்லவே இல்லை.." என்று கூறி வீரபாகுவிற்கு மாரடைப்பை வரவழைத்தாள்..

"சில நொடிகள் உரையாடியதை சில நாழிகையென கணக்கிடுகிறாயே அம்பிகை..! நாம் இப்போதுதானே

• •ரையாடவே ஆரம்பித்தோம்..?" என்று அடாது அவள் கூறியதில் கால் மாற்றி கால் மாற்றி கால்கள் கடுக்க நின்று கொண்டிருந்த வீரபாகுவிற்கு வெறிவெறியாய் சினம் வந்தது..

"விடைபெறவா அம்பிகை..?" என்ற வசுந்தராவின் கேள்விக்கு..

"அதற்குள் என்ன அவசரம்..?" என்று வினவி வைத்த அம்பிகையை கொலைவெறியோடு நோக்கி வைத்தான் வீரபாகு..

'இந்தப் பெண்களுக்கு வாய் வலிக்கவே வலிக்காதா..?'

நெடுமூச்சுடன் அவன் துயர் கொண்டபோது.. அவன்துயர் துடைக்க வருகை தந்த மகானுபவராய் அம்பிகையின் தந்தை கோவிலுக்குள் இருந்து வெளியே வந்தார்.. வந்தவர் அவரது செல்வப்புதல்வியைக் கண்டதும் பதட்டத்தோடு..

"அம்பிகை..! இங்கே ஏனம்மா நின்று கொண்டிருக் கிறாய்..? இல்லத்திற்கு செல்லவில்லையா..?" என்று கடிந்து கொண்டார்..

"அல்ல தந்தையே..!" அம்பிகை பணிவோடு தந்தைக்கு விளக்கம் கூற ஆரம்பித்தாள்..

"வசுந்தராவுடன் உரையாடிக் கொண்டிருந்தேன்.. நாழிகை நகர்வதை அவதானிக்கவில்லை.."

"நல்ல பெண்ணம்மா நீ.. உன் தோழிக்குத்தான் ஊர் நிலவரம் தெரியாது.. உனக்குமா தெரியாது..? அறியாப்

பெண்ணுக்கு விளக்கம் சொல்லி அனுப்பி வைத்து விட்டு தாமும் இல்லத்திற்கு செல்வதை விடுத்து இங்கே நின்று உரையாடிக் கொண்டிருக்கிறாயே.. என்னவொரு அறிவிலி நீ..”

தந்தையின் சினத்தில் அம்பிகையின் வதனம் வாடி விட்டது.. அவள் சடுதியில் அவ்விடத்தை விட்டு அகன்றாள்.. செல்வப் புதல்வியை இல்லம் நோக்கிச் செல்ல விடாமல் வழி மறித்து வாய் வளர்த்த வசுந்தராதேவியை முறைத்துப் பார்த்த வண்ணம் அர்ச்சகர் கோவிலுக்குள் சென்றுவிட்டார்..

“நான் அறியாப் பெண்ணா..?”

அர்ச்சகரின் மீதிருந்த கோபத்தை வீரபாகுவிடம் காட்டி வின்வி வைத்தாள் வசுந்தராதேவி.. அவனுக்கு ‘ஆம்’ என்று கூறத் தோன்றியது.. தற்போதைய அரசியல் நிலவரத்தைப் பற்றி நீ அறிந்த பெண்ணல்ல என்று வீரபாகு மனதிற்குள் எண்ணிக் கொண்டான்.. கோப மூச்சுக்களுடன் ரதத்தில் ஏறி அமர்ந்த வசுந்தரா தேவி..

“பெருமாள் கோவிலுக்கு ரதத்தை செழுத்துங்கள்..” என்றுகூறி அவள் அறியாமை நிறைந்த மங்கைதான் என்பதை நிருபணம் செய்தாள்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



2

கார்இருளில் உன் முகம் தேடி
கால்கடுக்க நான் நடந்தேன்..

யாமினி பிரதாப்பின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.. மகளைப் பார்த்து மென்மையாக புன்னகைத்தார் பிரதாப்.. மனதை மயில் இறகினால் வருடிக் கொடுக்கும் புன்னகையை அவரால் மட்டுமே கொடுக்க முடியும் என்ற நினைவுடன் பதிலுக்கு மலர்ந்து சிரித்தாள் யாமினி.. குளித்து உடைமாற்றி வந்த யதுநந்தனின் முகத்தில் அகோரப் பசியின் சுவடு தெரிந்தது..

"ம்மா.."

சமையலறையை நோக்கிக் கத்தினான்.. கன்றின் குரல் கேட்ட பசுவாக கையில் காபி டிபன் தட்டுடன் வெளிப்பட்டாள் அனுராதா..

"அம்மான்னா.. அம்மாதான்.." என்றபடி தட்டை கையில் வாங்கிக் கொண்ட யது நந்தனின் பார்வை பிரதாப்பின் மீது படிந்தது..

'ஏன் இப்படிப் பார்த்து வைக்கிறான்.. நானெல்லாம் சும்மான்னு பார்வையிலேயே சொல்றானோ..' பிரதாப்புக்கு இருப்புக் கொள்ளவில்லை..

"என்னடா..?" என்றார்..

"ஏன்ம்மா.. அப்பாவுக்கு காபி, டிபன் கொடுக்கலையா..?" என்று கேட்டு வைத்தான் யதுநந்தன்..

'இதை எதுக்கு இப்பக் கேட்டு வைக்கிறான்..?'

பிரதாப்புக்கு ஒரு மண்ணும் புரியவில்லை..

'இவன் பார்வையும் புதிரா இருக்கு.. பேச்சும் புதிரா இருக்கு.. இந்த லட்சணத்தில் என் மகளப் போயி புதிருன்னு இவனும் இவன் அம்மாவும் பட்டம் கட்டறாங்க.'

பிரதாப் பிரியத்துடன் மகளைப் பார்த்தார்.. அதில் அனுராதா நொடித்தாள்.. மகனைப் பார்த்து..

"முடியலைடா.." என்றாள்..

"முடியலைன்னா ரெஸ்ட் எடுக்க வேண்டியது தானே..?" அக்கறைப் பட்டார் பிரதாப்..

"இது அந்த 'முடியலை' இல்லப்பா.. உங்களோட முடியலைன்னு அர்த்தப் படுத்திக்கனும்.." விளக்கம் சொன்னான் யதுநந்தன்..

'இதுக்கு மட்டும் புளி போட்டுத் தேச்சு விளக்கம் சொல்லிருவான்.. நான் 'என்னடா'ன்னு கேட்டா மட்டும் அப்பாவுக்கு காபி டிபன் கொடுக்கலையான்னு குழப்பித் தொலைப்பான்..'

அந்த அம்மா, மகனின் புரிதலில் பிரதாப்புக்கு அட்டூழியமான கோபம் வந்து தொலைத்தது.. அந்தக் கூட்டணி படு ஸ்ட்ராங்கான கூட்டணி என்பதால் அட்டூழியம் அமைதிகாக்க.. அனுராதா மகனை பாசத்துடன் பார்த்து..

"என் புள்ளைக்குத்தான் அவங்க அப்பாமேல எம்புட்டு அக்கறை..! அப்பாவுக்கு காபி டிபன் கொடுக்கலையான்னு கரிசனப் படறானே.. இந்த மனுசனும் இருக்காரே.. வேலைக்கு போன புள்ள வீடு திரும்பறதுக் குள்ள மழை வராம இருக்கனுமேன்னு நான் வேண்டாத தெய்வத்தை எல்லாம் வேண்டிக்கிட்டு இருந்தா இவரு வந்த புள்ளய வாசல்லயே நிப்பாட்ட கேட்டுக்கு பூட்டுப் போட்டுட்டு வர்றாரு.." என்று பெருமைப் பட்டுப் போனாள்..

"அதெல்லாம் ஒன்னுமில்ல.. அப்பா என் தட்டப் பார்த்து என்ன டிபன்டான்னு கேக்கறாரே.. அதனாலதான் அப்படிக் கேட்டேன்.." என்றான் அவளின் அருமந்தப் புத்திரன்..

"அடேய் யது..! நான் கேட்ட என்னடா.. இந்த என்னடா இல்லடா.. அது வேற 'என்னடா..'" என்று தெளிவாக விளக்க முயன்றார் பிரதாப்..

"ப்பா..! வரலைன்னா விட்டிருங்க.. எதுக்காக வலியக்க கயிற்றைப் போட்டுக் கட்டி இழுக்கறிங்க.. நீங்க கேட்டது டிபன் இல்லைன்னா வேற எதுவோவாவே இருக்கட்டும்.. அத என்னன்ன புரிஞ்சுக்கிட்டு விளக்கம் சொல்ற மூடில நானில்லை.." கட் அண்ட் ரைட்டாக சொல்லி விட்டான் யதுநந்தன்..

'எம்புட்டுக் கறாரா பேசறான் பாரு.. அப்புடியே அவங்க அம்மாவோட ஜெராக்ஸ்..' பிரதாப்புக்கு பொங்கியது..

அந்தக் கடுப்புடன் அவர் மகனைப் பார்க்க.. அப்போது தான் காபி, டிபனை முடித்திருந்த அவன் புருவங்களை உயர்த்தினான்..

"இப்ப என்ன அலுவலுக்கு இவன் கூட மல்லுக்கு வர்றீங்க..?" அனுராதா மல்லுக்கு வந்தாள்..

"என்னடி இது வம்பாப் போச்சு.. பெத்த மகனை ஒரு பார்வை பாத்தாக்கூட குத்தமாடி..?" பிரதாப் நியாயம் கேட்டார்..

"தேவைதான்ப்பா எனக்கு.." என்றான் யதுநந்தன்..

"என்னடா தேவையைக் கண்டுட்ட..?"

"என் வயசுக்கு என்னைப் பாக்க வேண்டிய ஆளுகளே வேற.. நீங்க வந்து பார்க்கலைன்னுதான் நான் தவம் கிடக்கிறேனா..?"

"யது.."

"சொல்லுங்க.."

"வேணாம்.. விட்டிரு.."

பிரதாப் என்னவோ பேச்சு வார்த்தை வளர்ந்தால் பிரச்னை வந்த தொலைக்கும்.. அதை விட்டுவிடு என்ற ரீதியில்தான் சொல்லி வைத்தார்.. அதை சம்பந்தமே யில்லாமல் அவர் சொல்லி வைத்த விதத்தில் ஒன்று சொன்னார்போல அனுராதாவும் யதுநந்தனும் கூட்டுச் சேர்ந்து கொண்டு அவரை வினோதமாக பார்த்தார்கள்..

3

ஆலயங்களின் காவலனாய்.. ஆர்ப்பரித்து நீ வந்தாய்..

"பெருமாள் கோவிலுக்கா..?"

வீரபாகுவின் சுவாசம் திணறியது.. அவன் செய்வதறியாது வசுந்தராவை கெஞ்சுதலாக நோக்கி வைத்தான்.. அவன் பார்வையிலிருந்த கெஞ்சுதலை பொருட்படுத்தாத வசுந்தரா..

"ம்ம்ம்.. பெருமாள் கோவிலுக்கேதான்.. ஏகாம்பரேஸ்வரரை தரிசித்து விட்டோம்.. அம்பிகையையும் வணங்கி விட்டோம்.. வரதராஜப் பெருமாளையும்.. பெருந்தேவி தாயாரையும் தரிசனம் செய்யாமல் இல்லத்துக்கு ஏகுவதா..?" என்று கருணையின்றி பிடிவாதம் பிடித்தாள்..

"நாழிகை ஆகி விட்டது அம்மா.."

"அதிக நாழிகை ஆகவில்லையே.."

"தங்களின் அன்னையாரை அழைக்கச் செல்ல வேண்டாமா..?"

"உறவினர் இல்லத்தின் விருந்து முடிய பொழுது சாய்ந்து விடும்.. அதனால் தட்டிக் கழிக்க எண்ணாமல் ஆலயத்தை நோக்கி ரதத்தை செழுத்துங்கள்.."

வசுந்தராதேவியின் அடத்தில் வரதராஜப் பெருமானின் ஆலயம் நோக்கி ரதம் விரைந்தது.. வீரபாகுவின் மனதில் அச்சம் கவிந்திருந்தது.. மாலிக்காபூரின் படைவீரர்களின்

பார்வையில் அவன் பட நேர்வதைப் பற்றி அவனுக்கு யாதொரு கவலையுமில்லை.. வசுந்தராதேவி பட்டு விடக் கூடாதே என்றுதான் அவன் அஞ்சினான்..

வரதராஜப் பெருமாளையும், பெருந்தேவித் தாயாரையும் சேவிக்கச் சென்ற வசுந்தரா.. இங்கும் ஓர் தோழியுடன் உரையாடியபடி வெளியில் வந்தாள்..

'இந்தப் பெண்ணுக்குத்தான் எத்துணை தோழிகள்..!'

வீரபாகுவுக்கு ஆயாசமாக இருந்தது.. விபரீதம் புரியாத மங்கையைக் கட்டிக் காவல் காத்து இல்லத்தில் சேர்த்து விட வேண்டுமே என்ற பதைப்பு அவனுக்குள் அதிகரித்தது..

"அவ்வாறா கூறுகிறாய்..?"

எதைக் குறித்தோ வசுந்தராதேவி வினவிக் கொண்டிருக்கையில் வீரபாகு வினயத்துடன் அவளருகில் சென்று..

"புறப்பட நாழிகையாகி விட்டது அம்மா.." என்றான்.

வசுந்தராவின் தோழி வீரபாகுவை பார்த்து விட்டு, வசுந்தராவிடம்.. "தமக்கு நாழிகையாகி விட்டது போல.. மீதி விவரத்தை அடுத்து நாம் சந்திக்கும் போது கூறவா..?" என்று கேட்டாள்..

"அதுவரைக் காத்திருக்க எனக்குப் பொறுமை யில்லை.. இப்போதே கூறிவிடு.." வசுந்தரா தோழியிடம் அடம் பிடித்தாள்..

"இல்லையடி.. தமது ரதத்தின் சாரதி விரைந்து கிளம்பும்படி உரைக்கிறாரே.." தோழி தயங்கினாள்..

"அவர் அவ்வாறுதான் உரைத்துக் கொண்டிருப்பார்.. நீ கூறு.."

வசுந்தராவின் தூண்டுதலில் அந்தத் தோழி உரையாடலை தொடர முற்பட.. ஊடே புகுந்தான் வீரபாகு.

"எமக்கு தலை நோவு ஏற்பட்டுள்ளது அம்மா.."

"என்னது..?"

வசுந்தரா வாயாடலை மறந்து வீரபாகுவை கவலையுடன் நோக்கினாள்.. வதனத்தில் வலியைக் கொணர்ந்து.. தலை நோவு தாங்காமல் துடிக்கிறவனைப் போல பாவனை செய்து வைத்தான் வீரபாகு..

"அதிக வேதனையோ..?" வசுந்தரா பதட்டம் கொண்டாள்..

"ஆம் அம்மா.. அதிக வேதனைதான்.."

"அப்போதே உரைத்திருக்கலாம் அல்லவா..?"

"தாங்கள் ஆலய தரிசனம் செய்ய விரும்பினீர்கள்.. அதன் பொருட்டு என் வேதனையை நான் மறைத்துக் கொண்டேன்.."

"அவ்வாறு செய்யலாமா..?"

வசுந்தரா தோழியிடம் கூட விடைபெறாமல் ரதத்தில் ஏறி அமர்ந்து விட்டாள்.. அவன்மீது அவள் காட்டிய சிரத்தையில் மனம் நெகிழ்ந்த வீரபாகு ரதத்தை ஓட்ட ஆரம்பித்தான்..

காஞ்சி மாநகரை விட்டு வெளியில் வந்த ரதம் ராஜபாட்டையில் விரைய ஆரம்பித்தது.. அதற்கு மேலும் பொய்யைத் தொடர முடியாத வீரபாகு..

“எனது தேகநிலை சரியாகத்தான் உள்ளது அம்மா.. தாம் கவலை கொள்ள வேண்டாம்..” என்றான்..

“தலை நோவு என்றீர்களே..”

“இல்லை அம்மா..”

“இல்லையா..? தாம் மெய் உரைக்கவில்லையா..?”

“ஆம் தாயே..! யாம் பொய்தான் உரைத்தோம்..”

“நன்றாக உள்ளது.. வீரபாகுவின் திருவாயிலிருந்தும் பொய் வருமோ..?”

“இக்கட்டான சூழல் என்றால் இட்டுக் கட்டிய பொய்கள் வரிசைக்கிரமமாக வருகை தரும் அம்மா..”

“அப்படி என்ன இக்கட்டான சூழல் தமக்கு உருவாகி விட்டது..? ஒருவேளை நான் எனது தோழியுடன் உரையாடிக் கொண்டிருந்ததைத்தான் இக்கட்டான சூழல் என்கிறீரோ..”

“ஹா.. ஹா..”

“போதும் நகைப்பு..! வெற்றி மமதையில் நகைக்கின்றீர்களா..?”

வசுந்தரா வதனத்தை தூக்கி வைத்துக் கொண்டாள்.. அவளின் மழலை நிரம்பிய கோபத்தில் மனம் நிறைந்தான் வீரபாகு..

‘இப்பெண்ணின் மழலைத்தனத்திற்கு ஓர் குறைவும் நேர்ந்து விடக் கூடாது..’ மனதார பிரார்த்தித்தான்..

“அம்மா..”

“எவரும் என்னுடன் உரையாட முனைய வேண்டாம்.”

“யாம் கூடவா..?”

"அதிமுக்கியமாக தாம்தான் உரையாக் கூடாது.."

'இது உரையாடல் அல்லவா..?' வீரபாகுவின் இதழ்களில் புன்னகை அரும்பியது..

அவன் ஏதும் பேசாமல் ரதத்தை செழுத்துவதில் கவனமாக இருந்தான்.. எப்போதும் செல்லும் வேகத்தைவிட அதிவிரைவில் ரதம் ஓடியதில் ரதத்தினுள் அமர்ந்திருந்த வசுந்தராதேவி அங்கும்.. இங்குமாக சரிந்து வைத்தாள்.. வீரபாகுவிடம் உரையாடக் கூடாது என்ற சங்கல்பத்தை மறந்து..

"ஆஹா..! என்னே ஒரு வேகம்..! இத்துணை விரைவாக ரதத்தை செழுத்தி எந்தக் கோட்டையைக் கைப்பற்றப் போகிறீர்கள் வீரபாகு..? எம்மை இல்லச் சிறையில் அமிழ்த்துவதில் தமக்கு இத்துணை ஆர்வமா..? இந்த விரைவை எமது தந்தையார் ரதத்தில் ஏறும்போது தாம் காட்டியதில்லையே.." என்று கூறிவிட்டாள்..

"ஹா.. ஹா.."

"இதற்கும் நகைப்பா..?"

வீரபாகுவின் விரைவைக் குறைக்க இயலாது என்றானவுடன் வசுந்தராதேவி.. கிட்டியிருக்கும் மணித் துளிகளில் வெளியுலகின் அழகைக் கண்டு ரசிக்கலாமே என்று ரதத்தின் பட்டுத் துணியை விலக்கி கடந்து சென்ற மரங்களையும்.. வயல்களையும்.. நாரைகளையும் கண்டு ரசிக்க ஆரம்பித்து விட்டாள்..

பசுமையான வயல்வெளிகளில் பறந்து திரிந்த நாரைகளின் அழகில் வீரபாகுவின் மீதிருந்த சினம் கூட வசுந்தராவுக்கு மறந்து போய் விட்டது..

"ஒற்றைக்காலில் தவமிருக்கும் முனிவர்களின் கூட்டத்தைப் போல இந்த நாரைகளும் நிற்கின்ற அழகைக் கண்டீரா.." என்று வீரபாகுவிடம் வினவவும் செய்தாள்..

அப்போதிருந்த மனநிலையில் வீரபாகுவினால் நாரைகள் தவம் செய்யும் எழிலைக் கண்டு ரசிக்க இயலுமா..? அவன் சற்றுத் திரும்பி மெலிதான புன்முறுவல் ஒன்றை இதழ்களில் படறவிட்டு ரதமோட்டுவதில் சிரத்தை காட்டினான்..

"தங்களிடம் போய் நாரைகளின் அழகை ரசிக்கக் கூறினேன் பாருங்கள்.. என்னைக் கூற வேண்டும்.. தாங்கள்தான் எனது தந்தையின் மறு உருவம் ஆயிற்றே.. எழிலைக் கண்டுனர மனம் வேண்டும்.. அது தந்தைக்கும் இல்லை.. தமக்கும் இல்லை.."

வசுந்தராதேவியின் மனத்தாங்கலுக்கு..

"அவ்வாறு இல்லையம்மா.." என்று சமாதானம் உரைக்க ஆரம்பித்த வீரபாகுவின் செவிகள் கூர்மையாகின.

கூட்டமாக புரவிகள் விரைந்தோடி வரும் குளம் போசையை செவி மடுத்தவனின் வதனம் வெளிறியது..

"அம்மா.. பட்டுச் சீலையை இடைவெளியின்றி இழுத்து விடுங்கள்.. ரதத்தினுள் அமருங்கள்.. எது நேர்ந்தாலும் திரை விலக்கி வெளியே தலை நீட்ட எண்ண வேண்டாம்.." பதறினான்..

"எதற்காக இத்துனை பதட்டம் வீரபாகு..?" வசுந்தரா தேவி அவன் கூறியதைச் செய்யாமல் வழக்கடித்தாள்..

"கூட்டமாக புரவிகள் வரும் குளம்போசையை செவி மடுத்தீர்களா..?"

"ஆம்..! இதில் தாங்கள் பதட்டம் கொள்ள என்ன உள்ளது..? காஞ்சிமாநகரம் கோவில்களின் புனித நகரம் ஆயிற்றே.. ஆயிரம் கோவில்களின் நகரமான காஞ்சியை நோக்கி யாத்ரிகர்களின் கூட்டம் வருகை புரிவது புதிதா என்ன..? இந்நகரம் இந்துக்களின் புனித தலமாயிற்றே.. பஞ்ச பூதங்களில் நிலமாக எமது அப்பன் ஈஸ்வரன் வீற்றிருப்பது காஞ்சி மாநகரில் அல்லவா..? ஏகாம்பரேஸ் வரரை தரிசனம் செய்ய மக்கள் கூட்டம் அலை மோதி வருகை புரிவதை அறியாதவர் போல் கூறுகிறீர்களே.."

'இந்தப் பெண்ணுக்கு எவ்விதம் புரிய வைப்பேன்..'

சிரம் காய்ந்து போனான் வீரபாகு.. வருகை புரிவது யாத்திரிகர்களின் கூட்டமல்ல என்பதை அவனது செவிகள் அவனுக்கு தெள்ளத் தெளிவாக உணர்த்தி விட்டன.. யாத்திரர்களின் யாத்திரை மிதமான வேகத்துடன் இருக்கும். சீரான குளம்போசைதான் செவிகளில் விழும்.. அவர்களின் உரையாடல் கூட உரக்க வருகை புரியாது..

தற்போது அப்படியல்ல.. பெரும் இரைச்சலுடன் கூடிய ஆர்ப்பரிப்பை வீரபாகு செவி மடுத்தான்.. ஆவேசமாக விரைந்து வரும் புரவிகளின் குளம்போசை நிச்சயமாக யாத்ரிகர்களின் புரவிகளின் குளம்போசையாக இருக்க இயலாது..

"அம்மா.. இது யாத்ரிகர்களின் கூட்டமல்ல.."

"பின்னே..?"

வசுந்தராவின் வினாவிற்கு விடையளிக்க இயலாமல் வீரபாகு தவித்தான்.. சூழலை உரைத்தால் வசுந்தரா அச்சம் கொண்டு விட மாட்டாளா..? மான் போன்ற அந்த

மழலையின் விழிகளில் அச்சம் சூழ்வதை ஒருபோதும் வீரபாகு அனுமதிக்க மாட்டான்..

"அம்மா.. தமை வளர்த்த தந்தையான இந்த வீரபாகு உரைப்பதை செவி மடுப்பீர்களா.. மாட்டிர்களா..?"

வீரபாகுவின் இந்த அணுகுமுறைக்கு பலன் இருந்தது.. அதட்டலுக்குக் கட்டுப்படாத வசுந்தரா அன்புக்கு கட்டுப்பட்டாள்.. ரதத்தின் பட்டுத்துணியினால் ஆன திரைசீலையை இழுத்து இடைவெளியின்றி மூடி விட்டு.. ரதத்தினுள் அமர்ந்து கொண்டாள் சும்மாவும் அமராமல்..

"தாங்கள் உரைத்தால் அந்த மலையின் உச்சியி லிருந்து கூட குதிப்பேன் வீரபாகு.." என்று கூறிவிட்டு அமர்ந்து வைத்தாள்..

வீரபாகுவின் மனம் இளகியது.. திருமணம், இல்லறம் என்ற ஏதுமின்றி கைலாசநாதரின் அருகாமையில் காலம் கழித்துவிட்டவனுக்கு வசுந்தராவும், வல்லவனும்தான் பிள்ளைகளாக இருந்தனர்.. அவ்வாறு அவன் கரங்களில் ஏந்தி வளர்த்த புதல்விக்கு எவ்விதமான இடரும் ஏற்பட்டு விடக்கூடாது என்று மனம் பதைக்க அவன் ரதத்தை விரைவு கூட்டி புயல் வேகத்தில் செழுத்தினான்..

ரதத்தினுள் அமர்ந்திருந்த வசுந்தராதேவி.. பக்கவாட்டில் இருந்த தாங்கு கட்டையை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.. அவ்வாறு பிடிக்கவில்லையெனில் வீரபாகு ரதமோட்டும் விரைவிற்கு அவள் சிரம் கீழாக விழுந்து வைத்து விடும் அபாயம் இருந்ததால் கட்டையையும் இறுக்கிப் பிடித்துக் கொண்டு.. கண்களையும் இறுக்கி மூடிக் கொண்டாள்..

எத்துணை விரைவாக புயல் வேகத்தில் வீரபாகு ரதத்தை செழுத்தியும் சில நொடிகளில் அவனது ரதத்தை பாதையில் வந்த படைவீரர்களின் கூட்டம் சூழ்ந்துவிட்டது..

ரதத்தின் முன்னிலையில் வந்த படைவீரர்களின் ஒருவன்..

"ரதத்தில் என்ன உள்ளது..?" என்று அதிகாரமாக வினவினான்..

தென்னகத்தின் சாயல் இல்லாத அவனது தோற்றமும்.. அலாவுதீன் கில்ஜியின் கொடியைப் பறக்க விட்டிருந்த புரவிகளும் அவர்கள் மாலிக்காபூரின் படைவீரர்கள் என்பதனை உணர்த்திவிட வீரபாகுவின் தேகத்தில் நடுக்கம் ஏற்பட்டது..

'அம்மா வசுந்தரா..! உன்னை எவ்விதம் காவல் செய்வேன்..?'

மனம் பதறினான் வீரபாகு.. அவனது உடலில் உயிர் உள்ள வரையில் அவனைத் தாண்டி வசுந்தாவை எவராலும் அணுக இயலாது.. அதன் பின்னர்..?

இந்தக் கேள்வியில் அவன் மனம் நடுங்கியது..

"தாம் என்ன செவிடா..?" மாலிக்காபூரின் படைவீரன் சப்தமிட்டதில் மற்ற வீரர்கள் என்னவோ பெருத்த நகைச்சுவையை செவி மடுத்து விட்டதைப் போல உரக்க நகைத்து வைத்தனர்..

வீரபாகுவின் வதனம் இறுகியது.. வசுந்தராதேவியோ செவி மடுத்த வார்த்தைகளில் உறைந்து போனவளாக ரதத்தினுள் ஒன்றிக் கொண்டாள்.. பட்டுத் திரையின்

மெலிதான இடைவெளியில் அவள் கண்ணுற்ற குரூர வதனம் கொண்ட அந்தக் கும்பலின் தோற்றம் அவளை மிரட்டியது.. எதன் பொருட்டு வீரபாகு தலை நோவென்ற பொய்யை உரைத்தான்.. எதன் பொருட்டு விரைவாக ரதத்தை செழுத்தினான் என்ற மெய் அவளது அறிவில் உரைத்தில் அவளது விழிகள் கலங்கின..

'என்னால் அல்லவோ இந்த நிலை..!' அவள் மறுகினாள்..

தனித்து நின்ற வீரபாகுவை கவலையுடன் நோக்கினாள்.. அவளுக்குத் தெரியும்.. அவனது உயிர் உள்ளவரை அவளை அணுக எவரையும் அவன் அனுமதிக்க மாட்டான் என்பது..

அவளைக் காக்கும்பொருட்டு அவளது தந்தைக்கு நிகரான அந்த விசுவாச ஊழியன் உயிர் துறப்பதா..?

'ஏகாம்பரேஸ்வரா..! காப்பாற்று..' அவளது விழிகள் கண்ணீரைச் சொரிந்தன..

"யாம் செவிடல்ல.. தாங்கள்தான் குருடு எனத் தோன்றுகிறது.." வீரபாகு துணிவுடன் உரைத்தான்..

"என்ன கூறினாய்..?" வினவியவன் சினம் கொண்டான்..

மற்ற வீரர்களின் குரூர வதனங்களிலும் சினம் பரவியது..

"ஆம்.. ரதம் எம்முடையது.. அதனுள் உள்ள பொருளும் எமது இல்லத்தைச் சேர்ந்தது.. அவ்வாறிருக்க வழிப்போக்கனான தாம் எதற்காக ரதத்தைக் குறித்து வினவுகிறீர்கள்..?"

நிமிர்வாக வீரபாகுவின் வினவியதற்கு... உரத்து நகைத்து வைத்தான் மாலிக்காபூரின் படைவீரன்..

"உமது ரதமா..? எது உனது..? நாங்கள் எவரென்று அறிவாயா..?"

"இது காஞ்சிமாநகரம்..! இந்துக்களின் புனித தலம்.. ஏகாம்பரேஸ்வரரையும்.. அருளாள பெருமாளையும் வணங்கி வழிபட தினந்தோறும் ஆயிரமாயிரம் மக்கள் கூட்டம்.. கூட்டமாக வந்து செல்கின்றனர்.. அவர்களை எவரென்று இனம் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தால்.. எமது பணியை எவர் பார்ப்பது..?"

"எத்துணை துணிவு..! நீ எவரிடம் உரையாடிக் கொண்டிருக்கிறாய் என்பதை அறிந்தால் இத்துணை துணிவாக உரையாட மாட்டாய்.."

"நீ எவராக இருந்தால் எமக்கென்ன..? எம்மைப் பொறுத்தவரை நீ ஒரு வழிப்போக்கன்.. அவ்வளவே.."

"அடேய் அற்பப்பதரே..!"

"நான் அற்பப்பதரல்ல..! மாற்றாரின் பொருளைச் சூறையாடும் கொள்ளைக் கூட்டத்திற்கு நிகரான கூட்டத்தைக் கொண்டிருக்கும் நீதான் அற்பப் பதர்..!"

"என்ன ஒரு மனதிடம்..! மாலிக்காபூரின் படைவீரர்களை அவமதிக்கத் துணிந்தாயா..?"

வாக்குவாதத்தை செவி மடுத்துக் கொண்டிருந்த வசுந்தராதேவியின் தேகம் நடுங்கியது.. ரதத்தினுள் மறைந்திருந்தவள் உறைந்து போனாள்.. அப்பொழுதே மண்ணோடு மண்ணாக புதையுண்டு போய்விடக் கூடாதா

என்று துடித்துப் போனாள்.. அவளது இடையினில் செறுகியிருந்த கூர்மையான கத்தியினை அவளது வலக்கரம் இறுக்கிப் பிடித்துக் கொண்டது..

எந்த நொடியிலும் போராட்டம் ஆரம்பிக்கலாம்.. தனி ஒரு மனிதனாக அந்த வெறி பிடித்த கும்பலை வீரபாகு வெல்வது சுலபமல்ல.. அவனது உயிர் போன பின்பு அவர்கள் வசுந்தராதேவியை நெருங்கி விடுவார்கள்.. அந்த நொடியில் அந்தக் கத்தியினால் அவள் தன்னைத் தானே மாய்த்துக் கொள்வாள்..

காலம்.. காலமாக.. தமது கௌரவத்தைக் காத்துக் கொள்ள இவ்வழியைத்தானே பெண்கள் நாடுகின்றார்கள்..?

"இவ்விடம்.. எங்களின் இடம்.. மாலிக்காபூரின் இடமல்ல.. தாயாதிச் சண்டைக்கு நியாயம் பிளக்க வருகை புரிந்தால் அவ்வேலையை மட்டும் புரிந்து விட்டு.. தில்லிக்கு திரும்பியிருக்க வேண்டும்.. அதை விடுத்து.. தமிழகத்தை சூறையாடும் அதிகாரத்தை எவர் உமக்கு அளித்தது.. இந்துக்களின் ஆலயங்களை இழுத்து மூடும் துணிவை எவர் உமக்கு கொடுத்தது..?"

"தில்லிக்கு திரும்புவதைப் பற்றி நீ உரைக்கக் கூடாது.. அது எமது மன்னரின் விருப்பம்.. அதிகாரமும் துணிவும் எமது படைத்தலைவருக்கு உரியது.."

"மாலிக்காபூருக்கு உரியது தில்லியில்தான் உள்ளது.. தென் தமிழகத்தில் அல்ல.. தில்லிப் பேரரசின் ஆளுகைக்கு உட்பட்டவர்களல்ல யாம்.. எமது அரசர் வேறு.. கலாச்சாரமும் வேறு.. எமது இடத்தில் வருகை புரிந்து மிரட்டுகின்ற அதிகாரத்தையும், துணிவையும்

மாலிக்காபூருக்கும்.. அலாவுதீன் கில்ஜிக்கும் இங்கு எவரும் சாசனம் பொறித்து அளித்து விடவில்லை.."

"அந்த சாசனத்தை எங்களின் வாள் முனையில் பெறுவோம்.."

"செய் வீரனே..! போர்க்களத்தில் உமது துணிவைக் காட்டு.. யுத்தம் புரிவதில் உமது திறமையைக் காட்டு.. வாள்முனையில் யுத்த களத்தில் போரிட்டு வெற்றி வாகை சூடியபின்னர் உமது அதிகாரத்தைக் காட்டு.. அதைவிடுத்து தனித்துப் பயணம் செய்யும் பயணியிடம் கூட்டமாக வந்து வழிப்பறி செய்ய முனையாதே.."

"வழிப்பறியா..? என்ன ஒரு துணிவிருந்தால் மாலிக்காபூரின் படைவீரர்களைப் பார்த்து வழிப்பறி செய்யும் கொள்ளையர்கள் என்று உரைப்பாய்.."

"ஹ..! கொள்ளையர்களை கொள்ளையர்கள் என்று உரைக்காமல் எவ்விதம் உரைப்பது..?"

"வலிமை வாய்ந்தவன் கண்களுக்குத் தட்டுப்படும் செல்வத்தை அபகரிக்கத்தான் செய்வான்.."

"இது கொள்ளையல்லாமல் வேறு என்ன..?"

"மூடனே..! உனது உயிர் உனக்குச் சொந்தமானதல்ல.. எமக்குச் சொந்தமானது.. அதை உணராமல் பிதற்றாதே.."

"எனதுயிர் இறைவனுக்குச் சொந்தமானது.. அதை உணராமல் நீயும் பிதற்றாதே.."

"ஆலய வழிபாடு செய்ய விடாமல் உமது ஆலயங்களை இழுத்து மூடியும் இத்துனை துணிவா..?"

"நெஞ்சமென்னும் ஆலயத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் எமது தெய்வங்களுக்கான வழிபாட்டை மனதினிலே நாங்கள் நடத்திக் கொள்வோம்.. 'திரு நாளை போவார்' என்ற திருநாமம் பெற்ற நந்தனாரின் கதையை நீ அறிவாயா..?"

இறுமாப்புடன் வினவினான் வீரபாகு.. அது இந்திய ஆன்மிகம் அளித்த இறுமாப்பு..! முதல் எது.. அடி எது.. என எவராலும் வரையறுக்க முடியாத ஆன்மிகத்தில் பிணைக்கப் பட்டவன் அவன் என்ற இறுமாப்பு..!

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



3

ஏழேழு பிறவிகளின்.. சொந்தமடி.. இந்த சொந்தம்..

"என்னப்பா இது..?" என்றான் யது நந்தன்..

"எது..?" என்று கேட்டார் பிரதாப்..

"என்னவோ மணிரத்னம் பிலிமில வர்றதைப் போல வேணாம் விட்டிருங்கறிங்க.. எதைவிடச் சொல்றீங்க..?"

"பேச்சை விடச் சொன்னேன்டா.."

"ஓ.. நீங்க அந்த அர்த்தத்தில சொல்லி வைச்சீங்களா..? இதைப் புரிஞ்சுக்காம நானும் அவசரப் பட்டு வாய்விட இருந்தேனே.."

"என்னத்தடா வாய்விட இருந்த..?"

"அவளை நிறுத்தச் சொல்லுங்க.. நானும் நிறுத்தறேன்னு சொல்லலாம்ன்னு இருந்தேன்.. ஹா..ஹா.."

யதுநந்தன் யாமினியைக் காட்டிச் சொல்லிவிட்டு விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்.. அனுராதாவும் அந்தச் சிரிப்பில் கூட்டுச் சேர்ந்து கொள்ள பிரதாப் தனக்கு ஆதரவாக இருக்கும் மகளைப் பார்த்தார்.. அவளோ நடந்து கொண்டிருக்கும் களேபரத்தை கண்டு கொள்ளாமல் பித்துப் பிடித்தவளைப் போல இலக்கில்லாமல் வெறித்துக் கொண்டிருந்தாள்..

'இவ வேற..' பிரதாப்புக்கு சலிப்பாக இருந்தது..

மற்ற நேரங்களில் வேண்டாம்.. இதுபோல அம்மாவும் மகனும் கூட்டுச் சேர்ந்து கொண்டு அவரை கேரோ பண்ணும் நேரத்திலாவது அவர் பெற்ற அருமை மகள் அவருக்கு கை கொடுக்க வர வேண்டாமா..?

"என்னத்த உங்க மகளைப் பாக்கறிங்க..? அவ முன்னாடி அவளப் பத்திப் பேசினாலே அவ காதில விழுந்து தொலைக்காது.. இந்த லட்சணத்தில உங்களப் பத்திப் பேசினதும் உங்க பாசமகள் ஓடோடி வந்துரப் போறாளாக்கும்..?"

அனுராதாவின் எகத்தாளத்தில் அவருக்கு கோபம், கோபமாக வந்தது.. யதுநந்தன் கைகளைப் பின்னால் கட்டி அதில் தலைசாய்த்த வண்ணம் அவரை கருடபார்வை பார்த்து வைத்தான்..

'எதுக்கு இப்படிப் பார்த்துத் தொலைக்கிறான்..?'

அந்தப் பார்வைக்கு அர்த்தம் என்னவென்று கேட்கப் போனவர் நிதானித்தார்..

'வேணவே வேணாம்.. இவன்கிட்ட என்னடான்னு கேட்டா அப்பாவுக்கு டிபன் கொடுத்தியா.. என்ன டிபன்னு என்னைக் கேக்கிறாரும்பான்..'

மகனின் பார்வையை கண்டு கொள்ளாமல் இருப்பதே சாலச் சிறந்தது என அவர் மகளின் பக்கம் திரும்பினார்..

"யாமினி.." மகளை அழைத்தார்..

"....." அவளிடம் பதிலில்லை..

"உன்னைத்தான் யாமினி.." உரக்கச் சொன்னார்..

"....." அதற்கும் அவள் அசையாமல் உட்கார்ந் திருந்தாள்..

"இப்படிக் கூப்பிட்டா அவ என்னப்பான்னு கேட்டுட்டுத்தான் மறுவேலையைப் பார்ப்பாளா..?" அனுராதா கேலிக்குரலில் கேட்டாள்..

பிரதாப் மகளின் மீதிருந்த கடுப்பையும்.. மகனின் மீதிருந்த கடுப்பையும் ஒட்டு மொத்தமாக சேர்த்து வைத்து மனைவியை முறைத்தார்..

அவளா அந்த முறைப்புக்கு அஞ்சுவாள்..?

"எதுக்கு முறைப்புங்கறேன்..?" என்று புருவங்களை உயர்த்தினாள்..

"எப்படா சான்ஸ் கிடைக்கும்.. யாமினியை வாரலாம்ன்னு காத்துக்கிட்டு இருப்பியா..?"

"இவளை வாரிட்டாலும்..!"

"பின்னே..? நீ செய்கிறதுக்கு பேரு என்ன..?"

"இவ ஏன் அந்த சான்ஸைக் கொடுக்கிறாங்கறேன்..?"

அனுராதாவின் கேள்விக்குப் பிரதாப்பால் பதில் சொல்ல முடியவில்லை.. யது நந்தனைப் பார்த்தால் அவன் புருவங்களை உயர்த்திப் பார்த்து வைத்துத் தொலைத்தான். என்னடா வினை இது என்று யாமினியைப் பார்த்தால் அவள் விட்டத்தில் ஓடும் பல்லிகளின் ரேஸை பார்வையிட்டுக் கொண்டிருந்தாள்.. இது வேலைக்கு ஆகாது என்று மனைவியின் பக்கமே பார்வையைத் திருப்பிக் கொண்டார்..

"பாத்தீங்கள்ல.. உங்க அருமைப் பொண்ணு யாருக்கு வந்த விருந்தோன்னு அசையாம உக்காந்திருக்கிறத..?"

"விடுடி.."

"விடாம என்ன செய்ய..? பிடிச்சு வைக்கத்தான் முடியலையே.. நானும் இப்ப ம்ாறுவா.. அப்ப மாறுவான்னு காத்துக் கிடக்கிறேன்.. இவ மாறின பாடா இல்லை.. இவளைக் காரணம் காட்டித்தான்.. இங்க.. இப்ப சண்டை நடந்துக்கிட்டு இருக்கு.. இவ முன்னாடிதான் அதுவும் நடக்குது.. அது கொஞ்சமாவது அவ புத்தியில உறைக்கு தான்னுதான் நான் கேட்கிறேன்.."

"அனு.."

"உங்க மகளை நீங்க கூப்பிடறாப்புலக் கூப்பிடா அவ திரும்பியே பாக்க மாட்டா.. இன்னைக்குப் பூராவும் தொண்டைத் தண்ணி வத்த நீங்க கூப்பிட்டுக்கிட்டே இருக்க வேண்டியதுதான்.. அவளைக் கூப்பிட வேண்டிய முறையே வேற.."

'எப்படிக் கூப்பிடனும்னு சொல்றா..?'

பிரதாப் புரியாமல் மனைவியை நோக்க.. அவளோ மகளை நோக்கிச் சரிந்து அவள் முதுகில் 'சுரீர்' என்று ஒரு போடு போட்டாள்..

4

ஒளியாகத் தோன்றியவனை வழிபடுகின்ற மக்கள் யாம்..

வீரபாகுவின் இறுமாப்பில் மாலிக்காபூரின் படை வீரர்களின் விழிகள் குருதியின் வண்ணத்தை ஏற்றன.. குருதியெனச் சிவந்த அவர்களின் கொடூரமான விழிகளை ரதத்தை மறைத்திருந்த பட்டுத் துணியின் இடைவெளியில் கண்ட வசுந்தராதேவி நடுநடுங்கினாள்..

'என்னப்பனே..! ஏகாம்பரேஸ்வரா..!'

காஞ்சியின் தலைவனை அழைத்து மனதுக்குள் இறைஞ்சினாள்..

'காத்திட ஏகி வருவாய்.. துணையின்றி தனித்து நிற்கும் வீரபாகுவிற்கு துணை வருவாய்..'

அந்நிலையிலும் அவளின் மழலை மனம் வீரபாகுவிற்கான உதவிக்கரத்தையே வேண்டியது.. அரணாக மறித்து நிற்கும் அவன் வீழ்ந்தால்.. அவளது நிலை என்னவாகும் என்ற அடுத்தகட்ட சிந்தனைக்கே அவள் செல்லவில்லை..

அதே நொடியில் அவளைக் கரங்களில் ஏந்தி வளர்த்த வீரபாகுவும் மனம் பதறி மானசீகமாக வரதராஜப் பெருமாளிடம் இறைஞ்சி நின்றான்..

'அருளாளப் பெருமாளே..! அருள் புரிவீர்.. இதுபோன்ற கொடூரமனம் கொண்டவர்களின் செயல் பாடுகள் எத்தகையதாக இருக்கும் என்பதனை நான் வளர்த்த இந்த இளம் குருத்து அறியும் நிலை வர வேண்டாம்.. தம்மை வணங்குவதற்காக நாழிகைகளை எடுத்துக் கொண்டவள்.. வெண்மை வண்ணம் கொண்ட உள்ளம் கொண்ட அறியாச் சிறுமி இவள்.. கருமை வண்ணம் கொண்ட கசடு நிரம்பிய உள்ளங்களைக் கொண்டோரை.. இதுவரை இவள் வாழ்வில் சந்தித்ததே இல்லை.. இனியும் அவ்வாறே இருக்கட்டும்.. தங்களின் பக்தையைக் காத்தருளி உ்தவிக்கரம் நீட்ட வேண்டும்..'

விசுவாசம் மிக்க அந்த சேவகனும்.. அவனைச் சேவகன் என்று ஓர் மணித்துளிகூட எண்ணிப் பாராமல்.. தந்தைக்கு நிகராக அவனை நேசிக்கும் அந்த யௌவன மங்கையும்.. தமக்காக வேண்டிக்கொள்ளாமல் ஒருவருக்காக மற்றொருவர் உளமார வேண்டிக் கொண்டார்கள்..

"பாரடா.. இவன் எந்நாளைப் போவாரோ என்பவரின் வரலாற்றை நமக்கு உரைக்க யத்தனிப்பதை..?"

படைவீரர்களின் ஒருவன் கேலியாக உ்ரைக்க.. மற்றவர்கள் அவன் என்னவோ பெருத்த நகைச்சுவையை உரைத்து விட்டதைப் போல புரவிகளில் புரண்டு புரண்டு நகைத்து வைத்தார்கள்..

“அந்நாமம் ‘எந்நாளைப் போவாரோ..’ என்பதல்ல.. ‘திருநாளைப் போவார்..’ புராணம்..” விழிகள் சிவக்க வீரபாகு உரைத்தான்..

“இரண்டொரு எழுத்துக்கள் இடம் மாறி விட்டன... அது பெருத்த பிழையென்பதைப் போலப் பேசி வைக்கிறாயே..” படைவீரன் உரத்த குரலில் நகைத்தான்.

“உமது தந்தையின் நாமத்தை இரண்டொரு எழுத்துக்களை இடம் மாற்றி விட்டு உச்சரிப்பாயா..?” புயலின் அமைதியை உள்ளடக்கிய வினாவை எழுப்பினான் வீரபாகு..

அவ்வினாவை செவி மடுத்ததும் உரத்த குரலில் நகைத்துக் கொண்டிருந்தவனின் நகைப்பு நின்று விட்டது.. புரவிகளில் புரண்டு புரண்டு நகைத்துக் கொண்டிருந்தவர்களும்.. புரவிகள் பிழைத்துப் போகட்டும் என்று புரண்டு நகைப்பதை விடுத்து உக்கிரப் பார்வையுடன் வீரபாகுவை நோக்கிக் கூச்சலிட்டனர்..

“யாது உரைத்தாய்..? என்ன ஓர் துணிவிருந்தால் இப்பேற்பட்ட வார்த்தைகளை உரைப்பாய்..?”

“இதே வினாவை யாமும் தம்மிடம் வினவலாம் அல்லவா..? தமது தந்தையை யாம் மதிப்பதைப் போல எமது தெய்வங்களையும்.. அந்த தெய்வங்களை வணங்கி வழிபட்ட அடியார்களையும்.. தாமும் மதிக்க வேண்டுமல்லவா..?”

“என்ன தேவைக்கு..?”

"தமக்கான கௌரவத்தை தாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற தேவைக்கு.."

படைவீரனின் குரூரவதனம் அதிபயங்கரமாக மாறியது.. அவனது வாளின் நுனி.. வீரபாகுவின் கழுத்தை நெருடி பதம் பார்த்தது..

வீரபாகு அஞ்சாமல் அந்த வாளை விலக்கி விட்டு தனது வாளை அந்த வீரனின் கழுத்தில் வைத்தான்.. கூட்டம் சினம் கொண்டு கூவியது..

"இம்முறையும் தாம்தான் வாதுக்கு அழைத்தது.." என்றான் வீரபாகு..

"அவ்வாறா..?" அலட்சியத்துடன் வினவினான் படைவீரன்..

அவனது ஆணவத்தில் வீரபாகுவின் உள்ளம் கொதித்தது..

"நீ இருப்பது எனது மண்.. அதை எண்ணியும் பாராமல் எனது கழுத்தில் வாள் வைக்கத் துணிவு கொண்டாய்.. இந்தத் துணிவை எவர் உனக்கு அளித்தது..?"

"செல்.. சென்று வீரபாண்டியனிடமும்.. சுந்தர பாண்டியனிடமும் நியாயம் கேள்.. அதற்கு முன்னால் அவர்களைப் பெற்ற பாண்டிய மன்னனிடம் வினா எழுப்பு.. எதன்பொருட்டு பல மனைவியரை மணக்க வேண்டும்..? அவர்களின் புதல்வர்களில் ஒருவனுக்கு மட்டும் ஏன் மகுடம் சூட வேண்டும்..? பட்டத்து மகிஷியின் புதல்வன் என்பதற்காக எங்களின் தில்லிப் பேரரசர் அலாவுதீன் கில்ஜியின்

உதவியை நாட வேண்டும்..? பேரரசரின் சார்பாக எமது படைத்தலைவர் மாலிக்காபூர் தமிழகம் நோக்கி எதன் பொருட்டு வருகை புரிய வேண்டும்..? இத்துனை வினாக்களையும் மதுரை மாநகரை நோக்கித் திருப்பி அனுப்பு மூடனே..! உமது மண்ணின் மைந்தர்களின் தாயாதிச் சண்டையைத் தீர்த்து வைக்கவே எமது மன்னரின் சார்பாக படைத்தலைவர் மாலிக்காபூர் படையெடுத்து வந்துள்ளார்.. தாயாதிச் சண்டையைத் தீர்க்க தில்லிப் பேரரசரின் உதவியை நாடி தாம்பூலம் வைத்து அழைத்து வந்த தமிழக மன்னர்களை வைத்துக் கொண்டு உமது திருவாயெல்லாம் திறக்கவே யத்தனிக்கக் கூடாது.."

நன்றாகத்தான் வினவி வைத்தான் மாலிக்காபூரின் படைவீரன்.. அவன் வினவிய வினாக்களில் வீரபாகுவின் குருதி கொதித்தது..

"எவர் நாட்டில் தாயாதி சண்டையில்லை..?" அவன் நிதானமாக வினவினான்..

வினவியவனின் வதனம் மாறியது.. வீரபாகுவின் புருவங்கள் உயர்ந்து இறங்கின.. அச்செயலில் மாலிக்காபூரின் படைவீரர்கள்.

"ஏய்ய்.." எனக் கூச்சலிட்டனர்..

"எமது மண்ணில் மட்டும்தான் தாயாதி சண்டை உள்ளதா..? சிறிது தமது மண்ணின் புறமும் சிரத்தைத் திருப்பு.. தில்லியின் அரியணை குருதிக் கடலில் குளித்தது.. அரியணைக்காக உமது பேரரசர்கள் நடத்திய தாயாதிச் சண்டைகளின் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கவும்

அதீதமான மனதிடம் வேண்டும்.. அவ்வேடுகள் குருதிப் புனலில் மூழ்கிக் கிடப்பவை.. எனவே தமது திருவாயை நீ முதலில் மூடு.. அதன்பின்னர் எமது திருவாய் திறப்பதைப் பற்றிப் பேசலாம்.."

"அடேய் அற்பப்பதரே..!"

"எவ்வகையில் நான் அற்பன்..? நியாயம் பிளக்கச் சென்ற இடத்தின் செல்வங்களை நான் சூறையாடினேனா..? அம்மண்ணின் ஆலயங்களை இழுத்து மூடி ஆலய வழிபாட்டை தடை செய்தேனா..?"

"வலியவர்களின் நியாயம் இத்தகையதாகத்தான் இருக்கும்.."

உரத்த குரலில் கூறியபடி தனது உடைவாளைச் சுழற்றினான் அந்த வீரன்.. இமைப் பொழுதில் வீரபாகுவின் சிரத்தை அவன் கொய்திருப்பான்.. உரையாடலில் கவனமாக இருந்த வீரபாகுவின் கவனம் யுத்தத்திற்கு திரும்ப நாழிகையாகும் என்று மாலிக்காபூரின் படைவீரன் கணக்கிட்ட கணக்கீடு தவறாகிப் போனது..

ஆரியக் கூத்தாடினாலும்.. காரியத்தில் கவனமாக இருக்கச் சொல்லும் ஆன்றோர்களின் மத்தியில் பிறந்து வளர்ந்த வீரபாகு இமைப் பொழுதில் விலகி மாலிக்காபூரின் படைவீரனின் வாள் வீச்சிலிருந்து தப்பித்தான்.. பதிலுக்கு அவன் சுழற்றிய வாளில்.. வாள் வீசியவனின் புஜத்தில் குருதி கொட்டியது..

"ஹா..."

உரையாடிக் கொண்டிருந்தவனின் சிரம் கொய்ய முற்பட்ட வீராதிவீரன் அலறிக் கொண்டு புரவியிலிருந்து மண்ணில் வீழ்ந்தான்..

"கொல் அவனை.."

மற்ற வீரர்கள் கூக்குரல் எழுப்பிய வண்ணம் வீரபாகுவை சுற்ற வளைத்துக் கொண்டனர்..

தன்னைச் சுற்றி வளைத்தவர்களின் வாள்வீச்சை இலகுவாக எதிர் கொண்டவனின் போராட்டத்தை.. பட்டுத் துணியின் இடைவெளியில் கண்ணுற்ற வசுந்தராதேவி அலறினாள்..

"வீரபாகு.."

யாழின் கானத்துக்கு நிகரான பெண்குரலின் அலறல் சப்தத்தில் படைவீரர்களின் வாள்கள் ஸ்தம்பித்தன.. அவர்கள் ஒருவர் வதனத்தை ஒருவர் நோக்கிக் கொண்டனர்..

"பெண் குரல்..!" என்றான் ஒருவன்..

"மங்கையின் குரல்.." பரபரத்தான் மற்றொருவன்..

"இரண்டும் ஒன்றுதானடா மூடனே..!" என்றான் இன்னொருவன்..

அவர்கள் வீரபாகுவை மறந்து ரதத்தைச் சுற்றி வளைக்க முற்பட்டனர்.. வீரபாகுவோ இரண்டே எட்டில் ரதத்தை அடைந்து கரங்களை விரித்து மறைத்து நின்றான்..

"எமது உடலில் உயிர் உள்ளவரை இந்த ரதத்தை அணுக எவரையும் அனுமதிக்க மாட்டேன்.."

"அவ்வாறெனில் இவனது உயிரை முதலில் பறிப்போம்.."

உடைவாளை ஒருவன் சுழற்றினான்.. அவனது வாளை வீரபாகு எதிர்கொண்ட அதே நொடியில் மற்றொருவனின் வாள்வீச்சு.. ரதத்தை மறைத்திருந்த பட்டுத் துணியை நோக்கித் தாவியது.. அவனது வாள்வீச்சில் பட்டுத் துணி விலகியது... ரதத்தின் உள்ளே சுத்தியை இறுக்கிப் பிடித்த வண்ணம் அமர்ந்திருந்த வசுந்தராதேவி கலவரத்துடன் எழுந்து நின்றாள்..

"வீரபாகு..!"

அச்சத்துடன் எழும்பிய அவள் குரலில் வீரபாகு பதறிப்போனான்.. தரையிலிருந்து ரதத்திற்கு தாவி ஏறியவன்.. அவளைத் த்னது முதுகின் பின்புறமாக மறைத்து நின்றான்..

"உயிருக்குத் துணிந்தவர் இந்த ரதத்தில் கால் பதிக்கட்டும்.."

உடைவாளை அவன் சுழற்றிக் கொண்டிருக்க.. அது பற்றி கவலை கொள்ளாமல் வசுந்தராவின் மேனி எழிலை அவதானித்துக் கொண்டிருந்தனர் மாலிக்கார்பூரின் படைவீரர்கள்..

"இந்தச் செல்வத்தைத்தான் ரதத்தில் மறைத்து வைத்துள்ளானா..?"

"ஹ..! மற்ற செல்வங்களை விட இதுதானே மனம் மயக்கும் செல்வம்..! இச்செல்வம் எமக்குச் சொந்தமானது.."

"அல்ல தோழனே..! எமக்குச் சொந்தமானது.."

"தாங்கள் இருவரும் எதன் பொருட்டு அடித்துக் கொள்ள வேண்டும்..? இது யாம் கவர்ந்து செல்லப் போகும் செல்வம்.."

"அதற்காகத்தானே இவனுடன் நான் சண்டை யிட்டுக் கொண்டுள்ளேன்..? விலகிச் செல்.. இவள் என்னுடையவள்.."

"அனைவரும் விலகி வழி விடுங்கள்.. இச்செல்வம்.. எமது செல்வம்.."

"உமக்கு வழி விட்டு.. விரல் சுவைக்கச் சொல்கிறாயா..? அதற்கு வேறு ஒருவனைப் பார்.. இச்செல்வம் எமக்கானது.."

அவர்கள் தங்களுக்குள் வழக்காடிக் கொண்டிருந்த பொழுதை தமக்குச் சாதகமானதாக மாற்றிக் கொண்டான் வீரபாகு.. ரதத்தில் பிணைக்கப் பட்டிருந்த புரவிகளின் கடிவாளக் கயிற்றை இறுக்கிப் பிடித்தவன் அவற்றைச் சுண்டிய வேகத்தில் புரவிகள் பறக்க ஆரம்பித்தன..

"விழுந்து விடாமல் ரதத்தை இறுக்கிப் பற்றிக் கொண்டு இருப்பிடத்தில் அமர்ந்து கொள்ளுங்கள் அம்மா.."

துரத்தி வரும் மாலிக்காபூரின் படைவீரர்களைப் பற்றிக் கவலை கொள்ளாமல்.. அவளைப் பற்றி மட்டுமே

..வலை கொண்ட அந்த தன்னலமற்ற சேவகனின் ...த்தில் மனம் நெகிழ்ந்து கண்ணீர் விட்டாள் வசுந்தரா..

"எம்மால் அல்லவோ தங்களுக்கு இந்நிலைமை..?"

"அல்ல தாயே..! நமது மண்ணைக் காக்க வேண்டிய ..வந்தர்கள் அயல் நாட்டின் விச வித்துக்களை நியாயம் ..ளக்க தாம்பூலம் வைத்து அழைத்ததினால்தான் எமக்கு இந்நிலைமை வந்துள்ளது.. தாம் குற்ற உணர்வை மனதில் ..ற்க வேண்டாம்.."

"தாம் எச்சரித்தும் அதை செவி மடுக்காமல் தாமதம் ..ரிந்தேனே.. அதற்காகத்தான் எமக்கு இந்தத் தண்டனை.."

"இந்த வீரபாகு உயிரோடு இவ்வுலகில் இருக்கும் ..வரை தமக்கு எவ்விதமான தீங்கும் நேராத அம்மா..! குற்ற உணர்வை விடுத்து இருக்கையில் அமருங்கள்.. தாம் ஒரு ..ச்சிளம் மழலை.. இவ்வாறு அரசியல் சூழல் இருக்கக் கூடும் என்பது வெண்மை நிறம் கொண்ட தம் உள்ளத்திற்கு எவ்விதம் தெரியும்..?"

அத்தருணத்திலும் அவளது மனம் புண்பட்டு விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்த அந்த தன்னலமற்ற வீரனைக் கனிவுடன் நோக்கினாள் வசுந்தரா..

"தாம் எமது தந்தைக்கு நிகரானவர்.."

மனமாற உரைத்த வசுந்தராவின் வார்த்தைகளில்..

'இச்சொல் போதும்..' என்ற பாசம் கொண்டான் வீரபாகு..

ராஜபாட்டையின் இருபுறமும் அடர்ந்த மரங்கள் இருந்தன.. புழுதி பறக்க விரைந்த ரதத்தைத் தொடர்ந்த மாலிக்காபூரின் படைவீரர்களின் புரவிகள் எழுப்பி விட்ட புழுதிப்படலம் எழுந்து விண்ணைத் தொட முனைந்ததை பதைப்புடன் நோக்கினாள் வசுந்தரா தேவி..!

"அவர்கள் தொடுத்து வந்து கொண்டிருக்கிறார்கள்.."

"அறிவேன் அம்மா.. அதன் பொருட்டுத்தான் இம்மார்க்கத்தில் ரதத்தை செழுத்தினேன்.. அம்மா.."

"உரையுங்கள் வீரபாகு.."

"அந்தத் திருப்பத்தில் ரதம் திரும்பும்போது.. அவர்களின் கண் பார்வையிலிருந்து சில மணித்துளிகள் நாம் தப்பித்து விடலாம்.."

"அம்மணித்துளிகளில் எதைச் சாதிக்க இயலும்..?"

துயரத்துடன் வினவினாள் வசுந்தராதேவி.. அவளது வதனத்தில் தோய்ந்திருந்த அச்சத்தில் வீரபாகு மனம் துடித்தான்..

'இதனால் அல்லவோ இச்சிறு மழலையை இல்லத்தில் காவல் வைக்க இவளது தந்தை துடித்தார்..' அவனது மனம் விம்மியது..

"எதையும் சாதிக்க இயலாமல் போகலாம் தாயே..! ஆனால் ஒன்றைச் சாதிக்க இயலும்.." உறுதியுடன் உரைத்தான்..

"என்ன அது..?" வசுந்தரா பரபரத்தாள்..

"ராஜபாட்டையை ஒட்டிச் செல்லும் கானக மார்க்கத்தில் நீங்கள் இறங்கிச் சென்று விடுங்கள்.. இந்த மார்க்கம் தாங்கள் சிறு வயதில் சென்று பழகிய மார்க்கந்தான்.."

மெய்தான்.. சின்னஞ்சிறு பிராயத்தில்.. வல்லவனும்.. வசுந்தராவும்.. அவர்களின் அகவையை ஒட்டிய சிறார்களுடன் அந்த வனப் பிரதேசத்திற்கு வந்து சென்றிருக்கிறார்கள்.. அங்கிருந்து அவர்களின் இல்லத்திற்கு செல்லும் மார்க்கத்தை வசுந்தரா அறிவாள் தான்..

'ஆயினும்..' வசுந்தரா மனம் கலங்கினாள்..

"தம்மை விட்டு யாம் மட்டும் தப்பிச் செல்வதா..?"

வசுந்தராவின் மறுப்பில் பதட்டம் கொண்டான் வீரபாகு.. அவனது பதட்டம் அவன் உரைத்த வார்த்தை களில் வெளிப்பட்டது..

"புரியாமல் உரைக்க வேண்டாம் தாயே..! எமது உயிரைவிட தமது கௌவரம்தான் உயர்ந்தது.. அதைக் காக்கும் பொருட்டு தாங்கள் பிரிந்து செல்லத்தான் வேண்டும்.."

"வீரபாகு.."

"இதில் ஒருமைப்பாட்டுக்கு இடமில்லை .அம்மா..! தாம் சென்று விட்டதை அவர்கள் கண்டு கொள்ளும் முன்னர் தப்பி விடுங்கள்.. இன்னமும் திருப்பத்திற்கு அவர்கள் வந்து சேரவில்லை.. தாமதிக்க வேண்டாம்.. ரதத்திலிருந்து இறங்கிச் சென்று விடுங்கள்.."

வீரபாகு துரிதப் படுத்தினான்.. வசுந்தரா ரதத்தை விட்டுக் குதிக்க முயன்றாள்.. அவளால் இயலவில்லை.. கால்கள் இரண்டையும் எஃகு சங்கிலியினால் பிணைத்து வைக்கப் பட்டதைப் போன்ற உணர்வுடன் தேங்கி நின்றாள்..

"என்ன இது தாயே..? நாழிகை செல்வது தம் மனதில் உரைக்கவில்லையா..? தப்பிச் செல்லுங்கள்.."

"கால்கள் அசைய மறுக்கின்றனவே.. தமை விட்டு நீங்க மறுக்கின்றனவே.. எமை வளர்த்த தமை விட்டு நான் நீங்கிச் செல்வதா..? எம்மையும்.. எம் தமையனையும் தமது மழலைச் செல்வங்களாக எண்ணிக் கொண்டிருக்கும் தமை விட்டு நான் எப்படிச் செல்வேன்..?"

வசுந்தரா மருகினாள்.. அந்த மருகலில் வீரபாகுவின் மனம் தோய்ந்து எழுந்தது.. இல்லமற்றவனுக்கு இல்லம் அளித்து.. குடும்பம் அற்றவனுக்கு தமது குடும்பத்தின் நிழலைக் கொடுத்த கைலாசநாதரின் மகவாக தமை நிருபணம் செய்து கொண்டிருந்த அந்த மங்கையை வாஞ்சையுடன் நோக்கினான் வீரபாகு..

அவன் காதலில் தோற்றவன்..! தாய் தந்தை அற்றவனை தாய்மாமன் வளர்த்தார்.. தாய்மாமனின் இல்லத்தரசியோ வீரபாகுவை வெறுத்தாள்.. செல்வந் தனான தாய்மாமன் தனது மகளுக்கு வேறு ஒரு செல்வந்தரின் இல்லத்தில் மணவாளனைத் தேட... அவரின் மகளைக் காதலித்த வீரபாகு மனம் உடைந்தான்.. இல்லம் விட்டு ஏகி விட அவனது காதலி முடிவெடுத்து

...னை அணுகிய போது.. வழி மறித்த தாய்மாமன்.. ...உடைவாளைக் கொண்டு தம்மை மாய்த்துக் கொள்ள துணித்தார்.. வளர்த்தவரின் சொல்லுக்கு கட்டுப்பட்ட வீரபாகு காதலையும்.. காதலியையும் விட்டுக் கொடுத்தான்.. விலகி நடந்தான்.. மறுதினத்தில் அவனது காதலி உயிர்நீத்து விட்டச் செய்தி அவன் செவிகளை எட்டியது.. உயிரெல்லாம் துடிக்க ஓடியவன்.. காதலியின் தந்தையிடம் சினம் கொண்டான்..

“தம்மைவிட தமது இல்லத்தரசி உயர்ந்தவர்கள் மாமனே..! அவரது வெறுப்பை வெளிப்படையாக அவர் உரைத்தார்.. யாம் பொருள் இல்லாத வறியவன் என்பதை இகழ்ச்சியுடன் அவள் எள்ளி நகையாடினாள்.. ஏழ்மை கொண்டவனை உறவினன் என்று உரைப்பது பாவம் என்று வதனத்திற்கு நேரே அவர் உரைத்தார்.. தாம் அவ்வாறில்லாமல் வேடம் புனைந்து என் உயிரைப் பறித்து விட்டீர்கள்..”

“வீரபாகு..”

“எமது நாமத்தை உச்சரிக்க வேண்டாம்.. ஏழையாக இருந்தாலும் எனது தமக்கையின் மகன் என்று தமது மனையாட்டியிடம் உரைத்தீர்களே.. அந்த எண்ணம் தமக்கு இருந்திருந்தால் எனை விட்டு வேறு ஒருவனை தமது மகளுக்கு மணாளனாக தேர்ந்தெடுத்திருப்பீர்களா..?”

காதலியை இழந்து விட்டவனின் உள்ளத்தில் பற்றிக் கொண்ட பெரு நெருப்பு வார்த்தையென்னும் வடிவம் கொண்டு தனலாக வெளிவந்தது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



4

நிகழ்கின்ற நிகழ்வுகளை.. நிர்ணயம் செய்தது யார்..?

அனுராதா போட்ட போட்டில் 'சுரீர்' என்று முதுகு வலிக்க.. முதுகைத் தடவியவாறு திரும்பிப் பார்த்தாள் யாமினி..

"ப்பா..! எப்படி வலிக்குது.. ஏம்மா அடிச்சீங்க..?"

மகளின் கேள்வியில் மகளை விட அதிகமாக அனுராதாவுக்கு வலித்துத் தொலைத்தது.. அதை அவளது பார்வை பிரதிபலித்ததில்..

"இதுக்குத்தான் எதையும் செய்யறதுக்கு முன்னாலே.. ஒருதடவைக்குப் பத்துத் தடவை யோசிச்சுச் செய்யனும் கிறது.." என்றார் பிரதாப்..

"இவளை மகளா பெத்த பின்னாலே என்னதான் மண்டையில இருக்கிற மூளையைக் கசக்கிப் பிழிந்து யோசிச்சு வைத்தாலும் யோசனை வருவேனான்னு அடம் பிடிச்சு வைக்குதே.."

அழுத்துக் கொண்டாள் அனுராதா.. அவள் அடித் அடியில் முகைத் தடவிக் கொண்டிருந்த மகளிடம்..

"ரொம்ப வலிக்குதா.." என்று கேட்கவும் செய்தாள்.

“என்னத்தை அட்டாக் பண்ணிட்டிங்கன்னு இந்த பில்ட் அப்பைக் கொடுக்கறீங்க..? லேசா எறும்பு கடிச்சாப்புல முணுக்குன்னு வலிச்சிருக்கும்.. விடுங்கம்மா..” என்றான் யது நந்தன்..

“உன்னை அடிச்சிருந்தாத் தெரியும்..” தமையனை முறைத்தாள் யாமினி..

“ஓ..! உனக்கு அந்த ஆசையா..? அடி வாங்கினதில இவளுக்கு வருத்தமில்லையாம்ப்பா.. அந்த அடியை நானும் சேர்ந்து வாங்கலைங்கிறதிலதான் இம்புட்டு வருத்தம்..”

“டேய்..! போடா..”

“எங்கே போகச் சொல்கிற..? கடலுக்கா..?”

“அதுக்கு இவ போய்க்குவா.. நீ வேலையைப் பாருடா யது..”

“எங்கேம்மா..? யாம் பெற்ற துன்பத்தை நீயும் பெறுகன்னு மல்லுக்கட்டிக்கிட்டு உட்கார்ந்திருக்காளே..”

“ஸ்டாம் இட் யது..! ஐ அப்ஜெக்ட் இட்..”

“அப்பா.. இது கோர்ட் இல்லை.. வீடு..! நீங்களும் லாயர் இல்லை.. எங்க அப்பா..”

“அவருக்கு அது தெரியாதுன்னா நினைக்கிற யது..?”

“ஊஹீம்..! நான் உங்க செல்லப் பிள்ளைம்மா.. அப்படியாப்பட்ட நினைப்பையெல்லாம் நினைக்க மாட்டேன்.. அப்பா தெரிஞ்சுக்கிட்டேதான் நூல் விடறார்..”

"பாருடா.. இவர் நூல் விடற சங்கதி உனக்கும் தெரிஞ்சிருச்சா.."

"நூல் விட்டாரா..? அப்பாவா..? யாருக்கு..?"

"என்னங்க.. பிள்ளை யாருக்குன்னு கேட்கிறான்.. அடுத்தாத்து அம்புஜத்தைப் பத்தியும்.. எதுத்தாத்து சங்கதியைப் பத்தியும் நீங்க பிட்டுப்பிட்டு வைச்ச கதையை உங்க மகன்கிட்ட எடுத்து விடவா..?"

அனுராதா அணுகுண்டைத் தூக்கிப் போட.. பிரதாப்புக்கு நெஞ்சுவலி வந்துவிடும் போல ஆகிவிட்டது.

"அனு.." என்றார் பரிதாபமாக..

"பிழைத்துப் போங்க.." அவளும் அனுக்கிரகம் காட்டி அவரைப் பிழைத்துப் போக விட்டாள்..

யதுநந்தன் சோபாவில் வாகாக சாய்ந்து கொண்டு கால்களைத் தூக்கி டீப்பாயில் போட்டு சரிந்து அமர்ந்த வண்ணம் டிவியை பார்த்துக் கொண்டிருந்தான்..

அவன் கையிலிருந்த ரிமோட்டை அவன் அறியாதபடி பூனையைப் போல நைஸாக உறுவிய யாமினி.. வேறு சேனலை மாற்ற.. அவர்களுக்குள் யுத்தம் மூண்டது..

"யாரைக் கேட்டு சேனலை மாத்தின..?"

"யாரைக் கேக்கனும்..?"

"என்னைக் கேக்கனும்.."

"நீ யாரைக் கேட்டு ரிமோட்டைத் தூக்கின..?"

"யாரைக் கேக்கனும்..?"

"என்னைக் கேக்கனும்.."

"ஹலோ..! இது எங்க அப்பா வீட்டுச் சொத்து.."

"எனக்கும் இதே டயலாக்தான்.. இது எங்க அப்பா வீட்டுச் சொத்து.. நான் அவருக்கு செல்லப் பொண்ணு.."

"இருந்துக்க.. யாருக்கு வேணும் அவரோட செல்லம்..?"

"அவரோட செல்லம் மட்டும் வேணாம்.. டிவி மட்டும் வேணுமா..?"

"ஆமாம்ங்கிறேன்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?"

"ரிமோட்டைத்தர முடியாதுங்கறேன்.. அதுக்கு நீ இப்ப என்னாங்கிற..?"

"அதையும் பார்த்துரலாம்.."

யதுநந்தன் யாமினியின் மீது பாய்ந்து ரிமோட்டைப் பிடுங்கினான்.. பதிலுக்கு அவளும் பிடுங்கினாள்.. மறுபடியும் யதுநந்தன் யாமினியின் கையிலிருந்ததைப் பிடுங்க.. இம்முறை ரிமோட்டுக்குப் பதிலாக கொரியர் வந்து சேர்ந்தது..

"என்ன லெட்டர் இது..?"

யதுநந்தனின் கேள்விக்கு அப்புறம்தான் ஒட்டு மொத்தக் குடும்பமும் அந்த லெட்டரை பார்த்து வைத்தது.

5

காதலென்னும் சொந்தம் கொள்ள.. கடலளவு பொருள் வேண்டும்..

அன்றைய வீரபாகு இளம் பருவத்தினன்.. வசுந்தராவையும்.. வல்லவனையும் தான் பெற்ற மக்கள் போல சீராட்டி பாராட்டி வளர்த்து.. இன்று மணம் புரியும் அகவையில் உள்ளவர்களுக்கு தகப்பன் போன்ற அகவையில் உள்ளவன், வீறு கொண்ட வேங்கையாக ஒரு கூட்டத்தையே தனியொரு மனிதனாக எதிர்த்து நிற்கும் போது.. அன்றைய வீரபாகு எவ்விதம் இருந்திருப்பான்..?

"செஞ்சோற்றுக் கடனில் என்னை பிணைத்தீர்கள்.. வளர்த்த கடன் கூறி என்னை இயலாமையுற்றவனாக மண்டியிட வைத்தீர்கள்.. தாம் மட்டும் எமக்கு அடைக்கலம் கொடுத்து வளர்த்த தாய்மாமனாக அல்லாது போயிருந்தால்.. மாமனே..! உம் மகளை இல்லம் புகுந்து கவர்ந்து சென்றிருப்பேன்.. எவர் தடுத்திருந்தாலும் முறியடித்திருப்பேன்.. எமது ஆசைக் காதலி விரும்பிய வண்ணம் அவள் கழுத்தில் மாங்கலநாண் பூட்டி, மாலையிட்டு எனது மனையாட்டியாக ஆக்கியிருப்பேன்.. ஓர் ஆண்மகனாக எமது காதலுக்குரிய கடமையை ஆற்றியிருப்பேன்.. காதலிக்கான நியாயத்தைச் செய்திருப்பேன்.. அவ்விதம் கடமையாற்ற இயலாமல் என்னை வழிமறித்தது எவர்..?"

வீரபாகுவின் நெருப்பான வினாக்களில் மடிந்து போனான் அவன் தாய்மாமன்..

மார்புவலி என்று இறந்தவனின் மார்க்கத்தைப் பின்பற்றி அவனது மனையாட்டியும் சென்றுவிட.. தாய்மாமனின் சொத்துக்கள் அனைத்தும் அவனது வாரிசான தமக்கை மகனைத் தேடிவந்தன..

“எமக்கு வேண்டாம்..”

கிராமசபையில் அவற்றை மறுத்தான் வீரபாகு..

“இவை உமக்குரியவை என்பதை தமது இறுதி நொடியில் உரைத்து விட்டுச் சென்றானப்பா உன் தாய்மாமன்..”

“அல்ல கிராமத் தலைவர் அவர்களே..! இவை அவரின் மகளுக்குரியவை.. சொத்துக்களுக்கு உடைமைக் காரியே அவற்றின் மீது எவ்விதமான பற்றுதலும் இன்றி உயிரை துறந்த பின்பு.. அவளைக் கொன்ற பாவியான நான் இவற்றின்மீது உரிமை கொண்டாடுவதா..?”

“நடந்த நிகழ்வுகளை மறப்பாய் வீரபாகு..”

“எவ்விதம் அது இயலும் தலைவரே..! இவ்வுலகில் எமக்கென்று எவர் உள்ளனர்..?”

“இளம்பருவத்தினன் நீ.. மணம் புரிந்து வாழ்வாய்..”

“மணமா..? எனை மணம் புரிய விரும்பியவள் மண்ணுலகை விட்டு விண்ணுலகம் சென்று விட்டாளே.. இனி எவரை நான் மணம் புரிவேன்..?”

“என்ன அப்பனே இது..? பல மணம் புரியும் ஆண் குலத்தில் பிறந்து விட்டு இவ்வாறு பிதற்றுகிறாய்..? மனைவியர்கள் இருக்கும் போதே மற்றொரு பெண்ணுக்கு மாலையிட்டு.. மனையாட்டியாக்கிக் கொண்டு.. அந்தப் புதுமனையாட்டிக்கு.. ஏற்கனெவே இல்லத்தில் குவிந் திருக்கும் முதல் மனைவியரைக் கொண்டு ஆரத்தி எடுக்க வைக்கும் ஆண் குலமல்லவா நமது குலம்..? இவ்வாறு இருக்க.. இறந்து விட்ட காதலிக்காக எவரையும் மணம் புரியாமல் நீ இருப்பாயா..?”

“அனைவருமே பல மனைவியரை மணந்ததில்லை அய்யனே..! எமது தாய்மாமன் இறுதிவரை ஒரு மனைவியுடன்தான் வாழ்ந்து முடித்தார்.. எம்மால் வேறு ஒருத்தியை மணக்க இயலாது..”

“அவ்வாறே இருந்தாலும்.. உன் தாய்மாமனின் மகள் உனது மனைவியில்லையே.. காதலிதானே..”

“எனக்காக உயிர் துறந்த அவளே என் மனையாட்டி.. இப்பிறவியில் அவளை நினைத்த மனதால் வேறு ஒருத்தியை நான் நினைக்க மாட்டேன்..”

“அவ்வாறெனில்.. இந்த சொத்து.. சுகம்..?”

“எமக்கு வேண்டாம்.. இச்சொத்துக்களை யாது செய்ய வேண்டும் என்பதை தமது நியாய சபையில் முடிவு செய்து கொள்ளலாம்.. அதைக் குறித்து எனக்கு யாதொரு ஆட்சேபனையும் இல்லை..”

அனைத்தையும் துறந்த வீரபாகு அந்த கிராமத்தை விட்டு வெளியேறினான்.. தேசாந்திரியாக பாதம் போன போக்கில் சென்று கொண்டிருந்தவன்.. காஞ்சிக்கு வந்தான்.. அருளாளப் பெருமாளின் சன்னதியில் பெருமாளையும், தாயாரையும் சேவித்து விட்டு, தாமரைக் குளத்தின் படிக்கட்டுக்களில் அமர்ந்தவனை மழலையின் அழுகுரல் ஈர்த்தது..

'எவர் அது..?'

திரும்பிப் பார்த்தவனின் முன்னிலையில் குளக்கரைப் படிக்கட்டின் அருகே தவழ்ந்து வந்தபடி அழுது கொண்டிருந்த மழலை தென்பட்டது..

'யாது இது..? குழந்தை தவழ்ந்து வந்து குளத்தில் விழுந்து விடும் போல உள்ளதே..'

வீரபாகு பதறி எழுந்தான்.. படித்துறையின் விளிம்பைத் தொட்டு விட்ட மழலையை ஓடிச் சென்றுத் தூக்கினான்.. அவனது கரத்தில் வந்ததும் அழுகையை நிறுத்திவிட்டு..

'எவர்.. இவர்..?'

என்ற அறியாப் பார்வையுடன் அவன் வதனத்தை கூர்ந்து நோக்கியது.. அந்தப் பெண் குழந்தை..! அக்குழந்தையின் துறுதுறுப்பான வதனம் வீரபாகுவை ஈர்த்தது.. அறியாதவர் என்ற அச்சமின்றி அவன் வதனம் பார்த்த குழந்தை நகைத்தாள்.. கன்னம் குழிய அவள் சிரித்த சிரிப்பு வீரபாகுவின் மனதை கொள்ளை கொண்டது..

"வசுந்தரா..! கண்ணே வசுந்தரா..!"

ஓர் இளம் சிறுவனை கரத்தில் பிடித்தபடி.. மனையாட்டி பின்தொட பதட்டத்துடன் அங்கும் இங்கும் எவரையோ தேடியபடி ஓடிவந்து கொண்டிருந்தார் ஓர் மனிதர்..

"ம்மா.." குழந்தை அவர்கள் இருக்கும் திசையைச் சுட்டிக் காட்டினாள்..

"அவர்கள் உன்னையா தேடுகிறார்கள்..?" வீரபாகு குழந்தையிடம் வினவினான்..

அதற்கு எதுவும் புரியவில்லை போல.. இமைக்காமல் வீரபாகுவின் வதனத்தை நோக்கி விட்டு.. மீண்டும்.. தேடிக் கொண்டிருப்பவர்களைச் சுட்டிக் காட்டிச் சிணுங்கியது..

வீரபாகு அவர்களை அணுகினான்.. தேடிக் கொண்டிருந்தவரின் புஜத்தைத் தொட்டு அழைத்து..

"ஐயா..! இது உங்களின் குழந்தையா..?" என்று வினவினான்..

திரும்பியவரின் விழிகளில் பதட்டம் மறைந்து.. ஆனந்தம் வந்தது..

"வசுந்தரா..! என் மகளே..!"

உவகையுடன் மழலையை அள்ளிக் கொண்டார்.. உச்சி முகர்ந்தார்.. மனையாட்டியிடம் கொடுத்தார்..

"பெருமாளையும், தாயாரையும் சேவிக்க வருகை தந்தோம்.. பிரகாரத்தில் அமர்ந்து உரையாடிக்

...டிருந்த போது.. இவள் தவழ்ந்து வந்து விட்டாள்.. ...த்தில் வீற்றிருக்க மாட்டாள்.."

"துருதுருவென்ற சுபாவம் போல.."

"ஆம்.."

அவர்கள் உரையாடிக் கொண்டிருந்த போது ...ர்களைக் கடந்தவர்களில் ஒருவர்.. குழந்தையின் ...தையைப் பார்த்து..

"இது உமது குழந்தையா ஐயா..?" என்று வினவினார்.

"எமது குழந்தைதான்.. ஏன் வினவுகிறீர்கள்..?"

"சற்று முன்புதான் இக்குழந்தை தவழ்ந்து வந்து ...க்கரையின் படித்துறையில் விழ இருந்தது.. இந்த ...தர் மட்டும் உரிய பொழுதில் குழந்தையைத் தூக்கியிரா ...டால் குழந்தை படிக்கட்டில் உருண்டிருக்கும்.."

உரைத்த மனிதர் சென்று விட்டார்.. குழந்தையின் ...ய்..

"வசுந்தரா.." என்று மிரட்சியோடு கூவி குழந்தையை ...றுக்கி அணைத்துக் கொண்டாள்..

"தமக்கு மெத்த வந்தனம்.."

நன்றி கூறிய குழந்தையின் தந்தையை மறுத்து ...லையாட்டினான் வீரபாகு..

"அறியாமல் தவறி விழ இருந்த குழந்தையைத் ...க்கியது அரிய செயலா..? நன்றி எதற்காக அய்யனே..! ...டை கொடுங்கள்.."

"தமக்கு ஏதேனும் பரிசளிக்க எண்ணுகிறேன்.. வேண்டியதை வினவுங்கள்.."

"எதுவும் வேண்டாம்..." அவரது கரம் பற்றி சமாதானமாக உரைத்த வீரபாகு இருகரம் கூப்பி..

"விடையளியுங்கள்.." என்று வேண்டினான்..

"சென்றுவாருங்கள்.."

அவர் விடை கொடுத்தார்.. வீரபாகு நகர யத்தனித்த போது.. குழந்தை வசுந்தரா.. அவனது உடையைப் பற்றி இழுத்து..

"ம்மா.." என்று அழைத்தாள்..

வீரபாகு ஸ்தம்பித்தான்.. குழந்தையின் அழைப்பு அவனை தடுமாற வைத்தது.. அத்துடன் நில்லாமல் குழந்தை அழுகவும் ஆரம்பித்தாள்.. அவனை நோக்கிக் கரம் நீட்டித் தாவவும் செய்தாள்..

மலைப்புடன் தேங்கி நின்றான் வீரபாகு.. தாவிய குழந்தையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.. அவனது கழுத்தில் கரத்தைப் போட்டுக் கொண்ட குழந்தை நகைத்தாள்.. அந்த நகைப்பில் அந்தச் சின்னஞ்சிறு சிறுவனான அவளது தமையனும் கலந்து கொண்டு வீரபாகுவின் கரத்தைப் பற்றிக் கொண்டான்..

"பார்த்தீர்கள் அல்லவா.. பொருள் வேண்டாத உங்களுக்கு பாசத்தைப் பரிசாக அளித்திருக்கிறார்கள் எனது குழந்தைகள்.."

குழந்தைகளைப் பெற்றவர் நகைத்தார்.. அவரது மனையாட்டியும் இதழ்களில் புன்முறுவல் தவழ அதை ஆமோதித்தாள்..

"இனி இவர்களின் பாசத்தைத் துறந்து தாம் சுதந்திரியாக இந்த அவனியைச் சுற்றி வர இயலாது.."

"அய்யனே..!"

"எம்முடன் வாருங்கள்.. உறவென்று உரைத்துக் கொள்ள எவருமில்லையென்று எண்ண வேண்டாம்.. யாமும் எமது இல்லத்தாரும் தமது உறவினர் என்று எண்ணிக் கொள்ளுங்கள்.. எனது மனையாட்டி தமக்கு தமக்கை ஆவாள்.. தாம் எமது மைத்துனர் ஆவிர்.. எம் குழந்தைகளைக் காக்கும் பாதுகாவலர் பொறுப்பை ஏற்று எம் இல்லத்திற்கு வருகை தர வேண்டும்.. இனித் தமது வாழ்நாள் முழுவதும் எமது இல்லத்தில் ஒருவராக வாழ்ந்து முடிக்க வேண்டும்.. வருகை தருவீர்களா..?"

இவ்வாறுதான் வீரபாகு கைலாசநாதரின் நிழலுக்கு வந்து சேர்ந்தான்.. அவனது கரங்களில் ஏந்தி வல்லவனையும், வசுந்தரா தேவியையும் வளர்த்தான்.. பற்றற்று.. இலக்கில்லாமல் உலகை வலம் வந்து கொண்டிருந்தவன்.. அந்த அண்ணன், தங்கையின் மீது பற்றுதல் கொண்டான்.. அவர்கள் வாழும் இல்லத்தில் தேங்கி நின்றான்.. அவர்கள் எங்கு சென்றாலும் நிழல் போல அவர்களைப் பின் தொடர்ந்தான்..

கைலாசநாதர் அவனை சேவகனாக ஒர்தினமும் எண்ணியதில்லை.. அங்கயற்கண்ணியும் அவ்வாறே..

"தம்பி வீரபாகு.." என்றுதான் அவனை அவள் அழைப்பாள்..

வல்லவன் "மாமனே.." என்று அழைப்பான்..

வசுந்தராதேவி மட்டும் குழந்தைப் பிராயத்திலிருந்து அவனை நாமமிட்டு வளர்த்தவளைப் போல..

"வீரபாகு.." என்றே அழைப்பாள்..

"அவ்வாறு அழைத்தல் ஆகாது அம்மா..." கைலாசநாதர் மகளைக் கண்டிக்க முனையும் போதெல்லாம்..

"அல்ல அய்யனே..! நாமம் கூறி அழைக்கத்தானே எனக்கு நாமம் இட்டுள்ளார்கள்.. வசுந்தரா மழலைப் பிராயத்திலிருந்தே இவ்விதமாக நாமம்கூறி அழைத்துப் பழகி விட்டாள்.. புதிதாக அதை மாற்றினால் எனக்கு எவரோ என்னை அழைப்பதைப் போல இருக்கும்.. வழக்கப்படியே அவள் அழைக்கட்டும்.." என்று வீரபாகு தடுத்து விடுவான்..

வல்லவன் வளர்ந்து வாலிபன் ஆனான்.. இளமைப் பருவத்துக்கே உரிய உல்லாச குணங்கள் அவனிடம் ஓடி வந்து ஒட்டிக் கொண்டன.. அந்தப் பிராந்தியத்திலேயே செல்வந்தரான கைலாசநாதரின் புதல்வனாகப் பிறந்து விட்டவன் அவரின் வணிகத்தில் பங்க பெற வேண்டிய கடமையை மறந்து நகர்வலம் வர ஆரம்பித்தான்..

வசுந்தராதேவி யௌவன பருவம் அடைந்தாள்.. அன்றுதான் மலர்ந்த புதுமலரின் வனப்புடன் கூடிய

புதல்வியின் எழிலைக் கண்ணுற்ற கைலாசநாதர் பெருமிதம் கொள்ளும் போதே.. அந்த மாசறு எழிலைக் காவல் செய்து காப்பாற்றி.. தக்க மணாளனுக்கு மணம் முடித்துக் கொடுக்க வேண்டுமே என்ற கடமை உணர்வுடன் கவலை கொள்வார்..

அவர் வணிகர்..! தேசம் விட்டுத் தேசம் செல்பவர்.. கடல் கடந்து வணிகம் புரிபவர்.. அங்கயற்கணியைப் போல.. இல்லம்.. உறவினர்களின் இல்லங்கள்.. ஆலய வழிபாடு என்ற சின்னஞ்சிறு உலகத்துக்குள் சுற்றி வருபவரல்ல..

அவரது உலகம் வேறு.. அது பரந்து விரிந்தது... அது உரைத்த அரசியல் சூழல்கள் அவருக்குள் அச்சத்தை விதைத்தன.. தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்த தமிழக மன்னர்கள்.. மாற்றாரை நியாயம் கூற அழைத்து.. தமிழகத்தை தாரை வார்த்துக் கொடுக்க ஆயத்தப் படுவதை அறிந்து மனம் பதைத்துக் கொண்டிருப்பவர்..

இவ்விவரங்களை இல்லத்தாரிடம் பகிர்ந்து கொள்ள அவரால் இயலாது.. அவர்கள் அச்சப்பட்டு விடுவார்கள்.. ஆனந்தம் தவழும் அவர்களின் வதனங்களில் அச்சத்தின் சாயல் படிவதை அவரால் அனுமதிக்க இயலாது..

அதன் பொருட்டே அவர் வசுந்தராதேவியை தடுத்து நிறுத்த யத்தனித்தார்.. அவள் அதையும் மீறி.. அவரைச் சமாதானம் செய்து விட்டு காஞ்சிக்கு புறப்பட்டு

விட்டாள்.. அவர் அஞ்சியதைப் போலவே மாலிக்காபூரின் படைவீரர்களின் பார்வையில் பட்டு விட்டாள்..

"சென்று விடுங்கள் தாயே.." வீரபாகு பதட்டம் கொண்டான்..

"தமை விட்டா..?" வசுந்தரா வாதாடினாள்..

"தாமதிக்கப் பொழுதில்லை தாயே..! என் மீது ஆணை.. தாங்கள் ரதத்திலிருந்து குதித்து.. வனத்துக்குள் ஓடி விடுங்கள்.. பட்டுத்துணிகள் மறைத்த ரதத்திற்குள் தாங்கள் இல்லையென்பதை அறியாமல் அந்தக் கொடூரர்கள் எமைப் பின் தொடர்வார்கள்.. தாங்கள் கடலோரமாக ஓடி நமது நகரத்திற்கு சென்று விடுங்கள்.."

"தாம்..?"

"எமைப் பற்றி கவலை வேண்டாம்.. எம்மைக் காத்துக் கொள்ள எமக்குத் தெரியும்.."

வசுந்தராதேவி ஓர் நொடி தயங்கி நின்றாள்.. வீரபாகுவின் பதட்டத்தில் மறுநொடியில் ரதத்தை விட்டுக் குதித்தாள்.. சாலையோர வனத்துக்குள் ஓடி மறைந்தாள்..

அவள் கண் பார்வையிலிருந்து மறைந்ததும் வீரபாகு ரதத்தைச் செழுத்த ஆரம்பித்தான்.. சற்றுப் பொழுதில் தொலைவில் புழுதிப் படலம் தெரிந்தது.. மாலிக்காபூரின் படைவீரர்கள் அவனைத் தொடர்ந்து வருவதை புரிந்து கொண்டவனின் மனதில் சற்று அமைதி ஏற்பட்டது..

'இவர்களின் கவனத்தை திசை திருப்பி விட்டேன்..'

வசுந்தராதேவி பத்திரமாக இல்லத்திற்கு சென்று விடவேண்டும் என்று அவன் மனம் வேண்டிக் கொண்ட அதே வேளையில் வசுந்தரா கானகத்தின் மரங்களுக்கிடையே மறைந்து.. மறைந்து ஓடிக் கொண்டிருந்தாள்..

கடல் மல்லையை ஒட்டிய நகரம்தான் கைலாச நாதரின் ஊராகும்.. அங்கே செல்ல வேண்டுமெனில் வசுந்தரா.. சில காத தூரம் ஓடியாக வேண்டும்.. எங்கு சென்றாலும் ரதத்தில் சென்று பழகியவளுக்கு பாதம் வலித்தது.. மிதியடிகளை ரதத்தில் விட்டு விட்டு குதித்து இறங்கியவளின் பாதங்களில் கல்லும்.. முள்ளும் குத்தியதில் அவள் ரணவேதனை கொண்டாள்..

"அம்மா.."

அதற்கு மேல் ஓட இயலாமல் சவுக்கு மரங்களின் நிழலில் சரிந்து அமர்ந்தவளின் முன்னால்.. ஒரு புரவியின் நிழல் வீழ்ந்தது.. குருதி வடியும் பாதத்தைக் கவனித்துக் கொண்டிருந்தவளின் பார்வையில் அந்த நிழல் படிந்ததும்.. அவளது இதயம் ஓர்வினாடி நின்று.. மீண்டும் பலமாக அடிக்க ஆரம்பித்தது..

"வீல்.."

அவள் வாயில் கரம் வைத்து அலறினாள்...

"அஞ்ச வேண்டாம்.."

கம்பீரமான அந்தக் குரலின் கண்ணியத்தில் கவரப்பட்டவள் வியந்து போனாள்..

'மாலிக்காபூரின் படைவீரர்களில் எவனுக்கு இந்த அளவுக்கு காருண்யமும்.. கண்ணியமும் உறைந்துள்ளன..?'

விழி விரிய நிமிர்ந்து நோக்கியவளின் விழிகள் இன்னமும் அதிகமாக அகன்றன..

அவளுக்கு அருகில் நின்ற புரவியில் ஆரோகணித் திருந்த வீரனின் வதனம்.. மாலிக்காபூரின் படைவீரர்களின் வதனம் போல வட இந்திய சாயலைக் கொண்டிருக்க வில்லை.. அத்துடன் அந்த வீரனின் நெற்றியில் சந்தனக் கீற்றும்.. அதன் நடுவினில் குங்குமமும் துலங்கின..

இந்து தர்மத்தின் வழிபாட்டுச் சின்னங்களான அவற்றைக் கண்டதும் வசுந்தரா தேவியின் அச்சம் குறைந்தது.. அதனால் சற்றுப் பயம் விலகியவளாக அவள் அவனை கூர்ந்து நோக்கவும் செய்தாள்.. அந்தப் பார்வையைக் கண்ணுற்ற அந்த வீரன் பலமாக நகைத்தான்.. புரவியிலிருந்து குதித்து அவள் முன்பு நின்றான்.. புரவியிலிருந்த போது தெரியாத அவனது ஆறடி உயரம் அவள் முன்பு நிமிர்ந்து நின்றதில் அவள் பிரமித்தாள்..

ஆறடி உயரமும்.. அகன்ற மார்பும்.. தேக்கு மரங்களைப் போன்ற நீண்ட கரங்களையும்.. கால்களையும் கொண்டிருந்தவனின் அகன்ற மார்பில் கனமான ஒற்றைச் சங்கிலியொன்று புரண்டு கொண்டிருந்தது.. அதன் முகப்பில் பதித்திருந்த ஒற்றைக் கல்லின் ஒளிவீச்சில் வசுந்தராதேவியின் கண்கள் கூசின..

அவள் கரம் கொண்டு விழி மறைத்தாள்.. விரல்களின் ஊடே அவள் பார்வை அவன் மீது படிந்தது...

வெற்று மார்பில் அவன் சரிகைக் கரையிட்ட பட்டு அங்கவஸ்திரத்தைப் போர்த்தியிருந்தான்..

அவனது வனப்பில் அவள் திகைத்துப் போனாள்.. அது போன்ற ஆகிருதியுடன் கூடிய ஆணழகனை அதற்கு முன்பு அவள் கண்டதில்லை.. அவனது விழிகளில் தெரிந்த தீட்சண்யத்தில் வசுந்தரா தடுமாறிப் போனாள்..

கைலாசநாதரின் காவலிலும்.. வீரபாகுவின் பாதுகாவலிலும்.. அன்னிய ஆண்களின் வதனம் பாராமல் வளர்ந்திருந்த வசுந்தராதேவி.. முதன் முறையாக இணையற்ற வசீகரம் ததும்பிய எழில் கொண்ட ஆணழகனை வெகு அருகாமையில் கண்ணுற்றாள்.. அவளின் கன்னிமனம் படபடத்தது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



5

உனக்கும் எனக்குமான பந்தத்தை..
இந்த உலகம் அறியாது..

ஒட்டு மொத்த குடும்பமும் கேள்வி கேட்ட பின்னால்தான்.. அதுவரை அந்த லெட்டரை கையில் வைத்துக் கொண்டிருந்த விவரமே யாமினியின் அறிவுக்கு உறைத்தது...

"கொரியர் போல இருக்கில்ல..?" அனுராதா கேட்டாள்..

யதுநந்தன் கையிலிருந்த கவரை இப்படியும்.. அப்படியுமாக... என்னவோ ஆராய்ச்சி பண்ணுகிறவனைப் போலத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு..

"அப்படித்தாம்மா தெரியுது.." என்றான்..

"அதைக் கண்ணால பாக்கிறப்பவே கண்டு புடிச்சிரலாமே.. இந்த அளவுக்கு புரட்டிப் பாக்கணுமா..?" என்றார் பிரதாப்..

"அதுக்கு இப்ப என்னாங்கறிங்க..?" என்றான் யதுநந்தன்..

"என்னமோ மலையைப் பொரட்டறவன் போல இம்புட்டு பில்ட்-அப்பு எதுக்குன்னுதான் கேட்டேன்ப்பா.. வேற ஒன்னுமே இல்லை.." ஜகா வாங்கினார் பிரதாப்..

"கேட்கிறதையும் கேட்டுட்டு... ஒன்னுமே இல்லையாமில்ல.. இம்புட்டு நேரமும் உங்க பொண்ணு கையில இந்த லெட்டர் இருந்துச்சே... அவ இந்த ஆராய்ச்சியையெல்லாம் பண்ணிப் பாத்திருக்க வேண்டியது தானே..?"

மகனின் சார்பாக.. கணவரை கேள்வி கேட்டாள் அனுராதா.. மற்றவர்களுக்குத்தான் அது கேள்வி கேட்பது.. பிரதாப்பின் மனம் மட்டுமே அறியும்.. அவள் வாங்கு.. வாங்கு.. என்று வாங்குவதை..

'சான்ஸ் கிடைச்சா விட மாட்டாளே..' அவர் பல்லைக் கடித்தபடி மகளைப் பார்த்தார்..

அவள் எனக்கென்ன என்று விட்டத்தைப் பார்த்தாள். 'இவ பண்ணி வைக்கிற வேலையிலதான் நான் இம்புட்டு வாங்கை வாங்க வேண்டியிருக்கு..' நொந்து போனார் பிரதாப்..

"அதான் கொரியர்ன்னு தெரியுதில்ல.. அதுக்கப் புறமும் தேவையில்லாம ஏன் பேசனும்..?"

அவர் அனுராதாவின் வாங்கலை ஆட்சேபித்தார்..

"கொரியர்ன்னு தெரியுது.. அது இம்புட்டு நேரமும் எந்தத் தோட்டத்துக்கு புல் மேயப் போயிருந்ததுன்னு தான் தெரியல.." அனுராதா நொடித்தாள்..

"எவடி இவ.."

"அதுவும் தெரியலையா..? உங்க பிரியம் போல எதுத்த வீடு.. பக்கத்து வீடுன்னு.. ஏதாவது ஒரு பேரைச் சொல்லிக்கங்களேன்.." அனுராதா எடுத்துக் கொடுக்க..

"அனு.." என்று யதுநந்தனை நினைத்து நடுங்கிப் போனார் பிரதாப்..

'இவபாட்டுக்கு மகன் முன்னாடி போட்டுக் கொடுக் கிறாளே.. விசயம் தெரிஞ்சா இவன் என்னப் பார்வையாலேயே ஒருவழி பண்ணிருவானே..'

அவருக்குக் கண்களில் தண்ணீர் வந்து விடும் போல ஆகிவிட்டது..

"அட...! சாருக்கு என்பேர் கூட ஞாபகம் இருக்கு போல.. அதான் நான் யாருன்னு தெரிஞ்சு போச்சில்ல..

விசயம் என்னன்னு சொல்லுங்க..” அனுராதா பேச்சை மாற்றி அவரைக் காப்பாற்றினாள்..

‘அப்பாடா..!’ நிம்மதியான பிரதாப்..

“கொரியர் எதுக்காகடி புல் மேயப் போகனும்..?” என்று சந்தேகம் கேட்டார்..

“பின்னே..? காலையில வந்த கொரியர் ராத்திரி வரைக்கும் உங்க மக கையிலதான் இருந்துச்சா..? கொரியர் பையன் காலையிலேயே வந்திட்டுப் போயாச்சு..”

அனுராதா சொன்னபின்னர்தான்.. மற்றவர்கள் அதை உணர்ந்தார்கள்.. யாமினி மதிய உணவுக்குப் பின்னால் கடைக்கு வந்து விட்டதை நினைத்துப் பார்த்தார் பிரதாப்..

“இவ கையிலேயே வைச்சுக்கிட்டுச் சுத்திக்கிட்டு இருந்தாளோ என்னவோ..” இலகுவாக சொன்னான் யதுநந்தன்..

‘இது என்ன புதுசா..?’ என்றிருந்தது அவனுக்கு..

போனால் போன இடம்.. வந்தால் வந்த இடம் என்று நிற்கும் யாமினி.. கொரியரை கையில் வைத்துக் கொண்டு சுற்றியதில் என்ன ஆச்சரியம் இருக்கக் கூடும் என்று நினைத்தான் அவன்..

“இல்லேண்ணா..” என்றாள் யாமினி..

“இல்லைன்னா..?” புருவங்களை உயர்த்தினான் யதுநந்தன்..

"அம்மா சொன்னதைப் போல.. இது நம்ம வீட்டுத் தோட்டத்திலே புல் மேயத்தான் போயிருந்தது.."

"என்னடி புதிர் போடற..?"

"ஆமாம்மா.. காலையிலே கொரியர வாங்கினவுடனே தோட்டத்துக்குப் போனேனா..?"

"போன.."

"அங்கே ஊஞ்சல் இருந்துச்சா..?"

"இருந்துச்சு இல்ல.. இப்பவும் இருக்குது.."

"ஊஞ்சல்ல உட்கார்ந்து ஆடினேனா..?"

"ஆடின.. அதுக்கென்னடி இப்ப.. உன்கூட.. இந்தக் கடிதமும் உட்கார்ந்து ஆடுச்சா..?"

எரிச்சலுடன் கேட்ட அனுராதாவிடம் "ஆமாம்" என்றாள் யாமினி..

"பக்கத்தில இந்தக் கடிதத்த வைச்சதை மறந்து போயிட்டு ஊஞ்சலாடினேன்ம்மா.."

"அடிப்பாவி..! அப்புறம் என்ன ஆச்சு..?"

"அப்பா வந்தாரா..? அவர்கூட வீட்டுக்குள்ள வந்துட்டேன்.."

"அப்பவும் கடிதத்த எடுத்துக்கிட்டு வரலையா..?"

"இல்லேம்மா.." கைகளை விரித்தாள் யாமினி..

இப்படி ஒரு மகளைப் பெற்று விட்டோமே என்று நொந்து நூலாகி விட்டாள் அனுராதா..

“அப்பாகூட சாப்பிட்டேனா.. அதுக்கப்புறமா கடைக்குப் போயிட்டேன்ம்மா..” கதை சொன்னாள் யாமினி..

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு.. பல்லைக் கடித்து தன்னைச் சமாளித்தபடி மகளிடம் தொடர்ந்து விசாரித்தாள் அனுராதா..

“கடைக்குப் போனவ திரும்பி வந்தப்ப.. ஊஞ்சல்ல இந்தக் கடிதம் இருந்ததைப் பாத்து எடுத்துட்டு வந்தியா..?”

“அதுவும் இல்லேம்மா.. நான்.. நேரா வீட்டுக்குள்ள வந்திட்டேன்..”

“வேற எப்பத்தாண்டி எடுத்த..?”

“இப்ப.. யதுவுக்காக கேட்டைத் திறக்கப் போனேன்ல்ல.. அப்ப இந்தக் கடிதம் காத்தில பறந்து வந்து விழுந்துச்சு..”

கதையைக் கேட்ட அனுராதா..

“கடவுளே..!” என்று தலையில் கை வைத்தாள்..

அப்படி வெளிப்படையாக கடவுளை அழைக்க முடியாத பிரதாப்.. ஆற்றாமையுடன் மகளைப் பார்த்தார்..

“எனக்கு வந்து இப்படியாப்பட்ட மகளா பிறக்கனும்..? வெளியே அடிக்கிற மழையைப் பாத்தியாடா யது..! இந்தக் கடிகதம் இவ கையில தானா வந்து சேராம இருந்தா என்ன ஆகியிருக்கும்..?”

'தானா வந்து..'

அனுராதாவின் வார்த்தைகளில் யாமினியின் உடல் குலுங்கியது.. அவள் பயத்துடன் கடிதத்தைப் பார்த்தாள்.. அதே பயம் பிரதாப்பின் மனதிலும் வந்ததில்.. அவர்..

"விடுடி.." என்று அனுராதாவைப் பார்த்து அதட்டினார்..

அவள் உதட்டைக் கடித்தபடி கணவரின் பார்வையை சந்தித்தாள்.. அவரது விழிகளில் தெரிந்த எச்சரிக்கையில் பெருமூச்சு விட்டவள்..

"அது என்ன கடிதம்ன்னு பாருடா யது..! முக்கியமான கடிதமா இருந்து தொலைக்கப் போகுது.. இவ படுத்தற பாட்டைப் பத்திப் பேசினா இன்னைக்குப் பூராவும் பேசிக்கிட்டே இருக்க வேண்டியதுதான்.. தீரவே தீராது.." என்று சொன்னாள்..

"அதைச் சொல்லுங்க.. இவதான் பொழுது விடிஞ்சு பொழுது போகிற வரைக்கும் எல்லாத்தையும் தலையாலே தண்ணி குடிக்க வைக்கிறாளே.."

தோள்களைக் குலுக்கி அலுத்துக் கொண்ட யதுநந்தன் கையில் இருந்த கடிதத்தைப் பார்த்தான்..

"இவ பேருக்குத்தான் வந்திருக்கும்மா.." என்றான்..

"பிரிச்சுப்படி.." என்றாள் அனுராதா..

"அது டீஸன்ஸி இல்லேம்மா.." என்றான் யதுநந்தன்..

"டேய் அண்ணா..! சும்மா ஃபிலிம் காட்டாதே.. அது ஒன்னும் லவ் லெட்டர் இல்ல.." எரிச்சல்பட்டாள் யாமினி..

"உன்னை லவ் பண்ண.. 'துணிவே துணை'ன்னு இருக்கிறவன்தான் வந்து சேரனும்.. அந்த சந்தேக மெல்லாம் எனக்கு இல்லே.." மிதப்பாகச் சொன்னான் யதுநந்தன்..

"உனக்கும் அப்படித்தான்.. ஆகாயத்தில் தொட்டில் கட்டற மங்கை ஒருத்தி வந்து சேருவா.. சும்மா அலட்டிக்காம லெட்டரைப் பாரு.." பதிலடி கொடுத்தாள் யாமினி..

"உனக்கு வந்த லெட்ரைப் படிச்சுட்டாலும்.." முணுமுணுப்புடன் லெட்டரைப் பிரித்துப் படித்தான் யதுநந்தன்..

"என்னடா எழுதியிருக்கு.. இவ மெகாலுப் பிடிச்ச தனமா யார் வீட்டு கண்ணாடி ஜன்னலையாவது கல்லை எறிஞ்சு உடைச்சு வைச்சிட்டாளா..? அவங்க நஷ்டஈடு கேட்டு லெட்டர் அனுப்பியிருக்காங்களா..?"

அனுராதா அநியாயத்துக்கும் கவலைப் பட்டதில் பிரதாப்புக்கு வெறி வெறியாக வந்தது..

"அப்படி எம்புட்டு நஷ் ஈட்டை நீ கொடுத்திருக்க.." என்று அவர் மனைவியிடம் உஷ்ணமானார்..

"இதைப் பாருடா.."

யதுநந்தனின் ஆச்சரியக் கூவலில் கணவன் மனைவியின் கனல் வீசும் மோதல் தேங்கி நின்றது..

"என்னடா யது..?"

"ம்மா..! என்னால நம்பவே முடியலைம்மா.."

"எதைடா.."

"இவளுக்குப் போயி வேலை கிடைச்சிருக்கும்மா.. இது அப்பாயிண்ட்மென்ட் ஆர்டர்.."

"என்னது..?"

அனுராதா ஆச்சரியப்பட.. பிரதாப்பின் மனம் நிம்மதி கொண்டது.. இலக்கில்லாமல் சுற்றிக் கொண்டிருக்கும் யாமினியின் மீது ஒரு த்ளை விழுவதில் அவர் நிம்மதி கொண்டார்.. யாமினியினி விழிகளில்..

'எப்படி இது நடந்தது..?' என்ற கேள்வி வந்தது..

அவளுக்கு வேலை கிடைத்திருக்கிறதா..?

"இவளுக்கு எவன்டா வேலை கொடுத்திருக்கான்..?"

முகவாயில் கை வைத்து அதிசயப் பட்டுப் போன மனைவியின் முதுகில் நான்கு மொத்துக்களை வைத்தால் என்ன என்ற கோபம் வந்தது பிரதாப்புக்கு.. யதுநந்தனோ..

"எவனோ ஒரு கேணைம்மா.. பாவம்.." என்று பரிதாபப் பட்டு.. பிரதாப்பின் வெறியை அதிகரித்து வைத்தான்..

"யாருன்னு பாருடா.."

"பாத்துட்டாப் போச்சு.."

யதுநந்தன் அனுப்பியது யார் என்று முகவரியைப் பார்க்க.. அதை அறிந்து வைத்திருந்த யாமினியின் மனம் உலைக்களனாக உணர்வுகளின் ஆளுகையில் கொதித்தது..

"ம்மா.."

ஆச்சரியங்களின் மொத்தக் கலவையாக யதுநந்தன் கூவினான்.. அதில் பரபரத்துப் போனாள் அனுராதா..

"என்னடா யது..?"

ஊர்வம்பைக் கேட்கும் பாவனையில் அவள் கூவியதில் பிரதாப் அவளை முறைத்தார்.. அவள் அதை சட்டைசெய்யாமல் மகன் என்ன சொல்லப் போகிறான் என்ற ஆவலுடன் அவன் முகம் பார்த்தாள்..

"ஏய்ய்..! இவ நம்ம பொண்ணுடி.." பிரதாப் தலையில் அடித்துக் கொண்டார்..

"அதுக்கென்ன இப்ப..? நீ சொல்லுடா யது.."

"இட்'ஸ் எ மெடிகல் மிராக்கிள்..!"

"என்னன்னுதான் சொல்லேண்டா.."

"என்னால நம்பவே முடியலைம்மா.."

"எதைடா நம்ப முடியலை.."

"அந்தக் கம்பெனியா இவளுக்கு வேலை கொடுத்திருக்கு..? ஐ கான்ட் பிலிவ் திஸ்.."

“எந்தக் கம்பெனிடா..?”

“தி கிரேட் சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிம்மா..”

“டேய்.. நிசமாவா சொல்ற..?”

“நான் ஏம்மா பொய் சொல்லப் போறேன்..? அந்தக் கம்பெனி அட்ரஸ்தான் ஃபிரம் அட்ரஸா இருக்குது..”

“ஃபிரம் அட்ரஸ் சரி.. டு அட்ரஸ் யார் பேருக்கு இருக்கு..”

“ஏம்மா.. இப்பத்தானே லெட்டர் இவ பேருக்கு வந்திருக்குன்னு சொன்னேன்.. என்ன ஆச்சு..? இவ காத்து உங்க மேலேயும் அடிச்சிருச்சா..?”

“என்னவோ போடா யது..! இன்னும் என்னால இதை நம்பவே முடியலை..”

“எனக்கும்தான் முடியலை..”

“எதுக்கும் நான் வலிக்குதான்னு கிள்ளிப் பாத்துக்கறேன்..”

அனுராதா கிள்ளியது தன்னையல்ல.. பிரதாப்பை..

“ஸ்ஆ.. பிசாசே..! ஏண்டி கிள்ளறே..?” என்று அவர் அலறியதில்..

“இது கனவில்லடா யது.. நனவுதான்..” என்று அவள் உறுதிபடுத்திக் கொண்டாள்..

“ஆஹா..! உங்களோட அறிவே அறிவு..!” மனம் விட்டுப் பாராட்டினான் யதுநந்தன்..

"உனக்குத் தெரியறது மத்தவங்களுக்குத் தெரியலையே.. அவங்களுக்கு.. எதிர்வீடும்.. பக்கத்து வீடும்தானே தெரியுது.."

அனுராதா பெருமூச்சு விட்டதில் அவள் கிள்ளியதின் வலி மறந்து போனவராக அரண்டு போனார் பிரதாப்..

"ஏண்டா யது..? அந்தக் கம்பெனிக்கு என்ன மறை கழண்டு போச்சா..? எம்மாம் பெரிய கம்பெனி அது.. அதுல போயி இவளுக்கு வேலை கொடுத்திருக்காங்களா..? ஏண்டா இப்படி..?"

"என்னம்மா செய்யறது..? அவன் யோகம் அப்படி.."

"இதுவரைக்கும் அந்தக் கம்பெனி உச்சத்தில் இருக்குது.."

"இவ போய் சேர்ந்த பின்னால என்ன கதிக்கு ஆளாகப் போறாளோ.."

"விடுடா.. அவன் விதி அதுன்னா யாரு என்ன செய்ய முடியும்..?"

அனுராதா விளையாட்டாக சொன்னதில் யாமினியின் மனம் அதிர்ந்தது..

6

எவரென்று உரைக்காமல்.. என்னகத்தை திருடிவிட்டான்..

வசுந்தராதேவியின் படபடத்த பார்வையில் எதைக் கண்டானோ.. அந்த வீரனின் விழிகளில் மின்னல் வந்தது.. தீட்சண்யம் மிக்க விழிகள் கொண்ட மின்னலில் வசுந்தரா தேவி இன்னமும் அதிகமாக தடுமாறிப் போனாள்..

அவள் முன்பு அவன் மண்டியிட்டுக் குனிந்தான்.. அத்துனை அருகாமையில் அவன் அருகில் வருவானென்று எண்ணியும் பார்த்திராத வசுந்தரா பதட்டம் கொண்டவளாக பின்னே நகர்ந்தாள்.. அதில் குருதி வழிந்து கொண்டிருந்த பாதம் வேதனை கொண்டதில் வதனம் சுளித்து..

“அம்மா..” என்று முணுமுணுத்தாள்..

“ஏன் நகர்கிறாய்..?”

என்னவோ காலம்.. காலமாக பழகியவனைப் போல அவன் வெகு இலகுவாக வினவி வைத்தான்.. அத்துடன் நில்லாமல் அவளது குருதி கொட்டிய பாதத்தை ஸ்பரிசிக்கவும் முனைந்தான்..

“வேண்டாம்..”

அவசரமாக தடுத்தாள் வசுந்தரா.. அவளது பதட்டத்தில் அவனது புருவங்கள் ஏறி இறங்கின..

"ஏன்..?" அவளது மறுப்பை குறை கூறுவதைப் போல அவன் இதழ்கள் ஆட்சேபமாக வளைந்தன..

"எனது பாதத்தை நான் கவனித்துக் கொள்வேன்.. தங்களுக்கு சிரமம் வேண்டாம்.."

இதைக் கூறுவதற்குள் வசுந்தராதேவி திணறிப் போனாள்.. அவனை நிமிர்ந்து நோக்க இயலாமல் நாணத்துடன் சிரம் கவிழ்ந்திருந்தவளின் படபடத்த இமைகளின் எழில் வடிவம் அவனைக் கவர்ந்து ஈர்த்தது..

"எனக்குச் சிரமமென்று எவர் உரைத்தது..? ம்ம்ம்..?"

மீண்டும் அவனது புருவங்கள் ஏறி இறங்கியதில் அவள் பேச மறந்தாள்.. சுவாசத் திணறலுடன் கானகத்தின் தரையில் புதையல் கிட்டுமா என்று துழாவுகிறவளைப் போல அவள் சிரம் கவிழ்ந்திருந்ததை ரசித்து அவன் நகைத்தான்..

அந்த நகைப்பில் அவளது இதயம் சிலிர்த்தது.. ஏதோ ஓர்வகையான உணர்வு அவளை ஆட் கொண்டது.. அதுதினம் வரை உணராத புதுவகையான ஓர் உணர்வை உணர்ந்தாள் வசுந்தரா... அவனது மிடுக்கு நிரம்பிய வினவுதலில் அவளது உள்ளம் கொள்ளை போவதை அச்சத்துடன் உணர்ந்தாள் அவள்..

அவன் உரையாடலைத் தொடர்ந்து அவளை சோதித்து வைத்தான்..

"நான் உரைத்தேனா..? ம்ம்ம்..?"

அதற்கு மேலும் மௌனம் சாதிக்க இயலாமல் வசுந்தரா வாய் திறந்தாள்.. இதழை அசைத்தவளுக்கு வார்த்தைகள் வெளிவரவில்லை.. அதுபோல பேசா மடந்தையாக ஓர்தினமும் அவள் இருந்ததில்லை..

அவனும் அதையே உரைத்தான்..

"என்ன..? எனது வினாவிற்கு யாதொரு விடையும் கிட்டவில்லையே.. தாம் பேசாமடந்தையோ..?"

'பேசாமடந்தையா..? யாமா..?'

இவ்வார்த்தைகளை அங்கயற்கண்ணி செவி மடுக்காமல் போய் விட்டாளே என்றிருந்தது வசுந்தரா தேவிக்கு..

"அவனியிலே பிறந்து வளரும் பெண்பிள்ளைகள் அனைவரும் உன்னைப் போலதான் உள்ளனரா..? ஓர் வார்தை வினவி விட்டால்.. ஒரு கோடி வார்த்தைகளைக் கொண்டு ஓர்தினம் முழுவதும் இடைவிடாமல் பேசும் கலையை எங்கே நீ கற்றாய்..? உனது திருவாய் நோகாதா..? அப்பப்பா..! பெண்ணாகப் பிறந்தவளுக்கு இத்துணை வாய் இருக்கக் கூடாது.. பேசிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற வரம் வாங்கிப் பிறந்து வந்துள்ளாயா..?"

இவ்வாறு வசுந்தராவைப் பெற்ற அங்கயற்கண்ணி அனுதினமும் அங்கலாய்ப்பதை இவன் அறிவானா என்ற நினைவில் வசுந்தராதேவிக்கு நகைப்பு வந்து தொலைத்தது..

நகைக்கும் அவளது நாணம் ததும்பிய விழிகளைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை அவனுக்கு..

அவள் போன்ற யௌவன மங்கையை அன்றுதான் அவன் கண்ணுற்றிருப்பதைப் போல இமைக்காமல் அவளை வியப்புடன் நோக்கினான் அவ்வீரன்..

"நகைக்க விழைந்தால் நகைத்து விடலாமே.. அதையும் தடுக்க வேண்டுமா..? பேசத்தான் கூடாது.. நகைக்கவுமா கூடாது..? ம்ம்ம்..?"

அவனது வசீகரிக்கும் புருவ உயர்த்துதலுடன் அவன் அவளது பாதங்களைப் பற்றினான்.. அவள் பதட்டத்துடன் பாதங்களை இழுத்துக் கொண்டாள்..

"வேண்டாம் என்றேனே.."

"ஏன் வேண்டாம் என்கிறாய் என்று நானும் வினவி வைத்தேனே.."

"தங்களுக்கு சிரமம் வேண்டாம் என்றேனே.."

"அவ்வாறு எவர் உரைத்தது என்று வினவி வைத்தேனே.."

"எருவம் உரைத்தால்தானா..? எமக்கே அது தெரியுமே.."

"என்ன தெரியும்..? ம்ம்ம்..?"

அவனது வசீகரமான புருவ உயர்த்துதல் அவளை முற்றுகையிட்டது.. வசுந்தராதேவியின் கன்னி மனம் அதில்

சிறைபட்டு விடாமலிருக்க பகீரத பிரயத்தனங்களை மேற்கொண்டது..

அவனது வதனத்தை நோக்கினால்தானே வம்பு என்று அவனது வதனத்தை நோக்காமல் வேறு திக்கில் நோக்கியபடி பேசலானாள் வசுந்தரா.. அதை கண்டு கொண்ட கள்ள நகைப்பு அவனது இதழ்களில் உதித்து அவளை இம்சித்தது..

'இந்தப் பாடு படுத்துகிறானே.. எவன் இவன்..?'

முற்றுகை வலுப்பதை உணர்ந்தவளாக இதழ்களை பற்களால் அழுத்தினாள் வசுந்தரா.. அதற்கும் அவன் குறுநகை புரிந்ததில் அவளுக்கு கூந்தலைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது..

"ஐயா...!"

அவளது மரியாதையான அழைப்பில் அவன் சுற்று முற்றும் பார்வையை ஓட விட்டான்..

'இது வேறா..?' அவளது வதனம் செவ்வானமாக சிவந்தது..

"எவரை விளிக்கிறாய்..?" அறியாப்பிள்ளை போல அவன் வினவி வைத்து வசுந்தராதேவியின் இதயத் துடிப்பை அதிகப் படுத்தினான்..

"இவ் வனாந்திரத்தில் உங்களையும்.. என்னையும் தவிர வேறு எவரும் உள்ளனரா..?" அவள் பற்கறை நறநறத்தாள்..

“எவருக்குத் தெரியும்..?” லேசான நெற்றிச் சுருக்கங்களோடு அவன் கூறினான்.. அதில் அவளுக்கு அச்சம் மேலிட்டது..

“என்ன..? இங்கு தாமும்.. யாமும்.. மட்டும்தானே உள்ளோம்..? எம்மை துரத்தி வந்த மாலிக்காபூரின் படைவீரர்கள் வீரபாகுவை துரத்திக் கொண்டு சென்று விட்டார்களே.. அவர்கள் மீண்டும் வர வாய்ப்பில்லையே..”

தன்னையும் அறியாமல் அவனருகில் ஒன்றியபடி அச்சத்துடன் பார்வையை சுழல விட்டவள் உரைத்த உரையில் அவ்வீரனின் வதனத்தில் சினம் உதயமானது..

“என்ன..? உன்னை மாலிக்காபூரின் படைவீரர்கள் துரத்தி வந்தனரா..?”

“ஆம்..”

“நீ தனியாகவா அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டாய்..?”

“அல்ல ஐயா..”

“இந்த ஐயாவை தவிர்த்து விடுவது உசிதமானது பெண்ணே..”

“ஏன்..?”

“ஏனென்றால்.. ‘ஐயா’ என்ற அழைப்பை செவி மடுத்தால் எனக்கு வேப்பங்காயை உண்ணுவதைப் போல உள்ளது..”

"வேறு எவ்விதம் தங்களை அழைப்பது..? அறியாத ஆண்களை 'ஐயா' என்று அழைத்துத்தான் எனக்குப் வழக்கம்.."

"வழக்கத்தை மாற்று.."

"எதன்பொருட்டு மாற்ற வேண்டும்..?"

"என் பொருட்டு.."

அழுத்தம் திருத்தமாக ஆணையிடுவதைப் போல அவ்வார்த்தையை உச்சரித்தான் அவன்.. அதில் தொனித்த கம்பீரத்தில்..

'அடேங்கப்பா.. அதிகாரம் கொடி கட்டிப் பறக்கின்றது..' என்று எண்ணிக் கொண்டாள் வசுந்தரா தேவி..

"எமக்கு ஆக்ஞை பிறப்பிக்க தாம் யார்..?" அவள் வெகுண்டாள்..

"ஆக்ஞை பிறப்பிக்க யாராகவும் இருக்க வேண்டுமோ..?"

அவளது சினத்தை சிறுமழலையின் சினம் போல புறம் தள்ளிவிட்டு மாலிக்காபூரின் படைவீரர்களைப் பற்றி விசாரிக்கலானான் அவன்..

"நீ யார் பெண்ணே..?"

"அதைத்தான் தாமே உரைத்து விட்டீரே.."

"என்னவென்று உரைத்தேன்..?"

"யாம் பெண்ணென்று உரைக்கவில்லையா..?"

"நகைச்சுவை..? ஆயினும் பார் பெண்ணே.. நகைப்புத்தான் வர மறுக்கிறது.. இது போன்ற சூழலில் தாம் நகைச்சுவையைத் தவிர்ப்பது நலம் பயக்கும்..?"

"எவருக்கு..?"

"தமக்கு.."

கண்டிப்புடன் அவன் உரைத்தான்.. வசுந்தராதேவி சிலநொடிகள் மௌனம் சாதித்தாள்.. பின்னர்..

"நான் வசுந்தராதேவி..!" என்றாள்..

"ஓ..! தாம் எந்த தேசத்தின் மகாராணி..?"

அவனது கேலியான வினவுவதில் அவளுக்கு சினம் துளிர்த்தது..

"எம் இல்லத்திற்கு யாம்தான் இளவரசியென்று எமது தந்தையார் கூறுவார்.." என்று படபடத்தாள்..

"இருக்கட்டும்.. இருக்கட்டும்.." தாராள மனதுடன் அவன் அதை அனுமதித்ததில் அவளது சினம் மிகுதியானது..

"என்னவோ.. தமது அனுமதிக்காகத்தான் யாம் காத்திருந்ததைப் போல கூறி வைக்கிறீர்களே.. தமது அனுமதியை எவரும் இங்கு வேண்டி நிற்கவில்லை.."

"அவ்வாறா..? ஹா.. ஹா.."

உரத்து அவன் நகைத்ததில் தெரிந்த பல்வரிசையின் கவர்ச்சி அவளது மனதை மயக்கி மாயம் செய்தது..

'இவன்தான் எத்துனை எழில் கொண்டவனாக உள்ளான்..?'

மனதில் எழுந்த நினைவை அழித்து விட்டு அவள் வேறு திக்கில் நோக்கியபடி..

"நகைத்தது போதும்.." என்று சிடுசிடுத்தாள்..

"யாதடா இது..? காஞ்சி மாநகரத்தின் எல்லைக்குள் நகைக்கவும் தடை உள்ளதோ..?" அவன் மேலும் நகைத்தான்..

அவனது நகைப்பில் கடுப்புற்ற வசுந்தராதேவிக்கு பதிலுக்குத் தாக்குதல் நடத்த வேண்டுமென்ற உத்வேசம் உண்டானது.

"ஐயா.." என்றாள்..

அவளது கணிப்புத் தவறவில்லை.. அவளது நகைப்பு நின்றது.. விளக்கெண்ணையைப் பருக நேர்ந்து விட்டவனைப் போல வதனத்தை வைத்தபடி சிடுசிடுத்தான்..

"அவ்வாறு அழைக்காதே.."

"ஏன்..?"

"ஏனென்பதை அறிய மாட்டாயா..?"

"அதை அறிவேன்.. ஆனால் எதன் பொருட்டு தாம் எம்மை எத்தேசத்தின் மகாராணி என்று வினவினீர்கள் என்பதை அறியேன்.."

"ஓ..! அதற்குத்தான் இந்தப் பழிவாங்கலா..?"

“ஆம் என்று எடுத்துக் கொள்ளுங்களேன்..”

“எவரை எடுத்துக் கொள்ள..? உன்னை எடுத்துக் கொள்ளவா..?”

அவனது வினாவில் அவள் சுவாசம் திணறிப் போனாள்.. அது போல அவன் வினவி வைக்கக் கூடும் என்ற எண்ணமில்லாமல் இலகுவாக உரையாடிக் கொண்டிருந்தவளின் பேச்சு நின்று விட்டது..

“யாது உரைத்தீர்..?”

அவளது சினத்தில் அவன் உரக்க நகைத்து வைத்தான்..

“விளையாட்டுக்கு உரைத்தேன்..”

அவனது சமாதான உரையில்..

‘அவ்வளவுதானா..?’ என்ற ஏக்கம் அவள் மனதில் உருவாகித் தொலைத்ததில் அவள் அதிர்ச்சி கொண்டாள்.

“இது நகைச்சுவைக்கான சூழல் அல்ல என்று என்னிடம் தாங்கள் உரைத்ததாக நினைவு..”

“மெய்தான்..”

“விளையாட்டுக்கு மட்டும் இது ஏற்ற சூழலா..?”

“தவறுதான்..”

அவன் தணிந்து போனதில் அடுத்து என்ன வினவுவது என்று அறியாமல் பாதங்களை நகர்த்திய வசுந்தரா..

“ஆ..” என்று வேதனையுடன் அரற்றினாள்..

அவனுடன் உரையாடிக் கொண்டிருந்ததில் மறக்கப் பட்டிருந்த வலி.. 'நான் உள்ளேன் அம்மா..' என்று நினைவு படுத்தி ரண வேதனையை அளித்தது..

"பாதங்களை நகர்த்தாதே.."

அவன் குனிந்து அவளது பாதங்களை பற்ற முயல.. அவள்..

"வேண்டாம்.." என்று பாதங்களை இழுத்துக் கொள்ளப் போனாள்..

"ம்ப்ச்.." அவன் அதட்டி விட்டு பிடிவாதமாக அவள் இழுத்துக் கொள்ள முயன்ற பாதங்களைப் பற்றி பரிசோதித்தான்..

மென்மையான அவளது பாதங்களைக் கண்ணுற்றவன்..

"மிதியடி எங்கே..?" என்று வினவினான்..

"தப்பிக்கும் அவசரத்தில் ரதத்திலேயே விட்டு விட்டேன்.." வலியின் வேதனையுடன் அவள் கூறினாள்..

"கூரிய கற்கள்.. கத்தி முனையைப் போன்றவை.. வனத்தில் உள்ள முள்கள்.. வாள் முனையை விட வலிமை கொண்டவை.. இவற்றின் மீது.. மிதியடிகள் இன்றி.. மென்மையான பாதங்களுடன் ஓடியதின் விளைவுதான் இது.."

அவன் விலகி எழுந்து நடந்தான்..

'விட்டு விட்டுப் போகிறானோ...'

பதைத்துப் போனாள் வசுந்தராதேவி.. அது நாழிகை வரை அவளிடம் ஒட்டிக் கொண்டிருந்த தைரியம் விடைபெற்று ஓடோடிச் சென்று விட்டது.. அவனிடம் வாயாடிய நாவு உலர்ந்து போக.. அவள் மிரட்சியுடன் சுற்று முற்றும் நோக்கினாள்..

'போகாதே..'

தொண்டையை விட்டு வெளிப்படாத வார்த்தை யுடன் அவள் தவித்துக் கொண்டிருந்த போது.. அவன் புரவியின் மீது தொங்க விடப்பட்டிருந்த பையிலிருந்து தண்ணீர் குடுவையை வெளியே கொணர்ந்தான்.. அவளருகில் அவன் திரும்பி வந்ததும் அவளது தவிப்பு மறைந்தது.. சுவாசம் சீரானது.. நன்றியுடன் அவனைப் பார்த்தாள்..

அவளது பார்வையைச் சந்தித்த அவனது பார்வையில் காருண்யம் வந்தது.. அவளுக்கு தைரியம் அளிக்கும் வகையில் அவன் புன்முறுவல் பூத்தபடி அவளது பாதங்களைப் பற்றினான்.. இம்முறை மறுப்பேதும் கூறாமல் அவள் பாதங்களை நீட்டியதில் அவனது பார்வையில் பிரதிபலித்த காருண்யம் மிகுந்தது..

பாதங்களை தனது கையிலிருந்த தண்ணீர் குடுவையிலிருந்த தண்ணீரால் கழுவியவன் அடுத்துச் செய்த காரியம் அவளை அதிர்ச்சியில் ஆழ்த்தியது..

தனது மார்பைப் போர்த்தியிருந்த பட்டு அங்கவஸ்திரத்தை இழுத்து.. அதைக் கொண்டு அவளது பாதங்களைத் துடைக்க ஆரம்பித்தான் அவன்..

"என்ன காரியம் புரிகிறீர்கள்..?"

வசுந்தரா பதறினாள்.. அவனோ எதுவுமே நிகழாததைப் போல புருவங்களை உயர்த்தி..

"ஏன்..? என்ன ஆனது..?" என்று வினவி வைத்தான்..

"தங்களின் அங்கவஸ்திரம் கொண்டு என் பாதங்களைத் துடைப்பதா..?"

"வேறு மார்க்கமில்லையே.. உன் பாதங்களின் காயங்களை ஆராய வேண்டுமெனில்.. அவற்றின் குருதிக் கரையைக் கழுவித் நீர்த்துளிகள் சிறிதளவும் இல்லாமல் ஒற்றி எடுத்தாக வேண்டுமே.."

"அதற்கு தங்களின் வஸ்திரத்தை பயன்படுத்த வேண்டுமா..? எனது சீலையின் முந்தானையைக் கொண்டு நீர்த்துளிகளை ஒற்றி எடுத்திருக்கலாமே.."

சங்கடம் கொண்டவளை உற்று நோக்கியவனின் பார்வையில் ஏதோ பொதிந்திருக்க... அது யாதாக இருக்கக்கூடும் என்று குழம்பிப் போனாள் வசுந்தராதேவி..

எவ்வளவுதான் சிகையைப் பிய்த்தெரிந்து சிந்தித்தாலும் அவனது பார்வையிலே மறைந்திருக்கும் மர்மத்தை அவளால் கண்டுணர முடியாததினால்.. அவனிடமே..

"என்ன..?" என்று வினவவும் செய்தாள்..

"எனது அங்கவஸ்திரத்தை நான் ஸ்பரிசிக்கலாம்.. உனது சீலையின் முந்தானையை ஸ்பரிசிக்க இயலுமா..?"

நிதானமாக அவன் வினவியதில் அவளது வதனத்தில் 'குப்' பென்று நாணம் மேவி சிவந்து போனது..

'ஓ..! இதில் இது வேறு உள்ளதோ..'

அவளுக்குப் பேச 'நா' எழும்பவில்லை.. அவளது நாணத்தை அவன் வெகு சுவராஸ்யமாக பார்வையிட ஆரம்பித்ததில் அவளது நாணம் மிகுதியானது..

'இவன் சும்மாவே ஒரு மார்க்கமாக பார்வையிட்டு வைப்பான்.. இப்போது காரணமும் கிட்டி விட்டதல்லவா.. பல மார்க்கமாக பார்வையிடத்தானே செய்வான்..?'

அவள் இதழ்களை மடித்துக் கடித்த வண்ணம் நிலைமையைச் சமாளிக்க முயன்றாள்..

"அது.. அது.. வந்து.." தடுமாறினாள்..

"எது வருகை தர யத்தனிக்கிறது..?" அவன் அதற்கும் கேலி செய்தான்..

"எனது சீலையின் முந்தானையை தாங்கள் எதற்காக ஸ்பரிசிக்க வேண்டும்..?"

அவன் வதனம் நோக்கினால்தானே வார்த்தைகள் வெளிவராமல் திணறி வைக்கும் என்று அவள் அவன் வதனம் பாராமல் படபடவென்று கூறி வைத்தாள்..

"ஊம்..?" அவன் அதற்கும் அமர்த்தலாக புருவங்களை உயர்த்தி வைத்தான்..

"தற்போது என்னவாம்..?" எரிச்சலோடு வினவி வைத்தாள் வசுந்தராதேவி..

"என்னவோ உனது சீலையின் முந்தானையை நான் ஸ்பரிசிக்க விரும்பி வேண்டியதைப் போல வினவி வைக்கிறாயே..?"

அவளது வினாவில் பொதிந்திருந்த அபத்தத்தை அவன் தெளிவு படுத்தினான்.. அவளின் வதனச் சிகப்பு மிகுதியானது..

'எந்தப் புறமிருந்து அம்பு வீசினாலும் எளிதாக எதிர் கொண்டு எனது நாசியை பதம் பார்த்து விடுகிறானே..'

அவளுக்கு அருகில் இருந்த மரத்தில் சிரத்தை மோதிக் கொள்ளலாம் போல இருந்தது..

"அவ்வாறு எவர் உரைத்தது..?" மிளகாயின் காரத்தோடு வினவி வைத்தாள்..

"அவ்வாறா..? நீ அவ்வாறு உரைக்கவில்லையா..?"

அவனா மிளகாயின் காரத்துக்கு அஞ்சுவான்..? அம்மிளகாயின் காரத்திலும் வெல்லம் சேர்த்து அவள் புறமாக வீசி வைத்தான்..

"அவ்வாறு ஒன்றும் உரைக்கவில்லை.. எனது சீலையின் முந்தானையைக் கொண்டு.. எனது பாதங்களின் நீர்த்துளிகளை நான் ஒற்றி எடுத்திருப்பேன் என்றுதான் உரைக்க முனைந்தேன்.."

"ஓ..."

"அதற்குள் தாங்கள் அவசரம் கொண்டு ஏதேதோ உரைத்து விட்டீர்கள்.."

அவளது குற்றச்சாட்டில் அவன் இளநகை கொண்டான்..

"ஏதேதோ உரைத்தேனா..? அவ்விதம் எதையெதை உரைத்தேன்..?" என்று வினவவும் செய்தான்..

மறுபடியும் அவளது சீலை முந்தானையைப் பற்றிய உரையை அவன் செவி மடுக்க முனைவதை புரிந்து கொண்டவளாக அவள் வதனம் சிவக்க பேச்சை நிறுத்திக் கொள்ள.. அவன் மெலிதான நகைப்புடன் அவளது பாதங்களை ஆராய்ந்தான்..

"முள்கள் செறுகியுள்ளன.."

குறும்பு மறைந்த தீவிரமான வதனத்துடன் கூறியவன்.. அருகிலிருந்து முள்ளைக் கரத்தில் எடுத்தான்.. அவன் என்ன செய்யப் போகிறான் என்பதை வசுந்தரா உணரும் முன்பு அவளது பாதங்களை ஏந்தி தனது மடியில் கிடத்திவிட்டான்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



6

உன்னை நான் கண்டது..
விதி வகுத்த விதியாலா..?

'விதி..!'

யாமினி உள்ளம் அதிர யதுநந்தனின் கையிலிருந்த அப்பாயின்ட்மெண்ட் ஆர்டரைப் பார்த்தாள்..

அவளது மனம் படபடத்து ஆடியதைப் போல.. கடிதமும் படபடத்து ஆடி வைத்தது.. அதை உணராத யதுநந்தன்..

"உன்னையும் நம்பி ஒரு பெரிய கம்பெனி வேலை கொடுத்திருக்குங்கிற ஷாக்கில இருந்து வெளியே வரவே முடியலை போ.." என்று அலுத்துக் கொண்டான்..

"ஏண்டா..? என் பெண்ணுக்கென்ன..? இவ அறிவுக்கும் திறமைக்கும் ஓஹோன்னு வருவா பாரு.." பிரதாப் மகளின் தலை கோதினார்..

"வந்தாச் சரிதான்.." யதுநந்தன் யாமினியிடம் கடிதத்தை நீட்டினான்..

அதைத் கைநீட்டி வாங்கிக் கொண்ட யாமினியின் உடலில் மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற உணர்வு ஏற்பட்டது.. விரல்கள் நடுங்க.. அந்தக் கவரைப் பிரித்துப் படித்தாள்..

யதுநந்தன் சொன்னது உண்மையாக இருந்தது.. சித்தார்த் குரூப் ஆஃப் கம்பெனியில் அவளுக்கு எம்.டியின் பெர்சனல் செக்கரட்டரியாக வேலை கொடுக்கப் பட்டிருந்தது..

யாமினியின் புருவங்கள் வளைந்து.. நெளிந்து யோசித்தன.. அவள் மனதில் எச்சரிக்கை உணர்வுடன் கூடிய தாமோதரனின் முகம் வந்தது..

'எப்படி இந்த வேலையை எனக்கு கொடுக்க விட்டான்..?'

இண்டர்வியூ சமயத்தில் அவளுடன் சித்தார்த்தன் பேசி விடக்கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டு அவனைத் தடுத்த தாமோதரனின் நினைவில் நெற்றியில் ஒற்றை விரலால் தட்டியபடி யோசித்தாள் யாமினி..

"ரொம்பத் தட்டாதே.. ஓட்டை விழுந்திரப் போகுது.." கிண்டலுடன் சொன்னான் யதுநந்தன்..

"இவ எதுக்குடா இந்த அளவுக்கு யோசிக்கிறா..?" ஆச்சர்யத்துடன் கேட்டாள் அனுராதா..

"அதானே..? இவளுக்கு வேலை கொடுத்தவனே யோசிக்காம கொடுத்து வைச்சிருக்கான்.. அடிச்சது ஜாக் பாட்டுன்னு இவ ஓடிப்போயி வேலையில ஜாயின் பண்றதை விட்டுட்டு நெத்தியில சுத்தியலால் தட்டிக்கிட்டு இருக்கா.."

யதுநந்தன் சொன்னதில் தூக்கிவாரிப் போட்டவராக மகளைப் பதட்டத்துடன் பார்த்து வைத்தார் பிரதாப்..

"சுத்தியலால தட்டிக்கிட்டு இருக்காளா..?"

அவரின் பதட்டத்தில் அனுராதா தலையில் அடித்துக் கொண்டாள்..

"யாமினி ஒத்தை விரலால நெத்தியில ஓட்டை போட்டுக்கிட்டு இருந்ததைத்தான் இவன் இந்த லட்சணத்தில சொல்லி வைக்கிறான்.."

"அவ்வளவுதானா..? நான் பயந்தே போயிட்டேண்டி அனு.."

"எரிச்சலைக் கிளப்பாதீங்க.. அதுக்காக இப்படியா இவ கையில சுத்தியல் இருக்கான்னு தேடுவீங்க..?"

"ஹி.. ஹி.."

பிரதாப் அசடு வழிய சிரித்ததில் அனுராதா இமைக்காமல் அவரைப் பார்த்து வைத்தாள்..

"தேவையாப்பா..?" என்று கேட்டு வைத்தான் யதுநந்தன்..

"ஹி..ஹி.. இல்லைடா யது.." அவனுக்கு விளக்கம் சொல்ல முயன்றார் பிரதாப்..

"வேண்டாம்ப்பா.. ஆளை விடுங்க.." கறாராக சொல்லி விட்டான் அவன்..

"ஏண்டா..?"

பிரதாப்பின் ஒற்றை வார்த்தைக் கேள்வியில் ஒரு கோடி ஆதங்கங்கள் புதைந்திருந்தன..

"என்னத்த 'ஏண்டா..?' நீங்க சும்மா இருந்தாலாவது அம்மா சமாதானமாகியிருப்பாங்க.. இப்படி சகிக்க மாட்டாம சிரிச்சு வைச்சா இருக்கிற கோபமும் கூடி வைக்காதா..?"

யதுநந்தனின் கேள்வியில்..

'என் சிரிப்பு அம்புட்டு மட்டக் கேவலமாக இருந்து வைச்சுச்சு..?' என்ற கவலையில் ஆழ்ந்தார் பிரதாப்..

அவரது கவலையைக் கண்ட அனுராதாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

"வீட்டுக்கு ஒரு ஆளு போதும்டா யது.. உங்கப்பாவை மககூட கூட்டுச் சேர வேணாம்ன்னு சொல்லி வை.." எரிச்சலாகச் சொன்னாள்..

"மககூட கூட்டுச் சேராம.. வேற யாருகூட கூட்டுச் சேர்றது..?"

இயல்பாக கேட்டபடி யதார்த்தமாக யதுநந்தனை அவர் பார்த்து வைக்க.. அவன்..

"அப்பா வேண்டாம்.." என்றான்..

"எதைடா வேண்டாம்ங்கிற..?"

"உங்க கூட்டைத்தான்.. ஆல்ரெடி அம்மாகூட நான் கூட்டணி போட்டாச்சு.. ஸோ.."

"ஸோ..?"

"உங்க கூட்டணியை யாமினி கூடவே போட்டுக்கங்க.."

இப்படிச் சொல்லும் மகனை நாலு மொத்து மொத்தினால் என்ன என்றிருந்தது பிரதாப்புக்கு.. அது முடியாது என்பதில் அவரது வழக்கமான..

"ஏண்டா..?" என்ற பரிதாபகரமான கேள்வியை கேட்டு வைத்தார்.. அதில் மூட்-அவுட்டாகிப் போன யதுநந்தன்..

"முடியல.. அம்மா.. நைட்டுக்கு டிபன் போடற உத்தேசமிருக்கா இல்லையா..?" என்று அனுராதாவின் பக்கமாக திரும்பி விட்டான்..

"இல்லேன்னா என்னடா செய்வ..?" என்று அனுராதா பதிலுக்கு கேட்டதில் அவள்மீது பொறாமையாகிப் போனார் பிரதாப்..

'இவ மட்டும் எப்புடி இப்புடி டகால்ன்னு பதில் கொடுக்கிறா..? என்னால அது முடிய மாட்டேங்குதே..' புதுக்கவலையில் அவர் ஆழ்ந்து போக..

"ஹீம்.." என்று பெருமூச்சு விட்டாள் அனுராதா..

"என்னம்மா..?"

"என் விதியை நினைச்சுப் பெருமூச்சு விட்டேண்டா.. நீ வா.. சாப்பிடலாம்..."

அனுராதா மகனை அழைத்ததில் பிரதாப்புக்கு பசிவந்து விட்டது..

"நானும் வரட்டுமா அனு..?" என்றார்..

"வாங்க.. கல்லைத் தூக்கிப் போடறேன்.." என்று அவரை அரள வைத்தாள் அவள்..

"என்னது..?! கல்லைத் தூக்கிப் போடப் போறியா..? யார் தலையில..? என் தலையிலயா..?" பிரதாப் அரண்டு போனார்..

அதற்கு அனுராதா எதற்காக அவள் தலையில் அவளே அடித்துக் கொள்கிறாள் என்றுதான் அவருக்கு ஒரு மண்ணும் புரியவில்லை..

"எனக்குன்னு வந்து வாய்ச்சிருக்காரே.. கடவுளே..! அடுப்பில தோசைக் கல்லைத் தூக்கிப் போடப் போறேன்னு

சொன்னா..! இவரு பாட்டுக்கு எதையோ சொல்லி வைக்கிறாரு.. கேட்டயாடா யது..?"

"இந்தக் கொடுமையையெல்லாம் கேக்காம டிபனைக் கொட்டிக்கிட்டு ரூமுக்குள்ள போய் விழுந்துரலாம்ன்னு தான் அடிச்சுக்கிட்டேன்.. எங்கே..? நீங்க காலாகாலத்தில டிபனைக் கண்ணில காட்டினாத்தானே..?"

"அதுக்குத்தானடா கல்லத் தூக்கப் போனேன்..?"

"மறுபடியும் கல்லா..? ம்மா.. நீங்க ஏன் தோசைக் கல்லில இருந்து நான்-ஸ்டிக் வகையறாவுக்கு மாறக் கூடாது..?"

"அதுசரி.. உங்களுக்காக நான் மாறனுமா..? என்ன கழுதைக்கு என்னை மாறச் சொல்ற..? அதுக்குப் பதிலா நீங்க மாறப் பாருங்கடா.."

பொத்தாம் பொதுவில் 'டா..' போட்டுவிட்டு அனுராதா அவளுடைய களமான அடுப்படியை நாடிப் போய் விட்டாள்.. பிரதாப் மகனைப் பார்த்தார்.. பதிலுக்கு அவன் இனம் புரியாத வழக்கமான பார்வையை பார்த்து வைத்து அவரைக் கலங்கடித்தான்.

"ஏண்டா யது.."

"என்னப்பா..?"

"இப்ப உங்க அம்மா 'பாருங்கடா'ன்னு சொல்லிட்டுப் போறாளே.. அதை உன்னை மட்டும்தானே 'மீன்' பண்ணிச் சொல்லிட்டுப் போறா..?"

கிடக்கிறதெல்லாம் கிடக்கட்டும்.. கிழவியைத் தூக்கி மணவறையில் வை என்ற கதையாக.. வீட்டின் அத்தனை நடப்புகளையும் உடப்பினில் போட்டு விட்டு பிரதாப் பட்ட கவலையில்..

“பாவம் எங்கம்மா..” என்றான் யதுநந்தன்..

“யாரு..? உங்கம்மாவா பாவம்..? இத நீ மட்டும் தாண்டா சொல்லி வைப்ப.. எதனால உங்கம்மாவ பாவம் பார்க்கிற..?”

“அவங்க கல்யாண விசயத்தில அவங்களப் பெத்தவங்க அவசரப் பட்டுட்டாங்கன்னு தோணுதுப்பா..”

அமர்த்தலாக வெடி குண்டை வீசி வைப்பதில் யதுநந்தனுக்கு நிகர் அவன் மட்டும்தான்..

“என்னது..???” என்று அதிர்ந்து போன பிரதாப்பை லட்சியமே செய்யாமல்..

“அம்மா..! டிபன் ரெடியா..?” என்று குரல் கொடுத்தபடி டைனிங்ஹாலுக்கு போய் விட்டான்..

‘இவனுக்கு மட்டும் எப்புடி இப்படியாப்பட்ட சிந்தனையா வந்து தொலைக்குது..?’

பிரதாப்புக்கு வந்த பசி ஓடி விட்டது..

7

நாற்புறமும் அகழி சூழ.. நடுவினிலே இரும்புக் கோட்டை..

வசுந்தரா இமைக்க மறந்தாள்.. அவனது மடியினில் அவள் பாதங்கள் கிடத்தப் பட்டுள்ளன என்பதை அவள் மனம் உட்கிரகிக்க சில மணித்துளிகள் தேவைப்பட்டன.. நிகழ்கின்ற சூழலை அவள் மனம் உணர மறந்து உறைந்து விட்டது..

அந்த அளவுக்கு அவளை அதிர்ச்சியில் ஆழ்த்தி யிருக்கும் உணர்வின்றி.. அவளது பாதங்களை இறுக்கிப் பிடித்துக் குனிந்தான் அவ்வீரன்..

"யாது இது..?" வசுந்தரா பதட்டத்துடன் தனது பாதங்களை இழுத்துக் கொள்ள முயன்றாள்..

"ம்ப்ச்.." அவன் அதட்டினான்..

'இவனுக்கு உள்ள துணிவைப் பாரேன்.. எமது பாதங்களை நான் இழுப்பதற்கு என்னையே மிரட்டு கிறானே.. கெட்டிக்காரன்தான்..'

வசுந்தரா.. அவன் சொல்லைப் பொருட் படுத்தாமல் பாதங்களை இழுத்துக் கொள்வதிலேயே குறியாக இருக்க.. இப்போது அவன் பலமாகவே அதட்டி வைத்தான்..

"உரைப்பது செவிகளில் விழவில்லையா..? பாதங்களை அசைக்காதே.."

"இவை என் பாதங்கள்.."

"இல்லையென்று எவர் உரைத்தது..? உமது பாதங்களை உரிமை கொண்டாட எவரும் இங்கு முனையவில்லை.."

"அவ்வாறெனில் எமது பாதங்களை விடுவித்து விடலாமே.."

"விடுவிக்காமல் எமது மடியினில் வைத்து தாலாடா இசைக்கப் போகிறேன்..?"

அமர்த்தலான அவனது வினாவில் அவளுக்கு நாணம் வந்து சிரம் கவிழச் செய்தது.. அதை ஊன்றிப் பார்த்தவனின் கனிந்த வதனத்தில் மென்மை பரவியது.. அவனது மடியினில் கிடத்தப் பட்டிருக்கும் அவளது பாதங்கள் சங்கடத்துடன் மடங்க முற்பட்டதை அவனால் உணர முடிந்தது..

"சற்றுப் பொழுதுதான்..." இதமாக அவன் உரைத்தான்..

'இவன் எதைக் கூறுகிறான்..?' அவளுக்கு ஓர் மண் துகளும் விளங்கித் தொலைக்கவில்லை...

அறியாத மழலையாய் இமை கொட்டியவளைப் பார்த்தவனுக்கு அவளது அறியாமையின் மீது ஈர்ப்பு ஏற்பட்டது..

'இவள்தான் எத்துணை அறியாமையோடு.. பச்சிளம் மழலை போல் உள்ளாள்..' அவனுக்குள் வியப்பு தோன்றியது..

"தமது பாதங்களில் முள்கள் செருகியுள்ளன.. அவற்றை அப்புறப்படுத்தியாக வேண்டும்.. விசமுள்களாக இருந்து விட்டால் ஆபத்தாகி விடும்.. கற்கள் கிழித்த காயங்களுக்கு பச்சிலை மருந்திட்டு ஆற்றி விடலாம்.. முள்களை யாது செய்வது..? அதன் பொருட்டுத்தான் தமது பாதங்களை எமது மடியினில் கிடத்தியுள்ளேன்.. அஞ்ச வேண்டாம்.." அவன் விளக்கமுரைத்தான்..

அவனது விளக்கத்தில் அவளது சங்கடம் சற்றுக் குறைந்தாலும் அவளது அச்சத்தை அவன் அறிந்து கொண்டு விட்டானே என்ற குற்ற உணர்வு புதிதாக வருகை புரிந்து வைத்தது..

"எவர் அஞ்சியது..?" அவள் முணுமுணுத்தாள்..

"தாம்தான்.." அவன் நகைத்தான்..

'அவனது நகைப்பைப் பாராதே மனமே..' என்று எத்துணைதான் அவள் ஆக்ஞையிட்டாலும்.. ஆசை கொண்ட மனம் அவளது ஆக்ஞைக்கு கட்டுப்படாமல் நகைக்கும் அவனது வதனத்தை சிரத்தையுடன் பார்த்து வைத்து அவளது சினத்தைக் கொட்டிக் கொண்டது..

அவனது அணி வகுத்த பல்வரிசையின் எழிலில் மதி மயங்கிய மனத்தை நோக்கி..

'இதற்குத்தானே இச்சை கொண்டாய்..?' என்று அவள் எரிந்து விழுந்தாள்..

அவளது மனப் போராட்டத்தை உணர்ந்தும்.. உணராதவனைப் போன்ற இள நகையுடன் அவன் அவளது

பாதங்களை நன்கு பற்றி.. அவனது கரத்திலிருந்து முள்ளின் கூர்மையான முனைகொண்டு.. செருகியிருந்த முள்களை அப்புறப்படுத்தலானான்..

"ம்..ஆ.." வலியில் துடித்தவளின் கரத்தை இதமாக பற்றி விரல்களை அழுத்தி விட்டவனின் ஸ்பரிசத்தில் வலி மறந்தாள் வசுந்தரா..

"பொறுமை காப்பாய் பெண்ணே..! முள்கள் ஆழமாக செருகியுள்ளன.. அப்புறப்படுத்தும் போது.. வலி ஏற்படத்தான் செய்யும்.. வேறு மார்க்கமில்லை.."

இவ்விதம் உரைப்பவனிடம் உனது இதமான அருகாமையில் எனக்கு வலி மறந்து போகிறது என்று எவ்வாறு அவள் உரைப்பாள்..?

அவனது உரையை ஒப்புக் கொண்டதற்கு அடையாளமாக வலம்.. இடமாக.. தலையை அசைத்து மட்டும் வைத்தாள்..

அவன் கூறியதைப் போல.. துரிதமாக அவளது பாதங்களில் செருகியிருந்த முள்களை அவன் அப்புறப் படுத்தி விட்டான்..

கையிலிருந்த முள்ளைத் தூர எறிந்து விட்டு..

"இதைத்தான்.. முள்ளை.. முள்ளால்தான் வெளிக் கொணர வேண்டும் என்று ஆன்றோர் உரைத்திருக் கிறார்கள்.." என்று உரைத்து நகைத்தான்..

வசுந்தராவின் வதனத்தில் நன்றியுணர்வு வந்தது..

"தங்களுக்கு என்ன கைம்மாறு இழைக்கப் போகிறேன்..?" இளகிய குரலுடன் கூறினாள்..

"தாம்.. எனக்கு கைம்மாறு இழைக்கப் போகிறாயா..?"

வினவியன் எதற்காக உரத்து நகைக்கிறான் என்று அவளுக்கு விளங்கித் தொலைக்கவில்லை.. அவனது பார்வையில் மறைந்திருக்கும் மர்மம் யாதென்றும் அவளுக்குத் தெரியவில்லை..

"ஆகட்டும்.. கைம்மாறு கிட்டுமென்றால் மறுக்கவா போகிறேன்.. அதற்கும் ஓர் காலம் வரும்.. அப்போது வினவுகிறேன்.. நான் வினவுவதை அளிப்பாயல்லவா..?"

அவனது வில்லங்கமான வினவுதலில் அவளுக்குத் 'திக்' கென்று ஆகி விட்டது..

'எதை வினவுவான்..?'

அவளது மனது அணி வகுத்து அனுப்பி வைத்த ஆயிரமாயிரம் சந்தேகங்களும் அவளது கன்னி மனதை கலங்கடித்தன..

"அகத்தின் எழில் வதனத்தில் தெரியும்.." என்றான் அவன்..

"என்ன..? என்ன, என்ன, என்ன..?" மனதை மறைக்க அவள் கரத்தை உயர்த்தி விரல்களை மடக்கி வினவி வைத்தாள்..

"எதன் பொருட்டு இத்துனை 'என்ன..?' ம்ம்ம்..?" அவன் தனக்குள் நகைத்துக் கொண்டான்..

அவளை எண்ணித்தான் அவன் நகைத்து வைக்கிறான் என்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது..

“தேவையற்ற சிந்தனைகளை தவிர்த்து விடு..”

அடுத்து வந்த அவனது வார்த்தைகளில் அவளது மனத்தை அவன் வாசித்து விட்டான் என்று தெள்ளத் தெளிவாக அவள் உணர்ந்து விட்டாள்..

‘என்னவென்று எனை நினைப்பான்..’ அவளது வதனம் கன்றி விட்டது..

“தம் போன்ற இளம் வயது மங்கையர்க்கு இதுபோன்ற சந்தேகங்கள் அத்தியாவசியமானதுதான்.. ஆதலினால்.. அது குறித்து சங்கடம் கொள்ள வேண்டாம்..”

அடுத்தும் அவளது மனதை அவன் வாசித்து வைத்ததில் அவளுக்கு ‘யாதடா இது..’ என்று ஆகிவிட்டது..

அவனது முன்னிலையில் மனதால் கூட எதையும் எண்ணிவிட இயலாது என்றால் அவளும்தான் யாது செய்வாள்..?

அவன் மடியிலிருந்த அவளது பாதங்களை அகற்றி விட்டு எழுந்தான்.. விட்டு விட்டுச் சென்று விடுவானோ என்று அச்சப்பட்டவளின் விழிகளின் மிரட்சியை உணர்ந்தவனாக..

“இதோ.. வந்து விடுகிறேன்..” என்று இதமாக கூறிவிட்டு.. புரவியை அணுகினான்..

'என்ன செய்கிறான்..?'

அவள் உன்னிப்பாக ஊன்றிக் கவனித்தாள்... புரவியின் மீது தொங்கிக் கொண்டிருந்த பையில் தண்ணீர் குடுவையை வைத்து விட்டு.. வேறு சில பொடிகளுடன் அவளை அணுகினான்..

'மறுபடியும் என் பாதங்களை அவன் மடியினில் ஏந்திக் கொள்வானோ..'

எதிர்பார்ப்பில் அவளது மனம் குறுகுறுத்தது... அவளது எதிர்பார்ப்பை உணர்ந்த முறுவலை அவன் உதிர்த்ததில்.. அவளது வதனத்தில் நாணம் பாய்ந்தது..

'கடவுளே..! இவன்தான் மனதை வாசிக்கும் கலையைக் கற்றவன் ஆயிற்றே.. இவன் முன்னிலையில் இவ்விதமா நான் எண்ணித் தொலைக்க வேண்டும்..? தற்போது எவ்விதம் இவனது வதனத்தை நோக்கிப் பேச இயலும்..?'

அவள் இதழ்களை மடித்துக் கடித்துக் கொண்டதை ஓர் மார்க்கமாக அவன் பார்த்தபடி அவளது பாதங்களைப் பற்றி அவன் மடியில் கிடத்திக் கொண்டான்..

எண்ணியிருந்தது ஈடேறினாலும்.. அவளது கன்னி மனதின் எதிர்பார்ப்பை அவன் கண்டு கொண்ட நானத்தில் அவனது வதனம் பார்க்க இயலாமல் அவள் தவித்தாள்..

குறுநகையோடு குனிந்தவன்.. அவளது பாதத்தில் முள்கள் செருகியிருந்த காயங்களிலும்.. கற்கள் குத்திக்

கிழித்திருந்த காயங்களிலும்.. மஞ்சள் பொடி கலந்த பச்சிலைப் பொடியைத் தூவி மருந்திட்டான்.. காயங்களில் அப்பொடிகள் பட்டதும் எரிச்சல் தாங்காமல் வசுந்தரா..

“அம்மா..” என்று அலறித் துடித்தாள்..

“பொறுத்துக் கொள்.. வேறு மார்க்கமில்லை.. உடனடியாக இக்காயங்களுக்கு மருந்திட்டே ஆக வேண்டும்.. தாமதித்தால் பின் விளைவுகள் நேரலாம்.. கரடு.. முரடான மார்க்கங்களில் மிதியடிகளை அணியாமல் நடந்து பழக்கப்பட்ட பாதங்கள் என்றால் எவ்விதக் கவலையுமில்லை.. தமது பாதங்கள் அத்தகையதல்ல.. இவை மென்மையானவை.. அதன் பொருட்டே மருந்திட்டேன்.. சில மணித் துளிகளில் எரிச்சல் தணிந்து விடும்..” இதமாக அவளைத் தேற்றினான் அவ்வீரன்..

“நன்றி..” அவள் விழிகளில் கண்ணீர் அரும்பியது..

“கைம்மாறு புரிவதாக வாக்குக் கொடுத்துவிட்டு.. நன்றியுரையை எதன் பொருட்டு வீணடிக்கிறாய்..? சேமித்து வைத்துக் கொள்..” மர்மமாக அவன் உரைத்ததில் அவளுக்குள் வருகை புரிந்த நன்றி உணர்வு ஓடியே விட்டது..

“தற்போது கூறு.. நீ யார்..?” அவன் வினவினான்..

அதற்கு மேலும் மறைத்து உரைக்க அவளால் இயலவில்லை..

“வசுந்தரா தேவி..!” என்றாள்..

"எழிலான நாமம்.." என்றான் அவன் மெச்சுதலாக..

அவள் மனம் படபடக்க இமைகளை உயர்த்தி அவனை நோக்கினாள்.. ஏனோ.. அவளது நாமத்தை அவன் பாராட்டி உரைத்ததில் அவளுக்குள் குளிர் போன்ற நூதனமான ஓர் வித உணர்வு உண்டானது.. அந்த சில்லென்ற மழைத்துளி போன்ற உணர்வை அவளுக்குப் பிடித்திருந்தது...

"என் பெற்றோர் இட்டது.." மனதை மறைக்க முயன்றபடி அவள் கூறினாள்..

"ஓ..! இத்துணை எழில் வாய்ந்த நாமத்தை தமது புதல்விக்கு இட்டவர்களின் நாமமும் எழில் கொண்டதாகத் தான் இருக்கும்.."

"ஆம்..! அவர்களின் நாமங்கள் எழில் கொண்டவை தான்.. எனது தந்தையார் கைலாசநாதர் ஆவார்.."

"கைலாய மலையை ஆளும் கைலாச நாதரைக் கூறுகிறாயா..?"

"அல்ல ஐயா..!"

"மீண்டும் ஐயாவா..?"

"இவ்விதமாக வினவி வைத்தால்.. அவ்விதம்தான் நான் விளிப்பேன்.."

அவளது இடக்கைப் புரிந்து கொண்டவனின் விழிகளில் மின்னல் வந்தது.. தன்னந்தனியளாக.. பாதமிரண்டும் காயமாகி.. கானகத்தில் சிக்கியிருக்கும்

உணர்வின்றி.. அவனை வாதுக்கு அழைக்கும் அவளது துருதுருப்பான பேச்சை வெகுவாக அவன் ரசித்தான்..

"அவ்விதம்தான் அழைப்பாய் என்றால் அழைத்துக் கொள்.. தமது சித்தம் எனது பாக்கியம் அம்மா.."

"அம்மா..?"

தற்போது வேப்பங்காயை உண்டதைப் போல வதனம் மாறுவது வசுந்தராவின் முறையாகிப் போனது..

"ஆம்.. அம்மாதான்..." அறியாதவன் போலக் கூறியவனின் இதழ்களில் தவழ்ந்த குறுஞ்சிரிப்பு அவனைக் காட்டிக் கொடுத்து விட்டது..

"பழிக்குப் பழியா..?" வசுந்தரா சினந்தாள்..

"அல்லவே அல்ல.. பதிலுக்குப் பதில்..!"

அவன் நகைத்தான். அவனது நகைப்பில் மயங்கிய மனதிற்கு கடிவாளமிட இயலாமல் அவள் தவித்தாள்.. மனதென்னும் மாயக்குதிரையை கட்டுப் படுத்தும் வகை தெரியாமல் திகைத்தவளுக்கு பேச்சின் திசையைத் திருப்புவதைத் தவிர வேறெந்த மார்க்கமும் புலப்பட வில்லை..

"தங்களுக்கு அம்மாவாக நானொன்றும் காத்துக் கிடக்கவில்லை.."

"தமக்கு ஐயாவாக மட்டும் நான் காத்துக் கிடந்தேனா..?"

"எவரோ எம் நாமத்தைக் கேட்டதும் நீ எந்த தேசத்தின் மகாராணியென வினவியதாக ஓர் நினைவு.."

“மற்ற விவரங்களை உரைக்காமல் நான் வசுந்தரா தேவி என்றால் நீ எந்த தேசத்தின் மகாராணியெனத்தானே வினவ முடியும்..?”

“மகாராணிகள் மட்டும்தான் தமது பெயரைக் கொண்டாட வேண்டுமா..? சாமானிய மக்கள் கொண்டாடக் கூடாதா..?”

“எவர் தடுத்தது..?”

“தாங்கள் தடுத்தீர்கள்..”

“இப்படியொரு பழியா..? போகட்டும்.. நீ மகாராணியாகவே இருந்து கொள்.. எனக்கு யாதொரு ஆட்சேபனையும் இல்லை..”

இதை உரைத்தவனின் விழிகள் எதற்காக மின்னி வைத்தன என்றுதான் வசுந்தரா தேவிக்கு புரிந்து தொலைக்கவில்லை..

அவள் பாவம்.. பேதை..! இல்லத்தின் நான்கு சுவர்களைத் தவிர.. வேறு உலகை அறியாதவள்.. பூடகமாகப் பேசும் கலையைக் கற்காதவள்.. அவனது பார்வைக்கும்.. பேச்சுக்கும் பின்னால் ஒளிந்திருக்கும் மர்மங்கள் எவையென்று இனம் விளங்கி கண்டு கொள்ளும் நுட்பம் அறியாதவள்..

“ஆஹா..! தாங்கள் பெரிய மகாராஜா.. பாருங்கள்.. எனக்கு மகாராணி பதவியை வழங்கி விட்டீர்கள்.. காலம் ஐயா காலம்..”

அவனைக் கேலி செய்யும் விதமாக அவள் பேசி வைக்க.. அவனது பார்வையில் ஏதோ ஒன்று தோன்றி மறைந்தது..

“மகாராஜா மட்டும்தான் மகாராணிப் பதவியை அளிக்க வேண்டுமா..? சாமானியன் அதை அளித்தால் பெற்றுக் கொள்ள மாட்டாயா..?” வதனத்தை சோகம் போல வைத்துக் கொண்டு அவன் வினவி வைத்த விதத்தில் அவளுக்கு நகைப்பு வந்து விட்டது..

“ஆகட்டும்.. ஆகட்டும்.. பொற்காசா..? ஆபரணமா..? வெறும் வாய்மொழி வார்த்தைதானே.. ஏற்றுக் கொண்டால் போகிறது.. தாங்கள் அளித்த மகாராணி பதவிக்கு ஆயிரம் கோடி வந்தனங்கள் ஐயா..”

“ஐயாவை விட மாட்டாய்..?”

“மாட்டேன்..”

“பார்க்கலாம்.. எதுவரை இது பயணிக்கிறது என்று.. அதை விடுத்து இதற்குப் பதில்கூறு..”

“எதற்குப் பதில் கூற வேண்டுமாம்..?”

“மகாராணி பதவியையே அளித்துள்ளேன்.. அதற்கு வெகுமானமாக ஆயிரம் கோடி பொற்காசுகளை அளிக்க மாட்டாயா..? ஆயிரம் கோடி வந்தனங்களைத்தான் அளிப்பாயா..? வந்தனங்களை வைத்து நான் என்ன செய்ய..? அதுவே பொற்காசுகளாக இருந்தால்.. மாட மாளிகையை வாங்கலாம்.. ரதம் வாங்கலாம்.. இன்னும்

ஆடை, ஆபரணங்கள் என்று அனைத்தையும் வாங்கிக் குவிக்கலாம்.. இவை அனைத்தையும் செய்ய இயலாமல் வந்தனங்களைப் பரிசளிக்கிறாயே.. இது தகுமா..?"

"தகும்.. தகும்.. ஆயிரம் கோடி பொற்காசுகளுக்கு நான் எங்கு செல்வது..? இது மேடைக்கு போடும் மகாராணி வேடம் ஐயா..! பொற்காசுகள்தான் வேண்டுமென்றால் தாங்கள் அளித்த மகாராணிப் பதவியை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்.. எமக்கு அந்தப் பெருமை வேண்டாம்.."

"வேண்டாம் என்றால் விட்டு விடுவேனா..? அளித்ததை திரும்பப் பெறும் வழக்கம் இந்த வர்மனிடம் இல்லையே.."

"வர்மனா..? எவர் அது..?"

வசுந்தராதேவி சுற்று முற்றும் பார்த்து வைக்க..

"சாட்சாத்.. அந்த வர்மன் நானேதான்.." என்றான் அவன்..

"ஹ..! இவர் மட்டும் இவரது நாமத்தை மகாராஜா போல பெருமையுடன் பீற்றிக் கொள்வாராம்.. தாங்கள் தான் வினவ வேண்டுமா..? இதோ.. நானும் வினவுகிறேன்.. தாங்கள் எந்த தேசத்தின் மகாராஜா..? ம்ம்ம்..?"

அவனைப் போலவே புருவங்களை உயர்த்தி அவள் வினவி வைத்ததில் அவன்.

"ஹா.. ஹா.." என்று உரக்க நகைத்து வைத்தான்..

அவளை அவன் பார்த்த பார்வையில் பிரதிபலித்தவை என்னென்ன என்று பட்டியலிட வசுந்தரா தேவியால் இயலவில்லை..

'அடிக்கடி இவ்விதம் பார்த்து வைக்கிறானே.. இந்தப் பார்வையின் பொருள்தான் என்ன..?' புரியாமல் அவள் திகைத்தாள்..

ஓர் மழலையைப் போல் விழித்த அவளின் அறியாமையை ரசிக்கும் முறுவலுடன் அவளது சிரத்தில் சிறு குட்டு வைத்தான் அவன்..

"ஸ்.. ஆ.." என்று சிரத்தைத் தடவியவளிடம்..

"தேவையற்ற சிந்தனைகளை சிரத்துக்குள் செழுத்திக் குழப்பிக் கொள்ளாதே.. விட்டு விடு.." என்றான்.

"இதை குட்டு வைத்துத்தான் கூறவேண்டுமா..?"

அவள் வதனத்தை தூக்கிவைத்துக் கொண்டதில் அவனது நகைப்பு அதிகரித்தது.. பிரியத்துடன் அவளைப் பார்த்தவன்..

"சும்மா.. குட்டு வைக்க வேண்டும் போல சிறு ஆசை.." என்று கூறினான்..

"அருமையான ஆசை..! இதைத் தவிர்த்த வேறு சிறு ஆசைகள் தங்களுக்குத் தோன்றவில்லையோ..?"

அவள் என்னவோ இயல்பாகத்தான் வினவி வைத்தாள்.. அதைச் செவி மடுத்தவனின் விழிகளில்

எதற்காக அத்துனை மின்னல்கள் குடியேற வேண்டும் என்று புரியாமல் திருதிருத்தாள்..

அவனது பார்வை கூர்மையானது.. அவளது இதழ்கள் மீது படிந்த பார்வையில் அவளது கன்னங்கள் சிவந்தன.. அப்போதுதான் அவள் கூறிய வார்த்தைகளை வேறு விதமாகவும் பொருள் கொள்ளலாம் என்பதை அவள் உணர்ந்தாள்..

'அர்த்தத்தை அனர்த்தப் படுத்தி விடுவானோ..'

இந்த அச்சத்தின் விளைவாக அவள் மனதில் திகில்தான் எழ வேண்டும்.. மாறாக.. இன்பமான ஓர் எதிர்பார்ப்பு கிளர்ந்து தொலைத்தது.. கன்னங்கள் சிவந்து தொலைத்தன.. இதயம் தடதடத்து வைத்தது.. குட்டுப் பட்ட அவளது சிரம் தானாக தலை கவிழ்ந்து தரையைப் பார்த்தது..

'இவள் மழலை..!'

அவனது விழிகளின் பிரியம் அதிகரித்தது..

'வேறு சிறு ஆசைகள் என்ன..? பெரிய ஆசைகளே மனதில் தோன்றத்தான் செய்கிறது.. அதை உரைத்தால் நீ புரிந்து கொள்வாயா..?' தன் மனதுக்குள் அவன் வினவிக் கொண்டான்..

"வசுந்தரா ..!" மென்மையான அவன் அழைப்பில் அவள் முணுமுணுத்தாள்..

"ம்ம்ம்.."

"என்னைப் பார்.."

விழிகளை உயர்த்தி அவனைப் பார்க்க முற்பட்டவளின் விழிகள் தாழ்ந்தன.. இமைகள் படபடக்க தவித்தவளால் அவன் வதனத்தை நேர்கொண்ட பார்வையுடன் பார்க்க இயலவில்லை..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



7

காற்றோடு கலந்து வரும்.. எனது குரல் கேட்கிறதா..?

யாமினியின் கையிலிருந்த கடிதம் கனத்தது.. பெரும் பாறாங்கல்லை சுமந்து கொண்டிருப்பதைப் போல உணர்ந்தாள் அவள்.. அந்தக் கடிதத்தின் பொருள் அவளுக்கு அச்சத்தை அளித்தது.. அவளது மனக் கண்ணில் சித்தார்த்தனின் உருவம் எழுந்து நின்றது..

'நீ யார்..? நான் யார்..?'

அவள் இமைமூடி கேள்வி கேட்டாள்..

'உன்னைப் பார்த்தவுடன் எதற்காக என் உடலில் மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற உணர்வு ஏற்பட்டது..?'

அடுத்த கேள்விக்குப் பதிலாக அவளது முதுகில் ஓர் மொத்துத்தான் விழுந்தது.. வலியில் கண்திறந்து பார்த்தாள்.. அனுராதா கோபத்துடன் நின்றிருந்தாள்..

"முழிச்சுக்கிட்டே தூங்க ஆரம்பிச்சுட்டியா..? ஏண்டி படுத்தற..? பகல்லதான் பகல்கனா காணனும்.. ராத்திரியிலே கொட்டிக்கிட்டுத் தூங்கப் போயிரனும்.. ம்ஹூம்.. உனக்கும் ஒருத்தன் வெத்தலை பாக்கு வைச்சு அழைச்சு வேலை கொடுக்கிறான் பாரு.. அவனைச் சொல்லனும்.. அங்கே போயி வேலை செய்யப் போறியோ.. இல்ல.. இப்படி முழிச்சுக்கிட்டே தூங்கி வைச்சு.. சீட்டைக் கிழிக்க வைக்கப் போறியோ.."

அனுராதாவின் புலம்பலில் அரண்டு போனவளாக யாமினி எழுந்து நிற்க.. ஈரக்கையை டவலால் துடைத்தபடி அங்கே வந்த யதுநந்தன்..

"கன்பர்மா அவங்க சீட்டைக் கிழிக்கப் போகிறது தான் நடக்கப் போகுதும்மா.." என்று அருள் வாக்கை சொல்லி வைத்தான்..

யாமினிக்கு கோபம் வந்து விட்டது..

"உனக்கு எத்தனை நல்ல புத்தி..!" என்று பாய்ந்தாள்..

"உன்னைவிட நல்ல புத்திதான்.." அவன் பதிலுக்கு யாமினியின் மூக்கை உடைத்தான்..

"ஹலோ பிரதர்..! கவர்ண்மென்ட் சர்வீஸ்ல இருக்கோம்கிற ஆணவத்தில ஆடாதே.."

"உன்ன கவர்ன்மெண்ட் சர்வீஸ்க்கு வர வேணாம்னு யார் சொன்னது..? நான் சொன்னேனா..? ஒழுங்கா சர்வீஸ் கமிசன் பரிட்சை எழுதி வேலையைப்

பிடிக்கத் துப்பில்ல.. பேச வந்திட்டா.. நீயும் அபார்ண்ட்மென்ட் வேலையில சேர்ந்துக்கிட்டு டிஸ்கோ ஆடேன்.. யாரு வேண்டாம்ன்னு சொன்னது.."

"ஏய்ய்..! அண்ணனைப் போல பேசுடா.."

"நீயும் தங்கச்சியைப் போலப் பேசுடி.. என் வேலையைப் பார்த்தா கண்ணு வைக்கிற..?"

"இந்த கண்ணு, காது வைக்கிற வேலையை யெல்லாம் நீதான் செய்வ.. எனக்குச் சுட்டுப் போட்டாலும் அது வராது.."

"உனக்கு எதுதான் வந்துச்சு..? ராத்திரி, பகல்ன்னு பாக்காம கடலைச் சுத்தி உலா வருவியே.. அது மட்டும் தான் உனக்கு வரும்.. உன்னப்பத்தித் தெரியாம.. உனக்கும் ஒருத்தன் வேலை கொடுத்திருக்கான் பாரு.. அவனைச் சொல்லனும்.."

யதுநந்தனின் வார்த்தையில் யாமினி அதிர்ந்து நின்றாள்.. யதுநந்தன் அறியாத.. அவளறிந்த உண்மை அவள் நெஞ்சத்தை தாக்கியது..

அவளைப் பற்றிச் சித்தார்த்தன் அறிவானே.. அறிந்தும் ஏன் வேலையைக் கொடுத்திருக்கிறான்..?

யதுநந்தனுடன் போட்டுக் கொண்டிருந்த சண்டையை மறந்து விட்டு அவள் இமைமூடி நெற்றியில் கை வைக்க..

"போச்சுடா.. இம்புட்டு நேரமும் உட்கார்ந்துக்கிட்டே தூங்கி வைச்சவ.. இப்ப நின்னுக்கிட்டே தூங்க ஆரம்பிச் சுட்டாளா..?" என்றான் யதுநந்தன்.

"நான் ஒன்னும் தூங்கலை.." யாமினி படக்கென்று கண்களைத் திறந்தாள்..

"அத இப்பச் சொல்லு.. யம்மா:. இவளக் கொஞ்சம் 'தா'க்காட்டி கூப்பிட்டுக்கிட்டுப் போங்கம்மா.. நான் தூங்கப்போகனும்.."

"தூங்கப் போறவன் எதுக்காக என்கிட்ட வாயைக் கொடுத்து வம்பைக் கட்டியிழுக்கனும்னு நீங்களே கேளுங்கம்மா.."

"அம்மா.. இவள வாயை மூடச் சொல்லுங்க.."

"முதல்ல இவன் வாயை மூடச் சொல்லுங்கம்மா.."

இரண்டு பேரும் கத்திக் கொண்டிருக்க.. இடையில் வந்த பிரதாப் அவர்களின் தோள்களைத் தட்டி..

"அக்கட சூடுங்க புள்ளைகளா.." என்றார்..

இருவரும் ஒரே திசையில் பார்த்தார்கள்.. அங்கே ஹாயாக சோபாவில் தலையணையைப் போட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள் அனுராதா..

"என்னப்பா இது..? இப்பத்தானே என்னைச் சாப்பிடக் கூப்பிட்டாங்க..? ஏண்டா யது.. உனக்கும் தெரியுமே.."

"அதான..?"

"உங்களுக்கு மட்டுமில்ல.. எனக்கும் அது தெரியும்.. என்னையும்தான அவ சாப்பிடக் கூப்பிட்டா.."

"அப்புறம் எப்புடி படுத்துத் தூங்கறாங்க.. அதையும் பெட்ரூமில் தூங்காம ஹால் சோபாவில தூங்கறாங்களே.."

குழம்பிப் போன யாமினிக்கு பிரதாப் விளக்கம் சொன்னார்.. அதைக் கேட்டதும் யதுநந்தன் விழுந்து.. விழுந்து சிரித்தான்..

8

தெய்வத்தை வணங்கிடவே.. தடைவிதித்தல் தர்மம் ஆகுமோ..?

'நானே நானா..?'

மிரண்டு போனாள் வசுந்தராதேவி.. எவர் வதனத்தையும் நிமிர்ந்து நோக்கி.. நேர் கொண்ட பார்வையுடன் பேசும் வசுந்தராதேவி எங்கு சென்றாள்..?

"என்னால் தங்களின் வதனத்தை நேர்கொண்டு பார்க்க இயலவில்லை.."

மனதை மறைக்க யத்தனிக்காமல் மழலையைப் போல அச்சப்பட்டவளின் மீதான அவனது பிரியம் வலுத்தது..

"ஏன்..?" அவளையே துளைப்பதைப் போல பார்த்தபடி அவன் வினவினான்..

"தெரியவில்லையே.."

மிரட்சியான அவளது பதிலில் அவனது பிரியம் மிகுதியானது..

"அஞ்ச வேண்டாம்.."

மிருதுவாக அவன் தேற்றியதில் அவளது மிரட்சி சற்று விலகியது..

"தமது தந்தையார் குடியானவரா..?"

அவளது மிரட்சியைப் போக்க அவளைப் பற்றிய விவரங்களை அறிய விழைந்தவனைப் போல அவன் உரையாடலின் போக்கை திசை திருப்பி விட்டான்.

அதை உணராதவளாக வசுந்தரா.. இடையில் அவளை ஆக்ரமித்த அந்த நூதனமான உணர்வலைகளில் இருந்து விடுபட்டு வெளியில் வந்து அவனது வினாவுக்கான விடையை அளிக்க முற்பட்டாள்..

"குடியானவரும் கூட..."

"அவ்வாறெனில்..? யாது உரைக்கிறாயென்று புரியவில்லையே.."

"எப்படிப் புரியும்..? அதற்கெல்லாம் சிரம் நிறைய மதிநுட்பம் மிகுந்திருக்க வேண்டும்.."

அச்சமின்றி உரைத்து விட்டு கலகலத்து நகைத்தவளை பூடகம் நிரம்பிய மர்மப் பார்வையொன்றை பார்த்து வைத்தான் அவன்..

"தம்மைப் போல மதிநுட்பம் எனக்குக் கிடையாது தான்.."

"ஒப்புக் கொண்டால் சரிதான்.. எமது தந்தையார்.. இந்தப் பிராந்தியத்திலேயே பிரசித்தி பெற்ற வணிகராக்கும்.."

"ஓ..! காஞ்சிக்கு அருகில் வசிக்கும் வணிகரான கைலாச நாதரின் புதல்வியா நீ..?"

வினவியவனின் குரலில் தொனித்த வியப்பில் பெருமிதம் கொண்டாள் வசுந்தரா..

"ஆம்..! அவர் எனது தந்தைதான்.. இப்போதாவது அறிந்து கொள்ளுங்கள்.."

"எதை..?"

"யாம் எத்துணை பெரிய செல்வந்தரின் புதல்வி என்பதை.. ஒரு புரவியை சொந்தமாகக் கொண்டிருக்கும் தாங்கள் நான் எவரென்பதை அறியாமல் உரையாடிக் கொண்டிருந்தீர்களே.."

"தவறுதான்.."

இதை உரைத்தவன் வருத்தம் கொள்ளாமல் எதன் பொருட்டு நகைத்து வைத்தான் என்று வசுந்தராவுக்கு புரியவில்லை..

'இவனது சொல்லும்.. செயலும் புரியும்படியாகவா உள்ளது.?' அவள் மனதிற்குள் அலுத்துக் கொண்டாள்..

"செல்வந்தர் இல்லத்தில் பிறந்தவள் நான்.."

"நன்று.."

"எனது தந்தையார் கைலாசநாதர்.. தாயாரின் நாமம் அங்கயற்கண்ணி என்பதாகும்.."

"வணக்கத்துக்குரிய நாமம்.."

"அவரும் வணக்கத்துக்குரியவரே.."

"அறிவேன்.."

அவனது விடையில் அவள் திகைத்தாள்.. அவளது தாயை அவன் அறிவானா..?

'இவன் பேசும் அத்துனை சொல்லும் விசித்திரம் நிரம்பிய கலவையாகத்தானே வெளி வருகின்றது..!'

அவள் சிரத்தை சரித்து ஆராய்ச்சியாக அவனை நோக்க.. அவன் புருவங்களை உயர்த்தி அவளை வசீகரித்து வைத்தான்..

'இவன் வசியப்பொடி கொண்ட மாயக்காரன்..'

அவனைப் பார்க்காமல் இருப்பதே உசிதம் என்று புரவியைப் பார்த்தபடி அவள் பேசலானாள்..

"எமது தந்தைதான் பிரசித்தி பெற்ற வணிகர்.. அவரைப் பற்றித் தாங்கள் அறிந்திருக்க வாய்ப்புள்ளது.. எமது தாய் இல்லத்தரசி..! அவரைப் பற்றி தாங்கள் அறிய வாய்ப்பில்லையே.."

"மெய்தான்.. ஆயினும் எம்மிடம் தமது தந்தையைப் பற்றி உரைத்தவர்கள் அவரின் இல்லத்தரசியைப் பற்றியும் உரைத்தார்கள்.. உதவி வேண்டி வருவோர்க்கு தாயினும் சாலப் பரிந்து உணவளித்து உதவி புரியும் கருணையுள்ளம் கொண்டவர் உம்மைப் பெற்ற தாய் என்றுரைத்தார்கள்.."

"ஆம்.."

பெருமிதத்துடன் புரவியிலிருந்து பார்வையைத் திருப்பி அவனது வதனத்தை நோக்கினாள் வசுந்தரா.. அதில் அவன் வதனத்தில் நகைப்பு படர்ந்தது.. அதை உணராத மழலையாக..

"எமது தாயின் காருண்ய உள்ளம் அத்தகையது தான்.. வறியவர்க்கு உதவி புரிவதில் எமது தாய்க்கு நிகர் அவரேதான்.." என்றாள் வசுந்தரா..

"தமக்கு தமையன் உண்டென்றார்களே.."

"உண்டு.. அவனது நாமம் வல்லவன் என்பதாகும்.."

"அடேங்கப்பா.. அவர் வாய் வீச்சில் வல்லவரோ..?"

"ம்ம்ம்.. கூடவே நகர்வலம் வருவதிலும்.. கன்னியரின் கடைக்கண் பார்வைகளுக்கு எதிர் பார்வையை வீசுவதிலும் வல்லவன்.."

"ஹா.. ஹா.."

"எதற்கு நகைப்பு..?"

"வாலிப வயதில் ஆண்பிள்ளைகள் இவ்விதம்தான் இருப்பார்கள்.. அதில் உனக்கென்ன கடுப்பு..?"

"இப்பேற்பட்ட நியதிகளை வகுத்தது எவர்..? வாலிப வயது ஆண்மகன் நகர்வலம் வர வேண்டும்.. கன்னியரின் மீது பார்வைக் கணைகளை தொடுக்க வேண்டும்.. தோழர்களோடு ஆற்றங்கரை மண்டபத்தில் கூடிப் பேசிக் களிக்க வேண்டும்.. வயது வந்த பெண் மட்டும் இல்லச் சிறையில் வெளியுலகின் வெளிச்சம் எவ்விதம் உள்ளது

என்பதை அறிய இயலாமல் சிறைபட வேண்டும்.. நன்றாக உள்ளதய்யா தங்களின் நியாயம்..?"

"சினம் வந்தால் ஐயா என்ற அழைப்பும் வந்து விடுமா..?"

"ஆம்.. ஐயா.. ஆம்.."

"ஹா.. ஹா.. நியதிகளில் தவறில்லை வசுந்தரா.. பருவம் அடைந்த பெண்களுக்கு வெளியுலகில் பாதுகாவல் குறைவு என்பதினால் இல்லத்திற்குள் வைத்து பாதுகாக்க முனைகிறார்கள்.. அதைச் சிறையென்று ஏன் எண்ணுகிறாய்..? தற்போது பார்த்தாயா.. நீ இல்லத்திலேயே இருந்திருந்தால் மாலிக்காபூரின் படைவீரர்களின் பார்வையில் பட்டிருப்பாயா..?"

மென்மையாக அவன் எடுத்துரைத்தபோது மெய் தானே என்று அவளுக்கும் தோன்றி வைத்தாலும்..

"அவ்விதம் இல்லச் சிறையில் அடைபட்டுக் கிடந்தால் காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரரையும்.. அருளாளப் பெருமாளையும் எப்படி நான் தரிசிப்பேனாம்..?" என்று சினத்துடன் வினவவும் செய்தாள்..

"அதைக் கூறு.."

வர்மன் என்று சொல்லிக் கொண்ட வீரனின் விழிகள் சிவந்தன..

"எம் குல மாதரை இல்லத்தை விட்டு நீங்கி.. ஆலய தரிசனம் செய்ய விடாமல் அடைபட்டுக் கிடக்க

...லைக்க எண்ணுகிறானோ அந்த மாலிக்காபூர்..? எமது தெய்வங்களை வழிபட இவன் என்ன இன்னல் விளைவிப்பது..? எமது தெய்வங்களின் ஆலயங்களை இவன் என்ன அடைத்து வைப்பது..? வினா எழுப்ப யாருமில்லையென்று எண்ணி விட்டானா அந்த மூர்க்கன்..? இந்த வர்மன் இருக்கிறான்.. இந்து தர்மத்தைக் காவல் செய்ய.. எமது ஆலயங்களைப் பாதுகாக்க தமது இன்னுயிரையும் வர்மன் தருவான்.. தெய்வங்களை வழிபட தடை விதிப்பதா..?"

கொந்தளித்த அவனது சினத்தில் 'ஆ'வென்று விழி விரிய அவனையே பார்த்து வைத்தாள் வசுந்தராதேவி..

அவனது ரௌத்ரம் அவளுக்கு ஆனந்தத்தை அளித்தது..

"தங்களால் மாலிக்காபூரின் படைவீரர்களை எதிர்க்க இயலுமா..?" என்று வினவினாள்..

அவளின் மழலைத்தனத்தில் வர்மனின் சினம் தணிந்தது.. அவன் வாய் விட்டு நகைத்தான்..

"மாலிக்காபூரின் படைவீரர்களை மட்டுமல்ல.. மாலிக்காபூரையே என்னால் எதிர்க்க இயலும்.." என்றான்..

"மெய்யாகவா..?"

"மெய்யாகத்தான்.. அதை விடுத்து இவ்வினாவிற்கு விடைகூறு.. நீ தனியாகவா வந்தாய்..?"

"இல்லை.. எமது இல்லத்தில்.. எங்களின் பாதுகாவலராக சேவை செய்யும் வீரபாகுவுடன்தான்

வந்தேன்.. அவர்தான் ரதத்தைச் செழுத்தி வந்தார்.. மாலிக்காபூரின் படைவீரர்களிடமிருந்து தப்பிக்கும் மார்க்கத்தில் இடைபட்ட திருப்பத்தில் என்னை மட்டும் ரதத்தை விட்டுக் குதித்து இக்கானகத்துக்குள் நுழைந்து தப்பிச் செல்லும்படி உரைத்தார்.."

"அவர் எங்கே..?"

"ரதத்தை செழுத்திக் கொண்டு சென்று விட்டார்.. நான் ரதத்தை விட்டுக் குதித்து விட்டதை அறியாத மாலிக்காபூரின் படைவீரர்கள் அவர் சென்ற ரதத்தை துரத்திக் கொண்ட போனார்கள்.."

"எத்திசையில் சென்றார்கள்.."

"இத்திசையில்தான்."

வசுந்தராதேவி.. கானகத்தின் மறுகோடியில் தெரிந்த ராஜபாட்டையை சுட்டிக் காட்டினாள்..

"உனைக்காக்க தாம் மட்டும் ஆபத்தில் மாட்டிக் கொண்டாரா..?"

வியப்புடன் வினவினான் வர்மன்..

"ஆம்.." வசுந்தரா தேவி கண்கலங்க சிரத்தை அசைத்தாள்..

"கவலை கொள்ளாதே.." அவன் தேற்றினான்..

"எவ்விதம் கவலை கொள்ளாமல் இருப்பது..? எமது தந்தைக்கு நிகரானவர் அவர்.. எம்மைக் காக்கும் பொருட்டு தமது உயிரை பணயமாக வைத்துள்ளார்.."

தொண்டை கம்ம உரைத்தவளின் விழிகள் அவனிடம் யாசித்தன..

"என்ன..?" அவனது புருவங்கள் உயர்ந்தன..

"தாங்கள்தான் மாலிக்காபூரையே எதிர்க்கும் வல்லமை கொண்டவராயிற்றே.. வீரபாகுவைக் காக்க.. மாலிக்காபூரின் படைவீரர்களை எதிர்க்க இயலாதா..?"

தடுமாற்றத்துடன் வேண்டிக் கொண்டவளைப் பரிவுடன் பார்த்தான் வர்மன்..

"இதை வினவவா இத்துனை தயக்கம்..? அவசியம் நான் வீரபாகுவைக் காப்பேன்.."

"மெய்யாகவா..?" வசுந்தரா பரபரத்தாள்..

"மெய்யாகத்தான்.. இதில் பொய்யுரைக்க ஏதுமில்லையே.."

"அவ்வாறெனில் துரிதமாக கிளம்புங்கள்.."

"உன்னைத் தனித்து விட்டா..?"

"என்னைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டாம்.. நான் மெதுவாக நடந்த சென்று விடுவேன்.."

"காயம் கொண்ட பாதங்களுடன் ஓர் அடி கூட உன்னால் எடுத்து வைக்க இயலாது.."

"உங்களைக் கரம் கூப்பி வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.. மானம் காக்க வீரபாகுவின் நிழலை விட்டு விலகி குதித்தேன்.. எமது உயிரைக் காப்பதற்காக அல்ல..

பாதங்களின் ரணவேதனையை என்னால் தாங்கிக் கொள்ள இயலும்.. ஆனால் என் பொருட்டு வீரபாகு உயிர் தியாகம் செய்தாரென்றால் அதைத் தாங்கிக் கொண்டு உயிர்வாழ எம்மால் இயலாது.. தாங்கள் அறிவீர்களா..? அவர் என்னைக் கரங்களில் ஏந்தி வளர்த்தவர்.."

வசுந்தரா தேவி விம்மினாள்.. கனிவுடன் அவளது விழி நீரைத் துடைத்து விட்டான் வர்மன்.. அத்தகைய இக்கட்டான சூழலிலும் தன்னை மட்டும் காத்துக் கொள்ள எண்ணாமல்.. தன்னை வளர்த்த பாதுகாவலனைக் காக்கத் துடிக்கும் அந்தப் பெண்ணின் ஈரமனதில் அவன் மனம் மையம் கொண்டது..

'இவளது தோற்றம் மட்டும் எழிலானதல்ல.. இவளது ஈர மனமும் எழில் கொண்டதாக உள்ளது..'

ஏதோ நினைவில் அவன் வதனம் சுணங்கியது.. நெடிய பெருமூச்சை வெளியேற்றியவனை புரியாமல் திகைத்துப் பார்த்தாள் வசுந்தரா.. சிரத்தைக் குலுக்கி தன்னிலைக்கு வந்தவனின் வதனம் நகைப்பைச் சிந்தியது..

"என்ன சிந்தனை..?"

"ஏதுமில்லை வசுந்தரா.."

"வீரபாகுவைக் காப்பீர்கள் அல்லவா..?"

"கூடவே உன்னையும் காப்பேன்.."

"எவ்விதம் அது இயலும்..?"

"இவ்விதம் இயலும்.."

என்ன நிகழப் போகிறது என்று அவள் யூகிக்கும் முன்னரே.. அவளது இடையில் கரம் கொடுத்து அவளை கைகளில் ஏந்திக் கொண்டான் வர்மன்..

"யாது இது.."

பதட்டத்துடன் தரையில் குதிக்கப் போனாள் வசுந்தரா.. அன்னிய ஆணின் கரங்களில் அவளா..? அவளது இடையில் பற்றியிருந்த அவனது கரங்களின் அழுத்தமான ஸ்பரிசத்தில் அவளது தேகம் எரிமலையும், பனிமலையும் இணைந்த புதிதான ஓர் உணர்வை அடைந்தது..

"அசையாதே.." ஆக்ஞை பிறப்பித்தான் அவன்..

"ஏனாம்..?" அவள் திமிற யத்தனித்தாள்..

"தம்மைக் களவாடிச் செல்ல நான் முற்படவில்லை கன்னிகையே.. புரிந்து நடந்து கொள்.."

அதிகாரத் தொனியுடன் உரைத்து விட்டு புரவியை நோக்கி அவன் நடந்தான்.. விடுபட மார்க்கமில்லாததால் அவனது கழுத்தை வளைத்துப் பிடித்தபடி இமைகளை மூடிக் கொண்டாள் வசுந்தரா..

அவளும்தான் யாது செய்வாள்..? சும்மா அவன் நோக்கி வைத்தாலே.. அவள் நடுநடுங்கித் தடுமாறி.. அவனது வதனம் பார்க்க இயலாமல் நாணம் கொண்டு விடுவாள் எனும் போது.. அவளது கன்னி மனதை பற்ற

வைக்கும் இத்தகைய ஸ்பரிசத்தை அவன் உணர்த்தி வைத்தால் எவ்வாறு அவளால் அவனது வதனம் நோக்க இயலும்..?

“தற்போது இமை திறக்கலாம்.. இல்லையெனில் புரவியிலிருந்து வீழ்ந்து விடுவாய்..”

நகைப்புடன் அவன் உரைத்ததும்.. விழி திறந்து பார்த்தாள் வசுந்தரா.. அவளைப் புரவியின் மீது அமர்த்தி வைத்த வர்மன் தானும் தாவியேறினான்.. புரவியிலிருந்து அவள் சரிந்து விடாமலிருக்கும் பொருட்டு அவளை அணைத்து இறுக்கியபடி புரவியின் கடிவாளங்களைப் பிடித்துக் கொண்டான்..

‘கடவுளே..!’

வசுந்தராவுக்கு மயக்கமே வந்து விட்டது..

‘முதலில் எனது பாதங்களைத் தொட்டான்.. அடுத்து எனது பாதங்களை இவனது மடியில் கிடத்திக் கொண்டான்.. அதற்கும் அடுத்து.. என்னைக் கரங்களில் ஏந்திக் கொண்டான்.. தற்போது என்னடாவென்றால் இவனது மார்போடு என்னைச் சேர்த்துத் தழுவிக் கொள்கிறானே.. என் செய்வேன்..?’

அவளது தவிப்பைக் கண்டு கொள்ளாமல் வர்மன் புரவியை முடுக்கி விட்டான்.. அது கானகத்துக்குள் பாய்ந்து ராஜபாட்டையை நோக்கி விரைந்தது.. நின்று கொண்டிருந்த புரவியிலேயே சறுக்கி விழ இருந்தவளால்

மூடிக் கொண்டிருந்த புரவியின் மீது.. அவனைக் கட்டிக் கொள்ளாமல் வீற்றிருக்க இயலவில்லை..

நழுவி வீழ்ந்து விடுவோமோ என்ற அச்சத்துடன் அவனுடன் இன்னமும் அதிகமாக ஒன்றிக் கொண்டவளின் தேகம் முழுவதும் வர்மனின் மார்பில் படிந்ததில் அவன் எல்லையற்ற இன்பம் கொண்டான்.. அவளது தேகம் நடுங்கியதில்..

'பாவம்.. இவள் ஆணின் ஸ்பரிசத்தை உணராதவள்..' என்று அனுதாபப் பட்டான்..

'நீ..?' அவன் மனது வினவியதில் அவனுக்குள் மெலிதான துயரம் வந்தது..

'நான் பெண்களை அறிந்தவன்.. கூடிக் குலவியவன் என்பதை இவள் அறிய நேர்ந்தால் எவ்விதம் அதை எதிர்கொள்வாள்..?' நெடும் மூச்சை வெளியேற்றினான்..

'தறிகெட்டு ஓடும் சிந்தனையை நிறுத்தி வை வர்மா..! இவளுக்கும் உனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை.. நீ இவளைக் காவல் செய்ய வந்தவன்.. ஆபத்தில் சிக்கியிருக்கும் அபலையிடம் மோகத்தைத் தூண்ட முற்படாதே.. அது பாவம்..' அவன் மனது கடுமையாக எச்சரித்தது..

'இவள் ஏதுமறியாத மழலைத்தனம் கொண்டவள்.. என்பதை உனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள எண்ணாதே.. நீ யார் என்பதை இவள் அறிய மாட்டாள்.. இவளது தந்தை அறிவார்.. நீ அறிவாய்.. சின்னஞ்சிறு

பெண்ணின் கன்னி மனதில் கற்களை வீசி விடாதே.. அவளது கன்னி மனதை சலனப்படுத்தாதே..'

மனது என்னவோ காட்டுக் கத்தலாகத்தான் கத்திப் பார்த்தது.. வர்மனின் தேகம் அதை ஏற்கவில்லை.. அவன் அவளது தேகத்திலிருந்து வெளிப்பட்ட சுகந்த மணத்தை முகர முற்பட்டான்.. அவளது நீண்ட கூந்தலில் சூடியிருந்த மலர் வாசம் அவனது நாசியைத் துளைத்ததில் அவளது மலர்க் கூந்தலில் வதனத்தைப் புதைக்கவும் முற்பட்டான்.. அவளது மென்மையான தேகத்தின் குழைவில் கிறங்கிக் கொண்டிருந்தான்..

பெண்களை அறிந்தவனுக்கே இப்படியென்றால் வசுந்தரா தேவியைப் பற்றிக் கூறவே வேண்டாம்.. தன் வயமில்லாமல் ஏதோவொரு மாய உலகில் அவள் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்.. அவனது பரந்த மார்பில் புரண்ட வைரப் பதக்கம் அவளது வதனத்தில் பதிந்து.. நான் உறுதியான தன்மையைக் கொண்டுள்ளேனா.. அல்லது.. இவனது தேக்கு மரம் போன்ற அகன்ற மார்பு உறுதியான தன்மையைக் கொண்டுள்ளதா என்ற வினாவை எழுப்பி வைத்தது..

அந்த வைரத்தின் ஒளிர்வில் விழிகளை மூடிக் கொண்டவளுக்குள் இதம் நிறைந்த இப்பயணம் முடிவுறவே கூடாது என்ற தாபம் எழுந்தது..

அவளது தாபத்தை விதி ஏற்கவில்லை..

"அதோ.. அங்கே சண்டைநிகழ்ந்து கொண்டிருக் கிறது..?"

கிறக்கம் மறந்தவனாக இறுக்கமான குரலுடன் கூறினான் வர்மன்..

"என்ன..?" வசுந்தரா பதட்டத்துடன் பார்த்தாள்..

தொலைவில் புழுதிப் படலம் தெரிந்தது.. அந்தப் படலத்துக்குள்ளே நடுநாயகமாக வீரபாகு ரதத்தில் இருந்தபடியே சுற்றி வளைத்திருந்த மாலிக்காபூரின் வீரர்களுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தான்..

"நான் கூறினேன் அல்லவா..? என் பொருட்டு அவர் தனித்துச் சண்டையிடுகிறார்.." கதறினாள் வசுந்தரா..

"வருந்தாதே.."

வர்மனின் புரவி விரைந்து ஓடி.. புழுதிப் படலத்தின் அருகே நின்றது.. அவன் வாளை உயர்த்தி உரத்தக் குரலில் கூவினான்..

"ஒருவனை பலர் சூழ்ந்து தாக்குவதுதான் நீர் கற்ற வீரமோ..? இதை எம்மிடம் காட்டத்தான்.. தில்லியிலிருந்து வருகை தந்துள்ளீரோ.. அற்பப் பதரே..!"

அவனது கூவலில் சண்டை நின்றது.. மூர்க்கத்துடன் திரும்பியவர்களின் பார்வையில் வர்மனுடன் இருந்த வசுந்தராதேவி பட்டு விட்டாள்..

"இவள் இங்கு உள்ளாள் மடையர்களே..!" ஒருவன் கூவினான்..

"அவ்வாறெனில் ரதத்தில் எவர் உள்ளார்..?" மற்றொருவனின் வாளின் முனை ரதத்தை மூடியிருந்த பட்டுத் துணியைக் கிழித்து எறிந்தது..

"எவரும் இல்லை.. இடையினில் இப்பெண்ணைக் கடத்திவிட்டு இவன் ஏமாற்றி வாதுக்கு அழைத்திருக் கிறான்.." இன்னொருவன் வீரபாகு புரிந்து விட்ட மாபெரும் தவறை சுட்டிக்காட்டி அவனைக் குற்றவாளியாக்கினான்..

"அது மாபெரும் குற்றமோ..?" சினத்துடன் உரக்க நகைத்தான் வர்மன்..

"அம்மா.. இங்கு ஏன் வருகை தந்தீர்கள்..? தப்பிச் செல்லும்படி உரைத்தேனா இல்லையா..?" வீரபாகு பதறினான்..

"தமது அம்மா தனியாக தப்பிச் செல்ல மாட்டார்களாம்.. உடன் நீங்களும் வருகை புரிய வேண்டுமாம்.."

வர்மன் கூறிக் கொண்டிருந்த போதே.. வீரபாகுவைச் சுற்றி வளைத்திருந்த வீரர்கள் வர்மனைச் சூழ்ந்து கொண்டனர்.. ஒருவன் வசுந்தரா தேவியை நோக்கிக் கரத்தை நீட்டினான்.. மறுநொடியில் அலறியபடி மண்ணில் வீழ்ந்தான்.. வீரபாகு ரதத்தைத் திருப்பி மாலிக்காபூரின் வீரர்களைத் தாக்க ஆரம்பித்தான்.. அங்கே கடுமையான யுத்தம் மூண்டது..

வர்மனின் இடதுகரம் புரவியின் கடிவாளத்தையும் வசுந்தராதேவியின் இடையையும் இறுகப் பற்றியிருக்க.. அவனது வலது கரத்தில் உடைவாள் மந்திரக் கோல் போல சுழன்று.. சுழன்று எதிரிகளைத் தாக்கியது.. ஒரு பக்கம் வர்மனும்.. மறுபக்கம் வீரபாகுவுமாக இணைந்து

தாக்கியதில் மாலிக்காபூரின் படைவீரர்கள் முற்றுகைக்குள் மாட்டிக் கொண்டார்கள்..

ஒருவன் பின் ஒருவராக மாலிக்காபூரின் படைவீரர்கள் மண்ணில் சரிந்து கொண்டிருக்க.. எஞ்சியவர்கள் வெற்றிகரமாக புரவிகளுடன் பின்வாங்கி புறமுதுகு காட்டி ஓட ஆயத்தமானார்கள்..

அவர்களில் ஒருவன்.. வர்மனின் மார்பில் தவழ்ந்த வைரப் பதக்கத்தைப் பார்த்து விட்டான்..

"நீ.. நீ.. நீ.." அவன் விழிகளில் அச்சம் எழுந்தது..

"ஆம்.. நீ அனுமானிப்பது சரிதான்.. நான் வர்மனே தான்.. செல்.. மாலிக்காபூரிடம் சென்று சொல்.. எமது மக்களையும்.. இந்து தர்மத்தையும்.. இந்துக்களின் ஆலயங்களையும் காக்க வாளேந்தி வர்மன் வந்து விட்டான் என்ற விவரத்தை அவனது செவிகளில் உரை.. தில்லியை விட்டு வருகை புரிந்தவன் தாயாதிச் சண்டையைத் தீர்த்து வைத்துவிட்டு.. வந்த வழியில் திரும்பிச் சென்றிருக்க வேண்டும்.. அதை விடுத்து.. உதவிக்கு அழைத்தவனின் தேசத்தையே அபகரித்துக் கொண்டு.. அங்கிருக்கும் மாற்று மதத்தினரின் ஆலயங்களை மூட யத்தனித்தால் அதை பார்வையிட்டுக் கொண்டு விரல் சுவைத்து அமர்ந்திருக்க இந்த வர்மன் ஒன்றும் பேடியல்ல.. மாலிக்காபூரின் மதத்தை நான் மதிக்கிறேன்.. அவனது இறை வழிபாட்டையும் ஆதரிக்கிறேன்.. இறைவனை அவன் ஓர் நாமத்தில் அழைக்கிறான்.. யாம் வேறொரு

நாமத்தில் அழைத்து வழிபடுகிறோம்.. அவனது மதத்தையும், இறை வழிபாட்டையும், ஆலயங்களையும் யாம் மதித்து வணங்கும்போது.. எமது மதத்தை அவன் எதற்காக தூஷிக்க முற்படுகிறான்..? எமது இந்து தர்மத்தை எதற்காக சிதைக்க யத்தனிக்கிறான்..? இந்துக்களாகிய எமது ஆலயங்களை ஏன் வழிபாடு செய்ய இயலாமல் மூடி வைக்கிறான்..? மூடனே..! எமது தர்மத்தையும்.. ஆலயங்களையும் காவல் செய்ய எவரும் இல்லையென்ற துணிவு கொண்டானா..? நான் இருக்கிறேன்.. இந்த வர்மன் உள்ளவரை இந்து தர்மம் நிலைத்திருக்கும்.. எமது ஆலயங்களின் கதவுகள் திறந்திருக்கும்.. எமது ஆன்மீகத்தின் ஆணிவேரை எவராலும் அடையாளம் காண இயலாது.. புனித பூமியடா இப்பூமி..! தெய்வங்கள் நடமாடும் ஸ்தலம்..! இப்பூமியில் பாதம் பதிப்பவர்கள் நட்புக்கரம் நீட்டினால் வாழ்த்தி, வரவேற்று.. விருந்துண்ண வைப்போம்.. அதை விடுத்து எமது ஆணி வேரை அசைக்க முற்பட்டால் விரட்டியடிப்போம்.. சென்றுவிடு.. மாலிக்காபூரிடம் எமது உரையை நீ உரைக்க வேண்டும் என்பதற்காக உங்களை விட்டு வைக்கிறேன்.. ஆலய வழிபாட்டுக்கு தனித்து வந்த மங்கையரிடம் தகாத செயல் புரிய சிந்தித்த உனது சிரத்தைக் கொய்யாமல் உயிர் பிச்சை வழங்குவது இதன் பொருட்டுத்தான்.. ஓடி விடு.."

வர்மனின் ருத்ர தோற்றத்தில் வசுந்தரா நடுங்கிப் போனாள்.. அதுவரை அவள் அறிந்திருந்த மென்மையே

வடிவான வர்மனா இது என்று மலைத்துப் போனாள்.. அவனிடமிருந்து வெளிப்பட்ட வேறொரு வடிவத்தில் மிரண்டு போனாள்..

'இன்னும் எத்துனை வடிவமெடுப்பான் இவன்..?'

அவள் மனம் அஞ்சியது.. வர்மனைக் கண்ட மாத்திரத்தில் குலை நடுங்கிப் போனவர்களாக.. பின்னங்கால்கள் பிடறியில் பட.. புறமுதுகிட்டு ஓடோடிப் போன மாலிக்காபூரின் படைவீரர்களை பிரமிப்புடன் பார்த்தாள்..

'இவன் யார்..?'

அவள் மனதில் வினா எழுந்த போதே.. ரதத்தில் இருந்து குதித்து அவர்களுக்கு அருகில் வந்த வீரபாகு.. வர்மனின் மார்பில் புரண்ட வைரப் பதக்கத்தையும்.. அவனது கூந்தலைக் கொண்டையிட்டிருந்த நேர்ந்தியையும் உற்று நோக்கி விட்டு.. வியப்புடன் சிரம் தாழ்த்தி வணங்கினான்..

"பெரும் பேறு பெற்றேன் பெருமானே..! தங்களின் தரிசனம் இந்த சாமானியனுக்குக் கிட்டியுள்ளதா..? இது கனவா..? அல்லது நனவா..? பிரமிப்பில் ஆழ்ந்துள்ளேன்.."

மண்டியிட்டு வணங்கிய வீரபாகுவின் செய்கையைப் பார்த்த வசுந்தராவுக்கு மயக்கம் வரும் போல இருந்தது.. புன்முறுவல் ததும்பிய வர்மனின் வதனம் பார்த்தாள்..

அவளை மயக்கும் மோகனப் புன்முறுவல் கொண்டவனின் பின்புலம்தான் என்ன..? கானகத்தில் அவளைக் காக்க வந்த அந்த மாயக்காரனின் பராக்கிரம் இத்துணை மேன்மை வாய்ந்ததா..?

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



8

கடிதத்தை அனுப்பி விட்டாய்..
கன்னி மனம் கலங்குகிறதே..

யாமினியையும்.. பிரதாப்பையும் சாப்பிட அழைத்த அனுராதா அதை விட்டு விட்டு ஹால் சோபாவில் ஹாயாக படுத்துறங்குவதன் மர்மம் என்ன என்பதை பிரதாப் பிட்டுப் பிட்டு வைத்தார்..

"என்னத்தடா சொல்ல..? பசி வயித்தைக் கிள்ளுது.. பேசாம உன் கூடவாவது கொட்டிக்க உக்காந்திருக்கலாம்.. அதை விட்டுட்டு யாமினி பாவம்.. தனியாச் சாப்பிடனும்.. இல்லேன்னா அனுகிட்ட நாலு திட்டை வாங்கிக் கட்டிக் கிட்டே சாப்பிடனும்னு நினைச்சு.. மககூட சாப்பிடலாம்ன்னு தேங்கி நின்னேன் பாரு.. என்னச் சொல்லனும்.. இனி இவள வேற எழுப்பியகானும்.."

"எழுப்பறது இருக்கட்டும்ப்பா.. எதுக்காக இங்கே படுத்துத் தூங்கறாங்க..? அதச் சொல்லுங்க.. தூக்கம் வந்தா.. பெட்ரூமில போய் தூங்க வேண்டியதுதானே..?"

"ஏம்மா.. நீ எப்பேர்பட்ட கருணையுள்ளம் கொண்ட பொண்ணுன்னு நான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்.. நீ என்னடான்னா பெத்த தாய வெறும் வயித்தோடு தூங்கச் சொல்றியே.. அவ சமைச்ச டிபன நாமெல்லாம் மொக்கிட்டு.. நிறைஞ்ச வயிறோட தூங்கப் போகனும்.. அவ மட்டும் பந்திய வைச்சுட்டுப் பட்டினியாத் தூங்கனும்.. அப்படித்தான..? இதத்தான் ஒரு பாட்டில பந்தி வைச்ச குடும்பத்தலைவி.. பட்டினியாத் தூங்கப் போனதப் போல மனசு நிறைஞ்சிருக்குன்னு பாடி வைச்சிருக்காங்க போல.."

பிரதாப்பின் ஏற்ற இறக்கமான பேச்சில்..

"வாவ்..!" என்றான் யதுநந்தன்..

"சூபர்ப்.." என்று பாராட்டினாள் யாமினி..

"செம ஸ்பீச்சுப்பா.. ஆனா எல்லாமே வேஸ்ட்.. அம்மாவத் துங்க வைச்சிட்டு அவங்க தலைமாட்டில நின்னு தண்ணியக் கூடக் குடிக்காம உணக்கையா ஒரு முழ நீளத்துக்கு வசனம் பேசற கழுதைக்கு.. அவங்க முழிச்சிருக்கப்ப ஒரே வார்த்தையில பாராட்டித் தொலைக்காமில்ல..? உங்களுக்கு சண்டை தீர்த்து விடற வேலையாவது எனக்கு மிச்சமாகுமில்ல..?"

"நான் என்ன பேசனும்னாடா பேசித் தொலைக் கிறேன்..? தானா வந்து கொட்டுதுடா மகனே..!"

"அந்தக் கொட்டற அருவி.. அம்மா முழிச்சிருக்கப்ப வந்து கொட்டாதா..?"

“வந்து தொலைக்காதே.. அதான பிராப்ளமே.. உங்க அம்மா முன்னால.. ஒரு வார்த்தை என்ன.. ஒரு எழுத்துக்கூட வந்து சேராது.. ம்ஹூம்..”

“இனிப் பெருமூச்சு விட்டு என்ன பண்ண..? நடந்தது நடந்திருச்சு..”

யதுநந்தன் ஆறுதல் சொல்லிய விதத்தில் எது நடந்தது என்று அரண்டு போனார் பிரதாப்.. ஒருவேளை அனுராதா தூங்கிக் கொண்டிருப்பதைத்தான் அப்படிச் சொல்லித் தொலைக்கிறானோ என்று அவன் முகத்தை உற்றுப் பார்த்தார்.. அனுராதாவின் பக்கம் அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லையென்பதில் அப்படி யெல்லாம் இல்லை என்று கண்டு கொண்டவராய்..

‘இவன் எதைச் சொல்றான்..?’ என்று குழம்பிப் போன பிரதாப்..

“என்னடா நடந்திருச்சு..?” அவனிடமே விளக்கம் கேட்டார்..

“உங்க கல்யாணத்தைத்தான் சொல்றேன்ப்பா..” அவன் அமைதியாக அணுகுண்டை வீசி வைத்தான்..

“டேய்ய்ய்....”

அதற்கு மேல் மகனை என்னத்தைச் சொல்லித் திட்டுவது என்று புரியாமல் திகைத்து நின்றார் பிரதாப்..

“பின்ன என்னப்பா.. அம்மா தூங்கிக்கிட்டு இருக்கிறதைப் பத்திக் கேட்டா.. நீங்க அட்டாச்மெண்டா

டயலாக் பேசிக்கிட்டு இருக்கீங்க.. ஒரு மனுசன் காலயில இருந்து நைட் வரைக்கும் ஆபிஸ்ல குப்பை கொட்டிவிட்டு வர்றானே.. அவனத் தூங்க விடுவோம்ன்னு கொஞ்சமாவது நினைச்சுப் பாக்கறீங்களா..? இந்தா.. நிக்கிறாள்ல.. இவளுக்குத்தான் தூக்கம் வந்து தொலைக் காது.. ராக்கோழி மாதிரி.. ராத்திரி முழுக்க தூங்காம உலாத்திக்கிட்டு இருப்பா.. நான் அப்படியில்லப்பா.. சேவல்..! பொழுதோட தூங்கப் போனாத்தான்.. பொழுது விடியறப்ப.. ‘கொக்கரக்கோ’ன்னு கூவி எழுப்பிட்டு... அந்த கிரெடிட்டையும் கோழி கூவிருச்சுன்னு கோழிக்கு விட்டுக் கொடுத்துட்டு பொழப்பப் பாக்க ஓடியாகனும்..”

“இப்ப எதுக்குடா மூச்சு விடாம முழ நீளத்துக்கு டயலாக் பேசி வைக்கிற..?”

“இந்தக் கொடுமையில இருந்து தப்பிக்கவாவது அம்மா எதுக்காக இங்க படுத்துத் தூங்கறாங்கன்னு நீங்க சொல்லிற மாட்டிங்களாங்கிற பேராசைதான்ப்பா.. வேறென்ன..?”

இப்படியாப்பட்ட வியாக்கினத்தை வேறெங்கும் கேட்டிராத பிரதாப்.. மகனின் கேள்விக்குப் பதில் சொன்னால்தான் தப்பிக்க முடியும் என்ற நிலைமைக்குத் தான் தள்ளப்பட்டு விட்டதை உணர்ந்தவராக பதில் சொல்ல வாய் திறந்தார்.. அதற்குள் பொறுமை காக்க முடியாத யதுநந்தன்..

"இப்ப சொல்லப் போறிங்களா இல்ல.. லாரி லாரியா டயலாக்க கொட்டித் தள்ளட்டுமா..?" என்று மிரட்டி வைத்தான்..

"வேணாம்டா.. வேணாம்.."

அலறிவிட்ட பிரதாப்.. படுத்துறங்கும் அனுராதா என்ன சொல்லி விட்டு உறங்கப் போனாள் என்பதை விலாவாரியாக விளம்பி வைத்தார்..

"இதுக போடற சண்டை இன்னைக்குள்ளே முடியாதுங்க.. நானும் பொழுது விடிஞ்சு பொழுது போகிற வரைக்கும் வேலை.. வேலைன்னு ஓய்ஞ்சு போயிருக்கேன்.. இதுக சண்டையைத் தீத்து வைக்கவும் எனக்குத் தெம்பில்ல.. இதுக சண்டை தீருகிற வரைக்கும் காத்துக்கிட்டு நிக்கிறதுக்கு என் காலுக்கும் தெம்பில்ல.. நான் இப்படிக் கட்டயச் சாய்க்கிறேன்.. பொழுது விடியறதுக்குள்ள இதுக சண்டையை முடிச்சிருச்சுகன்னா என்ன எழுப்பி விடுங்க.. எழுந்திருச்சு.. உங்களுக்கும், உங்க மகளுக்கும் டிபனைப் போட்டுட்டு.. நானும் கொஞ்சம் கொட்டிக்கறேன்.."

"இல்லேன்னா..?"

"விடியக்கால காபியப் போட்டு அட்டெண்டென்ஸில ஸைன் பண்ணிட்டு நாளைய வேலைக்கு பிள்ளையார் சுழிய போட வேண்டியதுதான்.. வேற வழி..?"

"அப்ப நைட்டு டிபன்..?"

"அம்பேல்தான்.."

"எனக்குப் பசிக்குதேடி.."

"எனக்கு மட்டும் பசிக்கலையா.. உங்களுக்குத்தான் வயிறிருக்கு.. எனக்கு இல்லையா..? உங்களுக்கெல்லாம் சமைச்சு வைச்சு சாப்பிடக் கூப்பிட நானிருக்கேன்.. எனக்கு யாரிருக்கா..?"

அனுராதா ஹாலின் சோபாவில் ஹாயாக சுருண்டு படுத்துத் தூங்கி விட்டாள்.. பசிக்கும் வயிறோடு.. மகனும் மகளும் எப்போது சண்டையை முடிப்பார்களோ என்று பிரதாப் காத்துக் கொண்டிருக்கிறார்..

"இதாண்டா நடந்தது.."

என்னவோ சினிமாக் கதையில் வரும் பிளாஷ் பேக்கைச் சொல்லுவதைப் போல.. விட்டத்தைப் பார்த்தபடி பிரதாப் சொல்லி முடிக்க.. யதுநந்தன் விழுந்து.. விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்..

"இந்த அம்மா இருக்காங்களே.. ஹா.. ஹா.."

"போதும்டா.. பல்லு சுளுக்கிக்கப் போகுது.."

"விடு யாமினி.. அவன் சிரிச்சாச் சிரிச்சுட்டுப் போகட்டும்.. இதுக்கு வேற கேள்வியக் கேட்டு சண்டைய ஆரம்பிச்சு வைச்சிறப்போறான்.. பசிக்குது.."

"இந்த அப்பா அதை விட... ஹா.. ஹா.."

"நான் என்னத்தடா பண்ணினேன்..?"

"அப்பா..! நீங்க விட்டத்தப் பாத்துக்கிட்டு.. கண்ணுக்கு முன்னாடி கொசுவர்த்திச் சுருளப் போல

வளையம்.. வளையமா தெரியறதைப் போல பிலிம் காட்டிக்கிட்டு பிளாஸ்பேக்கச் சொன்னீங்க பாருங்க.. ப்பா..! சான்ஸே இல்லப்பா.. ஹா.. ஹா.."

"இவன் கிடக்கிறான் விடுங்கப்பா.. நாம அம்மாவை எழுப்பலாம்.. பாவம்.. சாப்பிடாமத் தூங்கிக்கிட்டு இருக்காங்க.."

அவள் பசியையும்.. பிரதாப்பின் பசியையும் மறந்து.. தாயின் பசியை மட்டுமே நினைவில் கொண்ட மகளின் காருண்யத்தில் மனம் நெகிழ்ந்து போனார் பிரதாப்..

"நீ தங்கம்டா கண்ணம்மா.." என்றார்..

"அவதங்கம்ன்னா.. நானென்ன பித்தளையா..?" யதுநந்தன் யாமினியை மறந்து பிரதாப்புடன் சண்டைக்கு வந்தான்..

யாமினி எழுப்பி விட்டதினால் சின்னஞ்சிறு கொட்டாவியோடு தூக்கம் கலைந்து எழுந்த அனுராதா..

"நீ வைரம்டா கண்ணா.." என்றாள்..

"அது.."

"யது..!"

"ஓகே.. ஓகே.. இன்னைக்கு அளப்பறய இத்தோட மூட்டை கட்டிட்டு நான் தாய்ச்சுக்கப் போறேன்.. குட்நைட்.."

"தாய்ச்சுக்கப் போறானா..? என்னடி அனு..?"

"தூங்கப் போறதைத்தான் அப்படிச் சொல்லிட்டுப் போறான்.. விடுங்க.. இதுக்கு அவன்கிட்ட விளக்கம் கேட்டா.. விடிய விடிய சொல்லி வைப்பான். உங்களுக்கு என்ன வேணும்..? விளக்கமா..? டிபனா..?"

விளக்கம்தான் என்று சொல்ல பிரதாப்புக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது..? அவர் சமர்த்தாக டிபனை கை காட்டினார்..

9

வைரம்தான் உனது அடையாளமா..?- உன் வைரிகளும் இதை அறிவாரா..?

"மெய்யாகவே அவர் எவரென்று தாம் அறிய வில்லையா அம்மா..?"

ரதத்தை செழுத்திக் கொண்டிருந்த வீரபாகு வியப்புடன் வினவினான்..

ரதத்தில் அமர்ந்திருந்தாலும்.. ரதத்தை பின் தொடர்ந்து கொண்டிருந்த வர்மனின் புரவியையே பார்வையிட்டுக் கொண்டிருந்த வசுந்தரா.. இல்லை என்ற பாவனையில் சிரத்தை அசைத்தாள்..

"தங்களை வனத்தில் காத்து.. தங்களின் பாதங்களுக்கு பச்சிலை மருந்திட்டு சிகிச்சை அளித்த இவர் எவரென்பதை அறியாமல்தான் எமைத் தேடி வந்தீர்களா..?"

“ஆம்.. வீரபாகு.. ஆம்.. இதே உரையையே எத்துனை முறைதான் மாற்றி மாற்றி உரைப்பீர்கள்..? இந்த புரவி வீரர் எவராக இருந்தால் எமக்கென்ன..? தப்பி ஓடிய பொழுதில் வழிப்போக்கரான இவரைக் கண்டேன்.. வாள் சுழற்றுவதில் வல்லமை பெற்றவர் என்றார்.. தங்களைக் காக்க வேண்டினேன்.. உதவிக்கு வருகை தந்தார்.. இவ்வளவு தான்.. இதுபோன்ற உதவிகளை தாம் பிறருக்கு செய்த தில்லையா..? எதன் பொருட்டு இத்துனை வியப்பு..?”

தமது மொழிகள் அடாவடித்தனம் மிகுந்தவை என்பதை அறிந்திருந்தும் உள்ளத்தை மறைத்து.. வர்மனைக் குறித்து தமக்கேதும் பிரமிப்பில்லை என்ற அலட்சிய பாவனையை போர்த்திக் கொண்டு.. அந்தத் திரை மறைவில் வார்த்தைகளைக் கவனமாகத் தேர்ந்தெடுத்துக் கோர்த்துக் கொட்டிக் கவிழ்த்தாள் வசுந்தராதேவி..

அதை உணராத வீரபாகு.. கடிந்து கொள்ளும் பாவனையில் வசுந்தரா தேவியைத் திரும்பிப் பார்த்து வைத்தான்..

“கூடாது அம்மா.. இத்தகைய மொழிகளை தாம் உரைத்தல் தகாது.. அவர் எவரென்பதை அறியாமல் தாங்கள் இவ்விதம் வார்த்தைகளைச் சிதற விடலாகாது.. சாதாரண வழிப்போக்கனா மாலிக்காபூரின் படைவீரர்களை சிதறடித்தது..? மாலிக்காபூருக்கு அறைகூவல் விடுத்தது..? அவனது அடாத செயல்களுக்காக அவனை எச்சரிக்கும்

செய்தியை அனுப்பியது..? அல்ல அம்மா..! இவர் இறை தூதர்..! இந்து தர்மத்தைக் காக்க வந்த காவலர்..! சாமானியரென்று இவரை எண்ணி விட வேண்டாம்.."

வீரபாகு கூறக்கூற.. வசுந்தரா தேவியின் செவிகளில் தேன் வெள்ளம் பாய்ந்தது.. வர்மனைப் பற்றிய பராக்கிரமப் பெருமைகளை செவி மடுப்பதில் நுட்பமான இன்பம் கொண்டாள் வசுந்தரா.. அவளது அந்தரங்க மனம் அவனைப்பற்றிய செய்திகளைச் சேகரிக்க அவா கொண்டது.. அதை வீரபாகு அறியாவண்ணம் சேகரிக்க அவள் விருப்பம் கொண்டாள்..

ஆதலால் வர்மனைப் பற்றிய புகழுரைகளில் அவளுக்கு யாதொரு உடன்பாடும் இல்லாததைப் போல வதனத்தை வைத்தபடி..

"ஆஹா..! ஆஹா..! ஆண்கள் அனைவரும் ஜெகஜால சித்தர்கள் என்று வர்ணனை செய்வதில் தங்களை மிஞ்ச எவராலும் இயலாது வீரபாகு..! எமது தமையன் வல்லவன் ஓர் வல்லன்.. எமது தந்தையார் துணிவு நிரம்பிய வணிகர்.. தற்போதோ.. வழியில் உதவிக்கரம் நீட்டிய வழிப்போக்கர் மிகப் பெரும் காவலர்..! பொருத்தமாக உரைக்கின்றீர்கள்.. என்ன ஒன்று இத்தகைய பெருமைகளை ஆண்களுக்கு மட்டுமே தாம் அள்ளி வழங்குகிறீர்களே.. பெண்களின் பெருமைகளை ஓர்தினமாவது தாம் உரைத்ததுண்டா..?"

"ஏன் உரைக்கவில்லை..? அருளாளப் பெருமாளின் ராம அவதாரத்தில்.. சீதையாக அவதரித்த மகாலாட்சுமி

நாச்சியாரின் பெருமைகளைத் தமக்கு அள்ளி வழங்கிய தில்லையா.."

"ஆஹா..! கானகத்திற்குச் சென்ற ராமனைப் பின் பற்றிய மங்கையர் குல திலகத்தின் மாண்புகளை எடுத்துரைத்து எம் பெண் குலத்திற்கு கல்வி கற்பித்து வைத்திருக்கும் பெரு மகன்களில் ஒரு மகனல்லவா தாங்கள்.."

"ஹா.. ஹா.."

வீரபாகு உரக்க நகைத்தான்.. மனம் விட்ட அவன் நகைப்பில் இடையில் வந்த இடையூறு நீங்கி விட்ட நிம்மதி இருந்தது.. கானகத்தில் தப்பியோட விட்ட வசுந்தரா எவ்விதமான ஆபத்தும் இன்றி இல்லம் சென்றடைய வேண்டுமே என்று துடித்த உள்ளத்தோடு மாலிக்காபூரின் படைவீரர்களுடன் மோதிக் கொண்டிருந்தவன் அவன்..

குழந்தைப் பருவம் முதல் அவன் கைகளில் ஏந்தி வளர்த்த வசுந்தராவின் குழந்தை வதனத்தை கண்ணுறாமலேயே மடிந்து விடுவோமோ என்ற மனக் குமுறலுடன் மாலிக்காபூரின் படைவீரர்களுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தவனின் முன்னிலையில் வசுந்தராதேவி தோன்றியதும் இல்லாமல்.. மாலிக்காபூரின் படைவீரர்களை எதிர்க்கும் சக்தி கொண்ட வர்மனுடன் இனைந்து வருகை தந்திருந்ததில் எல்லையற்ற பேரானந்தத்தை அவன் கொண்டிருந்தான்..

"ஏகாம்பரேஸ்வரர்தான் நம்மைக் காக்கும் பொருட்டு.. இந்த மாமனிதரை அனுப்பி வைத்துள்ளார் அம்மா.."

'ஆம்..' மன நெகிழ்ச்சியுடன் மானசீகமாக இறைவனுக்கு நன்றியுரைத்தாள் வசுந்தரா.. அதை வீரபாகு அறியாவண்ணம்..

"ஏன்..? அருளாளப் பெருமாள் அனுப்பி வைத்திருக்க மாட்டாரா..?" என்று நொடித்தாள்..

"மைத்துனன் வழிதானே பெருமாளின் வழியும்..? அவர்கள் ஒன்று பட்ட மனம் கொண்டவர்கள் தாயே..!"

"அவ்விதமாக அவர்கள் உள்ளார்கள் என்று தமது செவிகளில் வந்து உரைத்தார்களாக்கும்..?"

"புராணங்கள் உரைக்கின்றன அம்மா.."

"உரைக்கும்.. உரைக்கும்.."

வீரபாகுவிடம் வம்பு பேசியபடி வர்மனை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தாள் வசுந்தரா.. மாலிக்காபூரின் படைவீரர்களை விரட்டியடித்த பின்னர்.. அவன் புரவியை விட்டு கீழே குதித்தான்.. வசுந்தராவின் இடையைப் பற்றித் தூக்கி ரதத்தில் அமர வைத்தான்..

"இவளது பாதங்கள் ரணமாக உள்ளன வீரபாகு.. பச்சிலை மருந்திட்டிருக்கிறேன்.. இவளால் காயம் ஆறுகிற வரை நடக்க இயலாது.. பத்திரமாக ரதத்தைச் செலுத்துங்கள்.." என்று உரைத்தான்..

'என்னது..?..!'

அதுவரை அவனது அருகாமையிலிருந்த வசுந்தரா.. அவன் விலகிச் செல்லப் போகிறான் என்பதில் அதிர்ச்சி

கொண்டாள்.. அவளது விழிகளில் தெரிந்த அதிர்வில் வர்மன் அசையாமல் ஓர் கணம் நின்று விட்டான்.. வசுந்தராவின் விழியோடு விழி கலக்க..

"யாம் தமது ரதத்தைத் தொடர்ந்து வருவோம்.." என்றான்..

'இவனும் உடன் வருகிறான்..'

வசுந்தரா தேவியின் வதனம் மலர்ந்ததில் அவனது விழிகள் மின்னின.. மாலிக்காபூரின் படைவீரர்களிடம் கடுமை காட்டிய அவனது வதனத்தில் மென்மை மீண்டது..

"தங்களின் உத்தரவுப்படியே ஆகட்டும் பெருமானே.."

வீரபாகு சிரம் தாழ்த்தி வர்மனை வணங்கி விட்டு ரதத்தைச் செழுத்த ஆரம்பித்ததும்..

"தங்களுக்கு எவர் எஜமானன்..? எமது தந்தையா..? இல்லை.. இந்த வழிப் போக்கரா..?" என்று வினவி வைத்தாள் வசுந்தரா..

"ஏன் அவ்விதம் வினவுகிறீர்கள் அம்மா..?"

"சிரம் தாழ்த்தி இப்புரவி வீரரை வணங்க வேண்டிய அவசியம்தான் என்ன..?"

வசுந்தராவின் வினாவில் விழி நிரம்பிய வியப்போடு அவளைத் திரும்பிப் பார்த்தான் வீரபாகு..

"இவர் எவரென்று தங்களுக்குத் தெரியாதா..?"

வீரபாகுவின் அந்த வினாவே மீண்டும்.. மீண்டும்.. வசுந்தராதேவியின் மனதில் சுழன்று வந்தது.. ரதத்தைப்

பின் தொடர்ந்து கொண்டிருந்த வர்மனை அவள் உற்று நோக்கினாள்.. அவளது பார்வையைக் கண்டு கொண்ட வர்மனின் புருவங்கள் வசீகரமாக உயர்ந்து இறங்கின.. வசுந்தராவின் தேகத்தில் குளிர் பாய்ந்தது.. இதயம் படபடத்தது..

'கள்வன்..'

சடுதியில் வதனம் திருப்பிக் கொண்டவளின் தளிர் விரல்கள் நடுங்கின.. அவளது அகத்தை கொள்ளை கொள்ளும் அந்த அடாவடிக்காரன் எவனாக இருப்பான் என்று அவள் ஆழ்ந்து சிந்தித்தாள்..

'எவன் இவன்..?'

அவளது பார்வை தன்னிச்சையாக அவனது மார்பில் படிந்தது.. அதில் ஒன்றிக் கொண்டு வந்த புரவிப் பயணத்தை நினைவு கூர்ந்தவளுக்கு அதை இழந்து விட்ட ஏக்கம் உண்டானது.. அவனை விட்டு நீங்காமல் அவனது மார்பில் புரண்டு கொண்டிருந்த வைரப் பதக்கத்தை அவள் பொறாமையுடன் நோக்கினாள்..

'இந்த வைரமாக நான் பிறந்திருக்கக் கூடாதா..?'

நெடும் மூச்சுடன் நிலம் பார்த்தவளின் விழிகள் கலங்கின.. அந்த நொடியில் அவளைப் பின் தொடர்ந்து அவன் வருகிறான்.. அடுத்து வரும் மணித்துளிகளில் உடன் இருப்பானா..?

மனம் கலங்கிய வசுந்தராவுக்கு கண்ணீர் சிந்த வேண்டும் போல இருந்தது.. இனம் விளங்காத துயரம்

அவளை ஆட்கொண்டதன் மர்மம் புரியாமல் அவளது மழலைமனம் திகைத்தது.. மனதின் துயரை மறக்க.. வீரபாகுவுடன் உரையாடுவதே உசிதம் என்று தோன்ற..

"எதை வைத்து இவர் மாமனிதர் என அவதானித்தீர்கள்..? இவரது மார்பில் புரளும் அந்த ஒற்றை வைரத்தை வைத்தா..?" என்று வீரபாகுவிடம் வினவினாள்.

"என்ன வார்த்தை உரைத்தீர்கள் அம்மா..! வைரத்தை வைத்து இவரை மதிப்பிடுவதா..? இவரே வைரம் அம்மா.." வீரபாகு உணர்ச்சிப் பெருக்குடன் உரைத்தான்..

"இவரைக் கண்டால் புரவி வீரர் போல உள்ளது.. வைரம் போலத் தெரியவில்லையே.." வசுந்தரா தேவி நகைத்தாள்..

"மனதால் காண வேண்டும் அம்மா.. இவரை அறிந்தவர் மனதுக்குத் தெரியும்.. இவர் வைரம் என்பது.."

'மெய்தான்..!'

வசுந்தராதேவியின் மனம் நெகிழ்ந்தது.. அவள் மனது வைரமாக வர்மனைக் கண்டது.. அஞ்ச வேண்டாம் பெண்ணே என்று உரைத்ததை வெறும் வார்த்தைகளாக இதழ்கள் வழி மட்டும் உரைக்காமல் இதயத்திலிருந்து உரைத்த அந்த மாவீரனை வைரமாக அவள் கண்டாள்.. பாதங்கள் என்று எண்ணாமல் அவளது பாதங்களை தனது மடியில் ஏந்திய அவனது மனிதாபிமானத்தை வைரமாக அவள் கண்டாள்.. அவளது வேண்டு கோளுக்காக அவளையும் காத்து.. வீரபாகுவையும் காத்து..

அவர்களுக்குக் காவலாக பின் தொடர்ந்து வருகை தந்து கொண்டிருந்த அவனது நேசத்தை வைரமாக அவள் கண்டாள்..

'என் மனம் கண்ட வைரம் இவன்..!'

விழிகளில் காதல் நிரம்ப அவனை ஏக்கத்துடன் அவள் பார்த்த பார்வையின் வீச்சில் வர்மன் ஈர்க்கப் பட்டான்.. அந்தக் கன்னிகையின் கள்ளமற்ற வதனமும்.. கபடமற்ற பேச்சும்.. இயல்பான நடவடிக்கைகளும் அவனைக் காந்தமென ஈர்த்தன..

"நமது இல்லத்திற்கு வந்து விட்டோம் அம்மா.."

வீரபாகு மகிழ்ச்சியுடன் கூவினான்.. வசுந்தரா தேவியை பத்திரமாக இல்லத்தில் சேர்த்து விட்ட நிம்மதி அவனது குரலில் இருந்தது..

பெரும் கோட்டைச் சுவர்கள் சுற்றி வளைத்திருக்க.. அரண்மனை போன்ற அந்த பிரம்மாண்டமான இல்லத்தின் முன்பாக ரதம் நின்றது.. பிரதான வாயிலில் இருந்த மிகப் பெரும் திண்ணைகள் பளிங்கு பதிக்கப்பட்டு கைலாசநாதரின் செல்வச் செழிப்பை பறைசாற்றிக் கொண்டிருந்தன..

அதில் அமர்ந்து வணிக நிமித்தமாக வருகை புரிந்திருந்த சிலருடன் உரையாடிக் கொண்டிருந்த கைலாசநாதர் ரதத்தின் புரவிகளின் குளம்படியோசையில் துரிதமான எழுந்து வந்தார்..

"வந்து விட்டாயா வீரபாகு..? தற்போதுதான் இவர்கள் வாயிலாக எனக்கொரு செய்தி கிட்டியது.. மாலிக்காபூரின் படைவீரர்கள் மதுராபுரியை ஆக்ரமித்தது போதாது என்று காஞ்சியிலும் அட்டூழியம் புரிய விழைகிறார்களாம்.. அவர்களை அருகாமையில் கண்டதாக இவர்கள் உரைக்கிறார்கள்.. ஆலய வழிபாட்டிற்கு மகளை அனுப்பி வைத்தோமே.. அவள் பத்திரமா இல்லம் திரும்ப வேண்டுமே என்ற திகில் என்னைப் பற்றிக் கொண்டதப்பா.. நல்லவேளை..! ஏகாம்பரேஸ்வரர் எம்மைக் காத்து விட்டார்.."

மன நிம்மதி மீண்டவராக நெடும் மூச்சை வெளியேற்றிய கைலாச நாதரின் முன்பாக ரதத்தில் இருந்து குதித்து இறங்கிய வீரபாகு.. பணிவுடன் சிரம் தாழ்த்தி.. வர்மன் வந்து கொண்டிருந்த திசையை சுட்டிக் காட்டினான்..

"ஏகாம்பரேஸ்வரர்தான் எமைக் காத்தார் அய்யனே..! இவர் வடிவில் அவர் உதவிக்கரம் நீட்டினார்.. தாங்கள் செவி மடுத்த செய்தி மெய்யானதுதான்.. நாங்கள் ஆலய தரிசனம் செய்து விட்டு இல்லத்திற்கு திரும்பிக் கொண்டிருந்த போது வழியில் மாலிக்காபூரின் படைவீரர்களிடம் சிக்கிக் கொண்டோம்.."

"என்ன..? எங்கே எமது புதல்வி..?"

கைலாசநாதர் சர்வாங்கமும் நடு நடுங்க பதறிப் போனார்..

“தந்தையே..! நான் இங்கு உள்ளேன்..”

ரதத்திலிருந்து சிரம் நீட்டி குரல் கொடுத்தாள் வசுந்தராதேவி..

“அம்மா..! என் குல தெய்வமே..! மீண்டு வந்து விட்டாயா தாயே..! நாட்டின் அரசியல் சூழலைப் பற்றி அறியாத மழலை நீ.. உன்னிடம் எவ்வாறு அவற்றை உரைப்பேன்..? இல்லம் விட்டு நீங்க விடாமல் உன்னைக் காவல் காத்ததின் பின்னணி இதுதான் குழந்தாய்..! நமது ஆலயங்களை காவல் செய்ய ரட்சகன் தேவை.. அவ்வாறிருக்க ஆலய வழிபாட்டிற்கு எவ்விதம் நம்மால் சென்று வர இயலும்..?”

குரல் கம்ம கைலாசநாதர் கூறிக் கொண்டிருந்த போது..

“ஏன் இயலாது..?” என்ற கம்பீரமான வர்மனின் குரல் வந்தது..

“எவர் அவர்..?”

புரவியை நோக்கிய கைலாச நாதரின் விழிகள் வர்மனின் மார்பில் புரண்ட வைரப் பதக்கத்தில் படிந்தன.. அவரது விழிகள் அகன்றன.. பிரமிப்புடன் வர்மனை நோக்கியவர் கரம் குவித்தார்..

“அரசே..! யாம் காண்பது கனவா..?”

என்ன இது என்றாகி விட்டது வசுந்தராவிற்கு.. வர்மனைக் கண்டவர்கள் எல்லோரும் இது கனவா என்று

எதன் பொருட்டு பிரமித்து வைக்கின்றார்கள்.. அவர்கள் மட்டுமா வர்மனைக் கண்டார்கள்..? அவளும் தான் கானகத்தில் அவனைக் கண்டாள்.. அவனது மார்பில் புரண்ட வைரப் பதக்கத்திலிருந்த ஒற்றை வைரத்தையும் கண்ணுற்றாள்.. அவளுக்கு ஒன்றும் அவள் காண்பது கனவா அல்லது நனவா என்று தோன்றி வைக்க வில்லையே.. இவர்களுக்கு மட்டும் ஏன் அவ்விதமாக தோன்றி வைக்கிறது..?

வசுந்தரா தேவி வர்மனின் மார்பில் புரண்ட வைரப் பதக்கத்தின் ஒற்றை வைரத்தை உற்று நோக்கினாள்..

'எழிலாகத்தான் உள்ளது.. கொடுத்து வைத்த வைரம்.. இந்தக் கட்டழகனின் மார்பில் வதனம் புதைத்திருக்கும் பேறைப் பெற்றுள்ளது.. இதற்கா இத்துணை திகைப்பு..?'

அவள் வர்மனைப் பார்த்தாள்.. அவனோ அவளுக்கு மட்டும் தெரியும்படி அவனது புருவங்களை உயர்த்தி இறக்கி வசீகரித்து தொலைத்தான்.. வசுந்தராதேவிக்கு திகிலாகி விட்டது.. கூடவே இதமான இன்ப உணர்வும் எழுந்தது..

'இவன் ஒருவன்..? கால நேரம் அறியாது என் மனதை அலைக்கழித்துக் தொலைப்பான்.. தந்தையாரும், மற்றவர்களும் உடனிருக்கும்போது இவ்விதம் இவன் செய்து வைக்கலாகுமா..? எமது நிலையை உணராமல் இம்சை செய்கிறானே..'

அவளது மனப்போராட்டத்தில் அவளிருக்க.. வீரபாகு வினயமாக கைலாசநாதரின் அருகில் வந்து சிரம் தாழ்த்தி..

"இதே வினாவைத்தான் நானும் பெருமானிடம் வினவினேன் அய்யனே..! தாங்களும்.. யாமும் காண்பதும் கண்டதும் கனவல்ல.. நமைக் காவல் செய்ய வந்திருக்கும் இம்மாவீரர் எவர் என்பதை இவரது மார்பில் புரளும் ஒற்றை வைரம் உரைத்திருக்குமே.." என்றான்..

'நொடிக்கொருதரம் இந்த வைரத்தை இவர்கள் புகழ்வதா..?'

வைரத்தின் மீது பொறாமை கொண்டிருந்த வசுந்தராவுக்கு சினம் வந்து விட்டது..

"என்ன வீரபாகு இது..? இந்த ஒற்றைவைரம் எழில் நிரம்பியதுதான்.. இல்லையென்று எவரும் கூறவில்லை.. எம்மிடம் இதைவிட எழில் கொண்ட வேலைப்பாடுகள் மிகுந்த வைர ஆபரணங்கள் பல உள்ளன.. அவற்றை விடவா இந்த ஒற்றை வைரம் சிறப்புப் பெற்றது..?" என்று படபடத்து விட்டாள்..

"வசுந்தரா..!"

புதல்வியை நோக்கிய கைலாசநாதரின் விழிகளில் மகளின் அறியாமையைக் குறித்த காருண்யம் இருந்தது..

"இந்த ஒற்றை வைரத்தின் பிரசித்தியைப் பற்றி அறியாமல் பேசிக் கொண்டிருக்கிறாய் மகளே..! இந்த ஒற்றை வைரத்தைக் கொண்டு தில்லிப் பேரரசையே விலைக்கு வாங்கி விடலாம்.. அதை அறிவாயா நீ..?"

"என்னது..? !!!.."

வசுந்தரா தேவி அதிர்ச்சியுடன் வர்மனின் மார்பில் புரண்ட வைரப் பதக்கத்தின் ஒற்றை வைரத்தையே இமைக்காமல் பார்த்தாள்..

'இதைக் கொண்டு தில்லிப் பேரரசையே விலைக்கு வாங்க இயலுமா..?'

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



9

காற்றோடு உன் அழைப்பு வந்து..
என் காதுகளில் ஒலிக்கின்றது..

பிரதாப்பின் இல்லம் அமைதியாக துயில் கொண்டிருந்தது.. பகல் முழுவதும் பானிபட் போர்க்களம் போல காட்சியளித்த வியட்நாம் வீடா இது என்று ஆச்சரியப்படும் அளவிற்கு அங்கே அமைதி நிலவியது.. தனது அறையில் தூக்கம் வராமல் விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்த யாமினிக்கு மட்டும் மனதில் அமைதி வரவில்லை.. புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.. அவள் மனதில் சித்தார்த்தனின் உருவம் வந்து நின்றது..

"யார் நீ..?" வாய் விட்டு வினவினாள்..

'உன்னைப் பார்த்தவுடன் எனக்குள்ளே எதற்காக ஓர் வெள்ளம் கரை புரண்டு ஓட வேண்டும்..?'

தாள முடியாத தவிப்புடன் கண்களை மூடிக் கொண்டாள்.. தாமோதரனைப் பற்றி நினைத்துக் கொண்டாள்.. யாமினியை வேலைக்குச் சேர்க்கக் கூடாது என்று அவன் பிடிவாதம் பிடித்ததை நினைத்துப் பார்த்தாள்..

'எப்படி அவனை மீறி எனக்கு இந்த வேலை கிடைச்சிருக்கு..?'

அவளால் நம்ப முடியவில்லை.. சித்தார்த்தன் அந்தக் கம்பெனியின் எம்.டி. அவனையே கேள்வி கேட்டு கட்டுக்குள் வைத்திருக்கும் பவரில் தாமோதரன் இருந்ததைத்தான் அவள் கண்கூடாகக் கண்டிருந்தாளே..

'இந்த வேலையை எனக்குக் கொடுக்கக் கூடாதுன்னு என் முன்னாலேயே வழக்கடிச்சவன்தானே அவன்..!'

யாமினிக்கு தன்னிரக்கம் வந்தது.. அவளை வேலைக்குச் சேர்க்கக் கூடாதென்று அவள் முகத்துக்கு நேராகவே சொல்கின்ற துயரத்தைக் காது கொடுத்துக் கேட்ட பின்பும் அந்த வேலைக்குப் போய்த்தான் ஆக வேண்டுமா என்று அவளின் சுயமரியாதை அவளை கேள்வி கேட்டது..

'போகாமல் இருந்து விடலாம்.. இந்த வேலை வேணாம்ன்னு வீட்டில் சொல்லி விடலாம்.. அப்பாவுக்கு வருத்தமாத்தான் இருக்கும்.. ஆனாலும் என்னை அவர் ஃபோர்ஸ் பண்ண மாட்டார்.. அம்மா கோபப் படுவாங்க.. சொல்லிக் காட்டுவாங்க.. ஆனாலும் அவர்களும் என்னைக்

கட்டாயப்படுத்த மாட்டாங்க.. யது கிண்டல் செய்வான்.. உன்னால எல்லாம் முதுகு வளைய வேலை செய்ய முடியாதுன்னு ஹர்ட் பண்ணுவான்.. ஆனாலும் அவனும் என்னை இந்த வேலைக்குப் போயே ஆகனும்னு சொல்ல மாட்டான்..'

இலக்கிலாமல் எதையோ தேடிக் கொண்டிருக்கும் தெளிவற்ற சிந்தனையைக் கொண்டவள் என்று அனுராதாவாலும் யது நந்தனாலும் கூறப்படும் யாமினி மிகத் தெளிவாக யோசித்துக் கொண்டிருந்தாள்..

சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸில் கிடைத்திருக்கும் அந்த வேலையை மறுத்தால் ஏற்படப் போகும் பின் விளைவுகளை சீர் தூக்கிப் பார்த்து சிந்தித்தது அவள் மனம்..

எப்படி யோசித்தாலும்.. அந்த வேலை வேண்டாம் என்ற முடிவை அவள் எடுத்து விட்டால் அவளது குடும்பத்தில் தடை ஏதும் சொல்ல மாட்டார்கள் என்ற பதிலே அவளுக்குள் கிடைத்தது.. அவளது குடும்பம் அப்படிப்பட்டது.. சொல்லிக் காட்டினாலும் சிறகுகளுக்கு அடியில் அவளைப் பொத்தி வைத்து பாதுகாக்கும் அம்மா.. தலையால் குட்டு வைத்து வம்புக்கு இழுத்து கிண்டல் செய்தாலும்.. அவளுக்காக எதையும் செய்யத் தயங்காத அண்ணன்.. அவளது மனம் நோக பேசியறியாத அப்பா என்று வரங்கள் சொந்தங்களாகக் கிடைக்கப் பெற்ற பாக்கியசாலி அவள்.. அந்த வேலையை மறுக்க அவளுக்கு தடையேதும் இல்லை..

'ஆனால்..?'

இந்தக் கேள்விதான் அவளை இமை மூட விடாமல் அலைக்கழித்தது.. கட்டிலுக்கு அருகிலிருந்த அப்பாயிண்ட் மென்ட் ஆர்டரை அவள் பார்த்தாள்.. அவளது இதயம் தடதடத்தது..

காலை முதல் மாலை வரை யாருக்காக அந்தக் கடிதம் காத்திருந்தது..? தோட்டத்தில் சுழன்ற சூறாவளிக் காற்றினால் ஏன் அந்தக் கடிதத்தை சூறையாட இயலவில்லை..? கருத்திருந்த கார் மேகங்கள் மழை பொழிவதை ஏன் நிறுத்தி வைத்திருந்தன..?

'இதுதான் விதியா..?'

10

வைரமென என் வாழ்வில் வந்த உன் வைரத்தின் பெருமை என்ன..?

வசுந்தரா தேவி இமைக்காமல் வர்மனின் மார்பில் புரண்ட கனத்த தங்கச் சங்கிலியிலிருந்த வைரப் பதக்கத்தில் பதிக்கப்பட்டிருந்த ஒற்றை வைரத்தையே உற்று நோக்கினாள்..

அதன் ஒளிர்வில் அந்தப் பிராந்தியமே பிரகாசிப்பதை அவளால் உணர முடிந்தது.. அதன் ஒளி வெள்ளத்தில் விழிகள் கூச அவள் இமைகளை மூடிக் கொள்ள முற்பட்டாள்..

“இத்தகைய வைரத்தை இந்த அவனியில் எங்குமே கண்டுவிட இயலாது குழந்தாய்..!” பிரமிப்புடன் கூறினார் கைலாசநாதர்..

‘தில்லிப் பேரரசையே விலைக்கு வாங்கி விடக் கூடிய வைரத்தை பதக்கத்தில் பதித்துக் கொண்டு இவன் சாமானிய புரவிவீரனாக நாடோடி போல ஏன் சஞ்சரிக்க வேண்டும்..?’

வசுந்தராவின் மனதில் இவ்வினா உதித்ததும் தாமதமின்றி அவள் அதை உரைத்து விட்டாள்..

மனதை மறைத்துப் பேசியறியாத அவளின் தன்மையில் கைலாசநாதர் பதறி விட்டார்..

“எந்த வார்த்தையை உச்சரிக்கும் முன்பும் ஓர்முறை சிந்தித்துப் பின் உரையாற்ற வேண்டும் என்று உன்னிடம் பலமுறை கூறிவிட்டேன் வசுந்தரா..! நீ செவி மடுக்க மறுக்கிறாய்.. அகத்தில் உள்ளதை மறைக்காமல் இயம்பிவிடும் உனது சுபாவம் பாராட்டத்தக்கதுதான் அம்மா..! ஆனால்.. அனைத்துப் பொழுதுகளிலும் அதை பாராட்டி விட இயலாது.. இடம், பொருள், காலம் இவற்றை அறிந்து உரையாற்ற என்றுதான் நீ கற்றுக் கொள்ளப் போகிறாயோ..”

கைலாசநாதரின் அங்கலாய்ப்பில் வசுந்தராதேவி சங்கடம் கொண்டாள்.. அவரைக் காண வணிகர்கள் சிலர் வருகை புரிந்துள்ளனர்.. அவர்கள் முன்னிலையில் இத்தகைய கண்டிப்பான மொழிகளை அவர் உரைத்

திருந்தாலும் அதைக் குறித்து இந்த அளவுக்கு அவள் சங்கடம் கொண்டிருக்க மாட்டாள்..

வர்மனின் முன்னிலையில் அவளின் மழலைத் தனமான பேச்சை கைலாசநாதர் கண்டித்துப் பேசியதைத் தான் அவளால் தாங்கி கொள்ள இயலவில்லை..

'இவன் என்னைக் குறித்து என்ன நினைப்பான்..?'

அவளது விழியோரம் கண்ணீர் அரும்பு கட்டிவிட்டது.. அதைக் கண்ணுற்ற வீரபாகுவும், வர்மனும் வசுந்தராவுக்காக பரிந்து கொண்டு வருகை தந்தார்கள்..

"குழந்தைதானே அய்யனே..! இல்லத்தின் நான்கு சுவர்களுக்குள் பாதுகாவலாய் வளரும் மழலை..! ஆலய வழிபாட்டிற்காக ஏகாம்பரேஸ்வரரின் ஆலயத்திற்கும்.. அருளாளப் பெருமாளின் ஆலயத்திற்கும் சென்று வருவதைத் தவிர வேறு எங்கும் சென்றிராத அறியாப் பெண்..! வெளியுலகின் சேதிகளைப் பற்றித் தாங்களும் இல்லத்தில் பகிர்ந்து கொள்வதில்லை.. பெருமான் எவரென்றும்.. அவர் அணிந்திருக்கும் வைரப் பதக்கத்தின் பெருமையைப் பற்றியும் வசுந்தராதேவி அம்மையாருக்கு எவ்விதம் தெரிந்திருக்கும்..?"

வீரபாகுவின் நெடிய விளக்கத்தில் கைலாச நாதரின் மனத்தாங்கல் குறைந்து கொண்டிருக்க.. வசுந்தரா தேவியின் மனத்தாங்கல் அதிகரித்து விட்டது..

"சந்தடிசாக்கில் எம்மை அம்மையார் என்று விளிப்பீர்களா..?" என்று வீரபாகுவிடம் வாதுக்கு கிளம்பி விட்டாள்..

"ஹா.. ஹா.." வர்மன் உரக்க நகைத்து வைத்தான்..

வசுந்தராதேவியின் சிவந்த வதனம் மேலும் சிவக்க.. அவள் பற்களை நறநறத்தாள்..

"கிடைத்தது வாய்ப்பு என்று தாமும் என்னைப் பரிகசித்து நகைக்கக் கிளம்பி விட்டீரா புரவி வீரரே..?" என்று வர்மனுடனும் போர் தொடுத்தாள்..

"புரவி வீரரா..?"

கைலாச நாதரின் குறைந்த சினம் இமயம் போல எழுந்து நின்றது..

"சினம் கொள்ள வேண்டாம் கைலாச நாதரே..!" என்று அவரை சமாதானப் படுத்தினான்..

"தங்களின் மேன்மை அறியாமல் இவள் புரவி வீரர் என்று உங்களை விளிக்கிறாளே அரசே..!"

"தாமே அவள் அறியாப் பெண் என்பதை உரைக்கின்றீர்கள் அல்லவா..? கானகத்தில் இவளிடம் புரவி வீரன் என்றுதானே நான் அறிமுகமானேன்..? எவ்விதமாக நான் இவளுக்கு அறிமுகமானேனோ அவ்விதம்தானே இவள் என்னை விளிப்பாள்..? தமக்கு வேண்டுமானால் நான் அரசனாக இருக்கலாம்.. இவளுக்கு நான் புரவி வீரன்தான்.. இவள் அவ்விதம் என்னை விளிப்பதையே ஆனந்தமாக நான் எண்ணுகிறேன்.."

வர்மனின் கம்பீரமான உரையில் கைலாச நாதரைக் காண வந்திருந்த வணிகப் பெருமக்கள்..

"ஆஹா..! அற்புதம்..!" என்ற ஆச்சரிய ஒலிகளை எழுப்பினார்கள்.. அவர்களின் கரங்கள் குவிந்திருந்தன.. வதனங்களில் பிரமிப்பும், ஆனந்தமும், பணிவும், மரியாதையும், கலந்த உணர்வுக் கலவைகள் பிரதிபலித்தன..

"பெரும் பேறு பெற்றோம் நாம்.." என்றார் ஓர் வணிகர்.

'இதைத் தவிர வேறு வார்த்தைகளே இவர்களுக்குக் கிட்டாது போல.. வீரபாகுவும் இதையேதான் உரைத்தார்.. எமது தந்தையாரும் இவ்வார்த்தைகளையே உச்சரித்தார்.. தற்போது இவர்களும் அவர்களைப் பின்பற்றுகின்றனர்..'

வசுந்தராதேவி வர்மனுக்கு மட்டும் தெரியும்படியாக இதழ் வளைத்து.. சுழித்து.. அழகு காட்டினாள்.. அதில் வர்மனின் விழிகள் மின்னின.. அவன் எவரென்பதை அறியாமல் அவள் மேற்கொண்ட மழலைத்தனமான செய்கைகள் அனைத்தும் அவள்பால் அவனை ஈர்த்தன.. மழையின் குளுமையை மனதில் அவன் உணர்ந்தான்..

"யாம் காண்பது கனவா.. அல்லது நனவா..?" மற்றொரு வணிகர் கூற..

'யாதடா.. இதுவரை இந்த பிரசித்தி பெற்ற வார்த்தைகளை இவர்கள் உதிர்க்கவில்லையே என்று எண்ணினேன்.. இதையும் உரைத்தாகி விட்டது.. இவனைக் காண்பவர் இது சொப்பனமா என்று திகைத்துப் போகும் அளவிற்கு இவன் பிரசித்தி பெற்றவனா..?'

வசுந்தராதேவி அவனை உற்று நோக்கினாள்.. ஆறடி உயரமும்.. அகன்ற மார்புமாக இருந்தவனின் எழில் மிகுந்த தோற்றம் அவளைப் பிச்சியாக்கியது..

'இவனது கம்பீரம் பொங்கும் கட்டழகு மேனியிலும்.. எழில் ததும்பும் வதனத்திலும் பிரசித்தி பெற்றவனாக இருப்பானோ..'

அவ்விதம்தான் இருக்கும் என்ற முடிவிற்கு அவள் வந்தாள்.. அவள் ரசிக்கும் அவனது கட்டழகு மேனியினை அவனியே ரசிக்கிறது என்பதில் அவளுக்குள் கடலளவு பொறாமை எழுந்தது..

'இவனை அங்கியில்லாமல் வெற்று மார்புடன் பட்டு அங்கவஸ்திரத்தை மட்டும் போர்த்திக் கொண்டு அவனி முழுவதும் உலா வரும்படி எவர் உரைத்தது..?' அவள் சினம் கொண்டாள்..

அடர்ந்த அவனது சிகையையும் மற்ற வீரர்களைப் போல விரித்து பிடறியில் படிய விடாமல்.. சிரத்தின் ஒரு புறமாக வளைத்து.. மிக நேர்த்தியாக அவன் கொண்டையிட்டிருந்தான்..

'ஆண்டாளின் கொண்டையைப் போல அல்லவா இவனது கூந்தலையும் இவன் கொண்டையிட்டிருக்கிறான்.'

அதற்கும் அவள் சினம் கொண்டாள்..

'இவ்விதம் மற்றவர்களின் கவனத்தைக் கவரும்படி கொண்டையிட்டால் இவன் தனித்துத் தெரிய மாட்டானா..?

காரிகையரின் கருவிழிகள் இவனை வட்டமிட்டுச் சுற்றாதா..?'

மனதுக்குள் பொருமினாள்..

'ஓர்வேளை.. இவனது திட்டமும் அதுதானோ என்னவோ...' அவன்மீதான அடுத்த குற்றத்தைக் கண்டு பிடித்தவள் அவனை வெட்டும் விழிப் பார்வையுடன் நோக்கி வைத்தாள்..

அவளையே நோக்கிக் கொண்டிருந்த வர்மனின் விழிகள்..

'யாது..?' என வினவி வைத்தன..

'அவசியம் அதைத் தம்மிடம் கூறித்தான் தீர வேண்டுமோ..?' அவள் அதரங்களைச் சுழித்தாள்..

அவன் விழிகளில் மின்னலுடன் புருவங்களை ஏற்றி இறக்கி அவள் மனதை கொள்ளை கொண்டான்..

'வசீகரம் நிரம்பிய வசியக்காரன்..'

பொங்கிய உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வரப் போராடிய வசுந்தரா அவனை மனதிற்குள் திட்டித் தீர்த்தாள்..

அவன் வசீகரம் நிரம்பிய வசியக்காரன் மட்டுமல்ல.. இன்னும் பல கீர்த்திகளைக் கொண்டவன் என்பதை வணிகப் பெருமக்கள் உரத்த குரலில் கூவினர்.. அதை செவிமடுத்த வசுந்தராதேவியின் விழிகளில் இருந்த மயக்கம் தொலைந்து போனது..

'இவன் இத்துணை கீர்த்தி மிக்கவனா..?' அவள் நடுநடுங்கிப் போனாள்..

அவளது நடுக்கத்தை உணராமல் கைலாசநாதரும், வீரபாகுவும், மற்ற வணிகப் பெருமக்களும் கூடி நின்று மாற்றி மாற்றி வர்மனின் பெருமைகளைக் கட்டியம் கூறி வியந்து புகழ்ந்து கொண்டிருந்தார்கள்..

"சங்கமத்தீரன் என்று தமிழகத்தில் கொண்டாடப் படும் கீர்த்திமிக்க எமது பெருமானே..!"

"விற்போர் முதற்கொண்டு அனைத்துப் போர்களிலும் சிறந்த மாவீரரே..!"

"ராஜதந்திரத்தில் இணையற்ற அரசர்பெருமானே.."

"சமஸ்கிருதப் பண்டிதர் எனப் புகழப்படும் மன்னாதி மன்னரே..!"

"பிரதியும்னாப்யுதம் என்ற நாடகத்தை இயற்றிய இலக்கிய சிகாமணியே..!"

"மகாகவியென்று புலவர்களால் போற்றப்படும் புலமை கொண்ட பெருமானே..!"

"இந்த அவனியிலே தம்மிடம் உள்ள வைரத்தைப் போல வேறு எவரிடமும் இல்லை என்ற பெருமையைக் கொண்டிருக்கும் அரசர் பெருமானே..!"

"ஓர் அரசையே விலைக்கு வாங்கும் மதிப்பு மிக்க இவ்வைரத்தை அணிந்திருக்க.. தம்மைவிட தகுதி கொண்ட மனிதர் இவ்வுலகில் உண்டா..?"

"கலைகளின் காவலனே..!"

"மாவீரனே..!"

"வாட்போர், விற்போர், மற்போர்.. என்று எந்தவொரு போர்முறையிலும் எவராலும் வெற்றி கொள்ள இயலாத வீரம் மிக்க மன்னரே..!"

"கலைகளில் கை தேர்ந்தவரே..!"

"யாழ் மீட்டுவதில் வல்லவரே..!"

"சமஸ்கிருத மொழியின் மிகச் சிறந்த பண்டிதரென போற்றப்படும் கீர்த்தி மிக்க அரசரே..!"

"சமரில் நிகரற்றவரே..!"

"சங்கம தீரரே..!"

"'வே' நாட்டின் வேந்தரே..!"

"கொல்லம் முதல் கோட்டயம் வரை பரந்திருக்கும் கேரள சாம்ராஜ்யத்தின் பேரரசரே..! சேர மன்னரே..!"

"பாண்டியரின் தாயாதிச் சண்டையிலே உட்புகுந்து.. தமிழகத்தை தவிடு பொடியாக்கி கொள்ளையடிக்கும் மாலிக்காபூரிடமிருந்து தமிழகத்தை மீட்க வந்த மாமன்னரே..!"

"இந்துதர்மம், இந்து சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வீறு கொண்ட வேங்கையாக 'வே' நாட்டை விட்டுக் கிளம்பி வருகை தந்திருக்கும் காவலரே..!"

“சேர மன்னர் ராஜாதி ராஜா ரவிவர்ம குலசேகர மன்னாதி மன்னர் அவர்களே..!”

“தமைக் காணும் பெரும்பேறு பெற்ற இந்நாளை பொந்நாள் என எண்ணிப் போற்றி வணங்குகிறோம்.. தாம் வாழ்க..! தமது புலமை வாழ்க..! தமது கலைத்திறன் வாழ்க..! தமது வீரம் வாழ்க..! தமது கொடை வாழ்க..! தமது புகழும் கீர்த்தியும் எட்டுத் திக்கும் எதிரொலிக்க ஓங்கட்டும்.. தமது புகழை வரலாறு பொன் எழுத்துக்களைக் கொண்டு பொறிக்கட்டும்.. தமது ஆயுள் நீடிக்க.. காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரரும், அருளாளப் பெருமாளும் அருள் புரியட்டும்..”

ஒருமித்த குரலில் எழுந்த பக்தியில் வசுந்தரா விதிர்த்துப் போனாள்.. அவளால் எதிரிலிருந்த புரவியில் அமர்ந்திருந்த வர்மனை நேர் கொண்டு பார்க்க இயலவில்லை..

‘இவன் ராஜா ரவிவர்மனா..?’

அவளால் நம்ப இயலவில்லை.. இல்லத்தின் நான்கு சுவர்களுக்கு மத்தியில் வளர்ந்திருந்தாலும்.. அவளும் கல்வி கற்றிருக்கிறாள்.. கற்பித்த ஆசிரியர்கள் ராஜா ரவிவர்மனின் புகழ் பாடுவதை செவி மடுத்திருக்கிறாள்.. ஆலய வழிபாட்டிற்கு செல்லும்பொழுது தோழமை பூண்ட தோழிகளின் வாயிலாக.. சேரப் பேரரசனின் பெருமைகளை அறிந்திருக்கிறாள்..

‘வே’ நாடு என்று அழைக்கப்படும் சேரநாடு கொல்லம் முதல் கோட்டயம் வரை பரவிப் படர்ந்த பேரரசு..

கேரளத்து மக்களை ஆளும் சேர மன்னன் ராஜா ரவிவர்ம குலசேகரன்.. மேற்கு கேரளா ஒரு துறைமுக நகரம்..

தென்னை.. பலா.. என இயற்கை வளம் கொழிக்கும் பசுமையான மரங்கள் சூழ்ந்த மலைநாட்டின் மாமன்னன் கலைகளை ஆராதிப்பவன்.. மாவீரன்.. வாட்போர், விற்போர், மற்போர் என்று எவ்வகைப் போர் முறையிலும் அவனை எவரும் வெற்றி கொண்டு விட இயலாது.. கலைகளில் கரம் தேர்ந்தவன்... அவன் தீட்டிய காவியங்களின் உயிர்ப்பைப் பற்றி கைலாசநாதர், அங்கயற்கண்ணியிடம் வியந்து பேசுவதை வசுந்தரா பலமுறை செவி மடுத்திருக்கிறாள்..

'அந்த இணையற்ற மாமனிதனான ராஜா ரவிவர்மன் இவன்தானா..?'

சமஸ்கிருதத்தில் மாபெரும் பண்டிதன் அவன்.. சமரில் நிகரற்றவன் அவன்.. தமிழகம் கேரளத்து மாமன்னனை 'சங்கம தீரன்' என்ற நாமம் அளித்துக் கொண்டாடிக் கொண்டுள்ளது... ராஜதந்திரத்தில் இணையற்றவன்.. பிரதியுக்னாப்யுதம்.. என்ற நாடகத்தை இயற்றியவன்.. மகாகவியென்று புலவர்களால் போற்றப் படுகிறவன்..

'அந்த மகாராஜா ரவிவர்ம குலசேகரன் இவன் தானா..?'

இந்து தர்மம் சிதையாமல் காக்க வந்த காவலன்.. ஆலய வழிபாட்டை தடை செய்யும் மூர்க்கர்களை

விரட்டியடிக்க கிளம்பி வந்த மாவீரன்.. இந்து சமுதாயத்தை அச்சமின்றி வாழ வைக்கும் கடமையை கரத்தில் எடுத்த சிம்மம் போன்றவன்..

'அந்த வீராதி வீர ராஜா ரவிவர்மன் இவன்தானா..?'

அவனா அவளது பாதங்களை தனது மடியில் ஏந்தினான்..? அவனா தண்ணீர் கொண்டு அவளது பாதங்களைக் கழுவினான்..? அவனா அவளது பாதங்களின் காயங்களுக்கு மருந்திட்டான்..? அவனா அவளது இடையினில் கரம் கொடுத்து ஓர் காதலனைப் போலக் கரங்களில் ஏந்தினான்..? அவனா அவளது தேகத்தோடு தேகம் ஒன்றியவனாக புரவியிலே பயணம் செய்தான்..? அவனா அவளை வசியம் செய்து வசத்தில் வைத்திருக் கிறான்..?

எட்டாத ஆதவனின் மீது இளங்குருத்து ஆசை கொள்ளலாமா..? வசுந்தராவின் இதயத்தில் சோகம் கவிழ்ந்தது.. அவளது மலர்ந்த வதனம் வாடுவதையும்.. சுழித்த அதரங்கள் குற்ற உணர்வோடு பற்களில் சிறை படுவதையும்.. அவளது விழிகளில் பரிதவிப்பு தோன்று வதையும் அவதானித்த ரவிவர்மனின் இதயம் வலித்தது..

அது நாழிகை வரை அவனுக்கும் அவளுக்கும் இடையிலிருந்த விழிகளுக்கு புலப்படாத ஆழ்ந்த பந்தம் அறுபடுவதைப் போல அவன் உணர்ந்தான்.. அவனைச் சூழ்ந்திருந்தோரின் கட்டிய வார்த்தைகள் அவனது

செவிகளில் வேம்பாக கசந்து இறங்கின.. எவ்வித அடையாளமுமின்றி.. ஓர் புரவி வீரனாக அவளுடன் இசைந்து பழகிய பொழுதுகளே அவனுக்கு இனிமையாக இருந்தன.. நினைவு கூறும்போதெல்லாம் இனிப்பை அள்ளித் தரும் அப்பொழுதுகளைத் துறந்து விட்டு மன்னாதி மன்னனக வலம் வர வேண்டுமா என்ற ஏக்க நெடும் மூச்சு அவனுள் பிறந்தது..

கானகத்தில் வர்மனாக அவள் முன் தோன்றியவன் சேர நாட்டின் மன்னாதி மன்னன் ராஜா ரவிவர்மன் என்பதில் திகிலும்.. ஏமாற்றமும் ஒருங்கிணைய.. கண்கள் கலங்கிய வசுந்தராதேவி.. இமைநீரை கைலாசநாதரும்.. மற்றவர் களும் கண்டு விடாமலிருக்கும் பொருட்டு சிரம் தாழ்த்தி நிலத்தைப் பார்த்தாள்..

நிலத்தில் நெடிய உருவம் கொண்ட ராஜா ரவிவர்மனின் கம்பீரமான தோற்றத்தின் நிழல் படிந்திருந்தது..

'இவனது நிழலை ஸ்பரிசிக்கக் கூட எனக்குத் தகுதியற்றுப் போய் விட்டதே..' அவளது இதயம் விம்மியது..

மன்னாதி மன்னன் ராஜா ரவிர்மர்மன் எங்கே..! அவள் எங்கே..! விண்மீது மண் விருப்பம் கொள்வது எவ்வகையில் சாத்தியமாகும்..?

அவளது வேதனையை கண் கொண்டு காணச் சகிக்கவில்லை ரவிமர்மனுக்கு.. அவன் எவரென்பதை அறியாத பேதையாய்.. ஒரு சாமானியனாக அவனை

எண்ணிக் கொண்டு மனம் விட்டு வாயாடிய வசுந்தரா தேவியைக் காண அவன் மனம் விழைந்தது..

"எமக்கான கட்டியங் கூறலை நிறுத்தி விட்டு.. தமது புதல்வியைக் காணுங்கள் கைலாச நாதரே..! பாவம்..! சிறு பெண்..! இயல்புக்கு மாறான நிகழ்வுகளைக் கண்ணுற்றதினால் அச்சம் கொண்டிருக்கிறாள்.." கம்பீரமான குரலில் உரைத்தான் ரவிவர்மன்..

காணாதவரைக் கண்டு விட்ட பரவசத்தில் கரங்களைக் குவித்து.. கட்டியங்கூறிக் கொண்டிருந்த கைலாசநாதருக்கும், வீரபாகுவிற்கும், ரவிவர்மன் நினைவுறுத்திய பின்புதான் வசுந்தராதேவி ரதத்தை விட்டு இறங்காமல் அமர்ந்திருப்பதே நினைவுக்கு வந்தது..

"தாங்கள் உரைத்தது சரியான மொழிகள்தான் அரசே..! எனது புதல்வியை இல்லத்தில் பாதுகாவலாய் வளர்த்து வந்தேன்.. வெளியுலகின் கொடூர வதனத்தைப் பற்றி இவள் அறிய மாட்டாள்.. இதுபோன்ற ஆபத்துக்களும் அவனியில் உண்டு என்பதை இன்றுதான் முதன் முறையாக உணர்ந்திருக்கிறாள்.. அந்த அதிர்ச்சியில் ரதத்தை விட்டு இறங்காமல் அமர்ந்து விட்டாள்.."

ரவிவர்மனிடம் பணிவுடன் உரைத்து விட்டு.. கனிவுடன் மகளைப் பார்த்த கைலாச நாதர்.. அவள் ரதத்தை விட்டு இறங்குவதற்காக.. கரத்தை நீட்டினார்..

"அச்சம் வேண்டாம் மகளே..! ஆபத்தை கடந்து விட்டாய்.. இனியாகிலும் இந்த தந்தையின் சொற்களை செவி மடுப்பாய் அல்லவா..? இறங்கி வா.."

வசுந்தரா தேவியினால் பாதங்களை ஊன்ற இயலவில்லை.. வேதனையுடன் வதனம் சுளித்தாள்.. கைலசாநாதர் பதறிப் போனார்..

"என்ன நிகழ்ந்தது அம்மா..? ஏன் வதனத்தில் வலியின் சாயல் தெரிகின்றது..?"

கைலாச நாதரின் பதட்டத்திற்கு வீரபாகு மறுமொழி பகன்றான்..

"வசுந்தரா தேவியின் பாதங்கள் ரணமாகி உள்ளன அய்யனே..! கானகத்தில் இவரைக் கண்ட நமது சேர மன்னர் பாதங்களுக்கு மருந்திட்டு அழைத்து வந்தார்.. அம்மையாரால் பாதங்களை ஊன்ற இயலாது.. ரணம் ஆற ஓர்தினமாவது ஆகலாம்.. அதுவரை அம்மையாரை பாதங்களை ஊன்ற விடாமல் பார்த்துக் கொள்வதே உசிதமானது.."

"என் மகளே..!" கைலாசநாதரின் விழிகளில் நீர் நிரம்பி விட்டது..

"மன்னியுங்கள் அய்யனே..! எனக்கு வேறு மார்க்கம் புலப்படவில்லை.. மாலிக்காபூரின் படைவீரர்களிடமிருந்து தப்ப ரதத்தை.. விரைந்து செழுத்தினேன்.. ஓர் திருப்பதில் அவர்களின் பார்வையிலிருந்து மறைந்தபோது.. வசுந்தரா

தேவி அம்மையாரை மட்டும் ரதத்தை விட்டுக் குதித்து கானகத்திற்குள் தப்பியோடி இல்லம் அடைந்து விட வலியுறுத்தினேன்.. வசுந்தராவும் எனது சொல்படியே ரதத்தை விட்டுக் குதித்து கானகத்திற்குள் ஓடி மறைந்து விட்டார்கள்.. நான் துரிதமாக ரதத்தைச் செழுத்தினேன்.. தொடுத்து வந்த மாலிக்காபூரின் படைவீரர்கள் ரதத்தை துரத்த ஆரம்பித்தார்கள்.. ஆனால்.. கானகத்தில் மிதியடிகளை பாதங்களில் அணியாமல் ஓடிய வசுந்தரா தேவி அம்மையாரின் பாதங்களை கூறிய கற்களும்.. முட்களும் கிழித்து ரணமாக்கி விட்டன.. அந்நிலையில் தான் மன்னர் பெருமான் அம்மையாரைக் கண்டிருக்கிறார்.. அம்மையாரின் பாதங்களுக்கு பச்சிலை மருந்திட்ட பின்னர்.. அவரையும் அழைத்துக் கொண்டு எனைக் காக்க விரைந்தேகி வந்தார்.. எனைச் சூழ்ந்து தாக்கிக் கொண்டிருந்த மாலிக்காபூரின் படைவீரர்களைத் தாக்கி வீழ்த்தினார்.. தப்பியோடிவர்களிடம் மாலிக்காபூருக்கு எச்சரிக்கை விடுத்து செய்தி அனுப்பினார்.. எமக்கும்.. அம்மையாருக்கும் பாதுகாவலாக நமது இல்லம் வரை வருகையும் தந்துள்ளார் அய்யனே..!"

"மன்னரே..!"

ராஜா ரவிவர்மனை நோக்கிக் கரங்களைக் குவித்த கைலாசநாதரின் விரல்கள் நடுங்கின..

"தாம் மட்டும் இவர்களைக் காக்காதிருந்தால்..?"

"கலங்க வேண்டாம் கைலாசநாதரே..! யாம்.. தமைக் காணவே வருகை தந்து கொண்டிருந்தோம்.. வரும் மார்க்கத்தில் இவர்களைக் கண்டு காப்பாற்றி னோம்.. கடமையை ஆற்றியதற்கு நன்றி தேவையற்றது..? எமது மக்களை யாம் காக்காமல் வேறு எவர் காப்பார்..?"

ரவிவர்மனின் கம்பீரமான உரையில் வசுந்தராதேவி இமைகளை உயர்த்தி அவன் வதனம் கண்டாள்... அவனது விழிகளில் மின்னல் வந்தது.. அவள் மட்டும் அறியும்படி புருவங்களை உயர்த்தி இறக்கினான்.. அவனது வழக்கமான அந்த வசீகர செய்கையில் மயக்கம் கொள்ளாமல் வசுந்தரா தேவியின் இதழ்கள் சோக முறுவலை சோகையாக சிந்தின..

'இவள் விலகி விட்டாளா..?' ரவிவர்மன் துணுக் குற்றான்..

அவனால் அந்த விலகலை ஏற்றுக் கொள்ள இயலவில்லை..

'நான் அரசனாக இருந்தால் என்ன..?' சினம் கொண்டான்..

'அது மட்டும்தான் இவளை உன்னிடமிருந்து விலக்கி நிறுத்துமா..? மற்றய உனது அடையாளங்களை மறந்தாயா..?'

அவனது ஆழ்மனம் வினவி வைத்தது.. இதழ் கடித்து மௌனமானான்..

கைலாசநாதரின் இல்லத்தைச் சுற்றி வளைத்திருந்த கோட்டைச் சுவரின் பிரதான வாயிலில் ரதம் ஒன்று வந்து நின்றது..

"எவராக இருக்கக் கூடும்..?" கைலாசநாதர் தனக்குத் தானே வினவியபடி பிரதான வாயிலை நோக்கினார்..

"நமது அம்மையார்தான் வருகை தந்துள்ளார் அய்யனே..!"

ரதத்திலிருந்து இறங்கிய அங்கயற்கண்ணியைப் பார்த்தபடி வீரபாகு உரைத்தான்.. ரதத்தைத் தொடர்ந்து வந்த புரவி ஒன்று.. சூறாவளிக் காற்றின் சுழல் வேகத்தில் பிரதான வாயிலைத் தாண்டி.. கோட்டைச் சுவர்களுக்குள் பிரவேசித்தது.. அதில் வீற்றிருந்த வாலிபனைக் கண்டதும்..

"வருகை தந்து விட்டான்.. இந்த இல்லத்தின் இளம் சிங்கம்..!" என்று சினம் கொண்டார் கைலாச நாதர்..

கோட்டைச் சுவர்களுக்குள் சென்ற வழித்தடத்தில் இல்லம் நோக்கி வந்து கொண்டிருந்த அங்கயற்கண்ணி.. அங்கே குழுமியிருந்தவர்களைக் கண்ணுற்றதும்... உடுத்தியிருந்த சீலையின் முந்தானையைக் கொண்டு தோள்களைப் போர்த்திக் கொண்டாள்..

புரவியில் இருந்து நிலத்தில் குதித்த வல்லவன் கூடியிருந்தோரைக் குறித்துக் கவலை கொள்ளாமல் வசுந்தரா தேவியை மட்டும் நோக்கி..

"எங்கே உலா சென்றிருந்தாய்..?" என்று வாதுக்கு இழுத்தான்..

"அது உன் வழக்கம்.." வெடுக்கென பதில் உரைத்தாள் அவனது தங்கை..

"எனது வழக்கத்தை இன்று உனது வழக்கமாக்கிக் கொண்டது எந்த உரிமையிலாம்..?"

"உலா வருவதை உனக்கு மட்டும் உரிமையென்று எவரேனும் சாசனம் எழுதி வழங்கியுள்ளார்களா..?"

"அது உலக நியதி..! ஆண்கள் உலா வர வேண்டும்.. பெண்கள் இல்லச் சிறையில் இருக்க வேண்டும்.. நியதியை சிதிலமாக்க முனைந்ததுமில்லாமல் ரதத்தை சொந்தம் கொண்டாடிக் கொண்டு அமர்ந்திருக்கிறாய்.."

"நீ உரைத்தாலும்.. உரைக்கா விட்டாலும் இது எனது ரதமே..!"

"பட்டயம் போட்டு வழங்கியது எவர்..?"

"நமது தந்தை..!"

"எனக்கு மட்டும் புரவி..! உனக்கு மட்டும் ரதமா..?"

"நீ ரதத்தில் பட்டுத் திரைச்சீலையின் மறைவில் பதவிசாக பெண் பிள்ளை போல மறைந்து உலாவர தயார் நிலையில் இருப்பதானால் கூறு.. இந்த ரதத்தை உனக்கே உனக்கென்று நான் பட்டயம் போட்டு வழங்குகிறேன்.."

"அந்தப் பட்டயத்தை நீயே பத்திரப்படுத்திக் கொள்.. பெண்பிள்ளை போல பட்டுத் திரைச் சீலையின் மறைவில் பவனி வர வேண்டுமாம்.. எவர்க்கு வேண்டும் இந்த ரதம்..?"

"அஃஃது.."

அந்த அண்ணன் தங்கையின் வழக்காடலில் ராஜா ரவிவர்மனின் வதனத்தில் புன்னகை வந்தது.. மற்ற வணிகப்பெருமக்களும் லேசாக முறுவல் கொண்டனர்.. அந்த வழக்காடலுக்குப் பழக்கமான கைலாசநாதரும்.. வீரபாகுவும் மட்டும் ஒருவர் வதனத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்..

"இவர்களின் வழக்காடலை தடை செய்ய எவராலும் இயலாது.." சிரத்தில் கை வைத்து அலுத்துக் கொண்டார் கைலாச நாதர்..

வீரபாகுவோ.. அவன் வளர்த்த பிள்ளைகளின் குறும்பு மிக்க வழக்காடலை ரசித்து நகைத்தான்..

அதற்குள் அவர்களை சமீபித்து விட்ட அங்கயற்கண்ணி.. மக்களைக் கடிந்து கொண்டாள்..

"நன்றாக உள்ளது.. இல்லத்திற்கு விருந்தினர்கள் வருகை தந்துள்ளனர்.. அவர்களை வரவேற்று உபசரிப்பதை விடுத்து.. தமையனும், தங்கையும், வழக்கடித்துக் கொள்கிறீர்களா..? இந்த அங்கயற்கண்ணி

பிள்ளைகளை வளர்த்திருக்கும் விதம் பற்றி உலகம் இடித்துரைக்க வேண்டுமா..?"

"உலகிற்கு இதை விடவும் பல பணிகள் உள்ளதம்மா.." இலகுவாக பதிலுரைத்தான் வல்லவன்..

"அதுதானே.." தமையனுடன் இணைந்து கொண்டாள் வசுந்தரா..

"இவர்கள் உள்ளார்களே.." செல்ல முறைப்புடன் பிள்ளைகளை பார்த்துவிட்டு.. கணவரின் வதனம் நோக்கினாள் அங்கயற்கண்ணி..!

"ரதத்தை அனுப்ப தாமதம் ஏன்..? காத்திருந்து.. காத்திருந்து.. நாழிகையாகி விட்டதினால்.. நமது உறவினரே.. அவர்களது இல்லத்து ரதத்தில் என்னை அனுப்பி வைத்து விட்டார்கள்.. ஏன் வீரபாகு..! தமது அய்யனுக்குத்தான் வணிகத்தைத் தவிர்த்த வேறு சிந்தனைகள் கிடையாது.. தமக்கும் அவ்வவாறுதானா..?"

எத்தகைய விபரீதத்தில் தமது புதல்வி அகப்பட்டுக் கொள்ளவிருந்தாள் என்பதை அறியாதவளாக வினா எழுப்பிய அங்கயற்கண்ணியிடம் பணிவுடன் விவரத்தை எடுத்துரைத்தான் வீரபாகு..

அங்கயற்கண்ணியின் கரத்திலிருந்த பட்டுப்பை நழுவியது.. அவள் மகளின் அருகே ஓடினாள்..

"என் அப்பனே..! ஏகாம்பரேஸ்வரா..! இது என்ன சோதனை..? ஆலய வழிபாட்டிற்கு சென்று திரும்பிய எனது

மகள் பாவிகளின் வசத்தில் அகப்பட்டுக் கொள்ள இருந்தாளா..? இத்தகைய சோதனையும் காஞ்சி மாநகரை அணுகுமா..? அந்தோ..! என் செய்வேன்..? குலமாதர் இல்லம் விட்டு நீங்கி.. இரு கரங்களையும் குவித்துச் சேவிக்க ஆலயங்களுக்கு செல்லக் கூட தடை வந்து விட்டதா..?"

அங்கயற்கண்ணியின் வேதனைக் குரலைச் செவி மடுக்கப் பொறுக்காத ராஜா ரவிவர்மன்..

"அல்ல தாயே..!" என்றான்..

அவன் குரலில் தந்நிலைக்கு திரும்பிய அங்கயற்கண்ணி விழிகளில் நீர் சொரிய.. பணிவுடன் சிரம் தாழ்த்தி அவனை வணங்கினாள்..

"வணங்குகிறேன் அரசர் பெருமானே..! தாங்கள் இன்றுக் காத்தது எமது புதல்வியை அல்ல.. எமது உயிரை.."

"அறிவேன் தாயே..! இதன் பொருட்டு ஆலய வழிபாட்டை நிறுத்த வேண்டாம்.. நான் உள்ள வரை.. எமது தெய்வங்களின் ஆலயங்களின் கதவுகளை மூட விடமாட்டேன்.. எமது மக்கள் அச்சமின்றி ஆலயம் சென்று வர ஆவன செய்வேன்.."

"ஆயினும் மன்னவரே..! காஞ்சி.. இன்னமும் சேர நாட்டின் ஆளுகைக்குள் வரவில்லையே.."

"வெகு விரைவில் வந்து விடும் தாயே..! இதன் பொருட்டே சில நிலவரங்களை அறிந்து கொள்ள தமது கணவரை நாடி வந்துள்ளேன்.."

"நடக்கும் நிகழ்வுகள் நன்மை பயப்பனவாக இல்லை அரசே..! எமை ஆண்ட தமிழக மன்னர்கள்.. தில்லிப் பேரரசரின் படைகளை தாம்பூலம் வைத்து அழைத்து வந்து தமிழகத்தை தாரை வார்த்து விட்டனரே.. வந்தவர்களும் முதல் பணியாக இந்துக்களின் ஆலய வழிபாட்டை நிறுத்தி வைக்க ஆலயங்களின் கதவுகளை இழுத்து மூடுகின்றனரே.."

"மூடிய கதவுகளை திறப்பேன்.. இந்து தர்மத்தை நிலை நிறுத்துவேன்.. இந்துக்களின் ஆலயங்களை காப்பேன்.. இந்து சமுதாயத்தை அச்சமின்றி வாழ வைப்பேன்.. கவலை கொள்ள வேண்டாம் தாயே..! 'வே' நாட்டை விட்டு நான் காஞ்சிக்கு வருகை புரிந்துள்ளதற்கு மூல காரணமே இதுதான் அம்மா.."

எத்துணைதான் தைரியம் அளித்தாலும் பெற்றவளின் மனக்கிலேசத்தைப் போக்க இயலுமா..?

அங்கயற்கண்ணி துயரத்துடன் மகளை அணுகினாள்.. அவளது பாதங்களின் ரணத்தைப் பார்த்தவளின் விழிகள் கண்ணீரைப் பொழிந்த வண்ணம் இருந்தன..

"மலர் பாதங்கள்..! இல்லத்துக்குள் நடைபயிலக் கூட சிரமம் கொள்ளும் எனது மகளின் பாதங்கள்

தனைக் காத்துக் கொள்ள கானகத்தின் கற்கள் மீதும்.. முட்கள் மீதும் ஓடியனவா..? அவை கிழித்து ரண காயம் கொண்டனவா..?"

"அம்மா.."

மனம் தாளாத வல்லவன் அங்கயற்கண்ணியின் தோள்களை அணைத்து ஆறுதல் மொழிகளைச் சொன்னான்..

"கலங்க வேண்டாம்.. நமது வசுந்தரா எவ்விதச் சேதமுமின்றி இல்லம் திரும்பி விட்டாள்.. மன்னர் அவளைக் காத்துவிட்டார்.."

ஒருவாறாக மனம் தேறிய அங்கயற்கண்ணி.. கலங்கிய விழிகளுடன் குரல் கம்ம..

"வல்லவா..! உனது தங்கையை கரங்களில் ஏந்திக் கொள்வாய்.. அவளால் நிலத்தில் பாதங்களை ஊன்ற இயலாது.." என்று மகனுக்கு ஆணையிட்டாள்..

"அவ்வாறே அம்மா.."

கணப்பொழுதும் தாமதிக்காமல் தங்கையை கரத்தில் ஏந்திக் கொண்டான் வல்லவன்.. தமையனின் தோள் களைப் பற்றிய வண்ணம் ரவிவர்மனை நோக்கினாள் வசுந்தரா.. அவளைத் தமது கரங்களில் ஏந்த இயலாத ஏமாற்றம் அவனது வதனத்தில் விரவியிருந்ததை உணர்ந்து கொண்டவளின் உள்ளம் சற்று அமைதி கொண்டது..

"அங்கயற்கண்ணி..! அரசர் பெருமான் தங்குவதற் கான ஏற்பாடுகளை துரிதமாக கவனிப்பாயாக.." கைலாச நாதர் விருந்தோம்பலைத் துவக்கினார்..

"அவ்விதமே ஆகட்டும்.. நமது மாளிகையின் மேன் மாடத்தின் விருந்தினர் பகுதியை அலங்கரித்து வைக்கிறேன்.. சயன அறையில் ஹம்சதுளிகா மஞ்சத்தை இடச் செய்கிறேன்.. உப்பரிகைகளில் பொன்னூஞ்சலும்.. மஞ்சங்களும் ஆயத்த நிலையில் உள்ளன.. நீராடும் மண்டபத்தில் சுடுநீர் நிரம்பியுள்ளது.. மன்னர் நீராடி வருவதற்குள் அறுசுவையுடன் கூடிய உணவு அவருக்காக காத்திருக்கும்.."

அங்கயற்கண்ணி செல்வச் சீமாட்டியின் விருந்தோம் பலை எடுத்துரைத்தாள்..

ராஜா ரவிவர்மன்.. கைலாசநாதரின் இல்லத்தில் விருந்தினனாகத் தங்கப் போகிறான் என்பதில் வசுந்தரா தேவியின் வதனம் மலர்ந்து விட்டது..

அதைக் கண்ணுற்ற ரவிவர்மனின் விழிகளில் மின்னல் வந்தது.. அவனது ஏமாற்றம் கூறாமல் விடைபெற.. அவன் மனதில் எதிர்பார்ப்புடன் கூடிய ஓர் இன்பம் வருகை தந்தது..

வசுந்தராதேவியின் விழிகளோடு விழிகள் கலக்க ரவிவர்மன் புரவியை விட்டுக் குதித்து இறங்கினான்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



10

உன்னைக் காண வேண்டும் என்பது விதி வகுத்த நியதியா..?

யாமினி அதிர்ந்தாள்.. உடல் தூக்கிப் போட எழுந்து உட்கார்ந்தாள்.. கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த டீப்பாயின் மேலிருந்த தண்ணீர் ஜக்கை எடுத்து தொண்டைக்குள் சரித்தாள்.. அவளது கைவிரல்கள் நடுங்கியதில் பாதித் தண்ணீர் தொண்டைக்குள்ளும்.. மீதித் தண்ணீர் நைட்டியின் மீதும் கொட்டி நனைத்தது..

ஈரமான நைட்டி உடலில் ஒட்டி.. கொஞ்ச நஞ்சமிருந்த தூக்கத்தையும் விரட்டியடித்தது.. கட்டிலை விட்டு இறங்கி ஜன்னலுக்குப் பக்கத்தில் போனாள்.. கதவைத் திறக்க கை வைத்தவளுக்கு வெளியில் கொட்டிக் கொண்ருந்த மழையின் நினைவு வந்தது..

'திறக்கலாமா.. வேண்டாமா..?'

குழப்பத்துடன் நின்றவளின் கை.. என்றைக்கு நான் யோசித்துச் செயல்பட்டேன் என்று அவளிடம் வினவுவதைப் போல தன்னிச்சையாக கதவைத் திறந்து வைத்தது.. சில்லென்ற மழை நேரத்துக் குளிர்காற்று முகத்தில் மோதியதில்..

"ஸ்..ஆ.." என்று சிலிர்த்தவள் ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள்.. திகைத்தாள்..

என்னவோ வானமே கிழிந்து தோரணமாக தொங்கி விட்டதைப் போல.. 'சோ..' வென்ற பேரிரைச்சலுடன் கொட்டிக் கொண்டிருந்த காட்டுமழை நின்று விட்டிருந்தது.. மேகங்கள் அகன்ற நீலவானம்.. பௌர்ணமி முழு நிலவின் ஒளி வெள்ளத்தில் நிர்மலமாக காட்சியளித்தது.. அந்த நிலாவெளியில் நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன..

எப்படி அது சாத்தியமானது என்று யாமினி திக்பிரமை பிடித்து நின்று விட்டாள்..

'கொஞ்ச நேரத்துக்கு முன்னாலதான மழை கொட்டிக்கிட்டு இருந்துச்சு..?'

அவளுக்கு மழை வந்ததா.. இல்லையா..? அதுவும் அவளுடைய பிரமைதானா என்ற சந்தேகமே வந்து விட்டது..

'நான் மட்டும் மழையைப் பார்க்கலையே.. அம்மாவும்தான பார்த்தாங்க.. அண்ணாவும் சொன்னானே..'

அந்த நிலையிலும் அவளுடைய குடும்பத்தில் குழப்பமில்லாத தெளிந்த அறிவுடையவர்களாக அவள் அனுராதாவையும், யதுநந்தனையும்தான் கணித்தாள்.. பிரதாப்பை கணிக்கவில்லை..

அவளுக்குத் தெரியும்.. அவள் வருத்தப்படக் கூடாது என்பதற்காக.. அவள் கருமை நிறமுடைய கொக்கு பறக்கிறது என்று சொன்னாலும் உடனே அதை ஆமோதித்து..

"அட.. ஆமாம்மா.. அதோ.. அங்கே கருப்பு நிறத்தில கொக்கு பறக்குதே.." என்று பிரதாப் கை காட்டி விடுவார்..

அனுராதாவும்.. யதுநந்தனும் அந்த வேலையைச் செய்ய மாட்டார்கள்.. மாறாக.. அவளைக் குறித்த விமரிசனங்களை கடைபரப்பி.. அவளை அக்கு வேறு.. ஆணிவேறாக ஆக்கி விடுவார்கள்..

"என்னது.. 'கருப்புக் கொக்கு' பறக்குதா..?"

அனுராதா கேள்வி கேட்கும் தினுசிலேயே யாமினியின் அனைத்துப் பிரமைகளும் ஆளாய் பறந்து கொண்டு ஓடிவிடும்.. ஏற இறங்க மகளை அவள் பார்த்து வைக்கும் பார்வையில் மிச்சமிருக்கும் பித்தமும் தெளிந்து விடும்..

"கேட்டியாடா யது..! 'கருப்புக் கொக்கு' பறக்குதாம்.."

மகனிடம் படுநக்கலாக அவள் சொல்லும் விதத்தில் அங்கிருந்து பறந்து ஓடி விடலாமா என்று யாமினி யோசித்து வைப்பாள்..

யதுநந்தன் அனுராதாவை விட நக்கலடித்து வைப்பான்.. அவன் பேசும் பேச்சில் அனுராதாவே தேவலாம் என்று யாமினிக்கு ஆகி விடும்..

"இவதான..? என்ன வேணும்னாலும் சொல்லுவா.. கேக்கிறது கேணை அப்பாவா இருந்தா.. இவ வானத்தில வளையம் வரைஞ்சேன்னு கூட காது குத்துவா.. இவ பேசற பேச்சைப் போய் ஒரு பேச்சாக் கணக்கில எடுக்க அவரால மட்டும்தான் முடியும்மா.."

"அவர் தெய்வப்பிறவிடா மகனே..!"

"நீங்களும் நானும் சாதா மனுசப் பிறவியாவே இருந்து வைப்போம்.. இவ விசித்திரப் பிறவியா பிறந்து வைச்சிருக்கிறா.. அப்பாவோ தெய்வப் பிறவியா இருந்து வைக்கிறாரு.. இந்த ரெண்டு பிறவிகளையே வீடு தாங்கலை.. இதில.. நீங்களும், நானும் கூட்டுச் சேர்ந்திட்டா குடும்பம் தாங்காது.. நாம விலகியே நிக்கலாம்.."

"அதச் சொல்லுடா.. பக்கத்தில நின்னா இதுக புத்தி நமக்கும் தொத்திக்கும்.."

தாயும், மகனும்.. ஓட்டும் ஓட்டலில்.. யாமினிக்கு அழுகையே வந்து விடும்..

ஆனாலும்கூட.. ஒரு விசயத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டுமானால் அவள் அனுராதாவிடமும்.. யது நந்தனிடமும் தான் ஆலோசனை கேட்பாள்.. பிரதாப்பிடம் கேட்க மாட்டாள்..

'அப்பா எனக்காகப் சொல்கிறதாய் நினைச்சுக்கிட்டு.. உண்மையைச் சொல்ல மாட்டார்.. மறைச்சுப் பேசி வைப்பார்..'

'அன்பான அப்பா..!'

அவளுடைய மனது நோகக் கூடாது என்பதற்காக.. அவரது சுபாவத்திற்கு மாறான இனிப்பான பொய்களைக் கூறும் அப்பாவை நினைத்து அவள் மனம் நெகிழ்ந்தது..

'அம்மா மட்டும் என்னவாம்..?'

அவள் மனதில் கேள்வி எழுந்தது.. அனுராதாவிற்கு யாமினி மீது அன்பு இல்லையா..?

இருக்கிறது.. கொள்ளை கொள்ளையாக பாசத்தை அவள் தன் மனதில் பூட்டி வைத்திருப்பதை யாமினி அறிவாள்.. என்ன ஒன்று.. பிரதாப்பைப் போல அவள் தனது பாசத்தை வெளிப்படையாக காட்டிக் கொள்ள மாட்டாள்.. மகள் மீதான பிரியத்தை மனதுக்குள் பொத்தி வைத்துக் கொண்டு வெளியே முள் போல வேசம் காட்டும் தாயின் அப்பழுக்கற்ற ஆழ்ந்த பாசத்தை பல தருணங்களில் யாமினி கண்டிருக்கிறாள்..

அனுராதாவின் பாசம் பலாப்பழத்தின் பழாச்சுளைக்கு நிகரானது.. உள்ளே இனிப்பான பழாச்சுளையின் தேன் கொட்டும் பாசத்தை ஒளித்து வைத்துக் கொண்டு.. வெளியே முள்ளாக மகளைக் குத்தும் தன்மை கொண்டவள் அனுராதா..

அந்த முள் போன்ற சிடுசிடுப்பையும் மகளை அவளுடைய பிரமையிலிருந்து வெளியில் கொண்டு வருவதற்காகவே அவள் பிரயோகிப்பாள்..

அனுராதாவின் அந்தத் தன்மை மட்டும் இல்லாது போயிருந்தால்.. யாமினி அவளைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருந்த ஆழ்ந்த பிரமைக்குள் புதையுண்டிருப்பாள்..

அனுராதாவின் 'சுளீர்' என வலிக்கும் பேச்சுக்களும்.. கொட்டுக்களும்.. மொத்துக்களும்தான்.. யாமினியை நடப்பு உலகிற்கு இழுத்து வந்து நிலை நிறுத்திக் கொண்டிருந்தது..

இதில் ஆபத்பாந்தவனாய்... அன்னைக்கு கரம் கொடுத்து உதவிக் கொண்டிருப்பவன் யதுநந்தன்..

"இவ மெகாலு பிடிச்ச கேஸிம்மா.."

கொஞ்சம்கூட இரக்கமேயில்லாமல் விமரிசிப்பான்.. என்னடா... இப்படி முகத்திற்கு நேராக சொல்லி வைக்கிறோமே.. இதனால் தங்கையின் மனம் பாதிக்கப் படுமே என்று கொஞ்சம்கூட ஈவு, இரக்கம் பார்க்க மாட்டான்.. தயவு, தாட்சண்யம் காட்ட மாட்டான்..

"ஏய்ய்.. தள்ளு.. எப்பப் பார்த்தாலும்.. சூரியனையும் நிலாவையும் உத்து உத்துப் பாத்துக்கிட்டு.. என்ன..? விண்வெளி வீராங்கனையா போகப் போறியா..? அப்படி ஏதும் உத்தேசமிருந்தாச் சொல்லிரு.. நான் உலகத்துல இருக்கிற அத்தனை விண்வெளி ஆராய்ச்சி மையங்களுக்கும் இடத்தக் காலி பண்ணிட்டு ஓடிப் போயிருங்கப்பான்னு சேதி அனுப்பி வைச்சுடறேன்.. அவங்க தப்பிப் பிழைக்கட்டும்.." என்று சொல்லி வைப்பான்..

அவன் பேசும் பேச்சில் தடித்த தோல் இருப்பவர்களுக்கே 'சுள்..' ளென்று ரோசம் வந்து விடும்.

யாமினிக்கு மெல்லிய தோல்.. சிறு சொல்லைக்கூட அவள் தாங்க மாட்டாள்.. ரோசம் கொப்பளிக்க அவளுடைய பிரமைகளை மூட்டை கட்டி மகாபலிபுர கடலில் போட்டு விட்டு யதுநந்தனிடம் சண்டைக்கு கிளம்பி விடுவாள்..

"ஏய்ய்.. அது உன்னோட பழக்கம்டா.."

"எது..?"

"விண்வெளி ஆராய்ச்சி பண்றது.."

"எனக்கெதுக்கு அந்த வேலை..? சூரியனையும்.. நிலாவையும் பார்த்து எனக்கென்ன ஆகப் போகுது.."

"இத நான் சொல்லனும்.. நீ சொல்லக் கூடாது.. யாரு கண்டது.. சூரிய குமாரியப் போல பெண்ணையும்.. நிலா மகளைப் போலக் காதலியையும் தேடி வைக்கிறயோ என்னவோ.."

"வேல மெனக்கெட்டு நான் ஏன் அந்த வெட்டி வேலையைப் பண்ணப் போறேன்..? எங்க ஆபிசில குமிஞ்சு கிடக்கிற சூரிய குமாரிகளையும், சந்திர குமாரிகளையும் பார்வையிட்டா ஆகாதா..?"

"உனக்கு ஆகும்.. அவர்களுக்கு ஆகனுமே.."

"என் கடைக்கண் பார்வைக்காக எத்தனை பொண்ணுக காத்துக்கிட்டு கிடக்காப்பன்னு தெரியுமா..?"

"எனக்கு மட்டுமில்லடா.. யாருக்குமே தெரியாது.. இருந்தானேடா அண்ணா தெரிஞ்சு வைக்கும்..?"

யதுநந்தனை வாரும் வேகத்தில் தனது பிரமைகளில் இருந்து வெளியில் வந்து விடுவாள் யாமினி..

அந்த வகையில் அவளது பிரமைகளை கொஞ்சம்கூட சட்டையே பண்ணாமல் அவளை இயல்பான பெண்ணாக இருக்க வைக்கும் பெருமை அனுராதாவையும், யது நந்தனையுமே சேரும்.. அவர்கள்தான் யாமினியை உலுக்கிப் பிரமையிலிருந்து வெளியே இழுத்துக் கொண்டிருந்தார்கள்..

பிரதாப் அப்படியல்ல.. மகளின் மனம் நோகக் கூடாது என்பதற்காக.. அவளை அந்தப் பிரமையிலிருந்து வெளியே கொண்டு வராமல் அப்படியே அமிழ விட்டு விடுவார்..

கத்தியெடுக்காமல் ஆப்பரேசன் பண்ண முடியாது.. இதை அனுராதாவும் யதுநந்தனும் அறிவார்கள்.. பிரதாப் உணர மாட்டார்..

11

தொலைதூரத் தொடுவானாய் உயரத்தில் ஏன் சென்றாய்..?

உப்பரிகையின் மேன்மாடத்தில் உலவிக் கொண்டிருந்த ராஜா ரவிவர்மனின் வதனத்தில் குளிர்ந்த

காற்று சில்லெனப் படிந்து பரவியது.. ஈரப் பசையுடன் கூடிய அக்காற்று எங்கிருந்து வந்திருக்கக் கூடும் என்ற ஆராய்தலில் அவன் மனம் ஈடுபட்டது..

'கடல் மல்லையிலிருந்து வந்திருக்கக் கூடுமோ..'

மெலிதான சிந்தனை அவன் வதனத்திற்கு வருகை புரிந்தது.. உப்பரிகையின் மேன் மாடத்தின் சுற்றுக் கோட்டைச் சுவர்களின் மீது படிந்திருந்த முல்லை மலரின் கொடிகள்.. ஏதோவொரு நந்தவனத்திற்குள் அவன் உலாவிக் கொண்டிருப்பதைப் போன்ற உணர்வை அவனுக்கு அளித்துக் கொண்டிருந்தன..

கேரளத்து பசுமையில் வாழ்கின்றவனை அந்த பசுமையான கொடிச்சூழல் ஈர்த்தது..

'சேர நாட்டில் உள்ளதைப் போல.. தமிழகத்தில் ஏன் பசுங்கொடிகளுடன் கூடிய இல்லங்களும்.. மாளிகைகளும் அமையவில்லை..?'

ஓர் இல்லத்திலிருந்து அருகாமையிலிருக்கும் அடுத்த இல்லத்திற்குச் செல்வதற்கே.. உப்பங்கழிகளில் ஓடமோட்டிச் செல்லும் வாழ்க்கைச் சூழலை உடைய 'வே' நாட்டின் வேந்தனாயிருப்பவனின் சிந்தனை இவ்விதம் தானே சிந்தித்து வைக்கும்..?

சுற்றுச் சுவரின் அருகில் சென்று எட்டிப் பார்த்தான்.. கோட்டைச் சுவரை ஒட்டியிருந்த நிலப்பகுதியில் முல்லைக் கொடிகளை நட்டு... மேன் மாடத்தின்

உப்பரிகைகளின் சுற்றுச் சுவரில் அவற்றை படற விட்டிருந்த பாங்கை கண்ணுற்றவன் அதை ரசித்தான்..

'கைலாசநாதரின் திறமை வணிகத்தில் மட்டு மல்லாமல் இல்லத்தைச் சார்ந்த விவரங்களிலும் பளிச்சென ஒளிர் விடுகின்றதே...'

கோட்டைச் சுவரை ஒட்டியிருந்த நந்தவனத்தின் எழிலில் அவன் மனம் லயித்தது..

'அழகிய பூந்தோட்டம்...!'

கேரளத்து பசுமைக்காக ஏங்கிய அவனது விழிகளுக்கு விருந்து படைத்த அந்த நந்தவனத்தின் மையத்தில் கோவில் போன்ற கோபுரத்தைக் கொண்ட ஓர் மணி மண்டபம் தென்பட்டது..

'யாது அது..?'

உற்று நோக்கியவனின் செவிகளில் அந்த இன்னிசை நுழைந்து அவனை ஈர்த்தது..

"ஜல்.. ஜல்.." என ஒலித்த பாதச் சலங்கைகளின் நாதம் அது..

'நடனமா..?'

கலாரசிகனான அவனால் அதற்கு மேலும் உப்பரிகையில் உலாவ இயலவில்லை..

மாளிகையின் மேன் மாடத்திலும்.. அதன் உப்பரிகை களிலும் மலர்மாலை கொண்டு அலங்கரிக்கப்பட்ட

பொன்னூஞ்சல்கள் ஆடிக் கொண்டிருந்தன.. ஆங்காங்கே ஹம்சதூளிகா மஞ்சங்களும் தென்பட்டன.. சுற்றுச் சுவரின் மீது படர்ந்திருந்த முல்லை மலர்க் கொடியில் மலர்ந்திருந்த முல்லை மலர்களின் எழில் மனதை மயக்குவதாக இருந்தது.. அவற்றின் வாசனை ரவிவர்மனின் நாசிகளில் நுழைந்து கிறங்கடிக்க முனைந்தது..

இவை எவற்றாலும் ரவிவர்மனின் மனதை வசப்படுத்திவிட இயலவில்லை.. செவிகளில் பாதச் சலங்கைகளின் நாதத்தை செவி மடுத்த மறு கணமே அவனது பாதங்கள் உப்பரிகையை விட்டு அகன்று.. மேன்மாடத்திலிருந்து நந்தவனத்திற்குள் இறங்கிச் சென்ற படிக்கட்டுகளில் இறங்க ஆரம்பத்து விட்டன..

"ஆ.. ஆ.. ஆ.."

சலங்கையின் ஒலியுடன் இணைந்து வெளிப்பட்ட இனிமையான ஸ்வரத்தில் அவன் நடையை துரிதமாக்கினான்..

மணி மண்டபத்தின் சாளரங்களில் ஒன்றின் பின்னால் மறைந்து நின்று உள்ளே பார்த்தவனின் விழிகள் வியப்பில் மிளிர்ந்தன..

'இவளுக்கு நடனமாடக் கூடத் தெரியுமா..?'

கானகத்தில் அவனிடம் அறியாப் பருவ மங்கையாக அறிமுகமான வசுந்தரா... மணி மண்டபத்தின் மையப்

பகுதியில் தில்லையம்பல நடராஜனின் வெண்கலச் சிலைக்கு முன்னால் சுழன்று ஆடிக் கொண்டிருந்தாள்..

"கங்கையிலே ஓடமில்லையோ..? - என்
கண்ணனின் கரங்களில் நான் தவழ..
எண்ணி வந்த சேதி கூற..
ஹரே.. ஹரே.. கிருஷ்ண ஹரே..!
ஹரே.. ஹரே.. கிருஷ்ண ஹரே..!"

இனிமை நிரம்பிய அவளின் இன்னிசை கீதத்தில் ரவிவர்மன் மயங்கி நின்று விட்டான்... ஆடலுடன் பாடலிலும் அவள் கரம் தேர்ந்தவள் என்பதை பாடிய படியே நடனம் ஆடிய வசுந்தரா நிருபணம் செய்து கொண்டிருந்ததில் கலைஞனான அவனது மனம் கட்டுண்டு அவள் வசமானது..

'இவள் இத்துணை திறன் மிக்கவளா..?!!..'

மழலைத்தனம் மிகுந்த வசுந்தராவின் வதனத்தில் விரவியிருந்த சோகத்தில் அவன் துணுக்குற்றான்..

'என்னைப் பற்றிய அனைத்து விவரங்களையும் இவளது குடும்பத்தார் இவளிடம் கூறியிருக்கக் கூடும்..'

அவற்றை செவி மடுத்ததும் அவளின் கன்னி மனம் எத்தகைய துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் என்று எண்ணிப் பார்த்தவனின் இதயம் வேதனை கொண்டது.. அவனது மனக்கண்ணில் அவனுடைய 'வே' நாடான சேர நாட்டின் தலைநகரமான கொல்லம் எழுந்தது..

அகலமான சாலைகளைக் கொண்ட கொல்லம்.. சேரநாட்டின் தலைநகரம் என்ற பிரசித்தி பெற்ற கீர்த்தியைக் கொண்டது.. பரந்து விரிந்த அதன் நெடுஞ்சாலைகள் கொல்லத்தின் எழிலை பறை சாற்றும் விதமாய் பாங்குடன் அமைந்திருப்பவை..

நேராயப் பெருவழி..! அதன் இரு புறங்களிலும் பெருவிளக்குகள் அமைக்கப் பட்டிருந்தன.. மாலைப் பொழுதிலேயே அவ்விளக்குகள் எரியத் தொடங்கி விடும்.. இரவு முழுவதும் எரியும் அவ்விளக்குகள் அப்பிராந்தியத்தை வெளிச்ச வெள்ளத்திற்குள் ஆழ்த்தி பகல் பொழுதைப் போன்ற தோற்றத்தை அளித்துக் கொண்டிருப்பவை..

குறுக்கிலும், நெடுக்கிலும் ஓடிய வீதிகள் நகரத்தின் கட்டுமான அமைப்பின் லயத்தை அவனிக்கு அறிவிப் பதைப் போல கட்டுக் கோப்புடன் அமைந்திருந்தன..

வீதிகளின் இருபுறங்களிலும் எழுந்து நின்ற பெருமாளிகைகள், அவற்றைச் சுற்றி நின்ற பழ மரங்களின் ஊடே இந்திரலோகத்தின் அரண்மனைகளைப் போன்ற பிரமையை உண்டு பண்ணிக் கொண்டிருந்தன..

சேரநாட்டின் வளமையும், பெருமையும் கொல்லம் நகரத்தின் அனைத்து திக்கிலும் பரவிப் படர்ந்திருந்தன..

கடற்பகுதியை அடுத்து நின்ற பெரிய அங்காடிகளின் வீதிகளில் எழும் இரைச்சல்.. சேரநாட்டின் வாணிபம்

உச்சநிலையில் உள்ளதை உலகுக்கு உரத்த குரலில் சப்தமாக கூவிக் கொண்டிருந்தது..

கடலோர அங்காடிகளின் வணிகத் தலங்களின் மீது ஆடிக் கொண்டிருக்கும் பல தேசத்தின் கொடிச் சீலைகள்.. சேர நாட்டில் அனைத்து தேசங்களின் வணிகத் தலங்களும் உள்ளன என்பதை முரசறிப்பு செய்து கொண்டிருந்தன..

'வே' நாட்டில் வணிகத் தடை கிடையாது.. ஆனாலும் 'வே' நாடு எனப்படும் சேரநாட்டில் அமைக்கப் பட்டிருந்த சுங்கச் சாவடிகளில் சுங்கவரி செலுத்தாமல் எவரும் தேசத்திற்குள் பிரவேசித்து விட இயலாது..

சுவர் போல வழி மறிக்கும் புரவிப்படை சேர மன்னன் ராஜா ரவிவர்மனின் படை பலத்தை எடுத்துக் கூறும்..

கலைகளில் கரம் தேர்ந்தவன்.. சமரிலும் நிகரற்றவன் என்பதை அவனியே அறியும் என்பதாலும் சேர நாட்டில் வணிகம் செய்ய விரும்பும் எவரும் சுங்கவரி செலுத்தாமல் உள்ளே நுழையத் துணிவு கொள்ள மாட்டார்கள்..

புரவி வீரர்களின் சுவர் போன்ற அணிவகுப்பை.. கப்பல்களில் இருந்து.. படகுகளில் இறங்கி.. கரையில் ஏறும் வணிகர்கள் அடைவதற்காக கடற்கரை மணலில் நீண்ட வழித்தடம் உருவாக்கப் பட்டிருந்தது..

துறைமுகத்திலிருந்து எட்ட நின்ற கப்பல்களி லிருந்து படகுகள் பல வந்து கொண்டிருந்தன.. அவற்றில் வணிகர்கள் நிறைந்திருந்தார்கள்..

'சின்னக் கடா..!'

ரவிவர்மனின் மனதில் தனது நகரைக் குறித்த செல்ல விளிப்பு எழுந்தது..

ஆம்.. கொல்லம் நகரை 'சின்னக் கடா..' என்று தான் கேரளத்து மக்கள் அழைப்பார்கள்.. அங்கிருக்கும் அங்காடி வீதிகள் உலகத்தரம் வாய்ந்தவை.. சீனம், எகிப்து.. போன்ற தேசங்களில் இருந்தெல்லாம் கொல்லம் மாநகரின் அங்காடி வீதிகளில் பொருள் விற்க வணிகர்கள் கூட்டம்.. கூட்டமாக வந்து செல்வார்கள்..

மலை உச்சியில் பெரிய மதில்களுடன் கூடிய மாளிகைதான் ராஜா ரவிவர்மனின் அரண்மனை..!

மலைப்பாங்கான கேரளத்தின் அத்தனை எழில்களையும் தன்னகத்தே கொண்டதுதான் ராஜா ரவிவர்மனின் அரண்மனை..!

அதன் பிரதான வாயிலில் நகரம் முழுவதுமே திரண்டு சென்று வரலாம்.. அரண்மனையைச் சுற்றிச் சென்றால் திட்டி வாயில்..! அரச குடும்பத்தவர் மட்டுமே சொந்தம் கொண்டாடக் கூடியது அவ்வாயில்..!

ஆம்.. அத்திட்டி வாயிலின் வழியாக சேர நாட்டின் அரச குடும்பத்தினர் மட்டுமே அரண்மனைக்குள் சென்று வர இயலும்..

மற்றவர்கள் பிரதான வாயிலின் வழியாகத்தான் அரண்மனைக்குள் சென்று வர வேண்டும்..

சேர நாட்டு மன்னனின் அரண்மனையில் உள்ள 'திட்டி வாயில்' அரச குடும்பத்தவர்காக பிரத்யேகமாக அமைக்கப் பட்ட வாயில்..

'அத்திட்டி வாயிலில் சுதந்திரமாக உள்ளே சென்று வர இவளால் இயலாது என்பதை எவரேனும் இவளிடம் இயம்பிருப்பார்களோ..?'

வசுந்தராவின் வேதனை நிரம்பிய வதனத்தை வேதனையுடன் நோக்கினான் ரவிவர்மன்..

கொல்லத்தில் உள்ள அவனது அரண்மனையின் பிரசித்தி பெற்ற திட்டி வாயிலை ஒட்டி அமைந்திருந்தது.. அந்தப் புரத்தின் நந்தவனம்..

அங்கே உலவிக் கொண்டிருக்கும் வேளைகளில் ரவிவர்மன் பகிர்ந்து கொள்ள முனைந்த ரசனை களுக்கு கிட்டிய பதில்களை எண்ணி வெதும்பினான் அவன்..

"தேவி..! இந்த நந்தவனத்தின் எழிலைக் காணும் போது காவியம் புனையத் தோன்றுகிறது.. உனக்கு என்ன தோன்றுகிறது..?"

வினா எழுப்பி விட்டு விடைக்காக காத்திருந்த ரவிவர்மனின் உள்ளத்தில்தான் எத்துனை எத்துனை எதிர்பார்ப்பு..!

அவை அனைத்தையும் சிதிலமாக்கினாள் அந்தத் தேவி..!

"தங்களின் மார்பில் புரளும் வைரத்திற்கு இணையான மதிப்புக் கொண்ட வைர ஆபரணத்தைப் பூட்டிக் கொண்டு இந்த அந்தப்புர நந்தவனத்தில் உலவினால் எத்துணை இன்பமாக இருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது.."

கொல்லத்தின் மலை உச்சியிலிருந்து சிரம் கீழாக விழுவதைப் போன்ற வேதனையை ரவிவர்மன் உணர ஆரம்பித்தது அந்த நொடிகளில் இருந்துதான்..

அவள்.. சேரமாதேவி..! ரவிவர்மனின் பட்டத்து ராணி..! ரவிவர்மன் மாலைசூடி.. மங்கலநாண் பூட்டி மணந்த மனையாட்டி..!

அவள்தான் அவ்விதம் என்றால்.. அடுத்து ரவிவர்மன் மணந்த மற்ற மனைவியர் சேரமாதேவியை மிஞ்சிய கலா ரசனையுடன் இருந்தார்கள்..

"இந்த இனிமையான கானத்தை செவி மடுத்தாயா..?" என்றால்..

"செவி மடுத்தேன் மன்னா..! சீனத்துப் பட்டைப் பற்றி வெகு அழகாக பாடப்பட்டிருக்கிறது.. இதைப் போன்ற ஆடைகளைத் தருவிக்க வேண்டும் என்று தங்களிடம் பலமுறை வேண்டி விட்டேன்.. தாங்கள் மற்ற ராணிகளுக்குத் தருவித்து விட்டு எனக்குத் தருவிக்க மறதி கொண்டு விட்டீர்கள்.." என்றாள் ஒருத்தி..

"மலர்களின் நறுமணத்தை முகர்ந்தாயா..? ஆஹா..! அற்புதம்..! எப்பேற்பட்ட வாசனை..!" என்றால்..

"எமக்கு சமையல் கூடத்தில் பொறிக்கப்படும் நேந்திர வற்றலின் மணமல்லவா நாசிகளில் நுழைகிறது.." என்றாள் மற்றொருத்தி...

"நாடகம் இயற்றியுள்ளேன்.. வாசிக்கவா.." என்றால்..

"வேண்டாம் மன்னா..! அதற்குப் பதிலாக.. எனக்கென்று ஓர் மாளிகையை உருவாக்கி அளிக்கும்படி தங்களிடம் வேண்டியிருந்தேன் அல்லவா.. அதைக் குறித்து உரையாடலாம்.." என்றாள் வேறொருத்தி..

ஆக மொத்தம் சேரமன்னன் ரவிவர்மனின் ராணிகளாக வந்தவர்கள் அனைவரும்.. பொன், பொருள், மற்றும் அறுசுவை உணவின் மீதான அவர்களின் ரசனையை வெளிப்படுத்தினார்களே தவிர ஒருவர் கூட அவனது ஆழ்ந்த ரசனையின் அருகாமையில் கூட வருகை தர யத்தனிக்கவில்லை..

பகிர்ந்து கொள்ள துணையின்றி.. தனித்து இருக்கும் கலைஞனின் மனம் பாலைவன சுடுமணலில் தனித்து நடப்பதற்கு ஒப்பானதாகும்..

ரவிவர்மன் மனதளவில் தனிமை கொண்டான்.. கலைகளில் நிகரற்றவன் என்று உலகோரால் போற்றப் பட்டவன்.. அந்தக் கலைகளை அவனுடன் பகிர்ந்து கொள்ள முனையாமல் பஞ்சணையை மட்டும் பகிர்ந்து கொண்ட மனைவியரால் தனிமைப் பட்டான்..

அவனுக்கு பல ராணிகள் உண்டு.. அவர்கள் மூலமாக பல குழந்தைகளும் உண்டு.. அவனது பட்டத்து ராணியின்

மணி வயிற்றில் உதித்த மூத்த புதல்வன் வாலிப பிராயத்தை எட்டிக் கொண்டிருக்கிறான்..

இளமைப் பருவத்தைக் கடந்து நடுத்தர வயதுப் பிராயத்தைத் தொட்டு விட்ட ரவிவர்மனின் வயதை அவனது வெளித் தோற்றத்தைக் கொண்டு கணித்து விட இயலாது..

கலைகளில் கரம் தேர்ந்தவன்.. சமரில் நிகரற்றவன்.. போர்களில் எவராலும் வெல்ல முடியாதவன் என்ற கீர்த்திகளைப் பெற்றிருந்த ராஜா ரவிவர்மன் எழில் மிக்க வதனமும்.. கவர்ச்சி நிரம்பிய கம்பீரத் தோற்றமும் கொண்ட கட்டழகு மிக்க வாலிபனாகவே கண்களுக்குத் தெரிவான்.

அவனது வயதை மறைத்த அந்த வாலிபத் தோற்றத்தில்தான் வசுந்தராதேவி மனம் மயங்கி விட்டாள்.

'பாவம்.. சிறுமங்கை..!'

அவன் மனம் வசுந்தராதேவியின் மீது பரிதாபம் கொண்டபோது..

'அவள் மட்டும்தான் பாவமா..? நானில்லையா..?' என்று துயரத்துடன் அவன் வினவிக் கொண்டான்..

இதோ.. அவன் கண்ணெதிரே அவன் மனம் கவர்ந்த நங்கை நாட்டியமாடிக் கொண்டிருந்தாள்..

அவன் வாழ்வினிலே எத்தகைய மங்கையின் துணை வேண்டும் என்று ஏங்கித் தவித்தானோ...

அத்தகைய மங்கையாக அவன் முன்னிலையில் சுழன்றாடிக் கொண்டிருந்தாள்..

அவன் செவி மடுக்க விரும்பும் இசையை அவள் பாடினாள்.. அவன் கண்டு மகிழக் துடித்த நடனத்தை அவள் ஆடினாள்.. அவன் மனம் ரசித்து முகர்ந்த அனைத்துக் கலைகளிலும் அவள் கரம் தேர்ந்தவளாக அவன் கண்முன்னால் சுழன்றாள்.. அவனது ரசனைகளைப் பகிர்ந்து கொண்டு.. தனது ரசனைகளையும் எடுத்துரைக்கும் நுட்ப மனம் கொண்ட நுண்ணிய கலைத் திறன் வாய்க்கப் பெற்றவளாக அவன் கண்முன்னால் அவள் நர்த்தனமாடிக் கொண்டிருந்தாள்..

இருந்தும் அவனால் அவளை அணுகிவிட இயலாது என்றால்.. விதியின் சாபத்தை அவன் எவரிடம் சென்று உரைப்பான்..?

'வேண்டாம் ரவிவர்மா..! இப்பெண்ணை மறந்து விடு.. தற்போதுதான் மலர்ந்திருக்கும் அரும்பு இவள்.. நீயோ பல மலர்களில் தேன் பருகிய வண்டு..! கரம் படியாத இவளது தேகத்தில் பல ராணிகளை ஸ்பரிசித்த உனது கரம் படியலாகாது.. இவள் வாழ்க்கையின் தலைவாசலில் நிற்பவள்.. நீயோ வாழ்ந்து பார்த்தவன்.. உனக்கு இவள் துணையாகக் கூடாது.. பாவம் புரியத் துணியாதே..'

அவனது மனம் அவனைத் தடுத்தது.. அவன் மனதில் அசரீரி வாக்கைப் போல வசுந்தராதேவியும் வேதனையுடன் பாடி வைத்தாள்..

அவளது விழிகள் நடராஜனின் சிலை முன்பு ஏற்றி வைக்கப் பட்டிருந்த தீபங்களின் மீது படிந்து விலகின..

"தீபங்கள் கோவிலிலே..
மின்னுவதென்ன..?
அவை பாவங்கள் கூடாதென்று
கூறுவதென்ன..?
வைரங்கள் நெஞ்சினிலே
ஆடுவதென்ன..?
அவை வஞ்சங்கள் வேண்டாமென்று
பாடுவதென்ன..?
கங்கையிலே ஓடமில்லையோ..? - என்
கண்ணனின் கரங்களில் நான் தவழ
எண்ணி வந்த சேதி கூற..?"

ரவிவர்மனின் இதயம் கனத்தது.. அவனது மார்பினில் புரண்ட வைரம்.. வசுந்தரா தேவிக்கு வஞ்சம் இழைத்து விடாதே என்று கூறாமல் கூறுவதைப் போல ஆடி வைத்தது.. வல்லவனின் வயதுப் பிராயத்தில் இருக்கும் புதல்வனைப் பற்றிய நினைவு.. அவனிலும் இளையவளான வசுந்தராதேவியை மனதாலும் நினைப்பது பாவம் என்று வலியுறுத்தியது..

'இவளை நான் கானகத்தில் காணாமலே எனது வழித்தடத்தில் சென்றிருக்கக் கூடாதா..?' அவன் மனம் வேதனை கொண்டது..

வசுந்தரா தேவியின் துயரம் கொண்ட தோற்றம்.. ரவிவர்மனின் மீது அவள் கொண்டு விட்ட நேசத்தைக் கூறாமல் கூறியது.. ஒரு விதத்தில் அவளின் துயரம் ரவிவர்மனுக்கு இன்பத்தையே அளித்தது.. அந்தத் துயரம் அவனுக்கானது.. அவனை அடைய முடியாத இன்னலினால் ஏற்பட்டது என்பதில் அவன் எல்லையற்ற இன்பம் கொண்டான்..

வசுந்தராதேவியின் குரல் தேம்பலுடன் ஒலித்தது.. தன்னந்தனிமையில்.. அந்த மணி மண்டபத்தில் கோவில் கொண்டிருந்த நடராஜரின் சன்னதியில் அவள் மனதைத் திறந்து கொட்டிக் கொண்டிருந்தாள்..

"என் போல கண்டதுண்டோ..
உனது சன்னதி..?
உன் முன்னாலே பாடும்வரை
சற்று நிம்மதி..!
இன்றோடு தீர்த்து வைப்பாய்
சஞ்சலம் எல்லாம்..
இனி எப்போது கூறுவதய்யா
மற்றவை எல்லாம்..?"

வசுந்தரா தேவியின் வினாவில் இவள் எதைக் கூற விழைகிறாள் என்ற வினா ரவிவர்மனின் மனதில் வருகை தந்தது..

ரவிவர்மனை அவள் மனம் நாடுவதை கூற விழைகிறாளா..?

ஆம் என்பதைப் போல.. வசுந்தராதேவி நடராஜரின் சிலை முன்பு மண்டியிட்டுக் கதறினாள்..

"கங்கையிலே ஓடமில்லையோ..?
என் கண்ணனின் கரங்களில் நான் தவழ..
எண்ணி வந்த சேதி கூற..?
ஹரே..! ஹரே.. கிருஷ்ண ஹரே..!
ஹரே..! ஹரே.. கிருஷ்ண ஹரே..!"

வேதனையில் தோய்ந்த அவளின் கதறலை செவி மடுக்க ரவிவர்மனால் இயலவில்லை.. அவளது துன்பத்தைக் காணப் பொறுக்காமல் அவன் மணி மண்டபத்திற்குள் புகுந்தான்.. மணி மண்டபத்தின் மையப் பகுதியில் வீழ்ந்து கிடந்த வசுந்தராதேவி.. அவளுக்கு அருகாமையில் வந்த நின்ற பாதங்களில் பார்வை பதிந்ததும்.. அவளது தனிமை கலந்த சினத்துடனும்.. அவளது மனதை பிறர் அறிந்து விட்ட பதட்டத்துடனும் தலை நிமிர்ந்தாள்..

ரவிவர்மனைக் கண்டதும் அவளது பார்வையில் ஒரு கோடி மின்னல்கள் ஒருங்கே தோன்றின.. அதைக் கண்ணுற்றபடியே.. அவளுக்காக கரம் நீட்டினான் ரவிவர்மன்..

அவன் கரங்களைப் பற்றிக் கொள்ளாமல் எழுந்து கொள்ள முனைந்தவள் தடுமாறி விழ இருந்ததில்.. அவளது இடையில் கரம் கொடுத்துத் தாங்கிப் பிடித்துக் கொண்டான் ரவிவர்மன்..

வளைத்துக் கொண்ட அவன் கரத்தில் வாகாக சாய்ந்து நின்று.. தன்னிரு கரங்களாலும் அவன் கழுத்தை மாலை போல வளைத்துக் கொண்டவளின் பார்வையை அவனது பார்வை எதிர்கொண்டு சிறைபிடித்தது..

அவன் பார்வையுடன் கலந்து விட்ட அவளது பார்வையினை விலக்கிக் கொள்ள இயலாமல் தவித்துப் பிணைந்தது அவளது பார்வை.. அதில் ரவிவர்மனின் இதயத்தில் குளிர் நிரம்பியது..

நந்தவனத்தின் பறவையொன்று கூவியதில் தன்னிலைக்குத் திரும்பிய வசுந்தரா.. அவனை விட்டு விலக முற்பட்டாள்.. அவனது இரும்புக்கரம் இறுக்கி அவளது இடையினில் பதிந்து அவளை விலக அனுமதிக்க வில்லை..

"இத்துனை விரைவு தேவையற்றது வசுந்தரா.. ஏன் இந்த பதட்டம்..?" கண்டனத்துடன் வெளிப்பட்டது அவனது குரல்..

"பதட்டம் கொள்ள வேண்டிய அவசியம் நேர்ந்து விட்டதே.." துக்கத்துடன் அவள் கூறினாள்..

"அவசியம் யாதென்பதை யாம் அறிந்து கொள்வது ஒருபுறமிருக்கட்டும்.. இந்த ஆறுதினங்களில் தமது பாதங்களின் ரணம் ஆறி விட்டதா என்ன..? புண்பட்ட பாதங்களுடன் நடனமாட முனையலாமா..?"

“புண்பட்ட மனதிற்கு முன்பு புண்பட்ட பாதங்களில் உண்டாகும் வலியினால் நிற்கக் கூட இயலாது.. பாதங்களின் ரணம் ஆறி விடும்.. மனதில் உண்டாகி விட்ட ரணத்தை ஆற்றிட மார்க்கமேது..?”

அவளது குரலில் வெளிப்பட்ட விரக்தியில் துடித்துப் போனான் ரவிவர்மன்.. அவளது துயரத்தை ஆற்றிட அவனிடம் வார்த்தைகளில்லை... அவளுக்கு அநீதி இழைத்து விட்டதைப் போன்ற குற்ற உணர்வில் அவன் மனம் பெரும் பாறையாய் கனம் கொண்டது..

அவளது அந்நிலைக்கு எவ்விதத்திலும் அவன் காரணமாக இல்லைதான்.. கானகத்தில் அவளைக் கண்டவன்.. அவளது பாதங்களின் காயங்களுக்கு சிகிச்சை செய்தான்.. மருந்திட்டான்.. அவள் ஆபத்தில் சிக்கியுள்ளதை அறிந்தவுடன் சினம் கொண்டு உடனடியாக உதவிக்கரம் நீட்டி அவளையும், வீரபாகுவையும் காத்தான்.. அவர்களுக்கு துணையாக இல்லம் வரை உடன் வந்தான்..

இவற்றைத்தாண்டி எவ்வித சரச மொழிகளையும் வசுந்தராவிடம் அவன் உரைத்து விடவில்லையே...

இருப்பினும் அவனுக்கும்.. அவளுக்குமான அந்தரங்கமான சில பார்வைகளுக்கும்.. உணர்வுகளுக்கும்.. அவன் பொறுப்பாளியாகி விட்டானே..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



11

காதலையும் நான் அறிவேன்..
காதலனையும் நான் அறிவேன்..

'அப்பா...!'

பிரதாப்பின் நினைவில் மனம் நெகிழ்ந்தாள் யாமினி.. அவளைப் போன்ற குணாதிசியம் கொண்ட மகளிடம் கடலளவு பிரியத்தைப் பொழிய அவரால் மட்டும்தான் முடியும் என்பதில் யாமினியின் கண்கள் கலங்கின..

அனுராதாவுடன் அத்தனை விசயங்களிலும் ஒற்றுமையாக போகிறவர் யாமினியின் விசயத்தில் மட்டும் அந்த ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தாமல் எதிர்ப்புக் குரல் எழுப்பி மனைவியிடம் செமத்தியாக வாங்கிக் கட்டிக் கொள்வார்..

அனுராதா 'எள்' என்று சொல்வதற்கு முன்பாகவே எண்ணெய் கேன்களை லாரியில் கொண்டு வந்து இறக்கி வீடு முழுவதும் நிரப்பி விடுபவர்.. மகளின் விசயத்தில் மட்டும் மனைவியின் வார்த்தைகளுக்கு எதிராக போர்க் கொடியை உயர்த்தினார்..

அனுரதாவிற்கும் பிரதாப்பிற்கும் இடையே வரும் அனைத்துச் சண்டைகளுக்கும் யாமினி மட்டுமே அடிப்படைக் காரணமாக இருந்தாள்..

"உன்னால உங்கப்பாவும் நானும் டைவர்ஸ் வரைக்கும் போய்த் தொலைக்கப் போகிறோம்டி.. பெத்தவங்கள துண்டு வெட்டற பெருமை உன்னைத் தாண்டி சேரும்.."

சில சமயங்களில் அனுராதா யாமினியிடம் இந்த வார்த்தைகளைச் சொல்லிப் பொருமுவது உண்டு..

அப்போதெல்லாம் யாமினி துடித்துப் போய் விடுவாள்.. ஏன் இந்தப் பிறப்பைப் பிறந்தோம் என்று நொந்து விடுவாள்..

'எங்கப்பாவையும், அம்மாவையும் ஒற்றுமையில்லாம பிரிச்சு வைக்கவா நான் இவர்களுக்கு மகளாப் பிறந்தேன்..?'

அவளது மனதின் வலி கண்களில் தெரியும் போது அவளைவிட அதிகமாக அனுராதா துடித்துப் போவாள்..

'என் மகளே..!'

குற்ற உணர்வுடன் பேச்சை மாற்றி.. யாமினியை அதட்டி.. மிரட்டி.. திட்டி.. அந்தப் பேச்சை மறக்கடித்து விடுவாள்..

'என் அம்மா..!'

பெருமையுடன் நினைத்துக் கொண்டாள் யாமினி..

'அவங்களைப் போல யாரிருப்பாங்க..?'

ஜன்னலின் கம்பியில் முகத்தைப் பதித்துக் கொண்டாள் யாமினி.. விடாமல் கொட்டிய மழையினால்

சில்லிட்டுப் போயிருந்த ஜன்னல் கம்பிகளில் ஏற்பட்ட ஜில்லென்ற உணர்வை ரசித்து அனுபவித்தாள்.. இருள் நிரம்பிய நடுநிசியைத் தாண்டிய அந்த நேரத்தில்.. இருளை விரட்டிக் கொண்டிருக்கும் முழுநிலவை... ஜன்னலில் முகம் பதித்து கொஞ்சம்கூட பயம் கொள்ளாமல் உற்றுப் பார்க்க யாமினியால் மட்டுமே முடியும்..

இருளுக்குள் தெரிந்த நிழல் போன்ற தோற்றங் களினால் யாமினியை பயப்படுத்த முடியவில்லை.. அவள் முழுநிலவின் அழகையே அள்ளிப் பருகுவதைப் போல பார்த்துக் கொண்டிருந்தாள்.. பார்க்கப் பார்க்க.. அவள் கண் முன்னால் முழுநிலவு அகன்று வானம் பூராவும் வியாபிப்பதைப் போல இருந்தது..

'இதே நிலாப் பொழுதில நானும்.. அவனும் கூடியிருக்கோம்..'

அவள் மனதில் வந்த நினைவின் துகளில் அவள் அதிர்ந்து போனாள்..

எப்படி இப்படியொரு நினைவு அவள் மனதில் வந்தது..? எந்த நிலாப் பொழுதில் எவனுடன் அவள் கூடினாள்..?

அவள் காதலை அறிந்தவளா..? இல்லை.. காதலனைத்தான் அறிந்தவளா..? இதுபோன்ற நினைவு அவள் மனதில் வரலாமா..?

அவள் மனம் துணுக்குற்ற போதே.. அவளது வாய் தன்னையுமறியாமல் பாடி வைத்தது.. ஜன்னல் கம்பிகளின்

இடைவெளியில் தெரிந்த வானத்தின் பௌர்ணமி நிலவை ஆசையாசையாய் பார்த்தபடி.. தன்னை மறந்து அவள் பாட ஆரம்பித்தாள்..

"அன்றொரு நாள்..
இதே நிலவில்..
அவன் இருந்தான்..
என் அருகே..
நான் அடைக்கலம் தந்தேன்..
என் அழகை..
நீ அறிவாயே.. வெண்ணிலவே..!"

யாமினியின் முகம் மலர்ந்து விகசித்திருந்தது.. அந்தச் சமயத்தில் அனுராதா மட்டும் மகளைப் பார்த்திருக்க வேண்டும்.. நிச்சயமாய் மகளின் மனதில் எவனோ இருக்கிறான் என்ற முடிவிற்கு வந்திருப்பாள்..

அப்படியொரு மயக்கத்தை கண்களில் தேக்கி.. பார்வையை பரந்த வான் வெளியில் பதிய விட்டு.. கனவுலகில் சஞ்சரித்தபடி பாடிக் கொண்டிருந்தாய் யாமினி..

"அந்த ஒருநாள்..
ஆனந்தத் திருநாள்..
இன்று நினைத்தால்..
என்னென்ன சுகமோ.."

யாமினியின் இமைகள் மூடியும் மூடாமலும் கிறக்கத்துடன் செருகிக் கொண்டன.. காதலனுடன் கூடிக்

கலந்தவள் அந்தக் கூடலைக் குறித்து நினைத்து இன்பங் கொள்வதைப் போல.. அவள் அந்தப் பாடலைப் பாடி இன்பங் கொண்டாள்..

யாரை நினைத்துப் பாடுகிறாள் என்று அவளுக்குத் தெரியவே இல்லை.. நிலவின் ஒளியில் தெரிந்த நிழலோவியம் போன்ற உருவம் கனவா.. நனவா என்று இனம் விளங்க முடியாமல் அவள் மாய உலகத்தில் நுழைந்து கொண்டிருந்தாள்..

காதலனைக் குறித்த காதலியின் தவிப்பு தெள்ளத் தெளிவாக அவள் முகத்தில் தெரிந்தது.. அவள்தான் அப்படிப்பட்ட ஓர் தவிப்புடன் காதலனுடன் கூடி விட்ட பொழுதைக் குறித்த பாடலை ஆழ்ந்து பாடிக் கொண்டிருக்கிறாள் என்று அறியாமலே அவள் பாடிக் கொண்டிருந்தாள்..

"பாதி விழிகள்..
மூடிக் கிடந்தேன்..
வேந்தன் மேனியிலே..
நீ பார்த்தாயே..
வெண்ணிலவே...!"

வெட்கத்துடன் வெண்ணிலவை கேள்வி கேட்டு விட்டு.. வெண்ணிலவைப் பார்த்தால் வெட்கம் இன்னும் அதிகமாகும் என்பதைப் போல கட்டிலுக்குத் திரும்பினாள் யாமினி..

தலையணையில் முகம் புதைத்துக் கொண்டவளின் முகம் குங்குமமாய் சிவந்திருந்தது..

"ஆடும் கனியை..
ஆடாமல் எடுத்தான்..
வாடும் மலரை
வாடாமல் தொடுத்தான்.."

தலையணையில் முகவாயை ஊன்றியபடி ஜன்னலைப் பார்த்தவள்.. அதன்வழி தெரிந்த முழுநில விடம் தன் மனதைப் பகிர்ந்து கொள்வதைப் போல பாடி வைத்தாள்..

"சூடிக் கொடுத்தான்..
பாடி முடித்தான்..
பாவை மேனியிலே..
நீ பார்த்தாயே..
வெண்ணிலவே..!"

வெட்கத்துடன் கேட்டவளைப் பார்த்து.. நான் எப்போது இதையெல்லாம் பார்த்தேன் என்று நீ சாட்சிக்கு அழைக்கிறாய் என்று கேட்காமல்.. அவள் சொன்னதற் கெல்லாம் ஒப்புதலாய் தலையை ஆட்டுவதைப் போல.. நின்று.. நிதானித்துப் பின் மெல்ல நகர்ந்தது நிலவு...!

குடும்பத்தைத் தவிர வேறு தெரியாத யாமினி.. யாரை நினைத்து வெட்கிப் பாடினாள் என்ற ரகசியத்தை அவள் அறிய மாட்டாள்தான்..

ஆனால்.. யுகங்கள் பல கண்ட வெண்ணிலவு அறிந்திருக்கக் கூடுமோ..? அதனால்தான்.. அவள் பாடிய

பாடலை ஒரு சிநேகிதி கேட்டுக் கொள்வதைப் போல நின்று, நிதானித்துக் கேட்டு விட்டு நகர்ந்ததோ..

கட்டிலில் படுத்திருந்த யாமினி.. யாமினியாக இல்லை.. அவள் முகத்தில் பரவசம் கலந்த வெட்கம் தெரிந்தது.. யாரை நினைத்தோ அவள் மயக்கம் கொண்டாள்.. நிலவுப் பொழுதில் அவனை சந்தித்த வேளையை சிந்தித்துப் பார்ப்பவளைப் போல இருந்தது அவளது பாடலும், நடவடிக்கையும்..

தனக்குத்தானே எதையோ மெல்லிய குரலில் முணுமுணுப்பதும்.. பாடுவதும்.. சிரிப்பதுமாக.. அவள் பண்ணிய அட்டூழியத்தை மூடிய கதவுகளுக்கு அப்பால் தங்களின் ரூம்களில் நிம்மதியாக உறக்கம் போட்டுக் கொண்டிருந்த அனுராதாவும், பிரதாப்பும், யதுநந்தனும் அறியவில்லை..

இதைவிடக் கொடுமை என்னவென்றால்.. அவள் பண்ணிய அட்டூழியத்தைப் பற்றி யாமினியே அறிய வில்லை என்பதுதான்..

12

கேரளத்தின் மன்னவனே..! கன்னிகை மனதை வென்றவனே..!

“வசுந்தரா..!”

கரகரத்த குரலில் தனது குற்ற உணர்வையும்.. மனத் துடிப்பையும் வெளிப் படுத்தினான் ரவிவர்மன்..

கரையுடைந்த வெள்ளமாக பொங்கிக் குமுறினாள் வசுந்தராதேவி..!

"தாங்கள் மன்னவர் என்பதை ஏன் கூறவில்லை..?"

"வசுந்தரா..!"

"புரவி வீரன் என்று அறிமுகப் படுத்திக் கொண்டது ஏன்..?"

"வசுந்தரா..!"

"தங்களின் நாமத்தை ரவிவர்மன் என்று உரைக்காமல் வர்மன் என்று எதன் பொருட்டு உரைத்தீர்கள்..?"

"வசுந்தரா..!"

"கலைகளில் கரை கண்டவர்.. சமரில் நிகரற்றவர்.. காவியம் புனைவதில் வல்லவர்.. சமஸ்கிருதத்தில் பெரும் பண்டிதர்.. இத்துனை அடைமொழிகளும் எமது இதயத்திற்கு இன்பத்தையே அளிக்கின்றன.. ஆனால்.. அவற்றுடன் வரும் ராஜா ரவிவர்ம குலசேகர சக்கரவர்த்தி என்ற கட்டிய மொழியும்.. தாம் பட்டத்து ராணி முதல் பல ராணிகளுக்கு மணவாளராக உள்ளவர் என்னும் மெய்யும்.. என் மனதை கூறுபோட்டு விட்டனவே.. என் செய்வேன்..?"

"வசுந்தரா..!"

ரவிவர்மன் அவளைத் தேற்றும் வகையறியாமல் திகைத்தான்.. அவனது கரத்தில் இருந்தவளுக்கு ஆறுதல் அளிக்கும் பொருட்டு தன் மார்பில் சாய்த்துக் கொண்டான்.. அவனது பரந்த மார்பில் புரண்ட வைரத்தில்

வதனம் பதித்த வசுந்தராவின் துயரம் பன்மடங்கானது.. அவளுக்கு எட்டாத தொலைவில்.. தொடுவானில் வலம் வரும் ஆதவனாக ரவிவர்மனை இனம் காட்டிய அந்த வைரத்தின் ஒளியில் அவள் மருண்டாள்..

"தாங்கள் எனக்குக் கிட்ட மாட்டிர்களா..?" என்று புலம்பியபடி அவனது மார்பகத்தில் வதனம் புதைத்து தேம்பி அழுதாள்..

தன் மனதை மறைக்காமல் உரைத்துப் புலம்பிய கள்ளம், கபடமற்ற அவளது செய்கையில் தனது மனதை பறி கொடுத்தான் ரவிவர்மன்..

'துள்ளி வரும் மானைப் போல வாழ்வின் துன்பங்களின் சுவடுகளை அறியாமல் மகிழ்வுடன் இருந்தவளின் மனதை நான் கலைத்து விட்டேனே..'

மனம் பரிதவிக்க அவளது உச்சந்தலையில் அதரங்களைப் பதித்து சிறு முத்தமொன்றை பரிசளித்தான்.

வசுந்தராவின் தேகம் நடுங்கிச் சிலிர்த்தது.. அவள் உணர்ந்த முதல் முத்தத்தில் அவள் நிலை குலைந்து போனாள்..

"எனக்கு மன்னிப்பை அளிப்பாயா வசுந்தரா..?"

அவளது வதனத்தை கரங்களில் ஏந்தி அவன் வினவியபோது மனம் துடித்துப் போனவளாக அவனது அதரங்களை தனது கரத்தினால் மூடி விம்மினாள் வசுந்தராதேவி..

"நானல்லவா தங்களிடம் மன்னிப்பை யாசிக்க வேண்டும்..? தாம் எவரென்று அறியாமல் எமது பாதங்களை ஸ்பரித்து.. காயங்களுக்கு மருந்திட வைத்தது நான்தானே..? தமது கீர்த்தியை அறியாமல் தங்களைச் சாதாரண புரவி வீரனாக எண்ணியதும் நான்தானே..? தாம் பல மனைவியரைக் கொண்டவர்.. என்ற மெய்யை அறியாமல் தங்களின் மீது மனதை செழுத்தியதும் நான் தானே..? இதில் தங்களின் குற்றமென்று எது உள்ளது சேர மன்னரே..?"

"வசுந்தரா.."

"விண்ணில் வலம் வரும் சூரியனின் மீது.. மண்ணில் படரும் இளங்கொடி விருப்பம் கொள்ளலாமா..? அது தகுமா..? தாங்கள் விண்.. நான் மண்.. இதை உணராமல் இந்த பேதை நெஞ்சம் ஏதேதோ கற்பனையில் சஞ்சரித்து விட்டமைக்கு தாங்கள் எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டீர்கள் அரசே..!"

"அரசனென்று என்னை அழைக்காதே.."

"தாங்கள் அரசர்தானே..?"

"தம்முன் ஓர் புரவி வீரனாகவே நான் இருந்திட விழைகிறேன்.. ராஜா ரவிவர்மனாக இல்லாமல் புரவி வீரன் வர்மனாக தமக்கு மட்டும் புலப்பட வேண்டுமென விரும்புகிறேன்.."

வசுந்தராதேவியின் பளிங்கு போன்ற கன்னத்தை வருடினான் ரவிவர்மன்.. விழி மூடி மயங்கிப் போன

வசுந்தரா தேவியின் வதனத்தில் படிந்திருந்த துயரத்தின் சாயல் சற்றே விலகியதில் ரவிவர்மனின் மனதில் நிம்மதி வந்தது..

எட்டாத தொலைவில் உள்ள காதலன் கிட்டி விடுவானா என்று அவளது உள்ளம் தவிக்கும் தவிப்பை கலைஞனும்.. கவிதையும், காவியமும் புனைவதில் கரம் தேர்ந்தவனுமான ரவிவர்மன் தெள்ளத் தெளிவாக புரிந்து கொண்டான்.. அவனையன்றி இனி வேறொரு ஆடவனை வசுந்தராவின் மனம் நாடாது என்ற மெய்யை உணர்ந்து கொண்டவனின் மனம் மென்மை கொண்டது..

கனிவுடன் அவளது கன்னத்தில் முத்தமிட்டவன்.. அதிர்ந்து நடுங்கிய அவளது மெல்லிய தேகத்தை அணைத்துக் கொண்டான்..

அந்த அனைப்பில் அவள் மனதின் அனைத்து சஞ்சலங்களும் விலகி அவளது மனம் அமைதி கொண்டதை அவனது மனம் இனம் கண்டு கர்வம் கொண்டது..

அவனது கீர்த்தியை அறியாமல் சாமானிய புரவி வீரனாக எண்ணி காதல் கொண்ட அந்த கன்னிகையின் மனதைவென்று விட்டதில் திக்கெட்டும் வெற்றிக் கொடிகளை நாட்டிய அந்த 'வே' நாட்டின் வேந்தன்.. அத்துனை வெற்றிகளைவிட உயரிய வெற்றியை ஈட்டி விட்டதை எண்ணி இறுமாப்புக் கொண்டான்..

"யாம் அவ்விதம்தான் எண்ணுகிறோம்.." வசுந்தரா தேவி முணுமுணுத்தாள்..

"எவ்விதம்..?" அவளது வதனத்தை உயர்த்திப் பிடித்து அவளது விழிகளுடன் விழி கலந்து வினவினான் ரவிவர்மன்..

"ஓர் புரவி வீரனாக.. வர்மனாக.. எனக்கு மட்டும் உரியவராக.." வசுந்தராதேவியின் இமையோரம் கண்ணீர்த் துளிகள் அரும்பின..

"கூடாது.." கண்டிப்புடன் கூறிய ரவிவர்மன் அவளது இமையோரம் அரும்பிய கண்ணீர் துளிகளை துடைத்து விட்டு அவளது இமைகளில் அதரம் பதித்தான்..

"மன்னவா..!" கண்மூடி கிறங்கித் தவித்தாள் வசுந்தரா..

"அல்ல தேவி..! நான் தமது வர்மன்.." புன்னகையுடன் பிழை திருத்தம் செய்தான் ரவிவர்மன்..

"மெய்யாக உரைக்கிறீர்களா..?" வசுந்தரா விம்மினாள்..

"இந்த வர்மன் பொய்யுரைக்க மாட்டான்.. மெய்யே உரைப்பான்.. எனக்கு மணமாகவில்லையென்று நான் தம்மிடம் உரைக்கவே இல்லை வசுந்தரா.. எமது வயதைப் பற்றியும் உரைக்கவில்லை.." ரவிவர்மன் சுட்டிக் காட்டினான்..

"அறிவேன் நான்.. எம்மைத் தாம் ஏமாற்றி விட்டதாக ஓர் தினமும் நான் உரைக்க மாட்டேன்.. தவறு என்னுடையது.. தமது கீர்த்தியைப் பற்றி அறியாமல் காதல் கொண்டு விட்ட பேதை நான்.." வசுந்தரா வருந்தினாள்..

"வருத்தம் கொள்ளாதே.. நீ என்னுடையவள்.. இந்த வாக்கை உனது புரவி வீரன் வர்மனாக நான் உனக்கு அளிக்கிறேன்.. உன்னுடன் இருக்கும் நாழிகைகளில் உனது புரவி வீரன் வர்மனாக.. உனக்கு மட்டும் உரியவனாக நான் இருப்பேன்.."

ரவிவர்மன் அவளது வலது கரம் பற்றி.. விரித்து.. அவளது வலக்கரத்தில் தனது வலக்கரத்தை வைத்து அழுத்திப் பிடித்து வாக்களித்தான்..

வசுந்தராதேவியின் விழிகள் அகன்றன.. எட்டாத தொலைவில் தெரிந்த ஆதவனைத் தொட்டு விட்ட பிரமிப்பில் அவள் இருந்தாள்.. கண் முன் நிகழும் நிகழ்வு மெய்யா.. அல்லது சொப்பன்மா என்று தடுமாறிப் போனாள்..

"இது சொப்பனம் அல்லவே..?" என்று ரவிவர்மனிடம் அதை உறுதி படுத்திக் கொள்ளவும் முனைந்தாள்..

"அல்ல சுந்தரி..! இது சொப்பனம் அல்ல.." என்றான் அவன்..

"சுந்தரியா..?" அவள் திகைத்தாள்..

"ஆம்.. சுந்தரி என்றால் எழில் மிக்கவள் என்று பொருள்.. எமது கேரள நாட்டில் எழில் மிக்க மங்கையை சுந்தரி என்றே விளிப்போம்.."

ரவிவர்மனின் கரங்கள் உரிமையுடன் அவளது தோள்களைத் தழுவி.. அவளது மேனியில் படர்ந்தன..

அவனது தீண்டலின் ஸ்பரிசத்தில் அவளது தேகம் நடுங்கியதில்.. அவளது வதனம் சிலிர்ப்பைக் கொண்டதில்.. அவளது தளிர்விரல்கள் சில்லிட்டுப் போனதில்.. நிற்க இயலாமல் தொய்ந்து அவன் மீது சரிந்து கொடி போல அவனுடன் அவள் பின்னிக் கொண்டதில் ரவிவர்மனின் தேகம் வெப்பம் கொண்டது..

அப்படிப்பட்ட கூடலைத்தான் அவன் வேண்டி விரும்பினான்.. அவனுடன் கூடிய அவனது ராணிகள்.. அவனை மயக்கித் தங்களின் வசத்தில் இருத்திக் கொள்ள முனைந்தனரேயொழிய.. மனமார்ந்த கூடலை அவனுக்கு அளிக்கவேயில்லை..

அதை உணர்த்தி அவனைத் தழுவி நின்ற வசுந்தரா தேவியின் தேகம் தழுவியவனுக்கு.. கானல் நீரில் ஏமாற்றம் கொண்டவனின் தாகம் தணிக்க அருவி நீர் கொட்டியதைப் போல இருந்தது..

அவனது ஆழ்ந்த அணைப்பில் மனம் விகசிக்க.. அவளுக்கு காதல் வரம் தந்து ரட்சித்த அந்த ரட்சகனின் வதனத்தை அண்ணாந்து நோக்கினாள் வசுந்தரா.. அவனது எழிலில் அவளது மனம் மயங்கியது.. அவளுக்கு அவன் கிட்டி விட்டதில் அவள் பிரமிப்புக் கொண்டாள்.. எழில் சொட்டிய அவனது தோற்றத்தில் மனம் லயித்தவள்..

"எழில் மிக்க மங்கையை சுந்தரி என்று அழைப்பீர்கள்.. எழில் மிக்க ஆடவரை எவ்விதம் அழைப்பீர்களாம்.." என்று கொஞ்சலாக வினவினாள்..

அவனது வயதை அறிந்தபின்னரும் பல ராணிகளை மணந்தவன் என்பதை அறிந்த பின்னரும்.. அவன் மீதான மயக்கம் துளியளவு கூட குறையாமல் மயங்கி நின்றவளின் காதலில் ரவிவர்மன் மயங்கிப் போனான்..

"சுந்தரன் என்று அழைப்போமடி.." அவளது தேகத்தை தன் தேகத்துடன் இறுக்கிக் கொண்டவன் அவளது செவிகளின் அருகே அதரங்களைப் புதைத்து கீதமிசைக்கவும் செய்தான்..

"சுந்தரி நீயும்.. சுந்தரன் ஞானும்..
சேர்ந்திருந்தால் திரு ஓணம்..!"

அவனது பாடலில் வசுந்தரா கிறக்கம் கொண்டாள்.. அவனது கழுத்தைச் சுற்றித் தனது வளைக் கரங்களால் மாலையிட்டு..

"சுந்தரன் நீயும்.. சுந்தரி ஞானும்..
சேர்ந்திருந்தால் திரு ஓணம்.."

என்று பாடவும் செய்தாள்..

"ஈ சுந்தரி மலையாளம் அறியுமோ..?" ரவிவர்மன் வியப்புடன் வினவினான்..

"சேர நாட்டின் வேந்தன்தான் எனது புரவி வீரன் என்பதை அறிந்து கொண்ட இந்த ஆறுதினங்களில் எமது தோழியின் மூலமாக மலையாள மொழியை கற்க ஆரம்பித்தேன்.." என்று நகைத்தாள் வசுந்தரா..

"திடிரென்று தமக்கு மலையாள மொழியின் மீது ஈர்ப்பு ஏன் வந்தது என்று கைலாசநாதர் சிந்திக்க முற்பட மாட்டாரா..?"

"மாட்டார்.. எமக்கு எந்தப் பொழுதில் எதன்மீது ஈர்ப்பு ஏற்படும் என்பது எவரும் அறியாத ஒன்று என அடிக்கடி கூறிக் கொண்டிருப்பார்.."

"அவ்விதம் எண்ணாதே... யாம் அறிந்தவரை கைலாசநாதர் வெகு புத்திசாலி... மனித மனங்களின் ஆழத்தை அறிந்து உட்கிரகிப்பதில் திறமைசாலி.."

"இருந்து விட்டுப் போகட்டுமே.. எமது காதலில் நான் திடமாக.. தெளிவாக உள்ளேன்.. வாழ்ந்தால் எனது புரவிவீரன் வர்மனுடன்தான் வாழ்வது.. இல்லையெனில் மாள்வது என்ற வைராக்கியத்துடன் உள்ளேன்.."

"என்ன வார்த்தைகளை கூறி விட்டாய்..?"

வசுந்தரா தேவியின் அதரங்களை மூடிய ரவிவர்மனின் தேகம் பதறியது.. அதில் வெளிப்பட்ட அவனது காதலில் வசுந்தரா மனம் நனைந்தாள்.. அந்த மன நெகிழ்ச்சியுடன் அவனது கரத்தில் கரம் வைத்துப் பிணைத்துத் தன் கன்னத்தில் பதித்துக் கொண்டவள்.. விழிகளில் கள்ள நகைப்புடன்..

"கரத்தில் கரம் இறுக்கி..
விழியில் விழி கலந்து..
நெஞ்சில் மஞ்சம் கொண்டு..
சேர்வது எப்பொழுதில்..?"

என்று பாடலில் வினவி வைத்தாள்..

அந்த வினவலில் ரவிவர்மனின் விழிகளில் மின்னல் வந்தது.. அது தினம் வரை அவன் உணராத காதலை உணர்த்தி நின்ற அந்தப் பூங்கொடியின் வளைக் கரத்தில் ஆதரங்களைப் பதித்தான்..

அவனுடைய எழில் மிகுந்த வதனத்தை மயக்கத்துடன் நோக்கியபடி..

"ஒன்னோட சுந்தர ரூபம்..!
வருணிக்க ஓர்கவி வேணும்.."

என்று பாடினாள் வசுந்தரா தேவி...

அவளது தேகத்தில் மேய்ச்சல் நிலத்தைக் கண்ணுற்ற விட்ட காளையைப் போல பார்வையைச் செழுத்திய ரவிவர்மன்.. மதுவருந்திய போதையுடன்..

"மோகன ராகம் நின் தேகம்..!
கீர்த்தன மாட்டி ஞான் பாடும்.."

என்று கிறக்கத்துடன் கீதமிசைத்தான்..

"உந்தன் நகைப்பில்..
என் உள்ளத்தைக் கவர்ந்தாய்.."

ரவிவர்மனின் நகைப்பில் மனதை பறி கொடுத்த வசுந்தரா சிணுங்கினாள்..

"கண்ணான கண்ணே..!
என் சொந்தமல்லோ.. நீ.."

ரவிவர்மன் ஆலாபனை இசைத்தபடி அவளைக் கரத்தில் ஏந்திக் கொண்டு மணி மண்டபத்தை விட்டு வெளியே நடந்தான்..

ரவிவர்மனின் கரத்தில் கிடந்த வசுந்தரா தேவியின் வதனத்தில் அவன் மார்பில் புரண்டு கொண்டிருந்த வைரம் புரண்டது.. கண்மூடி அதன் ஸ்பரிசத்தை ரசித்தவள்..

'இவன்தான் காணக் கிட்டாத வைரம்..!' என்று நெகிழ்ந்தாள்..

சேர நாட்டின் மாமன்னன்.. ஓர் இளம் வயது மங்கையின் காதலுக்கு தன் காதலை பரிசளிக்கிறான் எனில் அவன் மனம் வைரத்தை விட உயர்ந்தது அன்றோ என்று அவள் மனம் விம்மிப் பொங்கியது..

அவளது மனம் கண்ட வைரமான ரவிவர்மன் அவளின் பார்வையின் பொருள் புரியாதவனாக புருவங்களை உயர்த்தி அவளை வசீகரித்து வைத்தான்..

அந்தி மயங்கிய மாலைப் பொழுது அகன்று இருள் சூழ்ந்து கொண்டிருந்தது.. கைலாச நாதரின் இல்லத்திலும்.. மணி மண்டபத்திலும் விளக்குகள் ஏற்றப் பட்டதை.. நந்தவனத்தின் மையத்திலிருந்த தாமரைக்குளக் கரையில் மரங்களின் மறைவினில் அமர்ந்திருந்த ரவிவர்மனும் வசுந்தராவும் கண்ணுற்றார்கள்..

"நல்லவேளையாக மணி மண்டபத்தை விட்டு வெளியேறி விட்டோம்.. இல்லாவிடில் விளக்கேற்ற

வருகை தரும் பணிப்பெண்கள் நம் இருவரையும் கண்டிருப்பர்..” என்று நிம்மதி மூச்சு விட்டாள் வசுந்தரா..

“அதை உணர்ந்துதானே உன்னைக் குளக் கரையில் கொண்டு வந்து சேர்த்தேன்..?” ரவிவர்மன் நகைத்தான்..

“தாம்தான் கள்வராயிற்றே..” வசுந்தரா அதரங்களைச் சுழித்தாள்..

சுழித்த அவளது அதரங்களில் விரல் கொண்டு சுண்டிய ரவிவர்மன்..

“யாம் எதைக் கவர்ந்தோமாம்..?” என்று அவளது தேகத்தை பார்வையிட்டவாறு இருபொருள்பட வின வினான்..

‘இவன் உள்ளானே..’ அவனது பார்வையில் வதனம் சிவந்த வசுந்தரா..

‘இவன் மெய்யாகவே கள்வன்தான்..’ என்று தமது மனதிற்குள் செல்லமாக வசை பாடியபடி..

“எமது மனதைக் களவு கொள்ளவில்லையா..?” என்று அவன் மீது குற்றம் சாட்டினாள்..

“ஹா.. ஹா..”

சப்தம் எழுப்பாமல் அவள் மட்டும் செவி மடுக்கும்படி கம்பீரமான குரலில் நகைக்க அவனால் மட்டுமே இயலும் என்று அவள் அதரங்களை மீண்டும் சுழித்தாள்..

குளக்கரையின் மரங்களில் இருந்து கொட்டிக் கிடந்த மலர்களைக் குவித்து மஞ்சம் போல வடிவமைத்தான் ரவிவர்மன்..

அவனது கலாரசனையை பிரதிபலித்த அந்த நேர்த்தியான மஞ்சத்தை கிளர்ச்சியுடன் நோக்கினாள் வசுந்தராதேவி..

அந்த மலர் மஞ்சத்தில் அவளை அவன் சரித்த போது அவளால் மறுப்புரைக்க இயலவில்லை.. சரிந்தவளின் மீது அவன் சரிந்ததில் அவளது தேகமெங்கும் வெப்ப அலைகள் விரைவாகப் பரவின.. அவள் கனவுலகில் பிரவேசித்தாள்..

"செப்பர மஞ்சத்தில் கூட...
சொப்பன லோகத்தில் ஆட..."

ரவிவர்மனின் அதரங்கள் அவள் செவியில் முணுமுணுத்தன.. செவிகளில் உராய்ந்த அவனது மீசையின் ரோமங்களின் உராய்வில் அவளது தேகம் நடுங்கியது.. அவனது தேகத்தின் பூரண அணைப்பில் திளைத்திருந்தவள்..

"பிரேமத்தின் தீபங்கள் பாட...
சொர்க்கத்தில் ஆனந்தம் தேட..."

என்று அவன் இசையுடன் இசைந்து இசைத்தாள்..

"சயன நேரம்.. மம்மத பாணம்..
புலரி வரைக்கும்.. நம்மோட லோகம்..
நீ...."

ரவிவர்மனின் ஆழ்ந்த அணைப்பு இறுகிப் பின் அவளை விடுவித்து விலகியது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'

12

நிலவுப் பாட்டை பாடியவளை.. நிலவு கண்டு கொண்டதா..?

ஜன்னல் வழி வந்த சூரிய வெளிச்சத்தின் கதிர்கள் முகத்தின் மீது படிந்ததில்.. இமை சுருக்கி விழித்த யாமினி.. இமைகளை கசக்கி விட்டபடி எழுந்து உட்கார்ந்தாள்..

"யாமினி.. யாமினி.."

ரூம் கதவு தடதடத்தது.. அது அனுராதாவின் குரல் என்பதில் அலறியடித்துக் கொண்டு எழுந்தோடிப் போய் கதவைத் திறந்தாள் யாமினி.. காபிக் கோப்பையுடன் உள்ளே வந்த அனுராதா வேற்று கிரக வாசியைப் பார்ப்பதைப் போல மகளை விசித்திரமாக பார்த்து வைத்தாள்..

"கதவத் திறக்க இத்தன நேரமா..?"

"இல்லயேம்மா.. நீங்க கதவத் தட்டின சத்தம் கேட்டதுமே திறந்துட்டேனே.."

"கிழிச்ச.. ஒரு மணி நேரமாத் தட்டறேன்.. உன் காதில இப்பத்தான் விழுந்துச்சா..?"

"இப்பத்தாம்மா எழுந்திருச்சேன்.."

"அதச் சொல்லு.. அத விட்டுட்டு.. நீங்க தட்டினதும் தாவி வந்து கதவத் திறந்திட்டேன்னு கதை அளக்காதே.. இந்தா காபியப் பிடி.."

காபிக் கோப்பையை நீட்டிய அனுராதாவிடம் காபியை எப்படியம்மா பிடிப்பது என்று கேட்க வேண்டும் போல இருந்தது யாமினிக்கு..

'காபிக் கப்பை பிடின்னுல்ல சொல்லனும்..?'

பிழை திருத்தத்தை வெளியில் வாய் விடாமல் காபியைக் குடிக்க ஆரம்பித்தாள் யாமினி..

அனுராதா பேசும் பேச்சுக்கு பிழை திருத்தம் சொல்ல ஆரம்பித்தாள்.. அவள் ஆயிரம் பிழை திருத்தங்களை யாமினியிடம் சொல்லிக் காட்ட ஆரம்பித்து விடுவாளே..

ஆதலினால் அமைதி காத்த மகளை முறைத்தாள் அனுராதா..

'இப்ப எதுக்கு முறைக்கிறாங்க..?' யாமினி திருதிருத்தாள்..

"அறிவிருக்காடி உனக்கு..?"

"அது இருக்கிறதாலதான் ஒரு பெரிய கம்பெனியில எனக்கு வேலை போட்டுக் கொடுத்திருக்காங்கம்மா.."

"அவங்களுக்கு அறிவில்லடி.. இல்லேன்னா உனக்குப் போயி வேலை போட்டுக் கொடுத்திருப்பாங்களா..?"

"உங்க ஒருத்தர் செர்டிபிகேட் போதும்மா எனக்கு.. கிடைச்ச வேலை நிலைச்சிரும்.. இந்த பாராட்ட இங்கே சொல்லாதீங்க.. போயி வேலை கொடுத்த ஆபிசில சொல்லி வையுங்க.."

"இந்த வியாக்கினத்தில ஒன்னும் குறைச்சல் இல்ல.. பண்டி.. எந்த வடி கட்டின முட்டாளாவது.. ஏஸியை போட்டுட்டு ஜன்னலை 'பப்பரப்பா..'ன்னு திறந்து வைச்சிருப்பாளாடி..?"

"மாட்டாங்கதான்.."

"அப்புறம் என்ன அலுவலுக்கு நீ அந்த வேலயச் செஞ்சு வைச்சிருக்கே..?"

"நானா..?"

பேந்தப் பேந்த விழித்தபடி ஏஸியைப் பார்த்தாள் யாமினி.. அது மஞ்சள் நிற எண்களுடன் அவளைப் பார்த்து குட்மார்னிங் சொன்னது..

அலறியடித்துக் கொண்டு ஜன்னலைப் பார்த்தாள்.. அது அனுராதா சொன்னதைப் போலவே 'பப்பரப்பா..' என்று திறந்து சூரிய வணக்கம் சொல்லியது..

'கடவுளே..!'

யாமினி பரிதாபமாக அனுராதாவைப் பார்த்தாள்.. அனுராதாவோ கொதிகலனாக ஆகிவிட்டாள்.. அவளால் ஏஸியை ஓடவிட்டு ஜன்னலை திறந்து வைத்திருந்த

யாமினியின் பொறுப்பில்லாத தனத்தைக் கூட சகித்துக் கொள்ள முடிந்தது.. எப்போது அதைச் செய்தாள் என்று தெரியாமல் மகள் திருதிருப்பதைத்தான் அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை..

"என்னடி..?"

வார்த்தையைக் கடித்துத் தப்பினாள்..

"எப்பத் திறந்தேன்னு எனக்கே தெரியலைம்மா.. பட்.. நான்.. ஏஸியை ஆன் பண்ணினப்ப ஜன்னல் மூடித்தான் இருந்துச்சு.."

இப்படிச் சொல்லும் மகளை என்ன செய்தால் தேவலம் என்கிற கொலை வெறிக்கு ஆளானாள் அனுராதா..

"இப்படி இருக்கிறவ பெரிய கம்பெனியில பொறுப்பான வேலையைப் பார்க்கப் போகிறேன்னு கிளம்பறயே.. எப்படிடீ அந்த வேலையைப் பார்ப்ப..?"

யாமினிக்கும் அந்த பயம் இருந்தது.. கூடுதலாக சித்தார்த்தனைப் பற்றி நினைத்தாலே உடலில் ஏற்படும் 'ஜெர்க்' கில் அவள் அரண்டு போயிருந்தாள்.. இத்தனையும் போதாதென்று அவளை எதிரியைப் போல பார்த்து வைக்கும் தாமோதரன் வேறு அங்கிருந்தான்..

"நான் வேணும்னா இந்த வேலை வேணாம்ன்னு சொல்லிரவா அம்மா..?"

பரபரப்புடன் அவள் கேட்க.. பல்லைக் கடித்தாள் அனுராதா..

"இப்பத்தான் நீ பெரிய அறிவுக் களஞ்சியம்.. உன் அறிவுத் திறமையப் பாத்துட்டு இந்தக் கம்பெனியில உனக்கு பொறுப்பான வேலையத் தூக்கிக் கொடுத் திருக்காங்கன்னு பெரிய பருப்பப் போல பேசி வைச்ச.. இப்ப என்னடான்னா.. பயந்தாங்குளியப் போல.. இந்த வேலைக்கு நான் போக மாட்டேன்னு அடம் பிடிக்கிற..?"

"அம்மா.."

"இப்ப நீ இருக்கிற நிலைமைக்கு வேலைக்குப் போறதுதான் சரியா இருக்கும் யாமினி.. சும்மா இருக்கிற மனசு, சாத்தானோட உலைக்களம்ன்னு ஒரு கவிதயில சொல்லியிருக்கிறத படிச்சிருக்கேன்.. நீ சும்மா.. வெட்டியா.. பொழுதைப் போக்காதே.. வேலை.. வேலைன்னு ஓடிக்கிட்டே இரு.. அதுதான் உனக்கும் நல்லது.. இந்தக் குடும்பத்துக்கும் நல்லது.."

"ஆனாம்மா.. எனக்குத்தான் எந்த நேரம் எதைச் செய்து வைக்கிறேன்னே தெரிய மாட்டேங்குதே.."

மிரண்டு விழித்த மகளைப் பார்க்கப் பார்க்க.. அனுராதாவின் பெற்ற வயிறு பிசைந்தது.. மகளின் தவிப்பில் அவள் துயரம் கொண்டாள்.. அதை வெளிவிடாமல் மகளை முறைத்துப் பார்த்து திட்டித் தீர்த்தாள்..

"எனக்குன்னு வந்து பிறந்து தொலைச்சிருக்க பாரு.. இந்த லட்சணத்தில இவளுக்கு எதிரா நான்

செர்டிபிகேட் கொடுக்கிறேனாம்.. உனக்கான செர்டிபி கேட்டத்தான் நீயே கொடுத்துக்கறியே.. இதுக்கு மேலே வேற என்ன வேண்டிக் கிடக்கு..? போ.. போய் ஊர் முழுக்க தம்பட்டம் அடி.."

"அம்மா.."

"உலகத்தில முக்காவாசிப் பேரு மெகாலு பிடிச்ச தனமா அலையறவங்கதான்.. நீ வெளியில சொல்லிக்கிற.. அவங்க சொல்லிக்காம ஒளிச்சு வைச்சுக்கிறாங்க.. அவ்வளவுதான் வித்தியாசம்.. உன் அப்பாவையே எடுத்துக்க.. எதையோ சொன்னா வேற எதையாச்சும் செஞ்சு வைச்சிட்டு வந்து நிப்பாரு.. என்னங்கன்னு கேட்டா.. ஏதோ நினைப்பில செஞ்சுட்டேண்டி.. ஹி.. ஹிம்பாரு.. அவரோட சிரிப்பைப் பாக்கிறதுக்கு அவரு செஞ்சு வைச்ச காரியத்தப் பத்திக் கேள்வியே கேட்காம ஒப்புக்கிறதே பெட்டர்ன்னு நமக்குத் தோணிப் போகும்.."

பிரதாப்பைப் பற்றிய அனுராதாவின் கணக்கீட்டைக் கேட்ட யாமினிக்கு சிரிப்பு வந்தது.. மகள் முகத்தில் சிரிப்பைப் பார்த்த அனுராதாவின் மனம் கனிந்தது.. அவள் அந்தக் கனிவை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சிடுசிடுத்த முக பாவத்துடன் பேச்சைத் தொடர்ந்தாள்..

"உங்க அண்ணனையே எடுத்துக்க.. வயசுப் பொண்ணைப் பாத்துட்டாப் போதும். ஜொள்ளு விட்டு இருக்கிற இடத்த கழுவி விட்டபடியே என்ன வேலயச்

செஞ்சுக்கிட்டு இருக்கோம்கிறத மறந்து போயி வேற என்னத்தாவது செஞ்சு வைப்பான்.. ஏண்டான்னு கேட்டா.. விடுங்கம்மா.. இது வாலிப வயசும்பான்.."

இப்போது யாமினி விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.. மகளின் விரக்தி மனநிலையிலிருந்து அவளை வெளியில் கொண்டு வந்து விட்ட நிம்மதியுடன் அனுராதா ஏஸியை ஆஃப் பண்ணினாள்..

"இதுகள்ளாம் தொழிலப் பாக்கறேன்.. வேலையைப் பாக்கறேன்னு வெளியே கிளம்பும்போது உனக்கென்னடி பயம்..? நீ தைரியமா வேலைக்கு கிளம்புடி ராஜாத்தி.."

"அம்மா.."

அனுராதாவின் கழுத்தை இறுக்கிக் கட்டிக் கொண்ட யாமினி பாசத்துடன் தாயின் கன்னத்தில் முத்தமிட்டாள்..

"இதுக்கொன்னும் குறைச்சலில்ல.." மகளைத் தள்ளி விட்ட அனுராதா.. ஏதோ நினைத்துக் கொண்டவளாக..

"ஆமாம்.. நேத்து நைட்டு ஏண்டி அன்றொரு நாள் இதே நிலவில்ன்னு பாட்டுப் பாடி வைச்ச..?" என்று கேட்டு ஆழ்ந்த தூக்கத்திலும் அவளது புலன்கள் விழித்துக் கொண்டிருப்பதை புரூவ் பண்ணினாள்..

"பாட்டா..? நானா..? அன்றொரு நாள் இதே நிலவில்ன்னு பாட்டு இருக்காம்மா..? எனக்குத் தெரியாதே.."

யாமினி மறுபடியும் திருதிருத்தாள்.. உண்மையாகவே அவளுக்கு அந்தப் பாட்டைத் தெரியாது.. அதனால் அனுராதா அவளை மேற்கொண்டு கேள்வி கேட்காமல் நகர்ந்து விட்டாள்..

'நேத்து நைட்டில நான் பாட்டுப் பாடினேனா..?'

நெற்றிப் பொட்டு விண்.. விண்ணென்று தெரிக்க ஆரம்பிக்க தலையைப் பிடித்தபடி யாமினி அமர்ந்து விட்டாள்..

ஆம் என்று சாட்சி கூறும் வெண்ணிலவு பகலில் வராது என்பதினால் எனக்கென்ன என்று சூரியன் தன் போக்கில் நகர்ந்து கொண்டிருந்தான்..

13

சேரத்து மன்னவனின் தோள் சேர்ந்த பைங்கிளியே...!

வசுந்தராவைத் தழுவிநின்ற ரவிவர்மன் விலகியதில்.. அதுவரை விலகி நின்ற பயமும், பதட்டமும் வசுந்தராவின் விழிகளில் மீண்டும் வந்து அமர்ந்தன..

"விலகிச் செல்கிறீர்களா..?" அவளது பதட்டத்தில்..

"இனி விலக இயலுமா..?" என்று வினா எழுப்பினான் ரவிவர்மன்..

வசுந்தரா அமைதி கொண்டாலும்.. அவனது விலகலுக்கான காரணத்தை அறிந்து கொள்ள விரும்பினாள்..

"ஆயினும்.. தாங்கள்..?" வாக்கியத்தை முடிக்காமல் வினாவைத் தொடுத்து வைத்து அவள் தயங்கி நின்றாள்..

"ஏன் விலகுகிறேன் என்று அறிய விரும்புகிறாய் அல்லவா..?"

ரவிவர்மன் அந்த சின்னஞ்சிறு பெண்ணின் கன்னம் தட்டி முறுவலித்தான்..

"நான் காஞ்சி மக்களைக் காக்க வந்தவன்.."

"நானும் காஞ்சி மக்களில் ஒருத்திதான் என்பதனை மறந்தீரா..?"

"மறக்கவில்லையடி.. தமது தந்தையின் விருந்தினனாக தமது இல்லத்தில் யாம் தங்கியுள்ளோம் என்பதனையும் மறக்கவில்லை.."

கைலாசநாதரைப் பற்றிய நினைவூட்டலில் வசுந்தராவைச் சூழ்ந்திருந்த மாய வலைகள் அறுபட்டன.. அவள் தானாகவே ரவிவர்மனிடமிருந்து விலகி நின்றால்..

"தற்போது எதற்காக இந்த விலகல் என்று யாமும் தம்மை வினவலாம் அல்லவா..?"

வசீகரமான புருவங்களை உயர்த்தி.. அதைவிட வசீகரமாக நகைத்து வைத்தான் ரவிவர்மன்.. அதில் மயங்கிப் போன வசுந்தரா தேவி..

"இவ்விதம் நகைக்க வேண்டாம்.." என்ற வேண்டுகோளை அவன் முன் வைத்தாள்..

"ஏன்..?"

"மனம் மயங்குகிறது.."

"ஹா.. ஹா.."

ரவிவர்மன் மகிழ்வோடு உரத்த குரலில் நகைக்க ஆரம்பித்து விட்டான்.. அச்சத்துடன் அவனது அதரங்களை மூடிய வசுந்தரா தனது அதரங்களில் ஒற்றை விரலை வைத்து..

"உஸ்ஸ்..! சப்தம் எழுப்பக் கூடாது.." என்று எச்சரித்தாள்..

ரவிவர்மன் அந்தச் சூழலை வெகுவாக விரும்பி ரசித்தான்.. அவன் முன்பு நின்று உரையாட அஞ்சி, விலகி நிற்கும் மாந்தரிடையே.. அவனது உயரத்தைக் குறித்த சிந்தனையேதும் இல்லாமல்.. வெகு இயல்பாக அவனது அதரங்களை மூடிய வசுந்தராவின் உள்ளங்கரத்தில் பிரியத்துடன் முத்தம் பதித்தான்..

"தாங்கள் உள்ளீர்களே.." வெட்கத்துடன் கரத்தை இழுத்துக் கொண்டாள் வசுந்தரா..

"நான்தான் உள்ளேனே.. அதற்கென்னவாம்..?" ரவிவர்மன் அவளது கன்னத்தைக் கிள்ளியபடியே வினவினான்..

"சந்தர்ப்பம் கிட்டினால் சிந்து பாடி விடும் வல்லமையை எங்கு கற்றீர்களாம்..?"

ஒயிலாக அவன் வதனம் நோக்கி.. லாவகமாக விழிகளைச் சுழற்றிய வண்ணம் அவள் வினவிய விதத்தில் மனம் லயித்தான் ரவிவர்மன்.. அவனது அனைத்து அடையாளங்களையும் மனதில் கொள்ளாமல்.. அவன் மீதான ஈர்ப்பை மட்டுமே மனதில் கொண்டு வாயாடிய அந்த மங்கையை அவனுக்குப் பிடித்திருந்தது...

"கற்பதா..? நானா..?" அவன் மீண்டும் நகைத்து வைத்தான்..

"இதற்கும் நகைப்பா..?" அவள் அலுத்துக் கொண்டாள்..

"இந்தக் கலையை கற்பிக்கும் பல்கலைக் கழகமடி நான்.." ரவிவர்மனின் கரம் அவளது இடையை வளைத்தது..

தன் இடையில் பதிந்த வலிமையான அந்த இரும்புக் கரத்தின் ஆக்ஞைக்கு கட்டுப்பட்டு அவனது மார்பில் விழுந்தாள் வசுந்தரா.. அவனது கரம் அவளை மலர் மாலையாக வளைத்துக் கொண்டது..

"தங்களின் பல்வேறு திறமைகளில் இதுவும் ஒன்றோ..?"

"ஆம்..! இன்னும் பல திறமைகள் உண்டு... விரைவில் அவற்றை உன்னிடம் வெளிப்படுத்திவிட உத்தேசித்துள்ளேன்.."

குறும்பாக இமை சிமிட்டியவனின் செய்கையில் வசீகரிக்கப் பட்ட வசுந்தராவின் கள்ளம், கபடமில்லாத பால் வதனத்தை ஆச்சரியத்துடன் நோக்கினான் ரவிவர்மன்..

இருபொருள்பட அவன் உரைத்ததின் பொருளை உணராமல் அவனிடம் மயங்கிநின்ற அக்காரிகையின் மயக்கத்தில் அவன் மனம் கர்வம் கொண்டது.. கள்ளூரும் போதை கொண்டது..

ஆண்மையின் வெற்றிக்கான அக்கர்வத்தை அவனுக்கு அள்ளி வழங்கிக் கொண்டிருந்த வசுந்தரா அதை உணராத அறியாமையுடன் அவனிடம் ஒன்றி நின்றதில் அவனது பிரியம் அதிகரித்தது..

அதுதினம் வரை அவன் இதைப் போன்ற பிரியத்தை நுகர்ந்ததில்லை.. காமமற்ற காதலை அவனிடம் தூண்டி விட்ட அக்கன்னிகையை கவர்ந்து புரவியில் ஏறி.. கண் காணாத தீவிற்கு சென்றுவிட அவன் மனம் விழைந்தது.. மலர்போன்ற மென்மையுடன் அவனது சித்தத்தை மயக்கிய அந்தக் கன்னிகையின் கழுத்தினில் அதரம் புதைத்தவன் அவளது செவியோரம் முணுமுணுத்தான்..

"நீ மந்தார மலரடி.."

"மந்தார மலரா..?"

வசுந்தரா விழி விரித்தாள்.. அவளது பிறைநுதல் நெற்றியில் அதரம் பதித்த ரவிவர்மன் பிரியத்துடன்..

"அது கௌரத்து மலர் வசுந்தரா.." என்று உரைத்தான்..

"நான் தமிழகத்துப் பெண் என்று உரைக்கிறீர்களா..?" வசுந்தராவின் வதனம் வாடி விட்டது.

"அவ்விதம் நான் உரைத்தேனா..? எனக்கு தமிழையும், தமிழ்மகளையும் மிகவும் பிடிக்கும் என்பதை அறிவாய் அல்லவா..?"

"தெளிந்த தமிழில் உரையாற்றுகிறீர்கள்.."

"அது ஒரு குற்றமா..?"

"அல்ல அரசே..! யாமும் தெளிந்த மலையாளத்தில் உரையாட வேண்டும்.. மலையாள மொழியை எனக்குக் கற்றுத் தருவீர்களா..?"

"தமக்கு மலையாள மொழியைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தால் மாலிக்காபூரை எவர் விரட்டுவது..?"

ரவிவர்மனின் கேலியில் வதனம் சிவந்தாள் வசுந்தரா.. அவளது பேச்சும், செயலும் ரவிவர்மனின் வியப்பை மிகுதியாக்கிக் கொண்டே இருந்தன... அவளது கன்னங்களைத் தட்டி அவன் மென்மையுடன் உரைத்தான்..

"காதலுக்கு மொழிகள் இல்லையடி.."

அவன் சென்று வெகு நாழிகையான பின்பும் வசுந்தராவின் செவிகளில் அவனது வார்த்தைகள்

ஒலித்துக் கொண்டேயிருந்தன.. அவள் மனம் விம்மியது.. அவளது மனம் கவர்ந்த அந்த கேரளத்து ஆணழகனின் மனம் கவர யாது செய்வது என்ற சிந்தனையிலேயே அவளது பொழுதுகள் கழிந்தன..

அன்று அவளிடம் சரசமாடிய ரவிவர்மன் அடுத்து வருகை தந்த தினங்களில் வசுந்தரா என்ற கன்னிகை ஒருத்தி அவன் நினைவிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்ற எண்ணமற்றவனாக.. கைலாசநாதருடனும், மற்ற வணிகப் பெருமக்களிடமும் ஆலோசனைகள் நிகழ்த்திக் கொண்டிருந்தான்..

"மாலிக்காபூரை தமிழகத்தை விட்டு விரட்டியடிக்க தீவிர முனைப்புடன் உள்ளார் சேர அரசர்.."

அங்கயற்கண்ணியிடம் கைலாசநாதர் கூறிக் கொண்டிருந்ததை செவி மடுத்தாள் வசுந்தரா..! அவளது மனதை நிறைந்த நாயகனின் மனதில் யுத்த முழக்கம் வந்து விட்டது என்பதில் நெடுமூச்செரிந்தாள் அவள்..

'என்னைப் பற்றிய நினைவுகளை அவன் துறந்து விட்டானா..?'

அவளிடம் 'வர்மன்' என அறிமுகமான புரவி வீரனைப் பற்றிய மனத்தாங்கல் அவள் மனதில் எழுந்தது..

அந்தப் புரவி வீரனுக்கும் அவளுக்கும் இடையே உள்ள வயது வித்தியாசமோ.. அவன் அரசன் என்ற உயரமோ.. அவனது கீர்த்திகளோ.. அவளை அச்சப் படுத்தவே இல்லை..

அவன் அவளுடையவன்.. இந்த ஒன்று மட்டுமே அவளது உள்ளத்தில் உறைந்திருந்தது..

எதன் பொருட்டு ராஜாரவிவர்ம குலசேகரன் காஞ்சிக்கு வருகை புரிந்தானோ.. அந்த செயற்கரிய செயலை செவ்வனே நிறைவேற்றி விட்டான்..

மாலிக்காபூரின் படையெடுப்பில் தமிழகம் சிதில மடையாமல் காக்க.. சோழ நாட்டின் பகுதிகளில் படை யெடுத்து காஞ்சி மாநகரை கைப்பற்றிய விட்டான்..

வேதவதி நதிக்கரையில் முகாமிட்டிருந்த அவனது வெற்றிச் செய்தி வசுந்தராவைத் தேடி வந்தது..

"கேட்டாயா வசுந்தரா..! நம் சேர மன்னர் ரவிவர்மர் காஞ்சியை வெற்றி கொண்டு விட்டார்.."

குதூகலத்துடன் வல்லவன் கூறிய போது.. எவர்மீதும் தேவையற்ற பிரியம் கொள்ளாத அவன் மனதில் ரவிவர்மனின் மீது இத்துணை பிரியம் உள்ளதா என்று வியந்து போனாள் வசுந்தரா..

"பின்னே இருக்காதா..?" என்று வினவி வைத்தான் வல்லவன்..

"அவர் சாகசங்களின் நாயகர்..! மாலிக்காபூரின் கரங்களில் குரங்கின் கரங்களில் அகப்பட்ட பூமாலையாக சிதிலமடைய இருந்த இந்து தர்மத்தை காவல் செய்ய வந்த காவலர்..! நாட்டைவெல்லும் ஆசையிலா அவர் சுந்தர பாண்டியனையும், வீரபாண்டியனையும் வெற்றி

கொண்டார்..? அல்ல தங்கையே..! தாயாதிச் சண்டையிலே ஒருவருடன் ஒருவர் போரிட்டு மாளலாம்.. அதை விடுத்து அன்னியரை நியாய சபையின் தலைவனாக்கி நியாயம் கூற அழைக்கலாமா..? பாண்டியர்கள் அதைச் செய்து விபரீதத்திற்கு வித்திட்டினர்.. மாலிக்காபூர் நியாயம் பிளக்கிறேன் பேர்வழியென்று தமிழகத்தில் நுழைந்தான்.. இந்து சமயத்தாரின் கோவில்களை இழுத்து மூடினான்.. அதைத் தட்டிக் கேட்க கிளம்பி வந்த சிங்கமல்லவா 'வே' நாட்டின் வேந்தர்..!"

வல்லவன் கூறக்கூற அதைக் கேட்பதில் இன்பம் கொண்டாள் வசுந்தரா.. அவளது செவிகளில் தேனருவி பாய்ந்ததைப் போல உணர்ந்தாள்.. இருந்தும் மனம் மறைத்து பொய் கோபம் காட்டினாள்..

"போதும் உனது மன்னர் புராணம்.."

"உனக்கேன் இத்துணை சினம் வசுந்தரா..?"

"போர் புரிவது வேந்தனின் பணி... இதில் வியப்படைய யாது உள்ளது..?"

"அவர் போரில் மட்டும் வல்லவரல்ல.."

"உன் நாமம் வல்லவன் என்பதற்காக.. சேரத்து அரசரை வல்லவர் என்று புகழ வேண்டாம்.."

"எனக்கு நாமம் மட்டும்தான் வல்லவன்..! அவரோ.. திறமைகளிலும், செயற்கரிய செயல்களிலும் வல்லவர்.."

"அப்படியா..? அதையும்தான் உரையேன்.."

“கேள் தங்காய்..! அவர் மிகப் பெரும் கவிஞர்..”

“ஆஹாஹா..!”

“பிரத்யும்னாப்யுதயம் என்ற நாடகத்தை இயற்றியவர்..”

“அறிவேனே.. தந்தை முதற்கொண்டு அனைவரும் இதையேதான் மீண்டும் மீண்டும் உரைக்கின்றார்களே.. நீயாவது விட்டு வைப்பாய் என்று பேராசை கொண்டேன்.. இதோ.. அதையும் நீ தவிடு பொடியாக்கி அவர் புகழ்பாட ஆரம்பித்து விட்டாய்..”

“இல்லாத எதையும் கூறவில்லையே..”

“இருப்பதைக் கூறியே என் செவிகளில் குருதியை பெருக்கெடுத்து ஓட வைக்கிறாயே..”

“நீ ஞான சூன்யம்..!”

“இருந்து விட்டுப் போகிறேன்..”

“எதற்காக இல்லாவிடினும்.. நீ ஆலய வழிபாடு செய்ய ஏகாம்பரேஸ்வரரின் ஆலயத்திற்கும், அருளாளப் பெருமாளின் ஆலயத்திற்கும் அச்சமின்றி சென்றுவர வழிவகை செய்திருக்கும் அரசரின் மீது நீ நன்றி கொண்டு தான் ஆக வேண்டும்..”

“ஹ..! அதற்கு நீ வேறு நபரைக் காண வேண்டும்..”

உதட்டைச் சுழித்துத் தோள்களைக் குலுக்கிக் கொண்ட வசுந்தராவின் அகத்தில்..

'நன்றி மட்டுமா..? அவர்மீது காதலே கொண்டிருக்கிறேனே..' என்ற ஏக்கம் இருந்ததை வல்லவனால் உணர முடியவில்லை.

அவன் பாவம்..! என்றும் போல அன்றும் அவனது தங்கை கள்ளம் இல்லாத வெள்ளை மனத்துடனே இருக்கிறாள் என்று எண்ணி விட்டான்.. அந்நினைவுடனே..

"'வே' நாட்டின் வேந்தரைப் போன்ற வீராதி வீரரையும்.. கலைகளின் காவலனையும்.. கீர்த்தி மிக்கவரையும் நீ காண்பதரிது.." என்று கூறி விட்டுச் சென்று விட்டான்..

'அரிதானவன்தான் அவன்..'

நீண்ட நெடு நாழிகைகளாய் அசையாமல் அங்கேயே வீற்றிருந்த வசுந்தராவைத் தேடி வந்த அங்கயற்கண்ணி.. மகளின் அந்தத் தோற்றத்தில் துணுக்குற்றாள்..

அத்தோற்றம்.. துஷ்யந்தனின் நினைவில் துர்வாசரின் வரவை மறந்து அசையாமல் அமர்ந்திருந்த சகுந்தலையின் தோற்றத்தைப் போல இருந்தது..

'வசுந்தரா..?'

அவளது தாய் மனம் அடித்துக் கொண்டது.. மழலையின் இயல்பைக் கொண்ட மகளின் செயல் பாடுகளில் சமீபகாலமாக பெருத்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளதை அவள் உணர்ந்துதான் இருந்தாள்... அந்த வித்தியாசமும் மன்னர் ரவிவர்மனின் வரவுக்குப்

பின்னரே ஏற்பட்டிருந்ததை அவளது சூட்சும அறிவு உணர்த்தத்தான் செய்தது..

‘மலைமீது மடு ஆசை கொள்வதா..?’

அங்கயற்கண்ணியின் மனம் பதறியது.. கிட்டாதாயின் வெட்டென மறந்து விடுதலே நலம் பயக்கும்.. இதை வசுந்தராவுக்கு எவ்விதம் அவள் உணர்த்துவாள்..?

அவர்களது உறவு வட்டாரத்தில் கைலாசநாதரே மிகப் பெரும் செல்வந்தர்.. அரண்மனை வாழ்வுக்கு நிகரான வாழ்வை தமது குடும்பத்திற்கு அவர் அளித்திருந்தார்.. ஓர் இளவரசியைப் போல வசுந்தராவும்.. இளவரசனைப் போல வல்லவனும் வளர்ந்தார்கள்.. இத்தகைய பெருமையை சேர மன்னன் ரவிவர்மனின் முன்னிலையில் அவர்கள் முன்னிறுத்த இயலுமா..?

ரவிவர்மன் எங்கே..! கைலாசநாதர் எங்கே..!

அவர் போன்ற செல்வந்தரின் இல்லத்தில் வசுந்தராவை மணம் முடித்துக் கொடுக்கத்தான் கைலாசநாதரால் இயலும்.. மன்னருக்கு மாமனாராக அவரால் இயலுமா..?

அத்துடன் ரவிவர்மன் மணமானவன்.. பல ராணிகளை மணந்தவன்.. வாலிப வயதில் பிள்ளைகளை உடையவன்..

அன்றுதான் மலர்ந்த புது மலராய் மணம் வீசும் வசுந்தரா அவனை மணப்பதா..?

அங்கயற்கண்ணியின் மனம் ஒப்பவில்லை.. அவர்களின் நிலையில் உள்ள வணிக குடும்பத்தில்.. வசுந்தராவுக்கு பொருத்தமான வயது கொண்ட மணமகனைத் தேர்வு செய்து மகளை மணம் முடித்து கொடுக்க வேண்டுமென அவள் விரும்பினாள்..

வசுந்தரா அவளது இல்லத்திற்கு மகாராணியாக வேண்டும்.. அதை விடுத்து மன்னரின் அந்தப்புரத்தில் பலராணிகளில் ஒரு ராணியாக வாழ வேண்டாம்.. அவளத கணவனின் இல்லத்தில் அவள் மட்டுமே மகாராணியாக இருக்க வேண்டும்..

"வசுந்தரா..!"

அங்கயற்கண்ணியின் கடுமை விரவிய குரலில் வசுந்தராவின் தேகம் தூக்கிப் போட்டதைப் போல உதறியது..

"அம்மா..!"

அவள் பதறி எழுந்தாள்.. அதில் அங்கயற் கண்ணியின் மனம் வலியை ஏற்றது.. அதுவரை அவளது மகளை அவள் கடிந்து ஒரு மொழி கூறியதில்லை.. இன்று அந்த செல்ல மகளை அவள் அதட்டி அழைக்கும் நிலை வந்து விட்டதே..

"உணவருந்தும் பொழுது கடந்து விட்டது. இல்லத்தில் இருக்காமல் இங்கென்ன செய்கிறாய்..?"

மனதின் நெகிழ்வை மறைத்து கடுமை விரவிய வதனத்துடன் அதட்டினாள் அங்கயற்கண்ணி..

"சற்று இளைப்பாற எண்ணினேன்.." வசுந்தரா முணுமுணுத்தாள்..

"இளைப்பாறும் அளவிற்கு என்ன பணி புரிந்தாய்..?" சினத்துடன் வினவினாள் அங்கயற்கண்ணி..

"அம்மா..?"

திகைப்புடன் விழித்த மகளைக் கண்டதும் அங்கயற்கண்ணியின் சினம் சற்றுத் தணிந்தது.. பணி புரிய ஏவலாள்களைக் கொண்ட மகள் என்ன பணி புரிய வேண்டும் என்ற நினைவில் அதரங்களைக் கடித்துக் கொண்டாள்..

"பருவம் எய்திய பெண்.. இவ்வாறு சிந்தனையுடன் அமரக் கூடாது வசுந்தரா.." தன்மையாக கூறினாள்..

"ஏன் அம்மா..?" புரியாமல் வினவினாள் வசுந்தரா..

"காண்பவர்கள் கதை கட்டி விடுவார்கள் மகளே..!"

"என்னவென்று..?"

"உன் மனதில் ஏதோ கள்ளம் புகுந்து விட்டதென்று.."

மகளின் வதனத்தை கூர்மையுடன் நோக்கிய அங்கயற்கண்ணி இமைக்கும் பொழுதிற்குள் வசுந்தராவின் வதனத்தில் வந்து சென்ற குற்றஉணர்வை கண்டு கொண்டாள்..

அவள் மனம் அதிர்ந்தது.. வசுந்தராவைப் பற்றிய அவளின் கணக்கீடு உண்மையாகிப் போனதில் பதட்டம் கொண்டாள் அங்கயற்கண்ணி..

அவளின் சொல்லுக்கு எதிர்சொல்லை வசுந்தராவின் வாய்மொழி உதிர்த்திருக்க வேண்டாமா..? ஏன் அவள் மௌனம் சாதிக்கின்றாள்..? எவர் மனதில் கள்ளம் உள்ளது என்று வரிந்து கட்டிக் கொண்டு அவள் மல்லுக்கு வந்திருக்க வேண்டாமா..? வசுந்தராவின் வழக்கம் அதுதானே.. அந்த வசுந்தரா எங்கு சென்றாள்..?

அங்கயற்கண்ணியின் மனதில் போராட்டம் ஆரம்பமானது.. அவளது மனம் உணர்ந்த விவரத்தை கணவரிடம் அவளால் பகிர்ந்து கொள்ள இயலவில்லை.. அதை விடுத்து வேறு விதமாக அவளது மனக்கவலையை போக்க முயன்றாள் அவள்..

"நமது வசுந்தராவுக்கு ஏற்ற மணமகனைத் தேட வேண்டாமா..?"

கைலாசநாதருக்கு பரிமாறியபடி அவள் மெல்லிய குரலில் கூறியபோது கைலாசநாதர் வியப்புடன் மனைவியின் வதனத்தை நிமிர்ந்து பார்த்தார்..

"அவள் குழந்தை அங்கயற்கண்ணி..! துள்ளித் திரியும் கன்றுக்குட்டியின் சுபாவம் கொண்டவளை புகுந்த வீட்டிற்கு அனுப்ப ஏன் துரிதம் காட்டுகிறாய்..?"

ஏனென்று அவள் எவ்விதம் உரைப்பாள்.. அங்கயற்கண்ணியின் இமைகள் நனைந்தன.. உணவு பரிமாறும் பாவனையில் அவள் கண்ணீரை கணவரிட மிருந்து மறைத்தாள்.. அதை உணராத கைலாசநாதர் உற்சாகத்துடன் உரையாடலானார்..

"அறிவாயா அங்கயற்கண்ணி..! காஞ்சியின் அருளாளப் பெருமாள் கோவிலிலும்.. பூவிருந்தவல்லி பெருமாள் கோவிலிலும்.. நமது மன்னரின் வெற்றியைக் கூறும் கல்வெட்டுச் சாசனங்கள் பொறிக்கப் பட்டுள்ளன.."

"அவ்வாறா..?"

"ஆம்.. அவை வீரபாண்டியன் மீதும்... சுந்தர பாண்டியன் மீதும் சேரமன்னர் ரவிவர்மன் அடைந்த வெற்றிக்கு சான்றுகளாய் அமைக்கப்பட்டுள்ளன.. எத்துணை இனிமையான செய்தி இது..!"

அங்கயற்கண்ணி மறுமொழி பகரவில்லை... கைலாச நாதருக்கும் வல்லவனுக்கும் ராஜா ரவிவர்மனைப் பற்றிய அனைத்து செய்திகளுமே, இனிமையான செய்திகள்தான் என்ற நினைவில் அவளது நெஞ்சம் கனத்தது..

ரவிவர்மன் வீரன்தான்.. தீரன்தான்.. அவன் மட்டும் வசுந்தராவின் மனதைக் கவர்ந்த கள்வனாக இல்லாமல் இருந்திருந்தால் அவனைப் பற்றிய செய்தி அங்கயற் கண்ணிக்கும் இனிமையான செய்திதான்.. அவ்வாறு இல்லையே...

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'

13

எங்கேயோ கேட்ட குரலை..
இனம் காண முடிகின்றதா..?

கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள் யாமினி.. அழகான காட்டன் புடவையும்.. நீளப் பின்னலுமாக இருந்தவளின் தோற்றம் வெகு பாந்தமாக இருந்தது.. ஏதோ ஓர் யோசனையுடன் இருந்தவளை கண்ணாடியில் தெரிந்த அவளின் பாந்தமான அழகு ஈர்க்கவில்லை.. மாறாக.. அறிமுகமில்லாத எவரோ ஒருவரை உற்றுப் பார்ப்பதைப் போல தன்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவளை ஒரு மொத்து மொத்தி இந்த உலகத்திற்கு இழுத்து வந்தாள் அனுராதா..

“வேலைக்குத்தான கிளம்பற..?”

“ஆமாம்மா.. ஆமாம்..”

“இதையெல்லாம் உணக்கையாய் சொல்லிரு.. மத்ததில சொதப்பு.. கண்ணாடி பார்க்கிறவ, யாரையோ பாக்கறதைப்போல இப்படி ஏண்டி முறைச்சுக்கிட்டு நிக்கிற..? உலகத்திலேயே தன்னைத்தானே முறைச்சுக்கிற முத ஆளா நீதாண்டி இருப்ப..”

யாமினி பேசவில்லை.. அனுராதா இடித்துக் காட்டுவதில் இருந்த உண்மையில் அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

"சரி, சரி.. விடு.." என்றாள் அனுராதா..

"ம்ம்ம்.."

"இன்னைக்கு முதல்நாள்.. மயங்கி, மயங்கி நிக்காம கரெக்ட் டயத்தில ஜாயின் பண்ற வழியப் பாரு.."

அனுராதாவின் வார்த்தைகளில் நான் எவரிடம் மயங்கி நிற்கப் போகிறேன் என்ற கேள்வி யாமினியின் மனதில் எழுந்தது.. கூடவே சித்தார்த்தனின் உருவமும் வந்ததில் அவள் அரண்டு போனாள்..

'இதென்ன.. இவன் நினைப்பு வந்து தொலைக்குது.. இவன் யார்.. நான் யார்..?'

அவன் அவளுடைய எம்.டி என்ற புதிய பந்தத்தில் அப்போதுதான் நுழைய இருப்பவன் என்பதையும் தாண்டி அவனுடன் ஆண்டாண்டு காலமாக பழகியதைப் போன்ற சொந்தம் தன் மனதில் உருவாகியிருப்பதை திகைப்புடன் உணர்ந்தாள் யாமினி..

'இது மட்டும் அந்த தாமோதரனுக்குத் தெரிஞ்சது.. வேற வினையே வேணாம்.. இன்னைக்கே சீட்டைக் கிழிச்சு வீட்டைப் பாத்து நடையைக் கட்டுன்னு அனுப்பி வைச்சிருவான்..'

அலுவலகம் சென்றால் தாமோதரனையும் பார்க்க வேண்டி வரும் என்பதில் களைப்பாக உணர்ந்தாள் யாமினி.. அவளைக் கண்டவுடன் விரோதித்த முதல் நபர் அவனாகத்தான் இருப்பான் என்று நினைத்துக் கொண்டாள்..

'என்னவோ அவன் பிரண்டை நான் கடத்திக் கொண்டு போகப் போகிறதை போலயில்ல பாத்து வைச்சான்..'

ஏன் அவன் அவ்வாறு நினைத்தான் என்று யாமினிக்கு புரியாமல் இல்லை.. அவளாக இருந்தாலும் அப்படித்தான் நினைப்பாள் என்று அவள் நினைத்துக் கொண்டாள்..

ஆருயிர் தோழமையை பாதுகாவல் செய்ய விரும்பும் யாரும் அப்படித்தான் நினைப்பார்கள்..

"என்ன..? வேலைக்குக் கிளம்பற உத்தேசம் இருக்கா.. இல்லியா..?"

அனுராதாவின் குரல் வழக்கம் போல யாமினியை தன்னுணர்விற்கு மீட்டு வந்தது.. அனுராதாவின் முகத்தில் எரிச்சல் தெரிந்தது..

"இப்படி மெகாலு பிடிச்சத்தனமாக நிக்கிறவ.. எந்த தைரியத்திலடி வேலைக்குப் போகனும்னு கிளம்பி நிக்கிற..?" என்று எரிந்து விழுந்தாள்..

யாமினியின் முகத்தில் தெரிந்த குற்றஉணர்வு அனுராதாவின் கோபத்தை அதிகப்படுத்தியது..

"செய்யறதையும் செஞ்சுட்டு அறியாப்புள்ள மாதிரி முகத்தை வைச்சுக்கிறதில குறைச்சல் இல்ல.. கிளம்புடி முதல்ல.."

"ஆகட்டும்மா.."

"புத்தியோட பொழைச்சுக்க.. இந்த வேலை உனக்கான அடையாம்.. உன் சம்பளத்தை வாங்கி பொழப்பு நடத்தனும்னு ஒன்னும் யாரும் இங்கே காத்திருக்கல.. இதிலயாவது நீ மனசை செழுத்திருவியான்னுதான் நான் ஏங்கறேன்.."

அனுராதாவின் குரல் தழதழத்ததில் யாமினிக்கு துயரமாக இருந்தது.. அவளைப் பெற்றவளுக்கு அவள் கொடுக்கும் மன அமைதி இதுதானா..? அவளை முன்னிருத்தியே அனுராதாவுக்கும், பிரதாப்புக்கும் இடையே அடிக்கடி சண்டைகள் மூழ்வதை அவள் அறிவாள்..

'என்ன பிறப்பு.. என்பிறப்பு..!' மனம் நொந்தாள் யாமினி..

"உடனே முகத்தை தொங்கப் போட்டுக்காதே.. சிரிச்ச முகமா வேலைக்குக் கிளம்பு.. சாமிய கும்பிட்டுக்க.. நின்னா நின்ன இடம்.. உக்காந்தா உக்காந்த இடம்னு இருக்காம நல்ல புத்தியோட பொழைக்கனும்னு வேண்டிக்க.."

அனுராதா பூஜையறையில் விளக்கேற்றி பூஜை செய்தாள்.. மகளுக்கு கற்பூர ஒளியைக் காட்டினாள்.. தொட்டு வணங்கிய மகளின் நெற்றியில் குங்குமமிட்டு வழி அனுப்பி வைத்தாள்..

யாமினி வேலையில் சேரக் கிளம்பினாள்..

14

'வே' நாட்டின் வேந்தன் மனதை வென்று விட்டாள் காஞ்சியின் பாவை..

கைலாசநாதர் ஆனந்தத்துடன் இல்லம் புகுந்தார்.. அவருடைய விழிகள் அங்கயற்கண்ணி எவ்விடத்தில் உள்ளாள் என்று துழாவின..

"அங்கயற்கண்ணி..! அங்கயற்கண்ணி..!"

அவரின் ஆர்வம் பொங்கிய குரலின் அழைப்பில் சமையல் கூடத்தை விட்டு வெளிப்பட்டாள் அங்கயற் கண்ணி.. அவளது கரங்களில் தண்ணீர் நிரம்பிய பெருங் குவளை இருந்தது..

"வாருங்கள்.. தற்போதுதான் தங்களுக்கு இல்லம் ஒன்று காஞ்சியில் உள்ளது.. அவ்வில்லத்தில் தங்களின் மனையாட்டியும், செல்வப் புதல்வியும் உள்ளார்கள் என்ற ஞாபகம் வந்ததா..?"

மனையாட்டியின் பரிகாசம் கலந்த சினத்தை ரசிக்கும் விதமாக..

"ஹா.. ஹா.." என்று நகைத்தார் கைலாசநாதர்..

"போதும் தங்களின் புன்சிரிப்பு..! கரம், கால்களைச் சுத்தம் செய்துவிட்டு உள்ளே வாருங்கள்.. உணவு

தயாராக உள்ளது.. நான் பரிமாறுவதற்கான ஆயத்தங் களைக் கவனிக்கச் செல்ல வேண்டும்.."

கணவரைத் துரிதப் படுத்தியவளின் விழிகள் அவரின் பின்னால் வல்லவன் வருகை தருகிறானா என்று தேடின..

"வல்லவன் எங்கே..? தங்களுடன்தானே வருகை தந்தான்..? அழைத்துச் சென்றவர் அவனை விடுத்து திரும்பி வந்துள்ளது ஏன்..?" வினாக்களை அடுக்கினாள்..

இல்லத்தின் மையப்பகுதியில் இருந்த திறந்தவெளி முற்றத்தில் இறங்கிய கைலாசநாதர், அங்கிருந்த அகன்ற அண்டாவில் நிரம்பியிருந்த தண்ணீரை குவளை கொண்டு முகர்ந்து கரம், கால்களை சுத்தம் செய்தபடி மனைவியை நோக்கினார்..

புதல்வனைத் தேடிய பரிதவிப்பு அங்கயற்கண்ணி யின் வதனத்தில் விரவிக் கிடந்ததில் மனையாட்டியின் மீது பரிவு கொண்டார்..

"வல்லவன் என்னுடன் வருகை தரவில்லை அங்கயற்கண்ணி.."

"ஏனென்றுதானே வினவிக் கொண்டுள்ளேன்..? அவன் இளம் பிராயத்தினன்.. தங்களின் வணிகத்தைப் பற்றிய நுண்ணறிவு அவனைப் போன்ற விளையாட்டுப் பிள்ளையின் புத்திக்கு எவ்விதம் எட்டும்..? உல்லாசமாக நகர்வலம் வந்து கொண்டிருந்தவனை திடிரென்று

வணிகராக மாறக்கூறினால், பாவம், அவன்தான் என்ன செய்வான்..?"

அங்கயற்கண்ணியின் ஆதங்கத்தில் கைலாசநாதரின் பரிவு மிகுதியானது.. அவர் மனைவியின் கரத்திலிருந்த குவளையை வாங்கி அதிலிருந்த தண்ணீரைப் பருகினார்.. களைப்பு அகன்ற நிம்மதி அவர் வதனத்தில் மீண்டது.. புதல்வனைக் காணத தவிப்புடன் அங்கயற்கண்ணி சமையல் கூடத்துக்குள் புகுந்து கொள்ள.. கைலாசநாதர் உணவு அருந்தும் கூடத்திற்குச் சென்றார்.. அவருக்காக மனைப்பலகையை போட்டு வைத்து.. அதற்கு எதிரில் இருந்த நீண்ட பலகையில் தலைவாழை இலை விரித்து தண்ணீர் தெளித்து வைத்தாள் அங்கயற்கண்ணி..

மனைப் பலகையில் அமர்ந்தார் கைலாசநாதர்.. அவருக்கு எதிரில் உணவுப் பதார்த்தங்கள் நிரம்பிய பாத்திரங்களை பரப்பி வைத்துவிட்டு.. அருகில் அமர்ந்து, பரிமாற ஆரம்பித்தாள் அங்கயற்கண்ணி..

முதற்கவளம் அன்னத்தை எடுத்து.. சிரத்தின் மீது வலக்கரத்தை வைத்து.. மனதுக்குள் அன்னமிடும் அன்னபூரணியைத் வணங்கி நன்றி உரைத்து விட்டு உண்ண ஆரம்பித்தார் கைலாசநாதர்..

மௌனத்தை அரணாகக் கொண்டு.. வார்த்தை களைச் சிதற விடாமல் அவருக்கு பரிமாறும் பணியை மட்டும் சிரமேற்கொண்டிருந்த அங்கயற்கண்ணியின் வாடிய வதனத்தில் மனத்தாங்கல் தென்பட்டது..

"என்மீது சினம் கொண்டுள்ளாயா அங்கயற்கண்ணி..?" கனிவுடன் வினவினார் கைலாசநாதர்..

அல்ல என்ற பாவனையில் சிரத்தை இடம், வலமாக அசைத்த அங்கயற்கண்ணியின் விழிகளில் கண்ணீர் பெருகியது..

"சினம் கொள்ளும் அளவிற்கு தாங்கள் என்ன கெடுதல் புரிந்தீர்கள்..? விளையாட்டுப் பிள்ளையாக துள்ளித் திரிந்த வல்லவனை வணிக உலகத்திற்குள் இழுத்துக் சென்றுள்ளீர்கள்.. தந்தையின் வழியில் தனயனும் செல்வதில் நான் சினம் கொள்ள என்ன உள்ளது..?"

"பின் எதன்பொருட்டு முகம் வாடியுள்ளாய்..?"

"தாங்கள் வரும்போது அவனையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கலாமே..?"

"நான் அழைக்கவில்லையென்றா எண்ணுகிறாய்..? அழைத்தேன் அங்கயற்கண்ணி.. அவன்தா வர மறுத்து.. அரசருடன் கொல்லம் நகரத்திற்குச் சென்று விட்டான்.."

"என்ன..? அரசருடன் சென்று விட்டானா..?".

"ஆம்.. அரசர் கூறுவதுதானே அவனுக்கு வேதவாக்கு..? ஆஹா..! அவரின் மகிமையை என்னவென்று இயம்புவேன் நான்..! விளையாட்டுப்

பிள்ளையாக நகர்வலம் வந்து கொண்டிருந்தவனை பொறுப்பான புதல்வனாக மாற்றி விட்டாரே.."

"மெய்தான்.."

நன்றியுடன் உரைத்தாள் அங்கயற்கண்ணி..! அவள் மனம்.. சேரமன்னன் ரவிவர்மன் குலசேகரனை போற்றித் துதித்தது.. அரசரால் அல்லவோ அவளது ஆருயிர் புதல்வன் திறமையும், பொறுப்பும் ஒருங்கிணையப் பெற்ற வணிகனாக மாறியுள்ளான்..!

ரவிவர்மன் கைலாசநாதரின் இல்லத்தில் விருந்தினராக தங்கியிருந்த தினங்களில் வல்லவன்.. ரவிவர்மனின் அருகாமையிலேயே சுற்றி வந்தான்.. ரவிவர்மனின் வீரத்திலும்.. கலைத் திறமையிலும் அவன் வசீகரிக்கப் பட்டிருந்தான்.. ரவிவர்மன் எதை உரைத்தாலும் சிரத்தையுடன் செவி மடுக்கும் அவ்விளைஞன் மீது ரவிவர்மனும் அன்பு கொண்டான்..

எப்போதும்.. தங்களுக்கு பிடித்தமானவர்களின் உரைகளை சிரமேற்கொண்டு கடைபிடிப்பது உலகோரின் வழக்கமாகும்..

வல்லவனும்.. அதைப் போன்று ரவிவர்மனின் உரைகளை கடைபிடிக்க ஆரம்பித்தான்.. வணிகத்தில் அவனது கவனத்தை திருப்பி விட்டான் ரவிவர்மன்.. பொருள் ஈட்டுவதில் உள்ள இன்பத்தை வல்லவனுக்கு உணர்த்தினான்..

"வல்லவா..! ஒரு நாட்டின் மீது படையெடுத்துக் சென்று போரிட்டுப் பெறும் வெற்றிக்கு ஈடானது.. வணிக உலகில் நீ ஈட்டும் வெற்றி..!"

ரவிவர்மனின் சொற்களில் பெருத்த வியப்புக் கொண்டான் வல்லவன்.. இரண்டும் ஒன்றாக இருப்பது எவ்விதத்தில் சாத்தியமாகும்..? அவனுக்கு விளங்க வில்லை.. தெள்ளத் தெளிவான விளக்கத்தை அவனுக்கு அளித்தான் ரவிவர்மன்..

"மெய்தான் இளைஞனே..! வணிக உலகம் போட்டிகளையும்.. பொறாமைகளையும் உள்ளடக்கியது.. போர்க்களத்தில் உள்ளதைப் போல நேருக்கு நேரான எதிரிகளை நீ அங்கு சந்திக்க இயலாது.. முதுகிற்குப் பின்புறமாக பின்னப்படும் சதி வலைகளை முறியடித்து நீ வெற்றி பெற வேண்டும்.. அதுவும் ஓர்விதத்தில் யுத்தத்திற்கு நிகரானதுதான் இளைஞனே..! சதியை முறியடித்து நீ ஈட்டும் வெற்றி.. போர்க்களத்தில் ஈட்டப் படும் வெற்றிக்கு நிகரானதுதான்.. ஓர்முறை உனது தந்தையுடன் ஏதேனும் ஒர் வணிக ஒப்பந்தத்தைப் பெற சென்று வா.. நான் கூறுவதில் உள்ள அர்த்தங்கள் அனைத்தையும்.. அப்போது நீ அனுபவ பூர்வமாக அறிந்து கொள்வாள்.."

ரவிவர்மனின் வார்த்தைகளில் மறைந்திருந்த தூண்டுதலில் வல்லவன் ஆர்வம் கொண்டான்.. அதுதினம் வரை வணிகத்தில் ஈடுபட்டால் பொருள் ஈட்டலாம்

என்று மட்டுமே எண்ணியிருந்தவனுக்கு.. அந்த வணிகத்தில் மறைந்திருந்த அறைகூவலை பிடித்திருந்தது.. அதை எதிர்கொண்டு வெற்றி பெற அவன் விழைந்தான்.. அதை உணர்ந்து கொண்ட ரவிவர்மன் அவனுக்கான மார்க்கம் எது என்பதை அறிவுறுத்தினான்..

"வணிகமோ.. கலைத்துறையோ.. ஆசான் இன்றி எத்துறையையும் நீ கற்க இயலாது.. திறம் மிக்க ஆசான் அமைந்து விட்டால் வெகு விரைவில் நீ அத்துறையில் வல்லுனனாக ஆகி விடலாம்.. அவ்வகையில் உனது தந்தை வணிகத்தை கற்பிப்பிப்பதில் திறமை மிக்க ஆசான்..! அவரை குருவாக ஏற்றுக் கொண்டு வணிகத்தின் முதல் படியில் பாதங்களை ஊன்றுவாயாக.."

ரவிவர்மனின் வாக்கை வேதவாக்காக மதிக்கும் வல்லவன்.. அதை சிரமேற்கொண்டு ஏற்றான்.. கைலாச நாதரின் பாதம் பணிந்து வணிகத்தைக் கற்றுக் கொடுக்கும் படி வேண்டினான்.. கைலாசநாதருக்கு தான் காண்பது நனவா அல்லது சொப்பனமா என்ற சந்தேகம் வந்து விட்டது.. கண்களை கசக்கி விட்டுப் பார்த்தார்.. எதிரில் நின்ற வல்லவனின் உருவம்.. 'நான் பிரமையல்ல..' என்று உரைத்தது.. கரங்களைக் கிள்ளிக் கொண்டார்.. அது வலித்து அவர் காண்பது சொப்பனமல்ல.. நனவுதான் என்பதை உரைத்தது..

'கிழக்கே உதிக்கும் ஆதவன் எவ்வாறு மேற்கே உதிக்க ஒப்புக் கொண்டான்..?'

சந்தேகத்தை அவர் வாய்விட்டு வினவ..

"அல்ல தந்தையே.." என்றான் வல்லவன்..

"பின் எவ்வாறு இது நிகழ்ந்தது மகனே..! தாமாவது.. எமது வணிகத்தில் ஆவர்ம் காட்டுவதாவது... கிழக்கில் உதிக்கும் ஆதவன் மேற்கில் உதித்தால்தானே இவ்விதமான அதிசயங்கள் எல்லாம் நிகழும்..?"

"ஆதவன் கிழக்கில்தான் உதிக்கிறான் தந்தையே..! அரசரின் வாக்குப்படி நான் தங்களை எனது ஆசானாக ஏற்று வணிகம் கற்றுக்கொள்ள விழைகிறேன்.. இதற்காக ஆதவன் மேற்கில் உதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எதுவுமில்லை.. தந்தையின் தொழிலை தனயன் கற்றுக் கொள்ள விரும்புவது இயற்கைதானே..?"

'யாதடா இது..!'

கைலாசநாதருக்கு ஆச்சரியம் மிகுதியானது.. இவ்விதமான சிரத்தை மிகுந்த மொழிகளை இயம்புவது அவர் பெற்ற புதல்வன்தானா..?

எந்த வல்லவனுக்கு.. நகர்வலத்தையும், கன்னியரின் கடைக்கண் பார்வைகளையும் தவிர வேறு எவற்றிலும் ஆர்வம் செல்லாது என்று அவர் நினைத்திருந்தாரோ.. அந்த வல்லவன்.. அவற்றையும் தாண்டி... வணிகத்தின் மீதும் அவனுக்கு ஆர்வம் செல்லும் என்று உரைத்தபடி எதிர் நின்றான்..

ரவிவர்மன் ஒருவனால் மட்டுமே இது சாத்தியமாகும் என்ற நினைவில் கைலாசநாதரின் மனதில் நன்றியுணர்வு பெருகியது.. செய்தியை அறிந்ததும் அங்கயற்கண்ணி..

"இருக்காது.." என்று உரைத்தாள்..

"நானும் அவ்விதமே எண்ணுகிறேன் தந்தையே.." என்றாள் வசுந்தரா..

"எனது புதல்வனாவது.. வணிகத்தில் ஈடுபாடு கொண்டு, தங்களுடன் வருகை புரிய எண்ணுவதாவது.." அங்கயற்கண்ணி கூறினாள்..

"ஆம் தந்தையே..! தாங்கள் சொப்பனம், கிப்பனம் கண்டிருப்பீர்கள்.. எனது தமையனும், தங்களின் தனயனுமான வல்லவன், நகர்வலம் வருவதில் வல்லவன்.. உல்லாசமாக காலம் கழிப்பதில் வல்லவன்.. கன்னியரின் கடைக்கண் பார்வைகளை நோட்டமிடுவதில் வல்லவன்.. வணிகத்திலும் அவன் வல்லவனாவான் என்ற பேராசையை தாங்கள் துறந்து விடுவதே சாலச்சிறந்தது.."

"வசுந்தரா கூறுவதும் மெய்தான்.. எதிர்பார்ப்பு கொண்டுவிட்டு ஏமாற்றம் அடைந்து விட வேண்டாம்.. அவனோ விளையாட்டுப் பிள்ளை..!"

"விளையாட்டுத்தனமாகவே இதையும் உரைத்திருப்பான் என்று அம்மா உரைக்கிறார்கள் தந்தையே.."

அன்னையும், தங்கையும் மாறி, மாறி அளித்த மதிப்பீட்டுக்களில் மனம் நொந்து விட்டான் வல்லவன்..

"ஆஹா..! தந்தையே..! எப்பேறு பெற்று விட்டேன் நான்.. இதைப் போன்ற உயர்ந்த மதிப்பீட்டுகளைத் தவிர்த்து வேறு எந்த மதீப்பீடுகளும் இவர்களின் மனதினில் இல்லையா..?" என்று சிரத்தில் கரம் வைத்தான்..

"அதீதமான ஆசை வைக்காதே.."

வசுந்தரா கரம் கொட்டி நகைத்து விட்டு ஓடினாலும்.. வல்லவன் வணிகத்திற்காக பயணம் மேற்கொண்ட போது.. கனிவு ததும்பும் விழிகளுடன் அவனுக்கு வெற்றித் திலகமிட்டு வழியனுப்பி வைத்தாள்..

"சென்று வருகிறேன் அம்மா.."

அங்கயற்கண்ணியின் பாதம் தொட்டு வணங்கினான் வல்லவன்.. அவளுக்கு கண்கள் கலங்கின.. விடை கொடுத்து அனுப்பி வைத்த மகனின் வெற்றிச் செய்திகள் அவள் செவிகளை எட்டிய வண்ணம் இருந்தன.. அவனது முதல் வெற்றியில் கைலாசநாதர் மகிழ்ந்து விட்டார்..

"எதிர் பார்க்கவே இல்லை அங்கயற்கண்ணி.. திறம் மிக்க வணிகனான கோப்பெருந்தேவனிடமிருந்த வணிக ஒப்பந்தம் நமது கரங்களுக்கு மாறி விட்டது.."

"மெய்யாகவா..?"

"ஆம்.. இதை சாதித்தது எவரென்று எண்ணுகிறாய்..?"

பெருமிதத்துடன் வினவிய கணவரின் திருவாய் மொழி உதிர்க்கப் போகும் வார்த்தைகளைச் செவி மடுக்க இதயம் படபடக்கக் காத்திருந்தாள் அங்கயற்கண்ணி..

அவள் மனம் விரும்பிய வார்த்தைகளைக் கூறினார் கைலாசநாகதர்..

"உனது புதல்வன்தான் இதைச் சாதித்தான்.."

அங்கயற்கண்ணியின் இமையோரம் ஆனந்தக் கண்ணிர் அரும்பியது.. கைலாசநாதரும் அந்நிலையில் தான் இருந்தார்..

தம்மைவிட திறமைமிக்கவனாக தமது புதல்வன் இருப்பதில் ஆனந்தம் கொள்ளும் அருமைமிகு பெற்றோரைக் கொண்ட உலகம் இது..! கைலாசநாதர் தமது புதல்வனின் வெற்றிகளில் அகம் குளிர்ந்தார்.. அவற்றை அங்கயற்கண்ணியின் செவிகளுக்கு இடம் மாற்றுவதில் எல்லையற்ற பேரானந்தம் கொண்டார்..

ஈன்ற பொழுதினும் பெரிதுவந்தாள்.. தன் மகன் சான்றோன் என்பதை செ்வி மடுத்த அத்தாய்..!

"அரசரின் மனம் விசாலமானது.." அங்கயற்கண்ணி யின் குரல் நெகிழ்ச்சியுடன் வெளிவந்தது..

"ஆம் கண்ணி..! வல்லவன் மீது அவருக்கு தனிப்பட்டதோர் பிரியம் உள்ளது.." கைலாசநாதரும் நெகிழ்ந்தார்..

மறைந்திருந்து இவற்றை செவி மடுத்துக் கொண்டிருந்த வசுந்தராதேவியின் இமையோரம் நீர் முத்துக்கள் உதித்தன.. அவளது நினைவோரம் ரவிவர்மனின் வதனம் தோன்றியது..

"நெஞ்சினிலே நினைவு வரும்..
நினைவிலும் தெரிவது..
உன் எழில் வதனம்..!
ஆசை வதனம்..!"

அவளது இதழ்கள் முணுமுணுத்தன.. அவளுக்கு தனிமை தேவைப்பட்டது.. ரவிவர்மனின் நினைவுகளை அவள் மனம் அசைபோட வேண்டும்.. அதற்கு இடையூறில்லாத தனிமை அவளுக்குத் தேவை..

அன்றொரு தினத்தில் அவள் நாட்டியமாடியதை அவன் மறைந்திருந்து கண்ட மணி மண்டபத்தை நாடி அவள் சென்றாள்.. அவளுக்கு அக்கணமே ரவிவர்மனைக் காண வேண்டும் போல இருந்தது.. அவ்ளை அவன் ஆலிங்கனம் செய்த பொழுதுகளை நினைவு கூர்ந்தவளின் இதயம் தவித்தது...

"ஆருயிர் என்று அழைத்தவனே..! - புது
ஆசையை நெஞ்சினில் விதைத்தவனே..!-நான்
ஓருயிர் என்று எண்ணுகையில் - நீ
ஓடி மறைந்ததும் நியாயமில்லை..
நெஞ்சினிலே நினைவு வரும்.."

கண்களில் நீர் பெருக.. அவள் மணி மண்டபத்தின் தரையில் அமர்ந்து முழந்தாள்களைக் கட்டி அதில் வதனம் பதித்தாள்..

எத்துனை பொழுது அவ்விதம் அமர்ந்திருந்தாளோ.. அவளது தோளில் மென்மையான ஓர் கரம் படிந்தது..

அந்தரங்க நினைவுகள் கலைந்ததில் அதிர்ந்து நிமிர்ந்த வளின் அருகில் அங்கயற்கண்ணி நின்றிருந்தாள்.. அவள் விழிகளில் கண்டிப்பு தென்பட்டது..

"உணவருந்தும் நாழிகை கடந்து விட்டது.. நீ இல்லத்திலும் இல்லை.. இங்கு தனிமையில் அமர்ந்து.. எக்கோட்டையைப் பிடிக்க ஆலோசிக்கிறாய்..?" கடுமையுடன் வினவினாள்..

"அம்மா.." வசுந்தரா தடுமாறினாள்..

"எதன் பொருட்டு இந்த தடுமாற்றம் வசுந்தரா..? இவ்விதமாக நீ தடுமாறுகிறவள் அல்ல.. சில தினங்களாக நானும் உன்னை கண்காணித்துக் கொண்டுதான் உள்ளேன்.. நீ எட்டாக்கனிக்கு கொட்டாவி விடுகிறாய்.. ஆதவனை எட்டிப் பிடித்துவிட ஆசை கொள்கிறாய்.."

அங்கயற்கண்ணியின் குற்றச்சாட்டில் வசுந்தரா திகைத்துப் போனாள்..

அவளது அந்தரங்க மனதின் ஆசையை அங்கயற்கண்ணி எவ்வாறு கண்டுணர்ந்தாள்..?

தாய்மைக்குரிய சூட்சுமம் அது என்பதை.. யுவதியான அவள் எவ்விதம் அறிவாள்..?

"வானில் வலம் வரும் ஆதவனின் கதிர்களை கரம் குவித்து வணங்கலாம்.. திக்கெட்டும் பரவும் அவனது புகழில் வியப்புக் கொள்ளலாம்.. உலகுக்கு ஒளி வழங்கும் வள்ளல் என போற்றிப் புகழ் பாடலாம்.. இவற்றையெல்லாம்

விடுத்து.. அவனை எட்டிப் பிடிக்க யத்தனித்தால் யாது நிகழும் என்பதை நீயறிவாயா..?"

'யாது நிகழ்ந்து விடுமாம்..?' வசுந்தராவின் மனம் சிணுங்கியது..

அதை உணர்ந்து கொண்ட அங்கயற்கண்ணியின் கடுமை அதிகரித்தது..

"நீ குழந்தைப்பிராயத்தை இன்னும் கடந்து வரவில்லையென்றே எனக்குத் தோன்றுகிறது.. ஆதவனின் கதிர்கள் எட்டி நிற்போருக்கு ஒளி வழங்கும்.. நெருங்க யத்தனிப்பவர்களை சுட்டெரித்து விடும்.. நீ துயர் கொள்வதை என்னால் அனுமதிக்க இயலாது வசுந்தரா..! எனவே பகல் சொப்பனம் காண்பதை விடுத்து உனது தந்தைக்கும் தாய்க்கும் பெருமை சேர்க்கும் விதத்தில் செயல்படு.."

அங்கயற்கண்ணியின் எச்சரிக்கையும், அறிவுரையும் வசுந்தராவின் செவிகளில் ஏறவே இல்லை.. அவளைச் சுட்டெரித்து விடும் ஆதவனைத் தொட்டுப் பார்த்துவிட அவள் துடித்தாள்..

'அவனை ஸ்பரிசித்த பின்னர் நான் இருந்தால் என்ன.. மறைந்தால் என்ன..? அவனுடன் கலந்து விட்ட ஆனந்தம் ஒன்றே போதுமே..'

அவள் மனம் இவ்விதம்தான் எண்ணியது.. மழலை மாறாத கன்னிப் பிராயத்தில் அவளது மனக்குளத்தில்

கல்வீசி சலனத்தை உண்டு பண்ணிய முதல் ஆடவன் ரவிவர்மன்..!

அவன் அரசனாக இருந்தாலும்.. ஆதவனாக இருந்தாலும் அவள் அதைக் குறித்த சிந்தனை எதையும் சிந்திக்கப் போவதில்லை..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



14

சென்றுவிடு என்று சொன்னால்.. சென்று விட முடியுமா..?

தாமோதரன் காரை நிறுத்தி விட்டு இறங்கி வேக நடையுடன் படிகளில் ஏறுவதைக் கண்ட குமார் அகலமான புன்னகையுடன் வாசல் கதவை விரியத் திறந்து விட்டான்..

"உன்னைப் பாத்தா டூத் பேஸ்ட் விளம்பரத்தப் பாக்கறதைப் போலவே இருக்கு குமார்.." என்றான் தாமோதரன்..

"ஏன் சார்..?"

"இப்படித் தினமும் முப்பத்திரண்டு பல்லையும் காட்டிச் சிரிச்சா வேற எப்படித் தோணுமாம்..?"

"ஹி..ஹி.."

"இன்னைக்கு இது போதும் குமார்.. மிச்சத்த நாளைக்குப் பாத்துக்கலாம்.."

குமாரைக் கடந்து உள்ளே போன தாமோதரனைக் கண்டதும் அவசரமாக காதோடு ஒட்டியிருந்த போனை பிய்த்து எடுத்து கீழே வைத்தாள் வயலெட்.. அவள் விழிகளில் 'வந்துட்டானா..' என்ற அலுப்பு இருந்தது..

"வந்துதான் ஆகனும்.." என்றான் தாமோதரன்..

'மனசைப் படிச்சிருவானே..'

வலிய புன்னகையை வரவழைத்துக் கொண்ட வயலெட்..

"எதைச் சொல்கிறீங்க சார்..?" என்று கேட்டாள்..

"உங்களுக்குத் தெரியாதில்ல..? பாவம்.."

'இப்ப இவன் பாவம் பாக்கிறதைப் போல என் நிலைமைக்கு என்ன கேடு வந்துருச்சு..?'

வயலெட் பல்லைக் கடித்தாள்.. அதை அலட்சியத்திலும் படு அலட்சியமாக தாமோதரன் பார்த்து வைத்ததில் அவளுக்கு ரத்தக் கொதிப்பு வந்தது.. உர்ரென்று அவனை முறைத்தாள்..

"இஃஃது..?" என்றான் தாமோதரன்..

"எது..?" முறைப்பை பலப்படுத்தினாள் வயலெட்..

"இந்த முறைப்பு.. இதுதான் உங்களுக்கு ஷீட் ஆகுது.. இத விட்டுட்டு உங்களுக்கு சரிப்பட்டு வராத சிரிப்ப எதுக்காக கட்டி இழுக்கறீங்க..? சகிக்கலை.."

"எதைச் சொல்கிறிங்க..?" உஷ்ணமானாள் வயலெட்..

"உங்க சிரிப்பச் சொல்கிறேங்க.. உங்களைச் சொல்ல முடியுமா..?"

"ஏன்..? சொல்லித்தான் பாருங்களேன்.."

"அது எதுக்கு வேண்டாத வேலை..? அதை உங்களோட 'ஆள்' சொன்னாத்தான் நல்லா இருக்கும்.. நான் சொன்னா நல்லாயிருக்காது.."

"வாட்.. வாட்.. வாட்..?"

வாத்தைப் போல கூவியபடி கொதித்துக் கொண்டிருந்த வயலெட்டை லட்சியம் செய்யாமல் போய்விட்டான் தாமோதரன்.. கொதிப்பைத் தணிக்க கொண்டு வந்திருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து தொண்டையில் சரித்துக் கொண்டாள் வயலெட்..

"என்னடி ஜோஸபின்.. காலையிலேயே தலையாலே தண்ணீர் குடிக்க வைச்சிட்டார் போல.."

அடுத்த சீட்டில் இருந்த ரேகா துக்கம் விசாரித்ததில் இன்னும் கடுப்பாகிப் போனாள் வயலெட் ஜோஸபின்..

"அதில உனக்கு சந்தோசம் போல.."

"சேச்சே..! என்னடி இப்படிச் சொல்லிட்ட..?"

"வேற எப்படிச் சொல்லச் சொல்ற..?"

"யாரு நீ..?"

"உன்னோட எனிமீ.."

"அப்படி நீயா ஒரு நினைப்ப வைச்சுக்கிட்டா நானென்னடி பண்ணுவேன்..?"

"எதையும் பண்ணாதே.. வேலையைப் பாரு.: இவ நினப்ப மனசில வைச்சுக்கிட்டு நான் என்னத்தப் பண்ண..? என் 'ஆள்' நினைப்ப மனசில வைச்சாலாவது வேலைக்கு ஆகும்.."

"அதையும் சொன்னாரே.."

"யாரு சொன்னது..?"

"ஜி.எம். சார்.."

"தாமோதரனா..?"

"பெயரைச் சொல்ல மாட்டேன்.."

"எங்க பாட்டிதான் தாத்தா பேரைச் சொல்ல மாட்டேன்னு அடம் பிடிப்பாங்க.. நீயேண்டி ஜி.எம். பெயரைச் சொல்ல மாட்டேங்கிற..?"

"வேண்டாம்.. வீணாய் வம்புக்கு வராதே.."

"அடச்சீ.. வாயை மூடு.. வந்துட்டா நியாயம் பேச.. என்னதான் நீ ஜொள்ளு விட்டாலும்.. அந்த ஆளு கல்லையும்.. மண்ணையும் பாக்கிறதைப் போல உன்னையும் பாத்து வைச்சிட்டுப் போயிருவான்.. அது தெரியாம நீ டிஸ்கொதே போடாதே.."

"உனக்கு ஜி.எம்மை பிடிக்கலைன்னா அது உன் பாடு.. எனக்கு அவரைப் பிடிச்சிருக்கு.. ஐ மீன்.. அவரோட சின்சியாரிட்டியைப் பிடிச்சிருக்கு.."

"இதை நான் நம்பனும்..?"

"நம்பாட்டிப் போ.. ஐ டோண்ட் கேர்.."

அவர்கள் வழக்கடித்துக் கொண்டிருந்த அந்த சுபயோக சுபவேளையில் அலுவலகத்தில் கால் பதித்தாள் யாமினி..

15

கேரளத்து மன்னவனை.. சேருவது எத்தினத்தில்..?

"எந்தா.."

வசுந்தராவின் அழைப்பில் வியப்புடன் கரம் கொட்டி பாராட்டினாள் அம்பிகா..

"அற்புதம்..! குறைவான் தினங்களில் வெகு எளிதாக மலையாள மொழியை கற்றுக் கொண்டு விட்டாயே.."

"உன்னால்தான் இது சாத்தியமானது அம்பிகா.. குமரியில் உன் தந்தையின் பாரம்பர்யம் உள்ளது என்பதால் நீ மலையாள மொழியையும் அறிந்து வைத்துள்ளாய்.. எவரும் அறியாமல் நான் கற்றுக் கொள்ள நீயே உதவினாய்.."

"கற்றுக் கொள்வதில் சிரத்தையும் ஆர்வமும் நீ காட்டினாய்.. நான் கற்றுக் கொடுத்தேன்.. அவ்வளவே.."

அம்பிகாவிடம் விடைபெற்று ரதத்தில் ஏறிய வசுந்தராதேவி இறக்கையின்றி வானில் பறந்தாள்..

'என் வர்மன் வரும் போது.. அவன் மொழியில் நான் உரையாடி அவனை அயர வைக்க வேண்டும்..'

அத்தினத்திற்காக காத்திருந்தாள் வசுந்தரா.. அத்தினமும் வந்தது.. வேதவதிக் கரையில் முகா மிட்டிருந்த சேரமன்னன் ரவிவர்மன் கொல்லத்துக்கு வல்லவனுடன் சென்றுவிட்ட செய்தியில் வசுந்தராவின் மனம் சிணுங்கிக் கொண்டிருந்தது.. ஓர் தினத்தின் அதிகாலையில் அவள் ஆற்றங்கரையில் நீராடிக் கொண்டிருந்த போது ரவிவர்மன் வந்து விட்டான்.. வல்லவனுடன் வந்து சேர்ந்தவன் விருந்தினர் மாளிகையி லிருந்து எவரும் அறியாமல் நழுவி வசுந்தராவைத் தேடிக் கொண்டு ஆற்றங்கரைக்கு வந்த போது.. அவன் வரவை அறியாத அவள் பாடிக் கொண்டிருந்தாள்..

"மந்தார மலரே..! மந்தார மலரே..!
நீராட்டு தழுவினிலே..
மன்மதன் ஷேத்திரத்தில் எந்நாளும் பூஜா
நீ கூட வருமில்ல.."

தனது செவிகளில் விழுந்த மலையாள கானத்தில் ஆனந்த திகைப்பை அடைந்தான் ரவிவர்மன்..

'இவள் மலையாள மொழியை தெளிவாக கற்றுக் கொண்டு விட்டாளா..?'

அவனுக்கான அவளது முயற்சியில் அவன் மனம் நனைந்தது..

"மன்மதன் இங்குள்ளான்.." என்றான்..

அவனது குரலை இனம் கண்டு விட்ட வசுந்தரா விழிகளில் ஆயிரம் கோடி ஆதவன்களின் ஒளியை ஏற்றவளாய் ஆற்றங்கரையை நோக்கித் திரும்பினாள்..

"மந்தார மலரே..! மந்தார மலரே..!
நீராடி முடித்தாயோ..
மன்மதன் சாலைக்கு ஆனந்த பூஜைக்கு
நீ கூட வருவாயோ.."

கேரளத்து மன்னவனுக்கான மலையாள மொழியில் பாடியவளுக்கு இசைந்து செந்தமிழில் கானமிசைத்தான் அந்த கேரளத்து மன்னவன்.. அதில் சொக்கிப் போனாள் தமிழகத்தின் பைங்கிளி..

"குங்கும மணியும் முன்னாலே..
கூந்தல் மலரும் முன்னாலே..
சுந்தர புருசன் வந்தல்லோ..
சங்கதி பறய வந்தல்லோ.."

நீரில் வாழை மீனின் வாளிப்போடு பாய்ந்தவளின் தேக எழிலில் சொக்கிப் போன ரவிவர்மனும் தான் எவர் என்பதை மறந்து தண்ணீரில் பாய்ந்தான்.. நீந்தி அவளருகில் சென்று.. நிமிர்ந்தவனின் ஈர மார்பில் புரண்டது வைரப் பதக்கம்..

''கொடுத்து வைத்த வைரம்..!'

நீர்த்திவலைகள் முகத்தில் வழிய அருகில் வந்தவனின் எழிலில் மனம் மயங்கிப் போனாள் வசுந்தரா தேவி..

'இவன் மன்மதனேதான்..'

மயக்கத்துடன் நீரை கரங்களில் அள்ளி அவனது வதனத்தில் வீசியபடி..

"மதனா..! இதுதான்.. முதல் தினம்..!"

என்று பாடினாள்..

'ஹ..!' கிறங்கிப் போன ரவிவர்மன்..

"இந்திர மண்டல தேசத்தில்..
சுந்தரி நீண்டன் போயில்லோ..
மந்திரம் ஒன்று சொல்லட்டோ..
தந்திரம் ஒன்று தள்ளட்டோ.."

என்று இமைசிமிட்டிப் பாடினான்..

வசுந்தராவின் தேகம் சிலிர்த்தது.. அவள் கரங்களை எட்டிப் போட்டு நீந்தி கரை சேர்ந்தாள்.. அவள் பின்னாலே நீந்திய ரவிவர்மன் கரையேறிய போது.. உலர்ந்த ஆடைக்கு மாறி கூந்தலை உலர்த்திக் கொண்டிருந்தாள்..

பாதம் தொட்ட அவளது கருங் கூந்தலின் எழிலில் ஈர்க்கப்பட்டவன் அவளருகில் சென்றபோது... ஈரம் சொட்டிய அவனது தேகத்தையும், சிகையையும் உலர்ந்த சீலையால் துவட்டி விட முனைந்தாள் வசுந்தரா..

அவளின் உரிமையான அச்செயலில் தன் வயம் இழந்து தன்னை அவளிடம் ஒப்புக் கொடுத்தான் ரவிவர்மன்.. அவளது இடையில் படிந்த அவனது கரத்தை தட்டி விட்டு தாவி ஓடியவளைத் துரத்திப் பிடித்து..

"தத்தித் தாவும் தத்தம்மே..!
சித்தம் கவரும் செல்லம்மே..
வண்ணம் தேடும் மலரா நீ..?
மன்மதன் நாட்டுக்கு யுவராணி..!"

என்று பாடினான்.. அவனது பாடலில் தன்னை மறந்தவள் அவன் மார்பில் சாய்ந்தபோது அவனது கரங்கள் அவளை வளைத்துக் கொண்டன..

"மதன் நான்.. தருவேன்.. சுபதினம்.."

அவளது செவியோரம் மொழிந்த அவன் கானம் அவளை ஏதோ ஓர் மாய உலகிற்கு அழைத்துச் சென்றது..

"தென்கொடி என் தேக வண்ணத்தை..
பொன்னடி வருட வந்தல்லோ..
மன்னன் கண்ணன் வாக்குகளால்..
என்னை நானும் மறந்தல்லோ.."

அவன் தோள் சாய்ந்து பாடியவளின் கூந்தலைக் கோதி தன்னுடன் இணைத்து அணைத்து நடத்திச் சென்றான் ரவிவர்மன்..

"ஜீவித சாகரத்தில்..
நான் பாய்மரம்.."

அவளது கூந்தல் வனத்தில் முகம் புதைத்துப் பாடினான்..

"ஜீவித யாத்திரையில்..
நான் நீண்ட நாயகி..!"

அவளும் இசைக் கானமாய் இசைந்து பாடினாள்..

"கூடலும் கரையும் தாண்டித் தாண்டி...
காதல் தீரத்தில் இறங்கும்..
மணப் பந்தலில் கரம் கோர்த்து..
சொந்தம் கடலலை போலே
நிரந்தர பந்தம்.."

இருவரும் இணைந்து பாடியபடி மெய் மறந்து நின்றதை ஆற்றங்கரைக்கு வந்த கைலாசநாதர் கண்ணுற்று விட்டார்.. இமைக்க மறந்த அவரது விழிகளை வசுந்தராவை தழுவி நின்ற ரவிவர்மனும் கண்ணுற்று விட்டான்.. அவன் கரங்கள் கைலாசநாதரைக் காணாமல் ரவிவர்மனின் மார்பில் வதனம் புதைத்திருந்த வசுந்தராவை திரும்ப விடாமல் இறுக்கிக் கொண்டன.. கைலாசநாதர் துரித நடையுடன் அவ்விடத்தை விட்டு அகன்று விட்டார்.. அவர் சென்றுவிட்டதை உறுதிபடுத்திக் கொண்ட பின்னரே வசுந்தராவை விடுவித்தான் ரவிவர்மன்..

"எவரோ வருகை தந்ததைப் போல இருந்ததே.." வசுந்தரா அச்சத்துடன் வினவினாள்..

"எவருமில்லை.." ரவிவர்மன் அவள் கன்னத்தைத் கிள்ளினான்..

"என் செவிகளில் தெளிவாக அச்சப்தம் விழுந்ததே.."

"எச்சப்தம்..?"

"சருகுகள் மிதிபடும் சப்தம்.."

"அவை நமது காலடியோசையாகவும் இருக்கக் கூடுமல்லவா..?"

"அவ்வாறா உரைக்கிறீர்கள்..?"

வசுந்தரா அமைதியடைந்தாள்.. அவளை இல்லத் திற்கு அனுப்பி விட்டு ரவிவர்மன் கைலாசநாதரை நாடிச் சென்றான்.. மாளிகையின் மேன்மாட உப்பரிகையில் உலவிக் கொண்டிருந்த கைலாசநாதரின் வதனம் கருத்து இறுகியிருந்தது.. அதில் விரவியிருந்த விசனத்தில் ரவிவர்மனின் மனம் கனத்தது..

அவனது காதலால் அல்லவோ ஒரு மேன்மைமிகு மனிதரின் மனம் வருத்தம் கொள்கிறது..

"தவறு ஏதும் நிகழ்ந்து விடவில்லை கைலாச நாதரே..!" என்றான்..

அவனது குரலில் கைலாசநாதரின் நடை நின்றது.. அவன் புறமாகத் திரும்பியவரின் வதனத்தில் சினம் வந்திருந்தது..

"இதற்கு மேலும் தவறு நிகழ வேண்டுமா அரசே..?" என்று கொந்தளித்தார்..

"எந்நிகழ்வும் திட்டமிட்டு செயல்படுத்தப் பட்டதல்ல கைலாசநாதரே..! போர் முனையில் வாள்வீசத் தெரிந்த

வனால் தங்களது புதல்வியின் அன்புக் கணையை எதிர்க்க இயலவில்லை.. அவளது காதல் பரிசுத்தமானது.. அதை ஏற்க மறுத்து அவளது மனதை நோகச் செய்வதில் எனக்கு உடன்பாடில்லை..”

“மன்னவரே..! தங்களின் உயரம் இமயம் போன்றது.. அதை அண்ணாந்து பார்க்கும் நிலையில் உள்ள சாமான்ய வணிகன் நான்.. எனது புதல்வியோ மழலை போன்ற சுபாவமுடையவள்.. வாழ்க்கையை வாழ்க்கையாய் வாழ வேண்டியவள்.. அவள் வாழ்வு சிதிலமாவதா..?”

கைலாசநாதரின் மனக் குமுறலில் ரவிவர்மனின் வதனம் மாறியது..

“என்மீது தங்களின் புதல்வி ஆசைகொள்வதால் அவள் வாழ்வு சிதிலமாகி விடுமா..? இதுதான் என்மீது தாங்கள் கொண்டுள்ள மதிப்பீடா..? மகிழ்வு கொண்டோம் வணிகரே..!”

“மன்னிக்க வேண்டும் அரசர் பெருமானே..! தாங்கள் எங்களின் காவலர்.. இந்து சமயத்தையும், சமுதாயத்தையும் காக்க வந்தவர்.. இதில் ஐயம் சிறிதளவும் இல்லை.. அதன் பொருட்டு தங்களின் துதி பாடி.. அடி வருடி.. என் வாழ்நாளைக் கழிக்க சித்தமாக உள்ளேன்.. அதுவே எனக்கு ஜென்ம சாபல்யத்தையும் பெற்றுத்தரும் என்று உளமார நம்புகிறேன்.. ஆனால் அய்யனே..! அதன் பொருட்டு எனது மகளை விட்டுக் கொடுக்க மாட்டேன்.. அவள் எனது உயிரினும் மேலானவள்..”

கைலாசநாதரின் உரையில் மனம் நெகிழ்ந்து போனான் ரவிவர்மன் அவரது கரங்களைப் பற்றிக் கொண்டான்..

“எமக்கும் அவ்வாறுதான் கைலாசநாதரே..! வசுந்தரா என் உயிரினும் மேலானவள்..” என்றான்..

“அரசே..!” பேச வாய் வராமல் தடுமாறினார் கைலாசநாதர்..

“தங்களின் மனம் புரிகிறது... ஆயினும் இதுவே உண்மை.. வசுந்தராவின் காதலை ஏற்றுக் கொண்டேன்.. இன்றோ.. அவளை விட அதிக அளவில் நான் அவளை நேசிக்கிறேன்..”

“தாங்கள் மணமானவர் மன்னவரே..!”

“மெய்தான் வணிகரே..!”

“அதிலும் பல மணங்கள் புரிந்தவர்..”

“இதுவும் மெய்தான்... எனக்குப் பலராணிகள் உண்டென்பதை இந்த அகிலம் அறியுமே..”

“வசுந்தரா அவ்வாறு அல்ல..”

கைலாசநாதர் கூற எண்ணியதை கூற இயலாமல் தத்தளித்தார்.. அதனைப் புரிந்தும் புரியாதவனைப்போல வதனம் மாறாமல் அமைதிகாத்தான் ரவிவர்மன்..

“ம்ம்ம்.. மேலே உரையுங்கள்..” என்று கைலாச நாதரை தூண்டிவும் செய்தான்..

"வாலிப வயதில் தங்களுக்கு மக்கள் உண்டு.."

"ம்ம்ம்.. அப்புறம்..?"

"தங்களுக்கும் என் மகளுக்கும் இடையில் பெருத்த அளவில் வயது வித்தியாசம் உள்ளது.."

"முடிந்து விட்டனவா..?"

"அரசே..?"

"எம்மைப் பற்றிய குறைகளை தாம் பட்டியலிட்டீரே.. அவை முடிந்து விட்டனவா என வினவினேன்.."

ரவிவர்மனின் குரலில் புயலை உள்ளடக்கிய அமைதியை உணர்ந்த போதும் கைலாசநாதர் மனம் கலங்கவில்லை... மாறாக நிமிர்வுடனே அவனுக்கு விடையளித்தார்..

"மன்னிக்க வேண்டும் அரசர் பெருமானே..!"

"எத்தனை முறைதான் மன்னிப்பை வேண்டுவீர் வணிகரே..?"

"என் மகளுக்காக காலம் முழுவதும் தங்களின் காலடி பணிந்து மன்னிப்பு வேண்டவும் சித்தமாக உள்ளேன் அரசே..!"

"ஆனால்.. தமது மகளை எனக்கு மணம் முடித்துத் தருவதற்கு மட்டும் சித்தமாக இருக்க மாட்டீர்கள்.. அவ்வாறுதானே வணிகரே..?"

ரவிவர்மன் மிகத் துல்லியமாக கைலாசநாதரின் மனநிலையைக் கனித்து விட்டான்.. அதில் கைலாசநாதர்

விடுதலை உணர்வைப் பெற்றார்.. இதுதான் அவரது முடிவு என்றான பின்பு ரவிவர்மன் அவரை வற்புறுத்த மாட்டானே..

ரவிவர்மன் அவரது நம்பிக்கையை தவிடு பொடியாக்கினான்..

"தாம் கூறிய அனைத்தையும் அறியாதவளா வசுந்தரா..?"

கைலாசநாதரின் அனைத்து வாதங்களையும் ரவிவர்மனின் ஒரேயொரு வினா சிதிலமாக்கி விட்டது..

"அரசே..! அவள் மழலை.."

"அது தங்களுக்கு.. எனக்கல்ல.."

"உலகம் புரியாதவள் என் மகள்.."

"ஆயினும் என்னைப் புரிந்தவள்.."

"அவள் வாழவேண்டிய சிறு அரும்பு..!"

"அந்த வாழ்வை என்னுடன் வாழ்ந்து விட விரும்பும் மந்தார மலராக அவள் மலர்ந்து விட்டதை அறியாமல் உள்ளீர்களே.."

"வெளுத்ததெல்லாம் பால் என நம்பி விடும் குழந்தை மனம் கொண்டவள் அவள்.."

"நான் பால் அல்ல.. 'கள்' என்று கூறுகிறீர்களா..?"

"அரசே..!"

கைலாசநாதர் பதறிவிட்டார்.. மகளின் பொருட்டு.. அவர் மனதில் பூஜிக்கும் சேர மன்னர் ரவிவர்மனுக்கு எதிராக இத்தனை சொற்களை அவர் உதிர்க்கும்படி ஆகி விட்டதே..

"மன்னியுங்கள்.."

கரம் கூப்பிக் கண்கலங்கிய் கைலாசநாதரின் மீது பரிவு ஏற்பட்டது ரவிவர்மனுக்க.. காருண்யத்துடன் அவரது கரங்களைத் தட்டிக் கொடுத்தான்..

"பதட்டம் கொள்ள வேண்டாம்.. தாங்கள் தவறாக எதையும் உரைத்து விடவில்லை.. தந்தையின் இடத்தி லிருந்து பேச வேண்டிய வார்த்தைகளையே தங்கள் பேசினீர்கள்.. தங்களின் அச்சமும், பதட்டமும் நியாய மானதே.. ஆனால் வணிகரே..! இவை அனைத்தையும் வசுந்தரா ஏற்றுக் கொள்வாளா..?"

"அரசே..?"

"அவ்வாறு அவள் ஏற்றுக் கொண்டால் நான் அவளை விட்டு விலகி விடச் சித்தமாக உள்ளேன்.. ஆனால் வணிகரே.."

"அரசே..?"

"அவள் இவற்றை ஒரு பொருட்டாக நினையாமல் என்னை மட்டும் நினைத்து உயிர் துறக்க முடிவு செய்தால் நான் தங்களின் மாளிகையை தரைமட்டமாக்கிவிட்டு அவளைச் சிறையெடுப்பேன்.."

"அரசே..!..."

"செல்லுங்கள்.. தங்களின் மகளிடம் பேசுங்கள்.. என் வயதைப் பற்றித் தெரிவியுங்கள்.. நான் மணமானவன் என்பதைக் கூறுங்கள்.. பலராணிகள் எனக்குண்டு என்பதையும் மறக்காமல் கூறிவிடுங்கள்.. வாலிப வயதில் பிள்ளைகளும் எமக்குண்டு என்பதைத் தெரியப் படுத்துங்கள்.. தகுந்த மணமகனைத் தேர்வு செய்து அவள் முன்பு நிறுத்துங்கள்.. அம்மணமகனை அவள் மணக்க சம்மதம் கூறினால் அவளுக்காக இந்த காஞ்சி மாநகரையே நான் சீர்வரிசையாக சாசனம் செய்து அளிப்பேன் என்பதையும் எடுத்துச் சொல்லுங்கள்.. அவளது திருமணத்தை இந்த அவனியே வியக்கும் வண்ணம் சிறப்பாக நடத்தி முடிப்பேன் என்றும் கூறுங்கள்.. அந்தத் திருமணத்திற்கு எனது மனப்பூர் வமான ஆசிகளையும் நான் வழங்குவேன் என்றும் அவளிடம் சொல்லி விடுங்கள்.. இத்தனையையும் செவி மடுப்பவள் உங்களின் மனதுப் பிரகாரம் மணம் முடிக்க சம்மதம் தெரிவித்தால் அதில் எனக்கு மகிழ்ச்சியே.. ஒருவேளை சம்மதம் தெரிவிக்க வில்லையெனில்.. அப்போது இந்த சேரமன்னன் ரவிவர்மனின் சினம் எத்தகையதாக இருக்கும் என்பதை தாங்கள் அறிய வேண்டியிருக்கும்.."

"அரசே..!"

"செல்லுங்கள் வணிகரே..! வசுந்தராவின் எந்த முடிவிற்கும் நான் கட்டுப்பட்டவன்.. விட்டு விலக

வேண்டிய முடிவை அவள்தான் எடுக்க வேண்டும்.. நானல்ல.. என்னால் அவளை விட்டு விலக இயலாது.. அவள் விட்டு விலக முடிவு செய்தால் அம்முடிவிற்கு கட்டுப்பட்டு அவளுக்கான அனைத்து சீர்வரிசைகளையும் செய்துவிட்டு நான் கொல்லத்திற்கு சென்று விடுகிறேன்.. முடிவு அவளுடையது.."

ரவிவர்மனின் கரம் கம்பீரமாக உயர்ந்து மேன் மாடத்திலிருந்து இறங்கிச் செல்லும் படிக்கட்டுக்களை சுட்டிக் காட்டியது..

"தாங்கள் செல்லலாம்.."

கைலாசநாதர் மனக்கிலேசத்துடன் அவ்விடத்தை விட்டு அகன்றார்.. ரவிவர்மனின் முடிவை அவன் கூறிவிட்டான்.. வசுந்தராவை விட்டு அவன் விலக மாட்டான்.. அதே தருணத்தில் அவனை விட்டு விலகும் முடிவை வசுந்தரா எடுத்தால் அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு விட்டு விலகிவிட சித்தமாக உள்ளான்..

'மன்னவர்.. மன்னவரே..!'

ரவிவர்மனின் அந்த உறுதியான நிமிர்வில் ஈர்க்கப் பட்டு மெச்சுதல் கொண்டார் கைலாசநாதர்.. அன்றைய இரவில் அங்கயற்கண்ணியிடம் அவற்றை அவர் பகிர்ந்து கொள்ள முனைந்த போது மனைவிக்கு இச்செய்தி பேரிடியாக இருக்கும் என்று மனம் துடித்தார்..

'பாவம்.. வசுந்தராவை மழலை என்று எண்ணிக் கொண்டிருக்கிறாள்.. இச்செய்தியை அறிந்தால் எவ்வாறெல்லாம் துடிக்கப் போகிறாளோ..'

அந்த சங்கடத்துடன் மனைவியின் அருகே அமர்ந்தார்.. இரவு உணவுக்குப் பின்னர் விச்ராந்தியாக கணவரின் அருகே அமர்ந்து தாம்பூலம் மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்த அங்கயற்கண்ணி..

“கண்ணி..” என்ற கணவரின் அழைப்பில் நிமிர்ந்தாள்..

மனைவியுடன் தனித்துப் பேசும் தருணங்களில் ‘கண்ணி’ என்றுதான் கைலாசநாதர் மனைவியை அழைப்பார்...

“கூறுங்கள்..”

இரவின் மடியினில் இதமான மென்னகையோடு வினவினாள் அங்கயற்கண்ணி.. அவள் மீதிருந்து கமழ்ந்த அகிற்புகையின் நறுமணத்தில் கைலாசநாதர் கட்டுண்டார்.. மஞ்சள் பூசிய வதனத்தில் குங்குமம் இட்டு.. கூந்தலை வளைத்துக் கொண்டையிட்டு.. அதைச் சுற்றி மல்லிகை மலரைச் சூடி.. பட்டாடையும்.. ஆபரணங்களும் பூண்டு.. மங்கல நாயகியாக அருகிலிருந்த மனைவியின் எழிலில் மோகம் கொண்டாலும்.. மகளின் நினைவு அதைத் தடுத்து நிறுத்தியது..

“உன்னிடம் ஓர் விவரத்தை உரைக்க வேண்டும்..”

“உரையுங்களேன்.. உங்களின் திருவாயை மூடி அதைக் கூற வேண்டாம் என்று நான் தடுத்தேனா என்ன..?”

மலர்ந்து நகைக்கும் மனைவியின் நகைப்பு வாடாமல் இருக்க வேண்டுமே என்று அவர் மனம் தவித்தது..

"நமது வசுந்தராவிற்கு மணம் செய்விக்க வேண்டும் என்று அன்று உரைத்தாயே.."

எவ்வாறு பேச்சை ஆரம்பிப்பது என்ற தடுமாற்றத் துடன் அவர் பேச அதுவரை இளகிய வதனத்துடன் இருந்த அங்கயற்கண்ணியின் வதனம் இறுகியது.. துளைக்கும் பார்வையுடன் கணவரை நோக்கியவள்..

"இன்று அதே கருத்தை தாங்கள் உரைக்கப் போகிறீர்களா..?" என்று நிதானமாக வினவினாள்..

"ஆம் கண்ணி.."

"அன்று மழலையாக தோன்றியவள் இன்று மணம் முடிக்கும் பருவத்திற்கு வந்து விட்டாளா..?"

"அவ்வாறு இல்லை கண்ணி.. நீ கூறியதை ஆலோசித்த போது வசுந்தராவின் திருமணத்தை நடத்தி விடுவதே உகந்தது என்று தோன்றுகிறது.."

"என்ன ஆனது..? அரசருடன் நமது மகள் இணக்கமாக பேசிப் பழகுவதை கண்ணுற்று விட்டீர்களா..?"

"கண்ணி..!"

மனைவியின் நேரடியான வினாவில் அதிர்ந்து விழித்தார் கைலாசநாதர்..

'இவள் அறிவாளா..? அதன் பொருட்டுத்தான் மகளின் மணம் பற்றிய பேச்சை எடுத்தாளா..?'

'ஆம்' எனும் பாவனையில் இமை மூடித் திறந்த அங்கயற்கண்ணியின் விழிகளில் கண்ணீர் குளமிட்டது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'

15

தேடி வந்தது நீயா..? இல்லை நானா..?

"எக்ஸ்யூஸ் மி.."

கிண்கிணி போன்ற அழகான குரலில் கவரப் பட்டவர்களாக தங்களின் யுத்தத்தை மறந்து ரேகாவும் வயலெட்டும் திரும்பிப் பார்த்தார்கள்.. புத்தம்புது மலர் போன்ற பொழிவுடன் நின்றிருந்த யாமினி அவர்களின் பார்வையைக் கண்டதும் நட்பாக புன்னகைத்தாள்..

"ஐ ஆம் யாமினி..!"

"ஸோ வாட்..?"

தன்னை விடவும் அழகாக ஒருத்தி இருப்பதா என்ற காண்டுடன் இகழ்ச்சியாக கேட்டு வைத்தாள் வயலெட்..

அந்தக் கேள்விக்கென்ன பதிலைச் சொல்வது என்று திகைத்துப் போனாள் யாமினி.. அதற்குள் வயலெட்டின்

புகைச்சலைக் கண்டு கொண்ட ரேகா யாமினிக்கு கை கொடுத்து விட்டாள்..

"ஹாய்..! ஐ ஆம் ரேகா.."

அவள் கைநீட்டியதில் விடுதலை உணர்வை சுவாசித்த யாமினி அவளுக்கு கை கொடுத்தாள்..

"பரவாயில்லையே.. ஐ ஆம் ரேகான்னு இன்ட்ரொடூயூஸ் பண்ணிக்கிட்டா ஷேக் ஹேண்ட் கொடுத்து பிரண்டாக்கனும்ங்கிற மேனர்ஸ் தெரிஞ்சவங்களா இருக்கீங்களே.. எங்கே நீங்களும் 'தத்தி' போல 'ஸோ வாட்'ன்னு கேட்டு வைச்சிருவீங்களோன்னு பயந்தே போயிட்டேன் தெரியுமா..?"

ரேகாவின் மறைமுகத் தாக்குதலில்..

'இண்ட்ரெஸ்டிங்..' என்று சுவராஸ்யமானாள் யாமினி..

வயலெட்டின் முகம் கன்றி விட்டது..

"மைண்ட் யுவர் வெர்டுஸ் ரேகா.." அவள் வெடித்தாள்..

"எதுக்காக என்னோட வெர்ட்ஸை நான் மைண்ட் பண்ணிக்கனும்னு நீ சொன்னாத் தேவலை வயலெட்.."

"யாருக்கு மேனர்ஸ் இல்லைங்கிற..? நான் ஊருக்கே மேனர்ஸை சொல்லித் தருகிறவ.. என்கிட்டேயாவா..?"

"ஏய்ய்.. அடங்குடி.. மார்னிங் டயத்தில உன் கிட்டயும் ஒருத்தங்க வந்து அவங்க பெயரைச் சொல்லி இன்ட்ரொடுயூஸ் செய்துக்கிட்டா.. நீ ஸோ வாட்டுன்னு கடுப்படிப்பியா..? இதுதான் ஊருக்கே நீ மேனர்ஸ் சொல்லித் தருகிற லட்சணமா..?"

"லுக் ரேகா.."

"'லுக்'கிட்டேன்.. என்ன வியாக்கினத்தைச் சொல்லப் போறியோ.. அதைச் சொல்லித் தொலை.."

"தொலை.. கிலைன்னே.. எனக்கு கெட்ட கோபம் வரும்.."

"உனக்கு நல்ல கோபம் வந்தாத்தான் ஆச்சரியம்.."

அலட்டிக் கொள்ளாத ரேகாவின் பதில்களில்... எப்படித்தான் இவள் எல்லா 'பால்களையும்' 'கேட்ச்..' பிடிக்கிறாளோ என்ற ஆச்சரியம் யாமினிக்கு வந்தது..

அதை கண்டு கொண்ட வயலெட்டின் கோபம் அதிகமானது..

'எவளோ ஒருத்தி.. எங்கிருந்தோ வந்து நிக்கிறா.. இவ அவ முன்னாலே சீன் காட்டி என்னை கலாய்க்கிறாளா..?'

விட்டேனா பார் என்ற வன்மத்துடன் ரேகாவை முறைத்தாள் வயலெட்...

"உன்னைப் போல லெசரான சீட் கிடைச்சா வருகிறவங்க போகிறவங்ககிட்ட குசலம் விசாரிச்சு ஷேக்

ஹேண்ட் கொடுத்துக்கிட்டு இருக்கலாம்தான்.. எனக்கு அப்படியாப்பட்ட சீட் வாய்க்கலையே.."

"வேற எப்படியாப்பட்ட சீட் வாய்ச்சிருக்கு ஜோஸபின்..?"

"ரெஸ்பான்ஸிபிளா பதில் சொல்ல வேண்டிய சீட் கிடைச்சிருக்கு.. உன்னைப் போல 'ஓ.பி' அடிக்காம மாங்கு மாங்குன்னு வேலை செய்ய வேண்டிய சீட்.. நாங்க உழைக்கிற வர்க்கம்மா.."

"நான் மட்டும் முதலாளி வர்க்கமா..? நீ உழைக்கிற லட்சணத்தை வெளியில சொல்லிராதே."

"ஏன்.. ஏன்.. ஏன்..?"

"எதுக்கு இத்தனை ஏன் போடற..?"

"நான் உழைக்கிறேன்.. வெளியில சொல்லறேன்.. அதில உனக்கு என்னடி அப்ஜெக்சன்..?"

"உன் உழைப்பைப் பத்தி இந்த ஆபிஸீக்கே தெரியுமே.. எப்பப் பார்த்தாலும் போனை காதில கம் போட்டு ஒட்ட வைச்சுக்கிட்டிருக்கிற உழைப்பு.."

"ஹலோ... ரிசப்னிஸ்ட்டுன்னா அப்படித்தான் இருப்பாங்க.."

"எப்படி இருப்பாங்க.. ஆபிஸ் போனில சொந்த விசயத்த பேசிக்கிட்டு எப்பப் பார்த்தாலும் எங்கேஜ் டோனை வர வைச்சுக்கிட்டு இருப்பாங்களா..? உன்னோட

அக்கப் போருக்காகவே ஒன்னுக்கு நாலு லைனை எம்.டி கனெக்ட் பண்ணியிருக்கார்.. நீ என்னடான்னா அந்த நாலு லைனிலயும் அட் எ டயத்தில பேசி வைக்கிற.. இதில நீ கின்னஸ் சாதனையே படைச்சிருவடி..”

ரேகாவின் கிண்டலில் யாமினியின் முகத்தில் சிரிப்பு தோன்றியதை வயலெட் ரசிக்கவில்லை.. அவள் ரேகாவை விட்டு விட்டு யாமினியை முறைத்தாள்.. அந்த நேரம் பார்த்து எதற்காகவோ அந்தப் பக்கம் வந்த தாமோதரன் யாமினியைக் கண்டதும் ஸ்பீடு பிரேக் போட்டதைப் போல அங்கேயே நின்று விட்டான்.. அவன் முகம் கருத்து விட்டது..

‘வந்து தொலைச்சிட்டாளா..?’

அவன் யாமினியை முறைத்ததில் வயலெட்டின் முறைப்பு மாறிவிட்டது..

16

இனிதான சுபதினத்தை மன்மதனே தருவானோ..

“வணிகம்.. வணிகமென்று இல்லத்தை மறந்து அகிலத்தைச் சுற்றி வரும் தங்களுக்கே வசுந்தராவைப் பற்றி தெரிந்திருக்கும் போது.. அல்லும், பகலும் அவளுடன்

இருந்து கண்காணிப்பாய் வளர்க்கும் எனக்கு அவளைப் பற்றித் தெரியாதா..?"

துயரத்துடன் கூறினாள் அங்கயற்கண்ணி.. கணவர், மனைவி இருவரின் மத்தியிலும் மௌனம் வந்து விழுந்தது.. ஒருவர் மனதை ஒருவர் உணர்ந்திருந்ததில் இருவரும் மௌனமாக என்ன செய்வது என்று அவரவர் மனப் போக்கில் சிந்தித்தபடி இருந்தனர்..

"அரசர் என்ன கூறினார்..?" அங்கயற்கண்ணி மௌனத்தைக் கலைத்தாள்..

"அவராக வசுந்தராவை விட்டு விலக இயலாது என்று கூறிவிட்டார்.. அதே தருணத்தில் அவரை விட்டு விலகும் முடிவை வசுந்தரா எடுத்தால் அதைத் தடுக்காமல் ஆசி கூறி அவளுக்கான சீர்வரிசையை அவரே அனுப்புவார் என்றும் கூறினார்.."

"பெற்றவர்கள் இருக்க மற்றவரின் சீர்வரிசை நம் மகளுக்கு எதற்கு..?"

"அவர் மற்றவர் இல்லையே.."

கைலாசநாதரின் நைந்த குரலில் அங்கயற்கண்ணி மனமுடைந்தாள்.. எதற்கும் அசையாத மலை போன்ற அவளது கணவர் மனமுடைவதா..?

"அவர் அரசர் அங்கயற்கண்ணி.. எவருக்கும் கிட்டாத பேறுதான் இது.. இருந்தும் என்மனம் அதை ஏற்க வில்லையே.."

"என் மனமும்தான்.. நமது மகள் மாளிகையில் மகாராணி போல வாழ வேண்டியவள்.. அரசரின் அரண்மனையின் அந்தப்புரத்தில் பல ராணிகளில் ஒரு ராணியாக வாழ வேண்டியவள் அல்ல.. அவளுடைய கணவர் அவளுக்கு மட்டுமே சொந்தமானவராக இருத்தல் வேண்டும்.. எனக்கு மட்டும் தாங்கள் சொந்தமாக இருப்பதைப் போல.."

அங்கயற்கண்ணி கைலாசநாதரின் தோள் சாய்ந்தாள்.. மனைவியின் மலர் கூந்தலை வருடிய கைலாசநாதரின் மனம் அமைதியை இழந்து தத்தளித்தது..

"துயர் கொண்டாயா கண்ணி..?"

"தாங்கள் துயர் கொள்ளவில்லையா..?"

மனைவியின் வினாவிற்கு பதில் உரைக்காமல் மௌனமாக இருந்தார் கைலாசநாதர்.. அங்கயற்கண்ணியே உரையாடலைத் தொடர்ந்தாள்..

"அவள் சின்னஞ்சிறுமி.. அவள் கழுத்தில் மங்கல நாணை அணிவிப்பவர் இளம் பிராயத்தாராக இருத்தல் வேண்டாமா..?"

"இதை நான் ஆலோசிக்கவில்லை என்றா எண்ணுகிறாய்..?"

"ஆலோசித்து என்ன பயன்..?"

"மன்னர் வழி விடச் சித்தமாகவே உள்ளார்.. வசுந்தரா மனம் வைக்க வேண்டுமே..?"

"அதை அறிந்து வைத்திருப்பதினால்தான் மன்னர் வழி விடச் சித்தமாக உள்ளார்.. உங்களுக்கு அது புரியவில்லையா..?"

ஏன் புரியவில்லை..? அங்கயற்கண்ணிக்கே அது புரிந்திருக்கும் போது.. கைலாசநாதருக்குப் புரியாதா என்ன..?

வசுந்தராவின் அசைக்க முடியாத ஆணித்தரமான காதலின் மீதிருக்கும் ஆழ்ந்த நம்பிக்கையினால்தானே சேர மன்னன் ரவிவர்மன் இந்த சவாலை கைலாசநாதரின் முன்பாக வைத்திருக்கிறான்..

"வசுந்தரா அரசரின் மீது பைத்தியமாக இருக்கிறாள்.."

"எவ்விதம் இது நிகழ்ந்தது..?"

"நான் அறியேன்.. கன்னிப் பருவத்தில் சின்னஞ்சிறு சாகசத்தைக் கண்டுவிட்டாலே மனம் சலனம் கொண்டு விடும்.. அந்த சாகசச்செயலைப் புரிந்தவனின் பின்னால் சென்றுவிட மனம் துடிக்கும்.. இங்கோ வசுந்தரா சேர மன்னர் ராஜா ரவிவர்மனை அவர் இன்னார் என அறியாமலே சந்தித்துத் தொலைத்திருக்கிறாளே.. சாகசங்களின் மொத்த உறைவிடமான அவரது வீரத்தில் மனதைப் பறி கொடுத்து விட்டாளே.. நான் என்ன செய்வேன்..?"

அங்கயற்கண்ணியின் விழிகளில் இருந்து பொல பொலவென கண்ணீர் விழுந்தது.. மனைவியின் கண்களில்

தூசு பட்டால்கூடப் பொறுத்துக் கொள்ளாத கைலாசநாதர் பதறிப்போனார்.. அவளது கண்ணீரை துடைத்தார்..

"கலங்காதே கண்ணி.."

"எவ்வாறு கலங்காமல் இருக்க முடியும் அய்யனே..? விளக்கைக் கண்ட விட்டில் பூச்சியைத்தான் நாம் கண்டிருக்கிறோம்.. இவளோ ஆதவனைக் கண்டு விட்ட விட்டில் பூச்சியாக இருக்கிறாளே.. இவள் எண்ணுவதைப் போல எதுவும் எளிதில்லை என்பதை எவ்விதம் அவளுக்கு புரிய வைப்பேன்..?"

அங்கயற்கண்ணி மருகினாள்.. அதற்கான விடை தெரியாமல் கைலாசநாதரும் மனம் பதைத்தார்.. விவரம் வல்லவனின் செவிகளை எட்டியது..

"அரசரா..?"

நம்ப இயலாமல் அவன் எழுப்பிய வினாவிற்கு..

"அவரை மட்டும் ஏன் குறை கூறுகிறாய் அண்ணா..? காதல் கொள்வது அடாத செயலென்றால் அதில் முதல் குற்றவாளி நான்தான்.. அந்த அடாத செயலை ஏற்றுக் கொண்டு என்னை ரட்சித்தது மட்டுமே அரசர் செய்த குற்றம்.." என்று மறுமொழி பகன்றாள் வசுந்தரா..

"என்ன காரியம் செய்து விட்டாய் வசுந்தரா..! எவர்மீது காதல் கொள்வது..? இந்து தர்மத்தை ரட்சிக்க வாளேந்தி வந்த மாவீரனையா காதலிப்பது..? இந்தக் காதலால் நமது தாய், தந்தையரின் மனத்தாங்கலுக்கு

அவர் ஆளாகியுள்ளாரே.. இந்நிலைக்கு அவரை ஆளாக்கலாமா..?"

"காதல் நியாய, அநியாயம் பார்க்காது அண்ணா.. அரசர் என்பதை அறியாமல்தான் அவர்மீது நான் காதல் கொண்டேன்.. என்னைப் பொறுத்தவரை அவர் கானகத்தில் என்னைக் காக்க வந்த வர்மன் மட்டும்தான்.. அரசர் என்பது மற்றவர்களுக்குத்தான்.. எனக்கல்ல.."

வல்லவன் எத்துனை முயன்றும் வசுந்தராவின் மனதை அவனால் மாற்ற இயலவில்லை.. விவரம் அறிந்தும் அமைதி காத்த வீரபாகுவிடம் அவன் முறையிட்டான்..

"என்னையும், தங்கையையும் ஏந்தி வளர்த்தது தாமல்லவா..? அரசர் தம்பக்கத்து நியாயத்தை உரைத்து விட்டார்.. வசுந்தராவின் காதலை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.. வசுந்தராவிடம் அவர் காதல் சொல்ல வில்லை.. அவளுக்காக வழி விடவும் ஆயத்தமாக உள்ளார்.. இந்நிலையில் வசுந்தரா மனம் மாறி தாய், தந்தை நிச்சயிக்கும் வரனை மணந்து கொண்டால் இல்லத்தில் அமைதி நிலவுமல்லவா..?"

"வசுந்தராவின் உள்ளத்தில் அமைதி நிலவுமா வல்லவா..?"

வெகுநிதானமாக வீரபாகு எழுப்பிய வினாவில்..

"வீரபாகு..!" என்று திகைத்தான் வல்லவன்..

"பெண்களின் உள்ளம் ஆழ்கடலைப் போன்ற ஆழம் நிறைந்தது.. அன்பாக இருந்தாலும் சரி.. வெறுப்பாக இருந்தாலும் சரி.. அவர்கள் அனைத்தையும் வெகு ஆழமாக வெளிப்படுத்துகிறார்கள்.. உனது வற்புறுத்தலுக் காகவும், தாய், தந்தையின் மன அமைதிக்காகவும், வசுந்தரா இல்லத்தில் நிச்சயிக்கும் மணமகனை மணந்து கொள்ள சிரத்தை அசைக்கலாம்.. ஆனால் மனமுவந்து அவன் அணியும் மாங்கல்யத்தை ஏற்றுக் கொள்வாளா..?"

வீரபாகுவின் கூற்றில் மெய் இருந்ததை உணர்ந்தான் வல்லவன்.. வாலிப வயதில் இருப்பவனுக்கு காதலின் நுண்ணுணர்வுகளைப் புரிந்து கொள்ள இயலாதா..? ஆயினும் அவன் மனம் தங்கையை காத்திடவே விழைந்தது..

"தாம் உரைத்தால் தங்கை செவி மடுக்கக் கூடும் வீரபாகு.."

"நீ உரைத்தே கேட்காதவள் நான் உரைப்பதை மட்டும் செவி மடுத்து விடுவாளா வல்லவா..?"

"எனக்கு ஒன்று தெரியவேண்டும்.."

"கேள் மகனே..!"

"வசுந்தராவின் காதலைப் பற்றி அறிந்ததும் தாம் எங்களைப் போல சினம் கொண்டு அவளைக் கண்டிக்க வில்லையே.. அது ஏன்..? இத்துனை அமைதியுடன் எவ்வாறு தம்மால் இருக்க இயல்கிறது..? எம்மில் ஒருவராக

தம்மை எண்ணி வந்தோமே.. அது பொய்யா..? இது தமது குடும்பத்தின் விவகாரமல்ல.. தம் எஜமானரின் இல்லத்து விவகாரம் என்று எண்ணியல்லவா தாம் விலகி நிற்கிறீர்.. விந்தையாக உள்ளது.. தாம் காட்டிய பாசம் எல்லாம் பொய் வேடமா..? அல்லது அரசரின் காதலை எதிர்த்து உரைப்பது தமது எதிர்கால நலனுக்கு உகந்ததல்ல என்று எண்ணி விட்டீரா...? இத்துனை சுயநலம் மிக்கவரா தாம்..?" .

படபடத்த வல்லவனின் குற்றச்சாட்டுக்கள் வேலெனப் பாய்ந்து வீரபாகுவின் செவிகளில் நுழைந்து அவனது இதயத்தைக் கிழித்தன.. இமைமூடி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவனின் விழிகள் சிவந்து விட்டன..

"சுயநலம் கொண்டு நான் என்ன சாதிக்கப் போகிறேன் என்று எண்ணுகிறாய் மகனே..! எமக்கென்று இப்புவியில் தமது இல்லாத்தாரைத் தவிர எவர் உள்ளார்கள்..? தமது தந்தையை எனது எஜமானனாக நான் எண்ணியதில்லை.. தமையனாகக் கருதியே அவர் நிழலில் வாழ்ந்து வருகிறேன்.. தமது அன்னையார் எனது அண்ணியார், தாமும், வசுந்தராவும் எனது குழந்தைகள்.. இந்தப் பாசவலையிலிருந்து தப்ப ஒரு போதும் நான் விழைந்ததில்லை.. அவ்வாறு தப்பிக்க நேர்ந்தால் எனதுயிர் எனனுடலில் ஒரு கணமும் தங்காது.."

"வீரபாகு..!"

துடித்துப் போனவனாக வீரபாகுவைத் தழுவிக் கொண்டான் வல்லவன்.. தந்தைக்கு நிகரானவனை, தன்னைக் கரங்களில் ஏந்தி வளர்த்தவனை.. குற்றம் சாட்டி அவன் மனதைக் குருதிக் கடலில் நனைய விட்டு விட்ட பரிதவிப்பு அவன் மனதில் படர்ந்தது..

"மன்னியுங்கள் வீரபாகு..! வசுந்தராவின் காதலால் இல்லத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பில் என்நிலை மறந்து பேசிவிட்டேன்.."

"வருந்தாதே மகனே..! இதில் தமது தவறென்று எதுவுமில்லை.. என்னை இடித்துரைக்க தமக்கில்லாத உரிமை வேறு எவருக்கு உண்டு..? கேள் வல்லவா..! எனது கடந்த கால சரித்திரத்தைக் கேள்.. நானும் இந்தக் காதல் என்னும் மாயவலையில் சிக்கியவன்தான்.. அரசருக்கும், வசுந்தராவுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளைப் போல.. எனக்கும் என் மாமன் மகளுக்கும் இடையே ஏழை.. பணக்காரன் என்ற வேறுபாடு இருந்தது.. எனை வளர்த்த என் தாய்மாமன் என் காதலைத் துறக்கச் சொன்னார்.. நானும் துறந்தேன்.. என் காதலியும் துறந்தாள்.. என்னையல்ல.. தனது உயிரை.."

"என்னது..?"

விதிர்த்துப் போனான் வல்லவன்.. அவன் விழிகளின் முன்பு உயிரற்ற வசுந்தராவின் சடலம் தெரிந்தது.. அவனது தேகம் பதறியது..

“ஆம் மகனே..! என் காதலி இறந்து விட்டாள்.. நான் இல்லறத்தை மறந்து.. எனது தாய் மாமனின் சொத்துக்களையும் மறுத்து.. தேசாந்திரியாக கால் போன போக்கல் சென்றேன்.. வழித்தடத்தில் என் கரம் பற்றி நிறுத்தினாள் குழந்தை வசுந்தரா.. அன்று முதல் இன்று வரை இந்த இல்லத்தை எனது இல்லமாகவே பாவித்து வாழ்ந்து வருகிறேன்.. இன்னும் கூறுகிறேன் கேள்..”

“கூறுங்கள்..”

“அன்று மட்டும் நான்.. இன்று அரசர் கூறிய வார்த்தைகளை எனது தாய் மாமனிடம் கூறியிருந்தால் என் காதலி தனது இல்லத்தாரை எதிர்த்துப் போராடியிருப்பாள்.. அந்த சக்தியை அவளுக்குத் தர மறுத்து அவளுடைய உயிரை நான் பறித்து விட்டேன்.. அரசர் அவ்விதம் செய்யவில்லை என்பதில் ஆறுதல் கொள்கிறேன் வல்லவா..”

“வீரபாகு..!”

“சொர்ண ஓலையில் பொறித்து வைக்க வேண்டிய வைர வார்த்தைகளை அவர் உரைத்துள்ளார்.. என் காதலியிடம் கூறுங்கள்.. அவள் விரும்பினால் அவளை நான் விட்டுக் கொடுக்கிறேன்.. அவள் மறுத்தால்.. அவளை நான் சிறையெடுத்து மணப்பேன்.. எப்பேற்பட்ட கம்பீரம் ததும்பும் வார்த்தைகள் இவை..! அரசரல்லவோ உண்மைக் காதலன்..! இன்று வசுந்தரா நம் அனைவரையும் எதிர்த்து நின்று போராடுகிறாளே.. இதற்கான மனத்துணிவு

எங்கிருந்து அவளுக்கு வருகை தந்தது..? அரசரிட மிருந்தல்லவோ வருகை தந்திருக்கிறது..? இந்த மனத் துணிவை என் காதலிக்கு நான் தரவில்லையே.."

"அவருக்குத் தெரியும் வீரபாகு.. அவரை ஓர்நாளும் வசுந்தரா விட்டுக் கொடுக்க மாட்டாள்.. விட்டு விலக மாட்டாள் என்பது.."

"அந்த நம்பிக்கை எனக்கும் இருந்தது வல்லவா..! ஆயினும் என் காதலியை நான் விட்டுக் கொடுத்தேன்.. இன்று அரசர் உரைத்துள்ளாரே.. வசுந்தரா அவரை விட்டுக் கொடுத்தால் மட்டுமே அவர் அவளை விட்டுக் கொடுப்பார்.. கண்ணியம் காத்து அவள் வாழ்வுப் பாதையிலிருந்து விலகிக் கொள்வார்.. இம்மொழியையும் அவர் பலராணிகளை மணந்துள்ளவர்.. வாலிபப் பிராயத்திலிருக்கும் மக்களைப் பெற்றவர்.. வசுந்தராவை விட வயதில் மிகவும் மூத்தவர் என்ற காரணங்களினால் தானே கூறியுள்ளார்..? அவ்விதம் வசுந்தரா அவரை விட்டுக் கொடுக்க மறுத்து விட்டால் ஒருபோதும் அவர் அவளை விட்டுக் கொடுக்க மாட்டார்.. இந்த மாளிகையை தரை மட்டமாக்கி விட்டு வசுந்தராவை சிறையெடுத்துக் செல்வார் என்று உனது தந்தையிடம் எச்சரிக்கை விடுத்துள்ளாரே.. இதிலிருந்தே அவரின் காதலின் திடத்தை நீ உணரவில்லையா..?"

வல்லவன் ஆழ்ந்து சிந்தித்தான்.. வசுந்தராவின் மனம் மாறாது என்றாகி விட்டால் எதிர் கொள்ளப் போகும்

விளைவுகளை எண்ணிப் பார்த்தான்.. வல்லவனின் மீது பரிவு கொண்டிருக்கும் ரவிவர்மன் வசுந்தராவின் விவகாரம் என்று வரும்போது அந்தப் பரிவை கடைபிடிப்பானா என்று தமக்குள் வினவிக் கொண்டான்..

"மாட்டார்.." உறுதியான குரலில் கூறினான் வீரபாகு..

வல்லவன் நெடுமூச்சுடன் வீரபாகுவை நோக்கினான்.. அவனது புஜங்களில் கரங்களைப் பதித்த வீரபாகு..

"கேள் மகனே..! உன் மீது பரிவும்.. உனது தந்தையின் மீது மரியாதை மிக்க நேசமும் கொண்டுள்ள சேர மன்னர்.. வசுந்தராவின் விவாகரம் என்று வரும்போது உங்கள் மீதுள்ள பரிவையும்.. நேசத்தையும் தூர எறிந்து விடுவார்.. வசுந்தராவின் காதலை மட்டுமே முன்னிருத்துவார்.."

"இதற்கு என்னதான் முடிவு..? அரசருக்கு மண முடித்துக் கொடுத்தால், எனது தங்கை சேரமன்னரின் பலராணிகளில் ஒரு ராணி என்று பெருமைப் பட்டுப் கொள்ளலாம்.. வைரமும், வைடூரியமும், மாளிகைகளும் எனது தங்கைக்கு கிட்டலாம்.. மாளிகையில் இளவரசியாக வாழ்பவள்.. அரண்மனையில் சேரமன்னரின் இளைய ராணியாக வாழலாம்.. ஆயினும் வீரபாகு.. எனது தங்கை மன அமைதியுடன் வாழ இயலுமா..?"

அந்த வினா வீரபாகுவின் மனதிலும் உறைந் திருந்தது.. அவனது இமைகள் துடித்ததில் வல்லவனின் கவலை அதிகரித்தது..

"அரச வாழ்க்கை சூழ்ச்சி வலைகளால் பின்னப் பட்டது வீரபாகு.. இளையராணியை அரசரின் மற்ற ராணிகள் இன்முகத்துடன் வரவேற்பார்களா..? அதைத் தவறென்று உரைத்திடவும் இயலுமா..? அவர்களுக்குப் போட்டியாக... அவர்களின் கணவரின் அன்பையும் காதலையும் தட்டிப் பறித்து விட்ட எதிரியாக என் தங்கையை அவர்கள் எண்ண மாட்டார்களா..?"

எண்ணுவார்கள் என்பதில் வீரபாகுவின் உடல் குலுங்கியது.. அதில் வல்லவனின் மனம் அதிர்ந்தது..

"கூறுங்கள் வீரபாகு.. வெள்ளை மனம் கொண்ட.. கிள்ளை குணம் கொண்ட மழலை எனது தங்கை..! அவளை சூழ்ச்சி வலைகளின் மத்தியில் வாழ வைப்பதா..?"

"இதற்கான விடையை நீ வசுந்தராவிடம் வினவு மகனே..!"

"அவளின் சொற்ப அறிவையும் காதல் என்னும் மாயத்திரை மறைத்து வைத்துள்ளதே.."

"அல்ல மகனே..! இதற்கான விடையை அவளால் அளிக்க இயலும் என்றே நான் எண்ணுகிறேன்.."

வசுந்தரா விடையளித்தாள்.. வல்லவனின் அனைத்து மனக் குமுறல்களுக்கும் அவளிடம் விடையிருந்தது..

"அண்ணா..! நீயும், நமது தாய், தந்தையும் எனக்கு கேடு விளைவிக்க எண்ணுகிறீர்கள் என்றா நான் எண்ணுகிறேன்..? அல்ல அண்ணா..! வரும் காலத்தில்

நான் எவ்விதம் வாழப் போகிறேனோ என்று தங்கள் அனைவரின் மனமும் துடிப்பதை என்னால் உணர முடிகின்றது..”

“இருந்தும் ஏன் பிடிவாதம் பிடிக்கிறாய் வசுந்தரா..?”

“மனம் அண்ணா..! எனது மனம்..! அது உரைப்பது எதுவென்பதை நீ அறிவாயா..?”

“அறியேன்..”

“கூறுகிறேன் கேள்.. எனது கன்னி மனதில் இவர்தான் எனது ஆண் என்று வர்மரின் உருவம் ஆழமாக பதிந்து விட்டது..”

“அவர் வர்மர் அல்ல.. சேர மன்னர் ராஜாரவிவர்மர்..”

“அது உனக்கும், நம் பெற்றோருக்கும்.. இந்த அகிலத்துக்குமானது.. எனக்கு அவர் புரவி வீரர் வர்மர்தான்..”

“அவ்வாறு இருந்தால் எதற்காக நானும் நமது பெற்றோரும் உனது திருமணத்திற்கு தடை கூறப் போகிறோம்..? செல்வம் இல்லாவிடினும் செல்வந்தனாக்கி.. அவருக்கு உன்னை மணம் முடித்துக் கொடுத்திருப்போமே..”

“இப்போதும் அதைப் போல எண்ணிக் கொண்டு மனம் முடித்துக் கொடுக்கலாமே..”

“வசுந்தரா..! இத்துனை நாழிகைகளாக நான் இயம்பியது எதையும் தம் செவிகளில் ஏற்றிக் கொள்ள வில்லையா..?”

"ஏற்றிக் கொண்டேன் அண்ணா..! அரண்மனை வாழ்வு சூழ்ச்சிகள் நிறைந்ததுதான்.. அந்த அரண்மனைக்கு நான் எதற்காகச் செல்ல வேண்டும்..? அவரின் மற்ற ராணிகள் என்மீது துவேசம் கொள்வார்கள்தான்.. அவர்களின் மத்தியில் நான் எதற்காக வசிக்க வேண்டும்..?"

"புரியவில்லையே.."

"புரியும்படி உரைக்கிறேன் கேள்.. அவரது மணமாலையை ஏற்றாலும் இந்தக் காஞ்சியை விட்டு நான் நீங்க மாட்டேன்.. இங்கே எனக்கென்று மாளிகை கட்டிக் கொண்டு ஏகாம்பரேஸ்வரரின் ஆலயத்தின் அருகாமையிலேயே நான் வசிப்பேன்.. அவர் மன்னவராக சேர நாட்டிற்கு செல்லட்டும்.. எனது வர்மராக சில தினங்கள் மட்டுமே நானிருக்கும் மாளிகைக்கு வருகை தருவாரல்லவா..? அது போதும் எனக்கு.."

வீரபாகுவின் கூற்று பொய்க்கவில்லை.. வல்லவனின் கவலைகளுக்கு தீர்வை வசுந்தரா கூறிவிட்டாள்.. தங்கையின் மனம் மாறாது என்றான பின்பு.. அவள் கூறிய இந்த மார்க்கம் உகந்தது என்றே வல்லவன் நினைத்தான்.. கைலாசநாதரும் அங்கயற்கண்ணியும் வசுந்தராவின் இந்த ஆலோசனையில் மன நிம்மதி கொண்டார்கள்.. சேர மன்னன் ரவிவர்மனின் செவிகளுக்கு இந்தச் செய்தி கிட்டியதும் உடனடியாக காஞ்சியிலே பிரம்மாண்டமான ஓர் அரண்மனையை வசுந்தராவிற்கென நிர்மாணித்து அளித்து விட்டான்.. அருகிலிருந்து பார்க்க

முடிந்த மகளின் அரச வாழ்வில் கைலாசநாதர் தம்பதிகளின் மனக்கிலேசம் பறந்து விட்டது..

வசுந்தராவின் மனது விரும்பியபடி அவள் ரவிவர்மனுக்கு மாலையிட்டு விட்டாள்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



16

எங்கே நீ சென்றாலும் அங்கே நான் ஏன் வருகின்றேன்..?

அரசியலில் மட்டுமல்ல.. வாழ்விலும் நட்பும், பகையும் நிரந்தரமானதல்ல.. எதிரிக்கு எதிரி நண்பன் என்ற சாணக்கியனின் வாக்கு எக்காலத்திற்கும் பொருத்த மானது..

யாமினியைக் கண்டவுடன் தாமோதரனின் முகம் விளக்கெண்ணெயைக் குடித்ததைப் போல மாறியதைக் கண்டுவிட்ட வயலெட் கள் குடித்த குரங்கானாள்..

'ஆஹா.. இந்த தாமுவுக்கு இந்தப் பொண்ணைக் கண்டா ஆகாதுல்ல..'

இண்டர்வியூவை நினைவுக்கு கொண்டு வந்த வயலெட்.. யாமினியை அடையாளம் கண்டு கொண்டாள்..

"அட..! நீங்களா..!"

ஆண்டாண்டு காலமாக பழகிய தோழியைக் கண்டு விட்ட பாவனையுடன் உற்சாகமாக யாமினியின் கையைப் பற்றி அவள் குலுக்கியதும் யாமினிக்கு தான் காண்பது கனவா.. அல்லது நனவா என்ற சந்தேகம் எழுந்து விட்டது..

ரேகாவோ இமை கொட்டி விழித்தாள்..

என்னதான் வயலெட் ஒரு கணக்கில் சேர்த்துக் கொள்ள முடியாத பிரகிருதி என்றாலும்.. முறைத்துக் கொண்ட பெண்ணுடன் உடனடியாக கூட்டணி போடும் ரகமில்லை..

'திடிர்ன்னு எப்படி மலையிறங்கிட்டா..?'

ரேகா தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளாத குறையாக யோசித்து ஓய்ந்து விட்டாள்.. வயலெட்டின் திடிர் கூட்டணியைக் குறித்து தாமோதரனுக்கு எவ்விதமான ஆச்சரியமும் ஏற்படவில்லை..

"இனம் இனத்தோடு.." ரேகாவிடம் சொன்னான் அவன்..

'தாமு என்கிட்டப் பேசிட்டாரா..?' ரேகா மகிழ்ந்து போனாள்..

"இருக்கிற கடுப்பு போதாதுன்னு எங்கிருந்தோ கடுப்பு கிளம்பி வந்துச்சாம்.."

தாமோதரன் தொடர்ந்து சொன்ன பொன் மொழியின் அர்த்தம் என்னவாக இருக்கக் கூடும் என்று ரேகாவிற்கு ஒரு மண்ணும் விளங்கவில்லை..

அதைப் புரிந்து கொண்ட வயலெட் இகழ்ச்சியாக சிரித்து வைத்தாள்..

‘இதுவே களி மண்ணு.. இதுக்கு எந்த மண்ணு புரியப் போகிறது..?’ என்பதுவே அவளது மைண்ட் வாய்ஸாக இருந்து வைத்தது..

ரேகா வயலெட்டின் மைண்ட் வாய்ஸை படித்து விட்டாள் என்பது.. பதிலுக்கு மைண்ட் வாய்ஸை உணர்த்திய அவளது சிவந்த விழிகளில் இருந்தே தெரிந்தது..

‘உனக்குத் தெரியுதில்ல..? அத்தோடு நிறுத்திக்க.. அந்த மண்ண தெரிஞ்சுக்கிட்டு எனக்கு ஆகப் போகிறது எதுவுமில்ல..’

அடிப்போடி பைத்தியக்காரி.. நான் அறியாதவளா உன்னைத் தெரியாதவளா என்ற பாவனையில் ரேகா உதாசீனமாக உதட்டைச் சுழிக்க வயலெட் உஷ்ணமானாள்..

அந்த உஷ்ணத்தை ரேகாவிடம் காட்ட முடியாமல் தாமோதரனிடம் காண்பித்தாள்..

“எதுவா இருந்தாலும் நேரடியாகச் சொல்லுங்க ஜி.எம். சார்..”

“ஏன்..? போனில சொன்னா கேட்டுக்க மாட்டிங் களா..? உங்களுக்கு போனில் பேசினாத்தானே பிடித்தமா இருக்கும்..?”

தாமோதரன் உடனடியாக வயலெட்டின் மூக்கை உடைத்ததில்..

"ஹா.. ஹா.." என்று சிரித்து மகிழ்ந்து போனாள் ரேகா..

"எதுக்காகடி இப்படி வயிற்றைப் பிடிச்சுக்கிட்டு சிரிச்சு பயமுறுத்தற..?" தாமோதரனை விட்டு விட்டு ரேகாவின் மேல் பாய்ந்தாள் வயலெட்..

"நம்ம ஜி.எம். சார் செம ஜோக் சொன்னாரே.."

"அது ஜோக்கு..?"

"உனக்கு ஜோக்கில்லம்மா.. எனக்கு ஜோக்காத்தான் தோணுச்சு.. ஹா.. ஹா.. நம்ம ஜி.எம் சாருக்கு நல்ல ஹியுமர் சென்ஸ், தெரியுமா..?"

"தெரியாது.."

பற்களை நறநறத்தபடி தாமோதரனைப் பார்த்தாள் வயலெட்.. அவனோ அவளைவிட அதிகமாக பற்களை நறநறத்தபடி யாமினியை முறைத்துக் கொண்டிருந்தான்.

'என்னடா இது..' இவன்தான் மத்தவங்களை கடுப்பேத்துவான்.. இவனையே இவ கடுப்பேத்தறான்னா பொண்ணு செம கில்லாடிதான்..

வயலெட் யாமினிக்காக சேரை இழுத்துப் போட்டு..

"உட்காருங்க.." என்று உபசரித்தாள்..

"ஆமாமாம்.. இல்லைன்னா இவங்களுக்கு கால் வலிச்சுரும்.."

இடக்காகச் சொன்ன தாமோதரனை முறைத்தபடி வயலெட் இழுத்துப் போட்ட சேரில் உட்கார்ந்தாள் யாமினி..

17

கேரளத்து மன்னவனின் மாலையேற்றாள் தமிழ்மங்கை...

மெல்லிய தென்றல் காற்று அறை முழுவதும் நிறைந்திருந்தது.. பரந்து.. விரிந்து மைதானத்தைப் போலிருந்த அந்த படுக்கையறையின் மையத்தில் மெல்லிய பட்டுத் திரைச்சீலைகளால் சுற்றி மறைக்கப் பட்டிருந்த ஹம்ச தூளிகா மஞ்சத்தின் மீது மலர்கள் தூவப்பட்டிருந்தன.. திரைச்சீலைகளைப் போன்ற மலர்சரங்களை விலக்கி மஞ்சத்தில் அமர்ந்திருந்த வசுந்தரா தேவியை அணுகினான் ரவிவர்மன்..

என்றைக்கும் இல்லாத வகையில் அவளது வதனமெங்கும் நாணம் பரவிப் படர்ந்திருந்தது... ரவிவர்மனின் அருகாமையை உணர்ந்தும் சிரம் நிமிர்த்தாமல் அவனது பாதங்களைப் பார்த்த வண்ணம் தேகம் நடுங்க அமர்ந்திருந்தாள் வசுந்தரா..

ரவிவர்மனின் விழிகளில் ஒளி படர்ந்தது.. கரம் தேர்ந்த கலைஞனான அவனுக்கு வசுந்தராவின் காதல் கலந்த நாணத்தை வெகுவாகப் பிடித்திருந்தது.. ஓர்

காவிய நாயகி போல அவன் விழிகளுக்குத் தோன்றினாள் அவள்..

எந்தக் காதலை அவன் வாழ்நாள் முழுவதும் தேடிக் கொண்டிருந்தானோ.. அந்தக் காதலை அவளது விழிகளில் அவன் கண்டான்.. பல்வேறு காவியங்களில் அவன் உணர்ந்த நுட்பமான உணர்வுகளை அவனுக்கு உணர்த்தி... தானும் உணரும்... காதலியை தன் கண்ணெதிரே அவன் கண்டான்... அகிலம் புகழும் அரசனாக இருந்தும் காதல் உணர்வு கிட்டாத வறியவனாக இருந்தவனுக்கு புதையல் கிட்டி விட்ட பேரானந்தத்துடன் ரவிவர்மன் வசுந்தராதேவியை ஸ்பரிசித்தான்..

"ஸ்.. ஆ.."

மேனி நடுங்க அவனது விரல்களின் ஸ்பரிசத்தில் இமை மூடிக் கிறங்கினாள் வசுந்தரா.. அந்தக் கிறக்கத்தில் தன் வயமிழந்து அவளைத் தழுவிக் கொண்டான் ரவிவர்மன்..

"தேன் அருந்திய நிலவு..!
விழி மயங்கும் இரவிது..
தினந்தோறும் திருவோணந்தான்..
கரம்பிடித்த உறவு..
கவி புனையும் அழகிது..
திருச்சூரு திருக்கோலம்தான்.."

வசுந்தராவின் வதனத்தை தனது விரல்களால் நிமிர்த்தி அவளது பிறைநுதல் நெற்றியில் முத்தமிட்டு

மென்மையாக குனிந்து செவியோரம் அவனிசைத்த கானத்தில் கண்மூடி அவன் மார்பில் சாய்ந்தாள் வசுந்தரா தேவி..

"கிளியிரண்டும் இணையும் போது..
கிளிப் பாட்டல்லோ..
சிறகடிக்கும் விழியினோடு
குயில் பாட்டல்லோ..
மழைத்துளிகள் வழியும்போது
உயிர் பாட்டல்லோ.."

தொடர்ந்த ரவிவர்மனின் கானத்தில் தோகை விரித்த மயிலாக மாறிப் போனது வசுந்தரா தேவியின் மனம்.. அவளது கூந்தல் வனத்தில் வதனம் புதைத்த ரவிவர்மனுக்கு பேரமைதி கிட்டியது..

அவளுக்காகவே அதுதினம்வரை காத்திருந்ததைப் போல உணர்ந்தான் அவன்.. அரசியல் சுழல்களிலும்... அடி மனதின் ஆத்மா விரும்பிய காதல் கிடைக்காத தவிப்புகளிலும்.. கனன்று கிடந்த அவன் மனம் அவளிடம் இளைப்பாறியது..

"சுழல்கின்ற சுழல்களில்..
ஒளிர்கின்ற சுடர்களில்..
ஓடம் போல் மனம்
உன்னை வலம் வருதே.."

அவளது கூந்தலைக் கோதி அவன் பாடலிசைத்த போது.. மனம் விம்ம பாடலில் விடையுரைத்தாள் வசுந்தரா..

"கேரளத்தின் அழகன்..
'வே' நாட்டின் வேந்தன்..
அருகாமையில் உயிர் துடிக்குதே.."

கலைப் பொக்கிசமான ரவிவர்மனின் அடி மனதின் அந்தராத்மாவை அவளது குரல் ஸ்பரிசித்து தட்டி எழுப்பியது.. அவளைச் சரித்து அவள்மேல் சரிந்து.. வெண்ணிறப் பாதங்களில் அதரம் பதித்தான் அவன்..

"நேந்திரம் வாழைகளை..
ஏந்திய பாதங்களில்..
வதனம் புதைக்க..
என்னுள்ளம் கொதிக்க..
இளமை பறவை..
சிறகை விரிக்க..
ஓனத்தின் பண்டிகை
நம் அரண்மனை நாடி வர.."

ரவிவர்மனின் தேகம் தகிக்க ஆரம்பித்ததை மோகத்தில் தகிக்கும் அவனது பாடல் உணர்த்தியதில் மோகப் பெரு நெருப்பு வசுந்தராதேவியின் தேகத்தை ஆக்ரமித்து பற்றிக் கொண்டது..

புதுவகை அனுபவங்களின் அறிமுகத்தில் சுவாசம் திணறிப் போனாள் அவள்.. ரவிவர்மனின் காதல் நிரம்பிய வேட்கையான அணுகுதலில் திறக்காத பல புதிய கதவுகள் திறந்தன.. அவனை மயக்கும் மோகினியாக அவளும்.. அவளை மயக்கும் பேரழகனாக அவனும்.. புதியதோர் மாய உலகில் பிரவேசித்தார்கள்..

"*காதல் கதகளி..*
மோகினி நடனத்தில்..
கிளிகள் கூடும்
இந்த முதல் இரவில்.."

மோகத்துடன் அவளை ஆக்ரமித்த ரவிவர்மனின் கூடல் கலந்த கானத்தில் மோகக் கடலில் மூழ்க ஆரம்பித்தாள் வசுந்தரா.. மோகம் எனும் ஓர் உணர்வே நெருப்பாகவும்.. நீராகவும் மாறி மாறி ஆட்கொள்ளும் விந்தை கூடலில் மட்டுமே சாத்தியமாகும்.

"*தென்னங் கிளைகளில்..*
பலாமரக் கூடுகளில்..
குயில்கள் இசைக்குது..
சுபயாத்ரா கானம்.."

கவிஞனான ரவிவர்மனுக்கு பாடல் புனைய கற்றுத் தரவா வேண்டும்..? அவனது பாடலுக்கு எதிர் கானம் இசைக்க இயலாமல் தளிர்கொடிபோல் நடுங்கிக் கொண்டிருந்தவளை பற்று கோலாய் சுற்றிக் கட்டியணைத்துக் கொண்டவனுக்கு அவளது தவிப்பு கலந்த அவனுக்கான தேடலைப் பிடித்திருந்தது.. தேடல் கலந்த அவனுக்கான துடிப்பைப் பிடித்திருந்தது.. துடிப்புடன் கூடிய அவளது சரணாகதியை வெகுவாக பிடித்திருந்தது..

"*அஞ்சன விழிகளில்..*
மொழிந்திடும் பூங்கொடி...
சந்தனம் சிவக்க..

குங்குமம் கலக்க..
அதரங்கள் இரண்டும்..
அமுதம் பருக..
திருவனந்தபுரத்தில்..
நகர்வலம் வருவோம்..”

பாடியவனின் அதரங்களை விரல் கொண்டு மூடிய வசுந்தராதேவி மறுப்பாக சிரம் அசைத்தாள்..

“அல்ல மன்னரே..! தங்களின் ராணியாக திருவனந்த புரத்திலும், கொல்லத்திலும் நகர்வலம் வர நான் விரும்ப வில்லை.. தங்களின் அகத்தில் உரையும் காதலியாக இந்த காஞ்சிமாநகரிலேயே வசிக்க விரும்புகிறேன்..”

“என் கண்ணே..!”

அவளது காதலில் நெகிழ்ந்து போனான் ரவிவர்மன்.. சேர நாட்டின் செல்வங்கள் அனைத்துக்கும் உரிமை யானவர்கள் தாம்தான் என்பதை அறிந்திருந்தும்.. மாளிகை களையும்.. வைர ஆபரணங்களையும்.. உயர்வகை பட்டு வகைகளையும்.. வாசனைத் திரவியங்களையும் வேண்டி.. தனித்திருக்கும் பொழுதுகளிலும் அதற்கான கோரிக்கை களை ரவிவர்மனின் செவிகளில் ஓதி.. காதலை வேண்டாமல் பொருளை மட்டுமே வேண்டி நின்ற ராணிகளுடம் வாழ்க்கையை வாழ்க்கையாய் வாழாமல் நிர்பந்தத்திற்காக வாழ்ந்து கொண்டிருந்தவனுக்கு.. உனது காதல் மட்டுமே போதும் என்ற கோரிக்கையுடன் அவனைக்

கலந்த வசுந்தராதேவியின் காதல் பாலைவனச் சோலையாக நிழல் கொடுத்து தாலாட்டியது..

"மந்தாரமலரே..! மந்தாரமலரே..!
நீராடி முடித்தாயோ..
மன்னவர் காலையில்
ஆனந்தக் கூடத்தில்..
நீ கூட வருவாயோ.."

மறுதினத்தின் அதிகாலையில் நீராடி முடித்து வந்தவளை தழுவிக் கொண்டு பாடியவனின் தோள் சாய்ந்த போது.. இதைவிடப் பேரின்பம் இவ்வுலகில் உண்டோ என்ற வினாவை தன் அகத்தில் எழுப்பினாள் வசுந்தரா..

"மன்னவனே..!"

"நான் தமக்கு மன்னவன்தான்.. எனினும் இவ்வகை அழைப்பை கேட்டுக் கேட்டு எனது செவிகள் புளித்துப் போய் விட்டன.. அத்துடன்.."

"அத்துடன்..?"

"மற்றவர்களுக்குத்தான் நான் மன்னவன்.. உனக்கு வர்மன்.."

"வர்மரே.."

ரவிவர்மனின் கழுத்தை உரிமையுடன் வளைத்துக் கொண்ட வசுந்தராதேவியின் எழிழை விழிகளால் பருகினான் ரவிவர்மன்.. ஈரக் கூந்தல் உலர்வதற்காக

விரித்து விட்டிருந்தாள்.. தோகை போல நீண்ட கூந்தல் அவள் பாதங்களைத் தொட்டதில் வியந்து போனான்..

அவளைப் பார்வையிலேயே உண்டு விடுவதைப் போலப் பார்த்து வைத்தவனின் மோகத்தில் வதனம் சிவந்தாள் வசுந்தரா.. அவள் மனதில் காதல் வந்தது.. சிரம் சாய்த்து ரவிவர்மனை ஒரு மார்க்கமாக அவள் பார்த்த விதத்தில்.. 'என்ன..?' என்று வினவும் பாவனையில் புருவங்களை உயர்த்தினான் ரவிவர்மன்..

"மனசினுள்ளே தாகம் வந்தல்லோ..
மயில் சிறகில் வாசனை வந்தல்லோ..
மலையாளம் கற்க ஆசை வந்தல்லோ..
மதுரமான நாணம் வந்தல்லோ..
மந்தாரமலர் போல ஏதோ ஒன்று
மனதுக்குள் பற்றி நின்று..
பிரேமம்.. பிரேமம்.. என்று பறயுதே.."

உப்பரிகையின் ஓரமாக சுற்றுச் சுவரில் படர்ந்திருந்த முல்லைக் கொடியின் மீது சாய்ந்து அவள் கானமிசைத்ததில் கள்ளூரும் போதை கொண்டு அவளை அணுகினான் ரவிவர்மன்..

அவனது மார்பில் புரண்ட வைரப் பதக்கத்தை விரலால் சுண்டிய வசுந்தரா தேவியின் கன்னத்தைத் தன் விரலால் சுண்டியவன்..

"புள்ளியிட்டு கோலமிட மறந்திருப்பாய்..
புத்தம்புது மலரை துறந்திருப்பாய்..

மூன்றாம் பிறை அளவு நகைத்திருப்பாய்..
தினம் நூறுமுறை என் நாமம் உரைத்திருப்பாய்..”

என்று அருகிலிருந்து அவள் பட்ட பாடைக் கண்டவன் போலப் பாடினான்..

“அதே.. அதே..” சிரம் அசைத்து ஆமோதித்த வசுந்தரா.. தனது பாதங்களைச் சுட்டிக்காட்டி.. கரங்களை விரித்து..

“எண்ட பாதக் கொழுசொன்று..
தொலைந்து போயி..
அதைத் தேடி நோக்க மனசெல்லாம்..
மறந்து போயி..”

என்று விழிகளை உருட்டி சின்னஞ்சிறு மழலையாக கவலை கொண்டாள்..

“அது தவறில்லை..
அச்சம் கொள்ளத் தேவையில்லை..
உன் நெஞ்சகத்தில்..
காதல் வந்த சுவடு அது..”

அவள் கன்னங்களைத் தட்டிக் காரணம் கூறினான் ரவிவர்மன்..

“எண்ட கனவிலும் நனவிலும்..
நின் வதனமே தோன்றுது..
கலகம் ஏதும் வந்நீடுமோ..?”

இமை கொட்டிய வசுந்தரா தேவியின் குறும்பில் மனதைப் பறிகொடுத்தான் ரவிவர்மன்.. அவளது

ஒவ்வொரு அசைவும் அவனை மயக்கியது.. அவளது சிணுங்கல்களில் சிருங்காரம் வெளிப்பட்டது..

"தனிமையும் சாந்தியும்..
பிரியமாயிருதே..
கேரளத்துக் கதகளி..
ஆடனும்போல் தோணுதே.."

கூந்தலை அள்ளித் தன் கழுத்து வளைவில் போட்டுக் கொண்டபடி கானமிசைத்தவளின் காதலில் கட்டுண்ட ரவிவர்மன்..

"எனக்கும் உள்ளது..
அந்த ஆர்வம்..
விழிகளாலே ஆடும்
மோகினி நடனத்தை
வரும் தினங்களில் நீயும்
கற்றுத் தேர்ந்து ஆடிடுவாய்.."

என்று கரங்களை விரித்து பார்வையில் அவளை அழைத்தான்.. அவனது கரங்களுக்குள் விருப்பத்துடன் புகுந்து கொண்டாள் வசுந்தரா.. அவளது மலர்கூந்தலைக் கோதி விட்டவன் அவளது குழல் காட்டில் விரல் விட்டு கூந்தல் இழைகளைப் பிரித்து விட்டான்.. அதில் கிறங்கிப் போன வசுந்தரா அவனிடம் செல்லம் கொஞ்சும் மழலையாகி..

"எந்தன் பாதவிரல் பத்தும்..
அன்று துடித்ததல்லோ..

நீ மெட்டியிட்டதில் அடங்கியதை
நீ அறிவாயல்லோ..”

என்று வினவினாள்..

“நம் மனதிற்குள்..
வன்முறைகள் நடந்ததடி..
அவற்றைத் தட்டிக் கேட்டு
அனுப்பியதில் நடுங்குதடி..”

என்று அவன் விடைகூறினான்..

“ஞான் நின்னைக் கண்டு விட்டால்..
என்னை ஏதோ சூழுதே..”

அவள் அஞ்சுவதைப் போல பாவனை செய்ததில் அவன் அவளை ஆலிங்கனம் செய்து அதரங்களில் முத்தமிட்டு செவியோரமாக வினவி வைத்தான்..

“எது சூழ்ந்ததாம்..?”

“காதல்..!”

“எவர் மீது..?”

“தங்களின் மீது..”

“அழகி..!”

மயக்கத்துடன் மொழிந்தான்.. அவனைவிட அதிக மயக்கத்துடன்..

“தங்களை விடவா..?” எனக் கொஞ்சினாள் வசுந்தரா..

“வர்மன் என்றே என்னை அழைப்பாயா..?”

“சங்கமதீரன் என்றும் அழைப்பேன்.. தங்களின் வீரத்தையும் தீரத்தையும் சிறப்பிக்க தமிழகம் தங்களை அவ்வாறுதானே அழைக்கிறது..?”

“ஹா.. ஹா..”

வசுந்தராவுடன் உரையாடுவது இன்பமாக இருக்கும் என்பதை உணர்ந்திருந்தும் ஒவ்வொரு உரையாடலின் போதும் பேரின்பத்தை நுகர்ந்து களித்தான் ரவிவர்மன்..

அவனது அத்துனை கலாரசனைகளுக்கும் பொருத்தமான துணையாகத் திகழ்ந்தாள் வசுந்தரா.. அவளை விட்டு நீங்க இயலாமல் காஞ்சியிலேயே அவன் தங்கிவிட... கொல்லத்தின் அந்தப்புரம் கொதித்து எழுந்தது..

கேரளத்தின் பசுமை நிறைந்த மரங்கள் அடர்ந்த மலைஉச்சியில் பெரிய மதில்களுடன் கூடிய தேவலோக மாளிகை போன்ற சேரமன்னன் ரவிவர்மனின் அரண்மனையில் அவனது மகாமந்திரி சிர வேதனையுடன் கரங்களைப் பிசைந்து கொண்டிருந்தார்..

“எந்தா கோலமிது மகாமந்திரி.. நிண்ட மனதை வருத்தும் விடயம் எதுவோ..?” படைத்தலைவன் விசாரித்தான்..

“என்னவெண்டு பறய சேட்டா..? நமது மன்னர் கொல்லத்துக்கு வருகை தராமல் காஞ்சியிலேயே வாசம் செய்யி..”

"அதை ஞான் அறிஞ்சல்லோ.. வேற சங்கதி ஏதும் உண்டோ.. இது பழய சங்கதியல்லா..?"

"பழய சங்கதிதான் புதிய சங்கதியா என் செவிகளை குடைந்துக்கிட்டிருக்கு.. கேட்டில்லோ.."

"எண்ட குருவாயூரப்பா..! மந்திரிக்கா இந்த சோதனை..?"

"அதே படைத்தலைவரே..! மகாராணியும், மற்ற ராணிகளும் என்ன முக்கியமான சங்கதிகளப் பறயனும்னு விளிச்சு..! ஞான் என்னத்தப் பறய..?"

"எண்ட குருவாயூரப்பா..! மன்னர்கிட்டப் பறய வேண்டிய சங்கதிகள நிண்ட செவிகளில பறஞ்சு என்னத்தச் செய்ய..?"

"அதத்தான் ஞானும் ஆலோசிச்சுக்கிட்டு நிற்கிறேன்.. மனசிலாயி..?"

"மனசிலாயி.. மனசிலாயி.."

"நிண்ட மனசில காருண்யம் பொங்கி எண்ட பலன் சேட்டா..? மகாராணியும், மத்த ராணிகளுமில்ல அனுக்கிரகிக்கனும்..?"

"பேடிக்க வேண்டாம் அமைச்சரே..!"

"பேடிக்காமல் எந்தா செய்ய..? ஒன்ற செய்யலாமா..?"

"எந்தா அமைச்சரே..?"

"எனக்குப் பதிலா நிண்ட யோசனையைப் பறயலாமில்லோ.."

"ஞானா..?"

"நீதான்.."

"ஆலோசனையா..?"

"அதே.. அதே.."

"எந்தா சேட்டா..! நிண்ட அறிவுக்கும், ஆற்றலுக்கும் பக்கத்தில் கூட ஞான் வர முடியாதில்லோ.. ஞான் என்ன அறியும்..?"

"விவகாரத்தில மாட்டிக்காம தப்பிக்க அறியு முல்லோ..?"

"அட எந்தா சேட்டா.. புரியாமல் பறஞ்சுக்கிட்டு.. வாளெடுத்து சண்டை போடக் கூறினால் ஞான் முன்னாலே வந்து நின்னு சண்டை போடும்.. அதில்லாம மகாராஜா மேல மகாராணிக்கும், மத்த ராணிக்களுக்கும் உள்ள சினத்தைப் பத்திப் பறயச் சொன்னா ஞான் சன்யாசம் வாங்கிக்கிட்டு ஓடியே போகும்.."

"எண்ட வதனத்த நோக்கிப் பறயு சேட்டா.."

"எந்தா பணிக்கு..? நிண்ட வதனத்தப் நோக் கிறதுக்குப் பதிலா எண்ட மனையாட்டியோட வதனத்த நோக்கினாலாவது பணிக்கு ஆகும்.."

"படைத்தலைவரே.."

"ஞான் வரட்டே.."

"நில்லப்பா.."

"நீ தனியா செல்லப்பா.."

படைத்தலைவன் சுழன்று கொண்டு தப்பியோடி விட.. தனியாக மாட்டிக் கொண்ட அமைச்சர் தப்பிக்கும் மார்க்கம் அறியாதவராய் அரண்மனையை நோக்கி நடந்தார்.. சுற்றுச் சுவரைச் சுற்றிச் சென்றார்... அங்கே பெரிதான 'திட்டி வாயில்..' இருந்தது... திட்டி வாயிலின் வழியாக அரச குடும்பத்தவர் மட்டுமே சென்றுவர இயலும்.. அதன் அருகினில் அந்தப்புர நந்தவனம் இருந்தது.. அவரை அங்கே எதிர்கொண்டாள் சேரமன்னன் ரவிவர்மன் குலசேகரனின் பட்டத்து மகிஷி...

அவளது சிவந்த விழிகளைக் கண்ணுற்ற அமைச்சருக்கு கூறாமல் சன்யாசம் வாங்கிக் கொண்டு ஓடி விடாமல் வருகை புரிந்து மாட்டிக் கொண்டோமே என்றிருந்தது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



17

நீ சொன்ன வார்த்தைகள்..
நிழலாகத் தொடர்கின்றனவே..

கோட்டை சரி செய்த வண்ணம் அலுவலகத்தில் நுழைந்த சித்தார்த்.. எதிர்பட்டவர்களின் காலை வணக்கத்திற்கு தலையை அசைத்தபடி கம்பீரமாக நடந்து வந்தான்..

இயல்பாக வயலெட்டின் சீட்டைப் பார்த்தவன் பிரேக் பிடித்ததைப் போல அப்படியே நின்று விட்டான்.. வயலெட்டின் அருகே உட்கார்ந்திருந்த யாமினி அவனைக் கண்டதும் `மரியாதை நிமித்தம் எழுந்து நின்றாள்..

'இப்ப என்ன செய்கிறது..?'

அவளுக்கு குழப்பமாக இருந்தது.. சித்தார்த்தன் அவளுடைய முதலாளி.. ஆனால்.. அவனிடம் பணிவைக் காட்ட அவளால் முடியவில்லையே.. அது ஏன்..?

சித்தார்த்தனுக்கும் அதே நிலைதான்.. வயலெட் டிடமும்.. ரேகாவிடமும் காட்டும் கண்டிப்பை யாமினியிடம் காட்ட இயலாமல் நட்புடன் சிரித்து வைத்தான்..

'அப்பாடா..!'

விடுதலை உணர்வுடன் பதிலுக்கு சிரித்து வைத்த யாமினியை முறைத்து வைத்தான் தாமோதரன்..

"ரேகா.."

தாமோதரனின் திடீர் அழைப்பில் புளகாங்கிதப் பட்டுப் போனாள் ரேகா.. அவசர அவசரமாக..

"சார்..?..." என்றாள்..

"இவர் நம்ம கம்பெனியின் எம்.டி.."

சித்தார்த்தைக் காட்டி அவன் சொன்ன விவரத்தில் இதை எதற்காக அவளிடம் வேலை மெனக்கெட்டு அவன்

சொல்லிக் கொண்டிருக்கிறான் என்று புரியாமல் திகைத்துப் போனாள் ரேகா.. அதை புரிந்து கொண்ட யாமினியின் முகம் மாறியது..

"ஐ நோ சார்.." குழப்பத்துடன் சொன்னாள் ரேகா..

"உங்களுக்குத் தெரிஞ்சது மத்தவங்களுக்கும் தெரியனுமில்ல.. அதான்.. ஞாபகப் படுத்தினேன்.." இடக்காகப் பேசிய தாமோதரனின் பார்வை யாமினியைச் சுட்டது..

'இவனுக்கு எதுக்காக என்மேல இத்தன காண்டு..'

யாமினி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. சித்தார்த்தனுக்கு கோபம் வந்தது.. புருவங்கள் முடிச்சிட அவன் தாமோதரனை முறைத்ததிற்கு யாதொரு பலனும் ஏற்படவில்லை.. அவன் யாரையோ முறைப்பதைப் போல தாமோதரன் முகம் மாறாமல் நின்றிருந்தான்..

"இங்கே ஏன் உட்கார்ந்திருக்கீங்க..? உங்க சீட் இங்கேயில்லை.."

சித்தார்த்தன் தாமோதரனைத் தவிர்த்து விட்டு யாமினியிடம் நேரடியாகப் பேசியதில் வயலெட்டும், ரேகாவும் ஆச்சரியமானார்கள்..

'கதை இப்படிப் போகுதா..? அதான் இந்த முசுடு.. (வயலெட் தாமோதரனை இப்படித்தான் மனதுக்குள் சொல்லிக் கொள்வாள்..) இவ்வளவு காண்டாகுதா..?'

வயலெட்டிற்கு சில்லென்று இருந்தது.. எம்.டியின் இணைபிரியாத நண்பன் என்ற ஹோதாவில்.. வானளாவிய அதிகாரத்துடன் வலம் வந்து கொண்டிருந்த தாமோத ரனுக்குப் போட்டியாக மற்றும் ஒரு நபர் அந்தக் கம்பெனிக்குள் நுழைந்திருப்பதில் அவளுக்கு வானளாவிய சந்தோசம் ஏற்பட்டது..

"எங்கே சார்..?" என்றாள் வயலெட்..

அத்தனை சுவாதீனமாக அவள் சித்தார்த்துடன் உரையாடியதில் தாமோதரன் பல்லைக் கடித்தான்.. சித்தார்த்தன் புருவங்களை நெரித்தான்..

'இப்போ போஸ் கொடு.. இத்தனை நாளா காண்பிச்ச கெத்தை காத்தில பறக்க விட்டுட்டு எவளோ ஒருத்திக்காக நின்று பேசினா இப்படித்தான் வந்து சேரும்..'

சித்தார்த்தனை நான்கு மொத்துக்கள் மொத்தினால் என்ன என்று கோபம்.. கொண்ட தாமோதரனின் சுட்டெரிக்கும் விழிச் சுடர்களைச் சந்திக்காமல் சர்வ ஜாக்கிரதையாக வயலெட்டைப் பார்த்து..

"எங்கேன்னு கொஸ்டின் பண்ணினா என்ன அர்த்தம்..?" என்று எரிந்து விழுந்தான் சித்தார்த்தன்..

"சார்..?" வயலெட் வினயத்துடன் குரல் எழுப்ப..

"'வாட் டு யு மீன்' அப்படின்னு கேட்கிறார்ம்மா எம்.டி.." என்று எடுத்துக் கொடுத்தான் தாமோதரன்..

"அம்மாவா..? யாருக்கு யார் அம்மா..?" வயலெட் சீறினாள்..

"இப்ப இந்தப் பஞ்சாயத்து தேவையா..? நிச்சயமா எனக்கு நீங்க அம்மா இல்லைம்மா.. எங்கம்மா காஞ்சிபுரத்தில ஏகாம்பரேஸ்வரரை கும்பிட்டுக்கிட்டு சத்தமில்லாம இருக்கிறவங்கம்மா.." என்று ஆயிரத்தைந்து 'அம்மா' போட்டான் தாமோதரன்..

"இப்படித்தான் சார்.. நியு ஜாயினிங்கா வந்திருக்கிற வங்களையும் கடுப்பேத்திக்கிட்டு இருந்தார் நம்ம ஜி.எம்... பாவம் இவங்க மிரண்டு போய் முழிச்சுக்கிட்டு நின்னாங்க.."

போட்டுக் கொடுக்கும் வேலைக்கு வெற்றிகரமாக பிள்ளையார் சுழி போட்டாள் வயலெட்..

18

சூது சூழ்ந்த இவ்வுலகில்.. சுதந்திரத்திற்கு எங்கு செல்ல..?

விடிகின்ற தருவாயில் வசுந்தராவின் அருகாமையை அனுபவித்தபடி துயில் கொண்டிருந்த ரவிவர்மனின் துயில் கலைக்க வருகை புரிந்தான் சேவகன்..

"சேர நாட்டின் பட்டத்து ராணியும்.. சேர மன்னரின் தங்கையும் காஞ்சியில் இளைப்பாற வருகை புரிந்துள்ளார்கள் அரசே..!"

"யாது உரைத்தாய்..?"

ரவிவர்மனின் துயில் பறந்து விட்டது.. அந்தச் செய்தியை அவன் விரும்பவில்லை.. அவனுடைய அனுமதியைக் கோராமல் கொல்லம் விட்டு காஞ்சிக்கு வருகை தந்திருக்கும் பட்டத்து ராணியையும், ரவிவர்மனின் இளைய சகோதரரியையும் சினத்துடன் அவன் வரவேற்றான்..

விருந்தினர் மாளிகையில் தங்க வைக்கப் பட்டிருந்தவர்களை அவன் சந்திக்கச் சென்ற போது.. அவனைவிட அதிக சினத்துடன் எதிர்கொண்டாள் அவனுடைய பட்டத்து அரசி..!

"எனது அனுமதியின்றி கொல்லத்தை விட்டு ஏன் வெளியேறினாய் மகாராணி..?"

"தங்களிடம் அனுமதி கோர தாங்கள் என்னருகில் இல்லையே அரசே..! அனுமதி பெறவே தங்களை நாடி வந்தேன் என்று பொருள் கொள்ளலாமே.." சளைக்காமல் மறுமொழி பகர்ந்தாள் பட்டத்து அரசி..

"காஞ்சிக்கு ஏன் வர வேண்டும்..?"

"இந்நகரம் புண்ணியஸ்தலமல்லவா..! அத்துடன் நாயகன் வசிக்கும் இடத்தில்தானே நானும் வசிக்க வேண்டும்..?"

பட்டத்து ராணியின் சிந்தையைப் புரிந்து கொண்டான் ரவிவர்மன் பட்டத்துராணி காஞ்சிக்கு வருகை தந்து விட்டால் வசுந்தராவின் அருகாமையில் மட்டும் ரவிவர்மனால் முழுப்பொழுதும் இருக்க இயலாதல்லவா..

'இதன் பொருட்டே இவள் வந்திருக்கிறாள்..'

எத்தனையோ தடைகளைக் கடந்து காதலியின் கரம் பற்றி அவளுடன் இன்பமயமான வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தவனை இந்தத் தடை தொந்தரவு செய்தது..

"தாம் மட்டும் எனது ராணியல்ல.." நேரடியாகவே கூறி விட்டான் ரவிவர்மன்..

"அறிவேன் நான்.. எனக்கடுத்த ராணிகளுக்கு மங்கல ஆரத்தி எடுத்து அந்தப்புரத்துக்கு அழைத்துச் செல்லும் எனது பணியை வெகு சிறப்பாகத்தானே நிறைவேற்றிக் கொண்டுள்ளேன்..?" குமுறலுடன் வினவினாள் பட்டத்து ராணி..

"அப்போது தாம் காட்டாத எதிர்ப்புணர்வை இப்போது காட்டுவதாக நான் உணர்கிறேன் தேவி.."

"மற்ற ராணிகளை கடமையின் நிமித்தமாக தாங்கள் மணம் புரிந்தீர்கள் அய்யனே..! காதலின் நிமித்தமாக மணம் புரியவில்லை.."

தனது மனநிலையைத் தெள்ளத் தெளிவாக உணர்த்தி விட்டாள் ரவிவர்மனின் பட்டத்து ராணி..

கடமையின் நிமித்தம் மணம் புரிந்த ராணிகளிடம் ரவிவர்மனின் மனம் லயிக்காது என்பதைத் துல்லியமாக அவள் கணித்து வைத்திருந்த திறமையை ரவிவர்மனால் மனதுக்குள் பாராட்டாமல் இருக்க இயலவில்லை..

'சேர மன்னனின் பட்டத்து ராணி இவள்..! புத்தி கூர்மையில் இவளுக்கு நிகர் இவள்தான்..'

அந்தப் புத்தி கூர்மையினால் ரவிவர்மனின் மனம் நாடிய காதலை ஏன் தர இயலவில்லை எனத் தனக்குள் வினவியும் கொண்டான்..

"காதல் கொள்வது தவறா தேவி..!"

"தவறல்ல மன்னவரே..! இவ்வுலகம் அரச குலத்தின் ஆண்களுக்காக வகுத்திருக்கும் நியதி எந்தவிதமான வரையறைகளுக்குள்ளும் அவர்களை ஆட்படுத்த வில்லை.. பெண்கள் அவ்விதமல்ல.. காதல் கொண்டு மணந்த ராணியுடன் காஞ்சியிலேயே தாம் வாசம் செய்தால் கொல்லத்தில் உள்ள மற்ற ராணிகளின் நிலை என்ன என்பதை சேர மன்னர் சிந்திக்க மறந்தது ஏன்..?"

கம்பீரமாக வினா எழுப்பினாள் பட்டத்து ராணி.. தன்னுடன் சேர மன்னன் ரவிவர்மனை உடன் அழைத்துச் செல்லும் திடமான முடிவோடு அவள் பயணப் பட்டிருப்பதை அங்கயற்கண்ணி உணர்ந்து விட்டாள்.. அவளது மனம் கிலேசம் கொண்டது..

பட்டத்து ராணியின் அதிரடி நடவடிக்கைகளில் அவளைச் சமாதானம் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளான ரவிவர்மன் அவளுடனே பொழுதைக் கழிக்க.. வசுந்தரா தனிமைப் பட்டாள்..

என்னதான் ரவிவர்மன் பல ராணிகளை மணந்தவன் என்ற உண்மையை அவள் அறிந்திருந்தாலும் அவளது

கண்ணெதிரே அவன் மற்றொரு ராணிக்கு சொந்தமான வனாக நடமாடுவதை அவளால் ஜீரணித்துக் கொள்ள இயலவில்லை..

இதைப் போன்ற காட்சிகளைக் காண நேரிடும் என்பதினால்தானே அவள் கொல்லத்திற்கு செல்ல மறுத்து காஞ்சியிலேயே வாசம் செய்தாள்..? இங்கும் அவளை இன்னல் தேடிவருவதா..?

எனக்கு நீ நிகரா என்று பட்டத்து ராணியின் ஆணவப் பார்வை எழுப்பிய வினாவை நேரடியாக வினவினாள் ரவிவர்மனின் தங்கையான மோகன சுந்தரி..

"விண்ணுக்கும் மண்ணுக்கும் பொருந்தி வராது என்பதனை எவ்வாறு நீ அறியாமல் போனாய்..?"

சீற்றத்துடன் அவள் எழுப்பிய வினாவில் மருண்டு போனாள் வசுந்தரா.. அத்தருணத்தில் அவளைக் காண விரைந்து வந்து கொண்டிருந்த ரவிவர்மனின் செவிகளில் அவ்வினா விழுந்துவிட்டது..

"மோகனா..?" அவன் கர்ஜித்தான்..

ரவிவர்மனின் சினத்தில் அஞ்சினாலும் நிமிர்வாகவே நின்றாள் மோகன சுந்தரி..

"எவரிடம் என்ன வினாவை எழுப்புகிறாய் என்பதை நீ அறிவாயா..?"

"அறிவேன் அண்ணா..! அரச குலத்தில் பிறக்காமல்.. சேரமன்னன் ரவிவர்ம குலசேகரனின் இளைய ராணியாக

மாறிப்போன மங்கையிடம் வினவிக் கொண்டிருக்கிறேன் என்பதை அறிவேன் நான்..."

"இதுபோல பதிலுரைக்க எங்கு கற்றாய்..? எனது பட்டத்து மகிஷியிடமா..?"

"அண்ணா.."

"கேள் இதை.. இவள் எனது இளையராணியாக இருந்தாலும் இவளே எனது இதயராணி..! இவள் மட்டுமே எனது இதயராணியென்ற உண்மையை உன் புத்தியில் ஏற்றிக் கொண்டு அதன் பின்னர் வினாவை எழுப்பு.."

வசுந்தராவின் முன்னிலையில் ரவிவர்மன் சினம் கொண்டு மோகனசுந்தரியை கடிந்து கொண்ட சேதி பட்டத்து ராணியின் செவிகளை எட்டியது..

"அவள் இதயராணி என்றால் நான் யார்..?" அவள் கொந்தளித்தாள்..

"என் பட்டத்து ராணி..!" என்றான் ரவிவர்மன்..

"இந்த பட்டத்துக்காக தங்களை நான் விட்டுக் கொடுக்க வேண்டுமா..?"

"வேண்டவே வேண்டாம்.. இந்தப் பட்டத்தை துறந்துவிடு.. வசுந்தராவை எனது பட்டத்து ராணியாக்கி கொல்லத்தின் அரண்மனையின் அந்தப்புரத்தில் விட்டு விடுகிறேன்.. தம்மை எனது இதயராணியாக ஏற்றுக்

கொண்டு இந்தக் காஞ்சியின் மாளிகையில் வசிக்கிறேன்.. நாம் இன்பமாக வாழலாம்..”

“அரசே..! நான் தங்களின் பட்ட மகிஷியாவேன்.. கொல்லத்தின் அரண்மனையின் மகாராணி நான்.. எனது பட்டத்தை நான் துறந்து இந்த சின்னஞ்சிறு மாளிகையில் நான் வசிக்க வேண்டுமா..? எவருக்கு வேண்டும் தங்களின் இதயராணி என்ற பட்டம்..?”

எத்துணைதான் புத்திகூர்மையாக இருந்தாலும்.. அடி மனதின் ஆசைகள் அந்த புத்தி கூர்மையைத் தோற்கடித்து வெளிப்பட்டு விடுகின்றன என்பதில் அர்த்த புஷ்டியுடன் கூடிய புன்னகை புரிந்தான் ரவிவர்மன்..

தான் தோற்று விட்டதை உணர்ந்து கொண்ட பட்டத்து ராணி அடிபட்ட வேங்கையானாள்..

“தற்போது புரிகிறது அல்லவா..? தமக்கோ, மற்ற ராணிகளுக்கோ வேண்டியிராத எனது இதயராணி பட்டத்தைத்தான் வசுந்தராவுக்கு நான் அளித்திருக் கிறேன்.. நீயும், மற்ற ராணிகளும் அதிகாரங்களையும், மாளிகைகளையும், ஆடை ஆபரணங்களையும் வேண்டினீர்கள்.. நீங்கள் வேண்டிய அனைத்தையும் நான் அளித்தேன்.. வசுந்தராவோ.. எனது இதயத்தில் ஓர் சிறு இடத்தை மட்டுமே வேண்டினாள்... எனது இதயராணியாக அவளை வரித்தேன்.. இதில் எமைக்குறை கூற எவருக்கும் அதிகாரமில்லை..”

ஆணித்தரமாக மொழிந்து விட்டான் ரவிவர்மன்.. வசுந்தராவின் மீது அவனுக்கிருந்த அசைக்க இயலாத காதலில் அங்கயற்கண்ணியின் மனக்கிலேசம் பறந்து போனது..

இவள்தான் எனது இதயராணி என்று திட்டவட்டமாக ரவிவர்மன் அறிவித்த பின்பும் காஞ்சியை விட்டு நீங்காமல் அங்கேயே தங்கியிருந்தாள் பட்டத்து மகிஷி.. உடன் மோகன சுந்தரியும் இருந்ததில் வசுந்தராதேவியின் நிம்மதி அடிக்கடி ஆட்டம் கண்டது..

வசுந்தராவுடன் ரவிவர்மன் கூடியிருக்கும் வேளையில்தான் பட்டத்து ராணிக்கு 'சிர வலி' வந்து தொலைக்கும்.. பஞ்சணையில் சிரத்தை உருட்டி.. அரற்றி.. ரவிவர்மனை தன்னை விட்டு நீங்க இயலாமல் அருகில் நிறுத்திக் கொள்வாள் பட்டத்து ராணி..

ஒருவழியாக சிர வலி ஓடி விட.. ரவிவர்மன் வசுந்தரா தேவியிடம் திரும்புவான்..

விட்டதைப் பிடித்து விடும் வேட்கையுடன் அவன் வசுந்தரா தேவியை அணுகும் போது.. பட்டத்து ராணி உப்பரிகையின் விளிம்பிலிருந்து மயங்கி விழ இருந்தாள் என்ற சேதி அவனைத் தேடி வரும்.. ரவிவர்மன் விரைந்து விடுவான்.. பட்டத்து ராணிக்கு வந்த மயக்கம் திரும்பிச் செல்ல இரு தினங்களாகி விடும்..

மீண்டும் ரவிவர்மன் வசுந்தராவைத் தேடி வருவான்.. வேட்கையுடன் நெருங்கவும் முனைவான்.. இம்முறை

பட்டத்துராணி மேன் மாடத்தின் படிகளில் பாதம் தடுக்கி விழுந்து வைப்பாள்.. ரவிவர்மனுக்கு சேதி வரும்.. அவனும் விரைவான்.. பட்டத்து ராணியின் பாதவலி குணமடைய சில தினங்களாகும்..

வசுந்தரா தவித்துப் போனாள்.. அங்கயற்கண்ணிக்கு வெறுத்துப் போய் விட்டது.. ஓர்தினமும் பட்டத்து ராணி வசுந்தராதேவியுடன் ரவிவர்மனை வாழ விட மாட்டாள் என்பதைப் புரிந்து கொண்டவளின் இதயம் நடுங்கியது..

இந்த சூதுவாதுக்களை அறியாத மழலையான வசுந்தரா தேவி ரவிவர்மனைக் கண்ணெதிரே கண்டும் உரிமையுடன் உரையாட இயலாமல் சுணங்கிப் போனாள்..

கைலாசநாதர் பெருந்தன்மை மிக்கவர்.. வல்லவனுக்கோ இந்த சக்களத்தி யுத்த முறைகளைப் பற்றி ஓர் மண் துகளும் தெரியாது.. அவர்கள் என்றும் போல வசுந்தராதேவி இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றே நம்பினார்கள்.. இந்தச் சூழலில் கைலாசநாதர் வேறு..

"கண்ணி..! பட்டத்து மகிஷி நமது விருந்தினர்.. அவரைச் சிறப்பான முறையில் உபசரித்து அனுப்பி வைக்க வேண்டும் என்பதனை மறவாதே.." என்று விருந்தோம்பலைப் பற்றி அங்கயற்கண்ணிக்கு பாடம் எடுத்து படுத்தி வைத்துக் கொண்டிருந்தார்..

"அதற்கென்ன அய்யனே..! எனது மகளின் கணவரின் பட்டத்து ராணிக்கு பணி புரியத்தானே நான் பிறப்பெடுத்திருக்கிறேன்.." என்று அங்கயற்கண்ணியும் விடையளித்து கணவரை நிம்மதி கொள்ள வைத்தாள்..

அந்த இல்லத்தின் ஆண்கள் இவ்விதமாக இருக்க.. வீரபாகு மட்டும் வசுந்தராதேவியின் நிலையைப் புரிந்து கொண்டு விட்டான்..

"நானுள்ளேன் தாயே..! வசுந்தராவை விட்டு சேர மன்னர் நீங்கிச் சென்று விடாமல் பார்த்துக் கொள்ள நானாயிற்று.. கவலை கொள்ள வேண்டாம்.."

அங்கயற்கண்ணியிடம் அவன் உறுதியளித்தபோது இவனால் எவ்வாறு இதைச் சாதிக்க இயலும் என்று தான் அங்கயற்கண்ணி எண்ணினாள்.. அவளது மன அமைதிக்காக எதையாவது கூற வேண்டும் என்பதற்காக வீரபாகு இதைக் கூறுகிறான் என்று நிராசை கொண்டாள்..

வீரபாகு மெய்யாகவே அதைச் சாதித்துக் காட்டினான்.. பட்டத்து ராணி கோலத்தில் பாய்ந்தால் இவன் தடுக்கில் பாய்ந்தான்.. வசுந்தரா தேவியுடன் சேர விடாமல் ரவிவர்மனை இறுக்கிப் பிடித்துத் தனக்குக் காய்ச்சல் என்று பஞ்சணையில் பட்டத்து ராணி சுருண்டிருந்தால்..

"அரசே..! வசுந்தராதேவி எதைக் கண்டோ பயந்துள்ளார்கள்.. அஞ்சி அலறுகிறார்கள்.. அய்யனாலும்,

அம்மையாலும் அவர்களைக் கட்டுப்படுத்த இயல வில்லை.. தங்களால் மட்டுமே அவரைக் கட்டுப் படுத்த இயலும் என்று வைத்தியர் கூறுகிறார்.." என்று வந்து சேர்ந்தான்..

"ஏன்னது..! வசுந்தரா அச்சம் கொண்டு நடுங்குகிறாளா..?"

வசுந்தராவின் மழலைத்தனமான சுபாவத்தை அறிந்த ரவிவர்மன் நொடிப் பொழுதும் தாமதிக்காமல் வசுந்தரா தேவியைத் தேடிப் பாய்ந்து விட்டான்.. மருண்டு நின்ற வசுந்தராவின் பயம் தவிர்க்க இரவுப் பொழுதுகளை அவளுடன் கழித்தான்..

பட்டத்து ராணிக்கு வெறி பிடித்தது போலாகி விட்டது.. என்னதான் அவள் மாளிகையில் தங்கி விதம் விதமாக திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினாலும்.. அதைவிட அதி வேகத்திட்டங்களைத் தீட்டி அவளது திட்டங்களை முறியடித்தான் வீரபாகு..

'கரவலி' என்று சோர்ந்திருக்கும் பட்டத்து ராணியின் அருகில் ரவிவர்மன் அமர்ந்தால்.. வசுந்தராதேவி நடனமாடி காலை ஒடித்துக் கொண்டாள் என்று ஓடி வருவான் வீரபாகு..

சேதியைக் கேட்டதும் பட்டத்து ராணியை மறந்து வசுந்தராவைத் தேடி ஓடி விடுவான் ரவிவர்மன்..

'சிரவலி..' என்று பட்டத்து ராணி சிரத்தைப் பிடித்தால்.. கனி கொய்யப் போன வசுந்தரா தேவி கால்

தடுக்கி புல்தரையில் விழுந்து சிரத்தைப் பெயர்த்துக் கொண்டாள் என்று வந்து சேர்வான் வீரபாகு.. அவன் பின்னோடு சென்று விடுவான் ரவிவர்மன்..

அது கயிறு இழுக்கும் போராட்டம்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'

18

உனக்கும் எனக்குமான பந்தம் - இந்த உலகம் அறியாதது..

"**கி**ழிஞ்சது போ.." என்றான் தாமோதரன்..

"என்னடா..?" சித்தார்த்தன் கடுப்புடன் கேட்டான்..

யாமினியை தாமோதரன் மீரள வைத்து விட்ட கோபம் அவனுக்கு.. அதைப் புரிந்து கொண்ட தாமோதரன்..

"தேவைதாண்டா எனக்கு.." என்றான்..

"நம்ம ஜி.எம் சாருக்கு எது தேவையோ இல்லையோ.. இவங்க தேவையில்லைன்னு நினைக்கிறார் போல இருக்கு சார்.."

போட்டுக் கொடுக்கும் புண்ணிய வேலையை செவ்வனே செய்து முடிக்க ஊடே புகுந்தாள் வயலெட்..

"நீங்க நடத்துங்கம்மா.." தாமோதரன் வழிவிட்டான்..

"இதைத்தான் நான்.. 'எங்கே சார்..'ன்னு சொன்னேன் சார்.."

"கேட்டுக்கப்பா சித்தார்த்தா.. 'வாட் டு யு மீன்'ங் கிறதுக்கான 'மீனிங்' இதுதானாம்ப்பா.. பாவம்.. நம்ம ரிசப்சனிஸ்ட் அம்மாவுக்கு எம்புட்டு மூச்சு வாங்குதுன்னு பாரு.. அதனால இந்த மீனிங்கை புரிஞ்சுக்கிட்டு.. மேற் கொண்டு எந்த மீனிங்கையும் கேட்காம விட்டிருப்பா.." பரிந்துரை செய்தான் தாமோதரன்..

"இன்னும் நான் முடிக்கலை.." வயலெட் அறிவித்தாள்..

"ஓ..! 'இன்னும்' இருக்கா..?" அர்த்த புஷ்டியுடன் 'இன்னும்' என்ற வார்த்தைக்கு அழுத்தம் கொடுத்துக் கேட்டான் தாமோதரன்..

"நிறைய இருக்கு.."

"பாருடா.. ரிசப்சனிஸ்ட் வேலையக்கூட இத்தனை ஆர்வமா பொறுப்பா இவங்க செஞ்சிருக்க மாட்டாங்க.. போட்டுக் கொடுக்கிற வேலையில எத்தனை ஆர்வம்..!" தாமோதரன் பாராட்டினான்..

"நான் ஏன் போட்டுக் கொடுக்கனும்..? உண்மை யைத்தான் சொன்னேன்.." மூக்கை விடைத்தாள் வயலெட்..

"ஆமாமாம்.. நீங்க பெரிய உண்மை விளம்பிதான்.. இந்த ஆபிஸ்ல வந்து சேர்ந்த நாள் முதலா நீங்க தினமும்

விளம்பற உண்மைகள நான் கேட்டுக்கிட்டுத்தான் இருக்கேன்..” அதற்கும் பதிலடி கொடுத்தான் தாமோதரன்.

“உங்களிடம் எனக்குப் பேச்சில்லை சார்..”

“சந்தோசம்..”

“ஜி.எம் சார் முறைச்ச முறைப்பில நடுங்கிப் போய் நின்னவங்களப் பாக்கப் பாவமா இருந்துச்சு சார்... அதான் நீங்க வருகிற வரைக்கும் இவங்களை காபந்து பண்ணலாமேன்னு சேர் போட்டு உட்காரச் சொன்னேன்.. தப்பா சார்..?”

அவள் இமைகளைக் கொட்டிக் கேட்ட விதத்தில் தாமோதரனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.. அப்படியே அவளது கன்னங்களைப் பற்றி இனிமேல் இப்படி இமை கொட்டுவாயா..? இமை கொட்டுவாயா..? என்று நான்கு அப்புக்களை அப்ப வேண்டும் போல வெறி கிளர்ந்தது..

“தப்பே இல்லைம்மா..” என்ற தாமோரன் வயலெட் எதிர்பார்க்காத ஒன்றைச் செய்தான்..

“ரேகா..”

அந்த அழைப்பில் ‘போச்சுடா..’ என்ற மானசீகமாக தலையில் கை வைத்தாள் வயலெட்.. தாமோதரனின் அழைப்புக்கு ரேகா என்ன பதிலைச் சொல்வாள் என்று அவளுக்கா தெரியாது..?

‘இவதான் இந்த முசுடு எப்பக் கூப்பிடுவான்னு காத்துக்கிட்டு இருக்காளே.. இது பத்தாதா..?’

"சார்.." ரேகா வயலெட்டின் கணிப்பை மெய்யாக்கினாள்..

"இந்த நியு ஜாயினிங்.."

தாமோதரன் யாமினியின் பக்கம் கை காட்ட..

"ஏண்டா..? அவங்களுக்குன்னு பெயர் இல்லையா..?" என்று கடுப்பானான் சித்தார்த்தன்..

"பொறுடா.. இப்ப இவங்களை எந்தப் பெயர் சொல்லிக் கூப்புடுறோம்ங்கிறது முக்கியமில்ல.. நம்ம சின்சியாரிட்டி ரிசப்சனிஸ்ட் எந்த லட்சணத்தில இவங்களை இன்வைட் பண்ணினாங்க என்கிறது தான் முக்கியம்.."

"என்னவோ செய்து தொலை.."

"சொல்லுங்க ரேகா.. இந்த நியு ஜாயினிங்.. வந்தப்ப நான் இங்கே இருந்தேனா..?"

"இல்லையே சார்.. நீங்க உங்க கேபினுக்குப் போயிட்டிங்களே.. இவங்க வந்தப்ப நானும் வயலெட்டும் தான் இங்கே இருந்தோம்.. இவங்க வந்தாங்க.. ஐ ஆம் யாமினின்னு வயலெட்கிட்ட இன்ட்ரொடியூஸ் பண்ணிக் கிட்டாங்க.. இவ உடனே 'ஸோ வாட்..'டுன்னு இவங்களைக் கடுப்படிச்சு வைச்சா. நான்தான் இவங்களை ரிஸீவ் பண்ணிப் பேசிக்கிட்டு இருந்தேன்.. வயலெட்டைக் கூடக் கண்டிச்சேன்.. ரிசப்சனிஸ்ட் போஸ்டில இருக்கிறவ..

ஆபிஸ்க்கு வருகிற வங்ககிட்ட சிரிச்ச முகமா பதில் சொல்ல வேணாமா..? எங்கே சார்..?"

வயலெட் சித்தார்த்தனிடம் கேட்ட 'எங்கே சார்..?' இடம் மாறி வாகாக ரேகாவிடம் வந்து அமர்ந்து கொண்டதில்.

"கேட்டுக்கடா சித்தார்த்..! கைக்கு கை மாறுவது பணம் மட்டுமில்ல.. வார்த்தைகளும்தான்.." என்றான் தாமோதரன்..

19

இப்பிறவியில் பிரிந்தாலும் எப்பிறவியிலும் உனைத் தொடர்வேன்.

அந்த கயிறு இழுக்கும் போராட்டத்தைப் பற்றி ஏதுமறியாத பேதையாக இருந்தாள் வசுந்தரா.. அவளது சின்னஞ்சிறிய நோவையும் பெரிது படுத்தும் தன்மை கொண்ட வீரபாகு அப்போதும் அதே போல செய்து வைக்கிறான் என்ற நினைவில் விரைந்து வரும் ரவிவர்மனிடம்..

"இதற்குப் போய் கலங்கியடித்து விரைந்து வரலாமா..? அங்கே பட்டத்து ராணியின் தேகநிலை எவ்வாறு உள்ளதோ.. அவர்களின் அருகிலிருக்காமல் என்னருகில் ஓடி வருவது நியாயமில்லை..." என்று உரைப்பாள்..

அவளின் கள்ளமற்ற உள்ளத்திலே ரவிவர்மனின் விழிகள் கலங்கிவிடும்.. பட்டத்து ராணியின் பாசாங்கை அவனறிவான்.. இருப்பினும் மனம் கேட்காமல் அவள் அருகில் இருப்பான்..

அந்த சூது வாதை அறியாத வசுந்தராவின் மழலைத் தன்மையில் பட்டத்து ராணியின் பாசாங்குகளை கண்டு கொள்ளாமல் வசுந்தராவின் அரண்மனையிலேயே வாசம் செய்ய ஆரம்பித்தான் ரவிவர்மன்..

இனி ரவிவர்மனைத் தன் கட்டுக்குள் கொண்டுவர இயலாது என்று மகாராணிக்கு புரிந்து விட்டது..

"கொல்லத்திற்கு புறப்படுவதே சாலச் சிறந்தது மோகனா.." என்றாள்..

"தமிழகத்தில் பிறந்து வளர்ந்த தங்களால் தமிழகத்துப் பெண்ணைத் தோற்கடிக்க இயலவில்லையா..?" மோகன சுந்தரி பொருமினாள்..

"அவள் வென்றிருப்பது அரசரின் மனதை.. அரியணையை நான் பெரிதாக எண்ணினேன்.. பட்டத்து ராணி நான்தான் என்ற மமதையில் மற்ற ராணிகளைத் துச்சமென மதித்தேன்.. என் ஆணவத்தை ஒரு சின்னஞ்சிறு பெண் அடக்கி விட்டாள்.. மன்னர் கலாரசிகர் மோகனா.. அவரது மனதுக்குப் பிடித்த வாழ்வை நான் அளிக்கவில்லை.. மற்ற ராணிகளும் அளிக்கவில்லை.. இவள் அளித்திருக்கிறாள்.. இப்போதாவது அவர் இளைப் பாறட்டும்.."

மனம் மாறிய மகாராணி கொல்லத்திற்குப் புறப்பட ஆயத்தமானாள்.. சேதி அறிந்த ரவிவர்மன் அவளைக் காணச் சென்றான்.. அவளது கரங்களைப் பற்றி நன்றியுரைத்தான்.. கரங்களை விடுவித்துக் கொண்ட மகாராணி..

"தங்களின் மனதுக்குப் பிடித்த வாழ்வை தாங்கள் வாழலாம் அரசே..! இனி என் மனதுக்குப் பிடித்தபடி தாங்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று எந்தவித அவசியமுமில்லை.." என்றாள்..

அவளது துக்கத்தில் ரவிவர்மன் வருத்தம் கொண்டான்..

"திட்டமிட்டு எந்தச் செயலையும் புரியவில்லை மகாராணி.. இந்தக் காதல் எங்கிருந்தோ வருகை புரிந்து என் இதயத்தில் நுழைந்து விட்டது.. விடுபட மார்க்க மில்லாமல் விருப்பத்துடன் சிக்கி விட்டேன்.. என்னை மன்னிப்பாயாக.." என்றான்..

இதுவே ரவிவர்மன்..! அரசகுல ஆண்களுக்கு மனம் போல வாழ்வை வாழும் உரிமையிருந்தும் மனம் வருந்தி தனது மகாராணியிடம் மன்னிப்புக் கோருகிறானே.. இதுதான் அவனது தன்மை..! இத்தகைய தன்மைகளினால்தான் அவன் மற்ற அரசர்களிடமிருந்து மாறுபட்டு வரலாற்றின் பொன்னேடுகளில் பல சிறப்புப் பெயர்களோடு பொறிக்கப் பட்டு நிலைத்து நிற்கிறான்..

"மன்னவரே..!" மகாராணி விம்மினாள்..

"மகாராணி.."

"தங்களின் மனையாட்டியாகும் பாக்கியம் பெற்றும் தங்களின் மனதைப் புரிந்து வாழ்க்கை நடத்தவில்லை நான்.. கலைகளின் காதலன் தாங்கள்.. மண்ணுக்கும், பொன்னுக்கும் ஆசை கொள்ளும் சாமான்ய மானிடப் பெண் நான்.. இட்டு நிரப்ப முடியாத வெற்றிடத்தை தங்கள் வாழ்வில் வைத்து விட்டேன்.. இந்த சின்னஞ்சிறு பெண் அதை இட்டு நிரப்பியதில் எனக்குத் துளியளவு சந்தோசமும்.. மலையளவு துயரமும் உண்டுதான்.."

மனம் தேறி.. விடை பெறத் தயாராகி விட்டாள் மகாராணி.. விருந்தினர் மாளிகையில் மன்னருக்கான விருந்தை அளித்துவிட்டு புறப்பட விரும்பினாள்.. அறுசுவை உணவுடன் கூடிய விருந்துப் பதார்த்தங்கள் சமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன.. கைலாசநாதரின் இல்லத்தாரையும், வசுந்தாவையும் அவள் விருந்துக்கு அழைத்திருந்ததில் அங்கயற்கண்ணி மன அமைதி கொண்டாள்..

'மகாராணி அரசருடனான எனது மகளின் திருமணத்தை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டு விட்டார்..'

அந்த நிம்மதியுடன் சமையல் கூடத்திற்குச் சென்று விருந்து தயாரிப்பதை மேற்பார்வை செய்து கொண்டிருந்த வளைத் தேடி வந்தாள் வசுந்தராதேவி..!

"அம்மா..! தமையன் தங்களை அழைக்கிறான்.."

"எதன் பொருட்டாம்..?"

"எனக்கென்ன தெரியுமாம்..? அம்மாவிற்கும் புதல்வனுக்கும் இடையில் ஆயிரம் இருக்குமென்று உரைத்து விட்டான்.. அந்த ஆயிரத்தில் ஒன்றைக்கூட என்னிடம் அவன் உரைக்க மாட்டானாம்.."

வதனத்தைத் தூக்கி வைத்துக் கொண்ட மகளின் மழலைத்தனத்தில் மனம் விட்டு நகைத்தாள் அங்கயற் கண்ணி.. மகளின் மனம் போல வாழ்வு அமைந்து விட்டதில் ஆனந்தம் அவளுக்கு..

"அதில் உனக்கு இத்துணை பொறாமையா..?"

செல்லமாக மகளின் கன்னத்தில் தட்டி விட்டு அங்கிருந்து அகன்று விட்டாள் அங்கயற்கண்ணி.. சமையல் கூடத்திலிருந்த பதார்த்தங்களை உணவருந்தும் கூடத்திற்கு எடுத்துச் செல்வதை கண்காணிப்பதைப் போல வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் வசுந்தரா.. அவள் மனம் ரவிவர்மனைத் தேடியது.. இரு தினங்களாக அவன் மகாராணியுடன் விருந்தினர் மாளிகையிலேயே தங்கியிருந்தான்.. அவனைக் காணவேண்டும் என்று மனம் துடித்தாலும் மகாராணியின் நினைவில் மனதிற்கு கடிவாளமிட்டுத் தடுத்துக் கொண்டிருந்தாள் வசுந்தரா.. உணவருந்தும் கூடத்தில் அவனைச் சந்தித்து விடலாம் என்ற நினைவில் அவள் மனம் பரபரத்தது..

மாலை சூடி மணாளனாக ஏற்றுக் கூடி வாழ்ந்து கொண்டிருந்த போதும் காதலனைக் காணத் துடிக்கும்

ஏக்கத்தையும் பரபரப்பையும் அவளுக்குள் விதைத்துக் கொண்டிருந்த ரவிவர்மனின் மீது அவளுக்குள் காதல் சுரந்தது..

'வசியப்பொடியைக் கொண்டுள்ள வசியக்கார வர்மன்..!'

உதட்டைச் சுழித்துக் காதலுடன் ரவிவர்மனை மனதில் திட்டிக் கொண்டாள் வசுந்தரா.. அவன் மார்பில் புரண்டு கொண்டிருக்கும் வைரத்தைப் போல அவளால் அவன் மார்பில் இளைப்பாற இயலவில்லையே என்ற தாபம் அவள் மனதில் எழுந்தது..

'அந்த வைரமாக நானிருந்தால்..'

நெடுமூச்சுடன் நடந்தாள் வசுந்தரா.. சமையல் கூடத்திற்கும் உணவருந்தும் கூடத்திற்கும் இடையிலிருந்த பூந்தோட்டத்தில் செடிகளில் பூத்திருந்த பூக்களை வருடியபடி நின்றவளின் செவிகளில் விழுந்தது அந்தக் கலவையான பேச்சொலி..

"உன்மீது எவர்க்கும் சந்தேகம் வரவில்லையே.."

"எவ்வாறு வரும்..? நான்தான் நெற்றியை மறைத்து திருநீறு இட்டு அதன் மத்தியில் சந்தனமும் குங்குமமும் இட்டுள்ளேனே.."

"பாராடா.. அலிகான் என்ற நாமத்தை எவ்வாறு உரைத்தாய்..?"

“வாகீசன் என்று உரைத்தேன்.. மடையர்கள்..! நம்பி விட்டனர்..”

“அரசருக்குத் தயாராகும் விருந்தைச் சமைக்க அறிமுகமில்லாத எவரையும் அனுமதிக்க மாட்டார்களே..”

“மெய்தான்.. தலைமைச் சமையல்காரரின் உதவியாளுக்கு உடல் நலம் சீர் கேடடைந்தது.. நான் அவனை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை யளித்தேன்.. வழிப்போக்கனான எனக்கு அவன்மீது ஏதோ ஓர்வித பந்தம் ஏற்பட்டுவிட்டது என்று கதை புனைந்தேன்.. வழியில் கண்டவன் வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்று சிகிச்சையளித்ததில் என்னிடம் நன்றிக்கடன் பட்டு விட்டதாக எண்ணிவிட்ட அந்த முட்டாள்.. என்னைத் தனது உறவினன் என்று தலைமைச் சமையல்காரரிடம் நெக்குருக உரைத்து விட்டான்.. நானும் பதிலுக்கு பாசத்தைப் பிழிந்து விட்டு உடல்நலமில்லாத எனது உறவினனின் சார்பில் சமைக்க வருவதாகக் கூறி உட்புகுந்து விட்டேன்..”

“பலே.. பலே..! திறம்படச் செயலாற்றியுள்ளாய்.. திட்டமிட்ட செயலை நிறைவேற்றி விட்டாயல்லவா..?”

“கனகச்சிதமாக நிறைவேற்றி விட்டேன்.. இன்று ரவிவர்மன் அருந்தப் போகும் பாயாசத்தில் விசத்தைக் கலந்து விட்டேன்.. மாலிக்காபூரை விரட்ட வந்த ரவிவர்மனை இவ்வுலகை விட்டே விரட்டப் போகிறது அந்தப் பாயாசம்..!”

'என்னது..?..!'

செவிகளில் இறங்கிய இடிகளில் திக்பிரமை பிடித்தவளைப் போல நின்று விட்டாள் வசுந்தரா.. உரக்கக் கூக்குரலிட வேண்டும்.. பூந்தோட்டத்தில் மறைந்திருக்கும் சதிகாரர்களைப் பிடிக்க வேண்டும் என்றெல்லாம் அவளுக்கு எண்ணத் தோன்றவில்லை..

ரவிவர்மனின் உயிருக்கு ஆபத்து..!

இந்த ஒன்றே அவளை வில்லில் இருந்து வெளிப் படும் அம்பாகச் செழுத்தியது..

வசுந்தரா ஓடினாள்.. ரவிவர்மன் உணவருந்தும் முன் அவனைத் தடுத்து நிறுத்துவதற்காக ஓடினாள்.. அவளது சுவாசக் காற்றாய் இருப்பவனின் சுவாசம் நின்று விடாமல் காப்பதற்காக ஓடினாள்.. அவளது உயிராய் கலந்து விட்டவனின் உயிரைக் காக்க ஓடினாள்..

அவள் ஓடியபோது விருந்து ஆரம்பமாகி விட்டிருந்தது.. மகாராணி தன் கரத்தால் ரவிவர்மனுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தாள்... மனதில் நெகிழ்வுடன் ரவிவர்மன் தன் மகாராணியுடன் விழிகளால் பேசியபடி உணவை உண்டு கொண்டிருந்தான்.. சற்றுத் தள்ளி நின்ற மோகன சுந்தரியின் மனம் துயரம் கொண்டது.. விலகிச் சென்றுவிடும் முடிவை மகாராணி எடுத்து விட்டதை அவள் மனம் ஏற்கவில்லை..

"பாயாசம் அருந்துங்கள்.. இனிப்பு நிரம்பிய சுவையான பாயாசம்.."

இனிமையான குரலில் கூறியபடி பாயாசம் ததும்பிய பாத்திரத்தைக் கரத்தில் எடுத்தாள் மகாராணி..

"வேண்டாம் அய்யனே..! பாயாசத்தை அருந்தாதீர்கள்.."

உரத்த குரலில் கூறியபடி உள்ளே ஓடி வந்தாள் வசுந்தராதேவி.. அதுதினம் வரை நேருக்கு நேராக மகாராணியும் அவளும் சந்தித்துக் கொண்டதில்லை.. மற்ற ராணிகளால் மகாராணிக்கென்று ரவிவர்மனின் மனதில் இருந்த இடத்தைப் பிடிக்க இயன்றதில்லை.. அதை நொடிப்பொழுதில் சாதித்து தன் பக்கமாக ரவிவர்மனை இழுத்துக்கொண்ட வசுந்தராவை துவேசம் நிரம்பிய விழிகளுடன் நோக்கினாள் மகாராணி.. ரவிவர்மனுக்காக அவள் கடைபிடித்த பொறுமை காற்றில் பறந்து விட்டது..

"எத்துணை தைரியம்..!" அவள் சீறினாள்..

வல்லவனுடன் உணவருந்தும் கூடத்திற்குள் நுழைந்த அங்கயற்கண்ணி பதட்டத்துடன் மகளின் அருகே விரைந்தாள்.. வல்லவன் திகைத்தான்.. கைலாசநாதர் பதைத்தார்.. வீரபாகு அவ்விடத்தில் இல்லை..

"எமது மணாளருக்கு இனிப்பு நிரம்பிய பாயாசத்தை பரிமாறிக் கொண்டிருக்கிறேன்.. அதை அருந்த வேண்டாம் என்று அவருக்கு உத்தரவிட தமக்கு எங்கிருந்து துணிவு வந்தது..?"

மகாராணியின் கொதிப்பான வார்த்தைகளுக்குப் பதிலளிக்காமல் ரவிவர்மனிடம் பதறினாள் வசுந்தராதேவி..

"இப்பாயாசத்தில் விசம் கலக்கப்பட்டுள்ளது அய்யனே..! இதை அருந்தாதீர்கள்.. தங்களின் உயிருக்கு ஆபத்து நேர்ந்துவிடும்.."

கரம் கூப்பிக் கதறிய வசுந்தராதேவியின் வதனத்தில் விரவியிந்த கலவரத்தில் பாயாசத்தை அருந்தாமல் நிறுத்தி விட்டான் ரவிவர்மன்.. அச்செயலில் மகாராணி பெருத்த சினம் கொண்டாள்..

"இதற்கு என்ன பொருள் அரசே..! இப்பெண் உரைப்பதைப் போல தாங்கள் அருந்தும் பாயாசத்தில் நான் விசத்தைக் கலந்து விட்டேனா..?"

"அல்ல மகாராணி.."

"பின் ஏன் தாங்கள் பாயாசத்தைப் புறக்கணிக் கறீர்கள்..?"

"வசுந்தரா ஏதோ உரைக்கிறாளே.."

"அவ்வாறெனில் நேற்றய பொழுதில் தங்களின் வாழ்வில் வந்த இவள் கூறுவது மெய்..! ஆண்டாண்டு காலமாக தங்களுடன் வாழ்ந்து வரும் நான் கூறுவது பொய்..! அப்படித்தானே அரசே..!"

"மகாராணி..!"

"இந்தப் பாயாசத்தில் விசமில்லை அரசே..! தங்களின் மனதில் விசம் கலந்து விட்டது.. இவள் கலந்து விட்டாள்..

தங்களின் மனம் விரும்பிய வாழ்வைத் தடுக்க வேண்டாம் என்று கொல்லத்திற்கு கிளம்பிச் செல்ல இருக்கும் என்னை ஓடியடியாக தங்களின் வாழ்வில் இருந்து விலக்க இவள் சதி செய்கிறாள்.. தங்களுக்கு விசம் வைக்கத் துணிந்து விட்டேன் என்று பழி சுமத்துகிறாள்.. இதை எவ்வாறு நான் பொறுத்துக் கொள்வது..? ஒன்று தாங்கள் இந்தப் பாயாசத்தை அருந்த வேண்டும்.. இல்லையெனில் உடனடியாக நான் எனது புதல்வர்களையும்.. உறவினர்களையும் வரவழைப்பேன்.. அவர்கள் எழுப்பும் வினாக்களுக்குத் தாங்கள் விடை அளித்துக் கொள்ளுங்கள்..”

ரவிவர்மன் வதனத்தில் நிலவிய சங்கடம் விலகி அங்கே சினம் வந்து குடிகொண்டது..

“மிரட்டுகிறாயா மகாராணி..? இந்த ரவிவர்மனிடம் வினா எழுப்பும் துணிவு எவருக்குமே இல்லை.. தமது புதல்வர்களுக்கும் உறவினர்களுக்கும் அது வருகை தந்து விடுமா..? வரச்சொல்.. அதையும் நான் பார்க்கிறேன்..”

“அவ்வாறெனில் இப்பொழுதே நான் எனது உயிரை மாய்த்துக் கொள்கிறேன்.. இவளது பேச்சை பொருட்டாக எண்ணி நான் அளிக்கும் பாயாசத்தை தாங்கள் அருந்த மறுப்பதா..?”

“என்ன கொடுமையடா இது..”

வெறுத்துப் போன ரவிவர்மன் பாயாசத்தை அருந்த முயல அதைத் தட்டி விட்டாள் வசுந்தரா.. சினம்

கொண்டான் ரவிவர்மன்.. விழிகளில் தீப்பொறி பறக்க வசுந்தராவின் கூந்தலைப் பற்றி உலுக்கினான்..

"மகாராணி கூறுவதில் தவறில்லையடி.. என்ன துணிவிருந்தால் மகாராணி அளிக்கும் பாயாசத்தில் விசம் கலந்திருப்பதாக நீ பழி சுமத்துவாய்..? உன்மீது உள்ள காதலால் நீ எதை உரைத்தாலும் இந்த ரவிவர்மன் செவி மடுத்து விடுவான் என்று எண்ணி விட்டாயா..? இப்பொழுதே இப்பாயாசத்தில் விசம் கலந்திருப்பதை நீ நிரூபணம் செய்ய வேண்டும்.. இல்லையெனில் மகாராணியின் மீது வீண்பழி சுமத்திய குற்றத்திற்காக உன்னை நான் தண்டிப்பேன்.. இதோ இந்த பாயாசத்தை நான் அருந்தத்தான் போகிறேன்.. என்ன நிகழ்கிறதென்று பார்த்து விடலாம்.."

ரவிவர்மன் பாயாசப் பாத்திரத்தை தொட முயன்றான்.. அவன் கரங்களை விலக்கி விட்ட வசுந்தரா கணப்பொழுதில் அதை எடுத்து பாயாசத்தைக் குடித்து விட்டாள்..

"ஐயோ.." அங்கயற்கண்ணி கூவினாள்..

"அன்பே..!" வசுந்தராவின் வாய் குழறி நுரை தள்ளியது..

மகாராணி அதிர்ந்தாள்.. தள்ளாடி விழ இருந்தவளை டிை தாங்கிக் கொண்டான் ரவிவர்மன்.. அவள் கரங்களைப் பிடித்துக் கொண்டாள் மகாராணி.. வசுந்தராவின்

வதனம் விகசித்தது.. அவள் மகாராணியை அன்புடன் நோக்கினாள்.

"இந்தப் பாயாசத்தில் விசம் கலந்திருக்கிறது என்று தான் நான் உரைத்தேன் மகாராணி..! தாங்கள்தான் அதைக் கலந்தீர்கள் என்று உரைக்கவில்லையே.. இவர் தமது கணவர்.. எனக்கிருக்கும் பதட்டம் தங்களுக்கும் இருக்காதா..? இவரை இழந்தால் தாங்கள் உயிர் வாழ்வீர்களா..?"

அந்தச் சின்னஞ்சிறு பெண்ணின் மனதார்ந்த வினாவில் தனது மனதின் கசடு கரைந்து போக வசுந்தராவின் கரங்களை விழிகளில் ஒற்றிக் கொண்டு விம்மி அழுதாள் மகாராணி..

"மன்னித்து விடு சகோதரி..! பொறாமையில் புத்தியை கடன் கொடுத்து விட்டேன்.."

"வருந்த வேண்டாம் மகாராணி..! மாலிக்காபூரின் ஏவலாள்கள் இக்கொடிய செயலை செய்துள்ளனர்.. சமையல் கூடத்திற்கு அருகேயுள்ள பூந்தோட்டத்தில் அவர்கள் உரையாடிக் கொண்டிருந்ததை நான் செவி மடுத்தேன்.. உடனடியாக எனது அன்பரின் உயிர் காக்க ஓடோடி வந்தேன்.. வந்த விரைவில் பாயாசத்தை அருந்த வேண்டாம் என்று தடுக்கத்தான் எனக்குப் பொழுதிருந்தது.. அனைத்து விவரங்களையும் உரைப்பதற்கான பொழுது இல்லையே.. எனது சங்கமதீரரின் கரங்களில் இருந்த பாயாசத்தை அவர் அருந்தி விடக் கூடாது என்ற

பதட்டத்தில் நான் அவரைத் தடுத்தேன்.. தங்களின் விருந்து இது என்ற நினைவு கூட எனக்கு இல்லை மகாராணி.."

"என்ன காரியம் செய்து விட்டேன்.."

மகாராணி கதறினாள்.. ரவிவர்மன் வசுந்தராவைத் தனது கரங்களில் ஏந்திக் கொண்டு வைத்தியசாலைக்கு ஓடினான்.. விழிகள் செருக.. தன் நினைவின்றி அவனது மார்போடு ஒன்றிவிட்ட வசுந்தராவின் வதனம் ரவிவர்மனின் மார்பில் புரண்ட வைரப் பதக்கத்தில் புதைந்திருந்தது.. அவள் கைகள் அவன் தோள்களை இறுக்கிய வேகத்தில் அவன் கழுத்தில் புரண்ட அந்த வைர ஆபரணம் வசுந்தராவின் கழுத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டது..

"வைத்தியரே..!"

ரவிவர்மனின் உரத்த சப்தத்தில் வைத்தியர்கள் துரித கதியில் செயல்பட்டனர்.. வசுந்தராவுக்கான பஞ்சணையை தயார் செய்து..

"இதில் ராணியை கிடத்துங்கள்.." என்றார் தலைமை வைத்தியர்..

தனது கரங்களில் கிடந்த வசுந்தராவை மஞ்சத்தில் கிடத்த முயன்றான் ரவிவர்மன்.. இயலவில்லை.. அவனது கழுத்தில் புரண்ட வைர ஆபரணம் அவளது கழுத்தையும் சேர்த்துப் பிணைத்திருந்தது.. அவளது

கைகளோ அவனது கழுத்தைச் சுற்றி வளைத்திருந்தன.. படாத பாடு பட்டு வசுந்தராவைத் தனியாக பிரித்து பஞ்சணையில் கிடத்தினான்.. அவளை பரிசோதித்த வைத்தியரின் முகம் ஜீவனை இழந்தது.. பரிதவித்த ரவிவர்மனின் வதனத்தைப் பார்க்கும் துணிவின்றி நிலத்தைப் பார்த்தபடி..

"அரசே..! இளையராணியின் உயிர் பிரிந்து வெகு நாழிகைகள் ஆகிவிட்டன.." என்று குரல் நடுநடுங்கக் கூறினார்..

"இல்லை.."

ரவிவர்மனின் ஓங்கிய பெருங்குரலில் அண்ட சராசரங்களும் கிடுகிடுத்தன.. அங்கயற்கண்ணி நினைவிழந்து தரையில் சரிந்தாள்.. கைலாசநாதர் மார்பகத்தில் வலி உண்டாக வல்லவனின் மீது சரிந்தார்.. மகாராணி கரங்களால் வதனத்தை மூடிக் கொண்டு கதறியழுதாள்..

அனைவரின் துயரங்களையும் காணாதவளாய் வசுந்தரா சிதையில் எரிந்து சாம்பலானாள்.. நெடுந் தொலைவில் உள்ள ஊருக்கு வணிக நிமித்தம் சென்றிருந்த வீரபாகு ஓடி வந்தபோது தணல்தான் மீதமாக இருந்தது.. துறவறத்தைத் துறந்து பெறாத மகளுக்கு வளர்ப்புத் தகப்பனாக இவ்வுலகில் அவனை நிலை நிறுத்திய வசுந்தராவின் வதனத்தை அவனால் காண இயலவில்லை..

“சபதமிடுகிறேன் மகளே..! இன்றைய பொழுது சாய்வதற்குள் நீ அருந்திய பாயாசத்தில் விசத்தைக் கலந்த அந்தக் கொடியவர்களின் உயிர் குடிப்பேன்.. உனது சிதையின் மீது ஆணை.. எனது பகையை முடிப்பேன்..”

விழிகள் சிவக்க சபதமிட்ட வீரபாகு ஓர் திசையில் அவர்களைத் தேடிப் போனான்.. வாராது வந்த மாமணி போல் ரவிவர்மனின் வாழ்வில் காதலைக் கொண்டு வந்த வசுந்தராவை இழந்து விட்ட சேர மன்னன் உன்மத்தம் பிடித்தவனைப் போல பச்சைத் தண்ணீரைக் கூட அருந்தாமல் பகை முடிக்க வேறோர் திசையில் கிளம்பி விட்டான்..

வீரபாகுவிடம் சிக்கிக் கொண்ட மாலிக்காபூரின் ஏவலாள்களை அவன் தாக்க ஆரம்பித்தபோது அவர்கள் பதிலுக்குத் தாக்கினார்கள்.. தன்னந்தனியனாக அவர்களுடன் போர் புரிந்து கொண்டிருந்த வீரபாகுவைக் காக்க அங்கு தோன்றினான் ரவிவர்மன்.. இருவரும் இணைந்து வாள் வீசியதில் வீரபாகுவின் வாளுக்கு ‘வாகீசன்’ என்று பொய் நாமமிட்ட அலிகான் பலியானான்.. அனைவரையும் கொன்று குவித்து விட்ட திருப்தியுடன் ரவிவர்மன் புரவியைத் திருப்பினான்.. வீரபாகு புரவியில் ஏற முனைந்தபோது.. மரத்தின் மறைவில் மறைந்திருந்த ஒருவன் வீசிய ஈட்டி வீரபாகுவின் மார்பில் பாய்ந்தது.. வீரபாகுவின் கூவலில் திரும்பிய ரவிவர்மனின் வாள் ஈட்டியெறிந்தவனின் சிரத்தைத் துண்டித்தது..

"என் மகளைத் தேடிச் செல்கிறேன் அரசே..!" புன்னகையுடன் உயிரை விட்டான் வீரபாகு..

காஞ்சியை விட்டு நீங்க மனமில்லாமல் நீங்கி கொல்லத்துக்குப் பயணித்த ரவிவர்மனின் மனதில் வெறுமை சூழ்ந்திருந்தது..

அவனது சோகத்தில் மகாராணி குற்ற உணர்வு கொண்டாள்.. மோகன சுந்தரி வாய் பேசாமல் ஒதுங்கிக் கொண்டாள்..

எவராலும் ரவிவர்மனை அணுக இயலவில்லை.. பித்துப் பிடித்தவனைப் போல தனித்து உலவிய ரவிவர்மனின் மார்பில் புரண்ட வைரப் பதக்கம் வித்தியாசமான விதத்தில் வசுந்தராவின் வதனத்தை ஸ்பரிசிக்கும் உணர்வைத் தந்தது.. ரவிவர்மனின் உடலில் நூதனமான எழுச்சி கிளர்ந்தது..

'இது என்ன மாயம்..! கடினமான வைரப் பதக்கம்.. மென்மையான ஸ்திரியின் ஸ்பரிசத்தை எவ்வாறு உணர்த்துகிறது..?'

அவன் வைரப்பதக்கத்தைத் தொட்ட போது.. வசுந்தராவின் குரல் ஒலித்தது..

"வர்மரே..! எனது சங்கம தீரரே..! உமை விட்டு நீங்காமலிருக்கும் இந்த வைரத்தில் நிலை பெற்று விட்டேன் நான்.."

"வசுந்தரா..!"

"தமைப் பிரிந்து நான் செல்வேனா..? இவ்வுலகில் தாம் வாழும்வரை இந்த வைரமாக தம்முடன் நானும் வாழ்வேன்.. என் மனம் கண்ட வைரமான தம்முடன் வைரமாக நான் வாழ்வதை தம் மனம் மட்டுமே காணும் வர்மரே..! இந்த வசுந்தரா தமை விட்டுச் சென்று விடவில்லை.. வைரமாக தம்முடன் வசிக்கிறாள் என்பதை உணர்வீராக..."

ரவிவர்மனின் மனம் அமைதியடைந்தது.. அவன் கரங்கள் வைரத்தை வருடின.. அவனது அதரங்கள் வைரத்தை முத்தமிட்டன.. அவன் பழைய சங்கமதீரனாகி.. நாட்டைக் காக்கக் புறப்பட்டான்..

பின்னுரை :

காஞ்சியைக் கதைத் தளமாகக் கொண்ட ஏழுஸ்வரங்களில் நான்காவது ஸ்வரம் இத்துடன் முடிகின்றது.. இது புதினமாக இருந்தாலும் வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டே எழுதப் பட்டது.. காஞ்சியில் நடந்த ஏழு காலகட்ட கதைகளை நான் வகுத்தபோது.. முதலில் பல்லவர்களின் வசமிருந்த காஞ்சி சோழர்களிடம் மாறியதைக் கண்டேன்.. அடுத்து பாண்டியர் வசம் வந்த காஞ்சி சேரர்களின் ஆட்சியில் சில காலம் இருந்திருக்கிறது.. அந்த காலகட்டத்தில் தான் பாண்டியர்களின் தாயாதிச் சண்டையில் டில்லிப் பேரரசர் அலாவுதீன் கில்ஜியின் சார்பாக கி.பி.1311-ல் மாலிக்காபூர் சுந்தரபாண்டியனின் அழைப்பின் பேரில் தமிழகத்தில் நுழைகிறான்.. மதுரை அரியணையில் இருந்த சுந்தர

பாண்டியனின் மாற்றாந்தாயின் மகனான வீரபாண்டியனை விரட்டி விட்டு.. சுந்தர பாண்டியனை அரியணையில் அமர வைக்கும் மாலிக்காபூர் மதுரையைச் சூறையாடி அந்தச் செல்வத்தை தில்லிக்குத் திரும்பி அலாவுதீன் கில்ஜியிடம் சேர்க்கிறான்..

கி.பி. 1309-ல் பாண்டிய மன்னர் குலசேகரன் தனது பட்டத்து ராணியின் மகனான சுந்தரபாண்டியனை அரியணையில் அமர வைக்காமல் இளையராணியின் மகனான வீரபாண்டியனை பாண்டிய சிங்காதனத்தில் அமர வைத்ததால் வினை உண்டாகிறது..

வீரபாண்டியனை விரட்டியடிக்க சுந்தரபாண்டியன் மாலிக்காபூரின் மூலமாக தில்லியின் பேரரசர் அலாவுதீன் கில்ஜியிடம் உதவி கோரியதில் அந்த வினை முற்றுகிறது..

மாலிக்காபூரின் வாயிலாக மதுரையின் செல்வச் செழிப்பை அறிந்து கொண்ட தில்லிப் பேரரசரின் பார்வை தமிழகத்தின் மீது திரும்புகிறது..

அதே தருணத்தில்தான் தமிழகத்தைத் தில்லிப் பேரரசரிடமிருந்து காக்கும் எண்ணம் கொண்ட சேர மன்னன் ரவிவர்மனின் பார்வையும் தமிழகத்தின் மீது திரும்புகிறது..

பாண்டியரின் தாயாதிச் சண்டையில் உட்புகுந்து தமிழகத்தை தவிடு பொடியாக்கி கொள்ளையடித்த மாலிக்காபூர் இந்து சமயத்தாரின் ஆலய வழிபாட்டைத் தடை செய்ததாக வரலாறு கூறுகிறது..

அத்தகைய நிலையை வேரறுக்கவும்.. இந்து தர்மம், இந்து சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் சேர மன்னன் ரவிவர்மன் குலசேகரன் தென் தமிழகத்தின் மீது படையெடுத்து வீரபாண்டியனையும், சுந்தரபாண்டிய னையும் வெற்றி கொண்டான்..

காஞ்சிவரை சென்று தென்னிந்தியாவின் சக்கரவர்த் தியாக தன்னை முடி சூடிக் கொண்டான் என்றும் தமிழக வரலாறு கூறுகிறது.. காஞ்சி அருளாளப் பெருமாள் கோவிலிலும்.. பூவிருந்தவல்லி (பூந்தமல்லி..) பெருமாள் கோவிலிலும் உள்ள சாசனங்கள் வீரபாண்டியன் மீதும்.. சுந்தரபாண்டியன் மீதும்.. ரவிவர்மன் அடைந்த வெற்றிக்குச் சான்று கூறுகின்றன..

ரவிவர்மன் மாவீரன் என்று வரலாறு கூறுகின்றது.. வாட்போர், மற்போர், விற்போர் என்று அனைத்துப் போர் வகைகளிலும் அவனை யாரும் வெற்றி கொண்டு விட முடியாது என்று அவனது வீரத்தை சரித்திரம் வியக்கிறது..

அதிசயம் கொள்ளும் வகையில் போரில் கை தேர்ந்தவன் கலைகளின் உறைவிடமாகவும் இருந்திருக் கிறான்.. கலைப்பிரியன் அவன் என்று வரலாற்றின் ஏடுகள் எடுத்துரைக்கின்றன.. சமஸ்கிருதப் பண்டிதனாக சிறப்புப் பெற்றிருக்கிறான்.. மகாகவியென்று புலவர்களால் போற்றப் பட்டிருக்கிறான்.. 'பிரதியும்னாப்யுதம்..' என்ற

நாடகத்தை இயற்றியிருக்கிறான்.. சமரில் நிகற்ற அவனை 'சங்கம தீரன்..' என்று தமிழகம் கொண்டாடியிருக்கிறது... அவனது அவையில் கவியூவுணன், சமுத்திரபந்தன் என்ற கவிஞர்கள் இருந்தனர் என்று சாஸனக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன..

ஆடிற உயரமும்.. அகன்ற மார்புமாக இருந்த ஆணழகன் அவன் என்றும்.. ஒற்றைச் சங்கிலியில் வைரப் பதக்கம் கொண்ட ஆபரணத்தை அணிந்திருந்தான் என்றும்.. அந்த வைரத்தைக் கொண்டு ஓர் அரசையே விலைக்கு வாங்கலாம் என்றும் வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன..

சரித்திரக் கதைக்கான குறிப்புக்களைத் திரட்டியதில் கற்பனையாக இல்லாமல் உண்மையாகவே ஓர் கதாநாயகன் வாழ்ந்திருக்கிறான் என்பதில் எனக்கு ஆச்சரியமேற் பட்டது..

சேர மன்னன் ராஜா ரவிவர்மனுக்கு விடை கொடுங்கள்.. அடுத்து காஞ்சிக்குள் வருகை புரிய விஜய நகரப் பேரரசு காத்திருக்கிறது..

- இத்துடன் நான்காவது ஸ்வரம் முடிவடைந்தது -

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



19

உனக்காக நான பிறந்து..
ஊனுருக உனைத் தேடி வந்தேன்..

எது இன்று உன்னுடையதோ.. அது நாளை மற்றொருவருடையதாகும் என்ற பரந்தாமனின் வாக்கு வேறு எதற்குப் பொருந்துகிறதோ இல்லையோ.. படைக்கப் படும் வார்த்தைகளுக்கு மிகச் சரியாக பொருந்தி வருகின்றது..

இப்போதெல்லாம் நெற்றியடியான வார்த்தைகளுக்கு யாரும் வேலை மெனக்கெட்டு யோசித்துக் கொண்டிருப் பதில்லை.. மற்றவர்கள் சொல்லி வைத்திருப்பதை புரட்டிப் பார்த்து அதில் உள்ள வார்த்தைகளை 'கொக்கு' கவ்வுவதைப் போல கவ்விக் கொண்டாலே போதும் என்ற நிலை வந்து விட்டது..

இதைச் செய்வதற்கு அவர்கள் ரோசம் பார்ப்ப தில்லை.. இதைச் செய்து விட்டாயே என்று கேட்டு விட்டால் மட்டும் எப்படி என் திருட்டுத்தனத்தை நீ சுட்டிக் காட்டலாம் என்று வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு வந்து விடுவார்கள்..

இது எத்தர்களுக்கான உலகம்..! அவர்களே இவ்வுலகில் வலியவர்கள்..! அனைத்து ஆளுமைகளையும்

கையகப் படுத்தியுள்ளவர்கள்.. எந்த சட்ட திட்டங்களும் அவர்களைக் கட்டுப் படுத்தாது.. அவர்களின் ராஜாங்கம் தனியானது.. நிழல் உலகத்தில் கூட சில வரை முறைகள் இருக்கும்.. இவர்களிடம் அவையும் இருக்காது.. ரத்தம் குடிக்கும் காட்டேரிகளும் இவர்களும் வேறு.. வேறல்ல..

ரேகா பாவம்.. இதைப் போல ஒன்றும் வார்த்தை களைக் களவாடி விடவில்லை.. இன்னும் சொல்லப் போனால் வயலெட் சொல்லி விட்டாள் என்பதற்காகவே அந்த வார்த்தையைப் புறக்கணித்து விடும் இயல்பு டையவள்..

இருந்தும் அவள் 'எங்கே சார்..?' என்று வயலெட் கூறிய வார்த்தைக்கு மறு வடிவம் தந்தாள் என்றால் அதற்கான காரணம் வயலெட்டைக் கடுப்படிப்பது மட்டுமே..

"இந்த எங்கே சாருக்கான மீனிங் என்னங்க ரேகா..?"

தாமோதரனின் கேள்வியில்..

'என்னைப் பார்த்தா மட்டும் 'அம்மா..' போடறான்.. இவகிட்ட மட்டும் 'என்னங்க..' போடறான்.. எம்புட்டுக் கொழுப்பு..!' என்று காண்டானாள் வயலெட்..

"மீனிங் இதுதான் சார்.. வந்திருக்கிற நியு ஜாயினிங்க வயலெட் ரிஸீவ் பண்ணவேயில்லை.. எடுத்த எடுப்பில 'ஸோ வாட்'டுன்னு இவ கடிச்ச கடியில

இவங்க வேலையிலே ஜாயின் பண்ணவே வேணாம்ன்னு திரும்பி ஓடிறப் பார்த்தாங்க.. நான்தான் ஹாய்..! ஐ ஆம் ரேகான்னு இவங்களுக்கு கைகொடுத்து பிரண்ட்லியாயப் பேசி இவங்க ஓடறத நிப்பாட்டி பிடிச்சு வைச்சேன்.. என்ன மாயமோ.. என்ன மந்திரமோ தெரியலை சார்.. நீங்க வந்தவுடனே வயலெட்டோட மூடே மாறிருச்சு.. ஸோ வாட்டுன்னு கேட்டுத் துரத்தப் பார்த்தவங்களுக்கு சீட் போட்டு உட்கார வைச்சா.."

ரேகாவின் நீண்ட நெடும் விளக்கத்தை..

"கேட்டுக்கிட்டியாடா..?" என்றான் தாமோதரன்..

சித்தார்த்தன் வயலெட்டை முறைத்தான்.. அது போன்ற பல முறைப்புகளுக்குப் பழக்கப்பட்டுப் போயிருந்த வயலெட் புன்னகை மாறாமல் நின்று தனது தடித்த தோலின் கடினத்தை மெய்ப்பித்தாள்..

'இதுக்கெல்லாம் ரோசப்பட்டா வேலைக்கு ஆகுமா..?'

அவள் இதைப் போன்ற பல பதிலடிகளைப் பார்த்தவள்.. எதற்கும் அயராமல் வேலையைக் காப்பாற்றிக் கொள்ளும் வித்தையை அறிந்தவள்..

"நீங்க வாங்க யாமினி..!"

"இவங்களை எதுக்குடா டிஸ்டர்ப் பண்ற..?"

"கடுப்படிக்காத தாமு.."

“அதைத்தான் காலங்கார்த்தாலேயில இருந்து மாறி மாறி செய்துக்கிட்டு இருக்கோமே..”

“இவங்க என்னோட பெர்சனல் செகரட்டரி..”

“இருக்கட்டுமே.. அதுக்காக அக்கவுண்ட்ஸ் செக்சனுக்குப் போயி ஜாயினிங் ரிப்போர்ட்டைக் கொடுக்காம நேரா வேலையைப் பாக்க முடியுமா..? ரூல்ஸ் அண்ட் ரெகுலேசன்ஸ்ன்னு இருக்கிறதெல்லாம் எதுக்காக..?”

“இப்ப என்னதாண்டா சொல்ற..?”

“நீ வேலையைக் கொடுக்கனும்னு சொன்ன.. கொடுத்தாச்சு.. இவங்களும் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரைக் கையில பிடிச்சுக்கிட்டு வந்தாச்சு.. இதுக்கு மேலே என்ன..? இவங்க ரூல்ஸ்படி ஜாயினிங் ரிப்போர்ட்ட கொடுக்கட்டும்.. அதுக்கப்புறமா இவங்க சீட்டில வந்து உட்காரட்டும்..”

ஒவ்வொரு வார்த்தைகளையும் யாமினியைப் பார்த்தபடியே தாமோதரன் சொல்லி வைத்ததில் சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸில் அவனுக்கிருக்கும் அசைக்க முடியாத செல்வாக்கை உணர்ந்து கொண்டாள் யாமினி..

‘இவன் யாரா இருந்தா எனக்கென்ன..?’

எரிச்சலுடன் ஜாயினிங் ரிப்போர்ட்டைக் கொடுத்தவள் வெற்றிகரமாக சித்தார்த்தனின் பெர்சனல் செக்கரட்டரி வேலையில் உட்கார்ந்து விட்டாள்..

தாமோதரனின் மனது ஒரு நிலையில் இல்லாமல் தவிக்க ஆரம்பித்தது.. யாமினியைக் கண்டவுடன் சித்தார்த்தனின் முகத்தில் ஆயிரம் கோடி பல்புகள் ஒளிர் விடுவது ஒரு புறத்தில் இருந்தாலும்.. அதைப் போன்ற ஓர் நூதன உணர்வு தாமோதரனையும் பிடித்து ஆட்டி வைப்பதில் அவன் பயந்து போயிருந்தான்.. ஆண்டாண்டு காலமாக யாமினியை அவன் அறிந்திருப்பதைப் போல ஏன் தோன்றி வைக்கிறது என்று அவனுக்கேப் புரியவில்லை.. யாமினியை அருகில் வைத்துக் கொண்டு உருப்படியாக வேலைகளைக் கவனித்து விட முடியும் என்று அவனுக்குத் தோன்றவில்லை.. ராக்கெட் வேகத்தில் உயர்ந்து கொண்டிருக்கும் சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனியின் வளர்ச்சியை யாமினியின் வரவு பாதித்து விடுமோ என்று கலங்கினான் தாமோதரன்..

இந்தக் கலக்கமெல்லாம் சித்தார்த்தனுக்கு இல்லை.. அவன் அருகில் உட்கார்ந்திருந்த யாமினியை நொடிக்கொரு தடவை பார்த்துக் கொண்டிருப்பதையே பிழைப்பாக வைத்திருந்தான்..

யாமினியும் சளைக்கவில்லை.. என்னவோ... அவள் வேலை பார்க்கப் போகும் சீட்டின் அனைத்து வேலைகளையும் தெள்ளத் தெளிவாக கரைத்துக் குடித்திருப்பதைப் போல சீன் காட்டியபடி கம்யூட்டரின் திரையை உற்று உற்று பார்ப்பதும்.. நிமிர்ந்து சித்தார்த்தனின் முகத்தை உற்று உற்றுப் பார்ப்பதுமாக

பொழுதை ஓட்டிக் கொண்டிருந்தாள்.. இதில் கன்னச் சிகப்பு வேறு..

'கிழிஞ்சது போ..' வெறுத்துப் போய் விட்டான் தாமோதரன்.. சித்தார்த்தனின் பின்னால் போய் அவன் என்னத்தை எழுதிக் கொண்டிருக்கிறான் என்று எட்டிப் பார்த்தான்..

'முக்கியமான லெட்டர்ஸீக்கு ரிப்ளையை எழுதுகிறானோ..'

அடிமனதில் ஏகத்துக்கும் பேராசை வேறு அவனுக்கு.. சித்தார்த்தன் எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவனுக்கு கொலைவெறி வந்து விட்டது...

'என் பார்வையில்
உன் கன்னத்தில்
ரோஜாக்கள் பூக்கின்றனவே..
நீயென்ன ரோஜாத் தோட்டமா..?'

தலையில் கை வைத்து உட்கார்ந்து விட்டான் தாமோதரன்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'

ஐந்தாம் ஸ்வரத்தில் தொடர்ந்து வரும்..